L(1) Reg., No. M - 2527.





# யாதவ மித்திரன்.

யாதவர்களின்
முன்னேற்றங்கருதி வெளிவரும்
மாதப்பத்திரிகை.


| தொகுதி | ப்ரஜோத்பத்தி வைகாசி | பகுதி |
|---|---|---|
| 3 | 1932 [illegible] | 6 |





பொருள் அடக்கம்.


கடவுள் வணக்கம் ... 161
[illegible]
[illegible] ... 165
[illegible] ... 168
[illegible] ... 174
[illegible] ... 178
[illegible] ... 180
[illegible] ... 185
[illegible] ... 187
[illegible] ... 190
[illegible] ... 192







Managing Editor.
ம. கோபாலகிருஷ்ணக் கோன்,
[illegible], மதுரை.

# யாதவமித்திரன்.

ஆசிரியர் கூட்டத்து அங்கத்தினர்கள்

(Editorial Board Members.)

தலைவர்.

1. திருவாளர், ஆ. கார்மேகக்கோனர் அவர்கள்
தலைமைத்தமிழாசிரியர், அமெரிக்கன் கல்லூரி, மதுரை.

---

2. ,, ச. செல்லம் அவர்கள் (யாதவர்) சுசீந்திரம்.
3. ,, J. சக்கரபாணி நம்பியார் அவர்கள், பி. ஏ., பி. எல்.
ஹைகோர்ட் வக்கீல், வைஸ் பிரசிடெண்டு.
ஜில்லாபோர்டு, திருநெல்வேலி.
4. ,, V. கிருஷ்ணரெட்டியார் அவர்கள் (யாதவர்) பி. ஏ. பி. எல்.
ஹைகோர்ட் வக்கீல், வேலூர்.
5. ,, தி. அ. முத்துசாமிக் கோனரவர்கள், வித்வான்,
திருச்செங்கோடு.
6. ,, K. வீராசாமிப்பிள்ளை அவர்கள், (யாதவர்)
தலைமைத் தமிழாசிரியர், முனிசிபல் உயர்தர கலாசாலை,
திண்டுக்கல்.
7. ,, R. வேங்கடா சலம்பிள்ளை அவர்கள், (யாதவர்)
தலைமைத் தமிழாசிரியர்,
S. P. G. உயர்தரக் கலாசாலை, தஞ்சாவூர்.
8. ,, M. V. வேணுகோபாலப்பிள்ளை அவர்கள், (யாதவர்)
தலைமைத் தமிழாசிரியர், E. L. M. F. ஹைஸ்கூல்
புரசபாக்கம், சென்னை.
9. ,, ஐயம்பெருமாள் கோன் அவர்கள், தமிழாசிரியர்,
ஸெயின்ட் ஜோஸப் காலேஜ், திருச்சிறாப்பள்ளி.
10. ,, K. கோபால கிருஷ்ணன் அவர்கள், B. Sc. (Hons.)
M. R. A. S. பர்மா.


## வேண்டுகோள்.

வியாசங்கள் எழுதுவோர் தெளிவாகவும் தூஷணைகளின்றியும் முழுவிலாசத்துடன் சமூக முன்னேற்றத்திற்குரியனவும் அறிவு வளர்ச்சிக்குரியனவுமாகிய பொது விஷயங்களைப்பற்றிச் சுருக்கமாகவும், நடை எளிதாகவும் எழுதியனுப்பவேண்டும்.

பத்திரிகை வேண்டுவோரும், விளம்பரங் கொடுக்க விரும்புவோரும் அடியிற்காணும் விலாசத்திற் கெழுதுக.


யாதவமித்திரன் ஆபீஸ், ஸ்ரீ கோபால் மஹால்,
வடக்குச் சித்திரைவீதி, மதுரை



1 MAR 1932


# யாதவமித்திரன்.


ஒரு மாதப்பத்திரிகை.

எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்.

| | | |
|---|---|---|
| தொகுதி 3 | பிரஜோத்பத்தி௵ தை ௴<br>1932௵ ஜனவரி ௴ | பகுதி 6 |


## கடவுள் வணக்கம்.

அன்றாயர் குலமகளுக்(கு) அரையன் தன்னை
அலைகடலைக் கடைந் தடைத்த அம்மான் தன்னை
குன்றாத வலியரக்கர் கோனை மாளக்
கொடுஞ் சிலைவாய்ச் சரந்துரந்து குலங்களைந்து
வென்றானை, குன்றெடுத்த தோளினானை
விரிதிரை நீர் விண்ணகரம் மருவி நாளும்
நின்றானை, தண்குடந்தைக் கிடந்த மாலை
நெடியானை அடிநாயேன் நினைந்திட்டேனே

## நன்மார்க்கமற்ற கல்வி மோசத்துக்குச் சாதனம்.

### வித்வான், திரு. தி. அ. முத்துச்சாமிக் கோனர்.

எக்காலத்தும் படிப்பு வேண்டுமென்று யாவரும் கருதுவார்கள். நமது நாட்டார் இப்பொழுது தங்கள் பிள்ளைகளுக்குப் படிப்பு வேண்டுமென்று ஆசைப்படுகிறார்கள். அங்கங்கே சர்க்கார் பாடசாலை வைத்திருக்கிறார்கள். இது போதாமல் கல்வி விஷயமாக இன்னும் பணத்தைச் செலவிடவேண்டுமென்று மாகாண ..ட்ட சபையிலும், ராஜப்பிரதிநிதி சபையிலும் மன்றாடுகிறார்கள்.

திரமெல்லாம் அவனுக்கு நன்றாய்த் தெரியும். வியாதிகளை உண்டாக்கும் பக்தீரியா (பூச்சி)யை அறிந்து கொண்டு தனித்து வைத்துப் பார்ப்பது அவனுக்குச் சுலபம். ஆனால் அவன் பொல்லாதவன். சீர்கெட்ட இச் சாஸ்திரிக்குப் பணப்பைத்தியம் அதிகம். அதை எப்படிச் சம்பாதிப்பது என்று அவன் ஓயாமல் யோசித்து வந்தான். அவனுக்கு ஒரு உபாயம் தோன்றிற்று. அதாவது; மகா திரவியம் உடைய ஒரு பெண்ணிருந்தாள். இத்துஷ்டன் அவளைக் கலியாணம் செய்தான். ஆனாலும் அவள் பணம் எல்லாம் அவள் சொந்தம். அதை அவளுக்குக் கொடுத்த பெற்றோர் உன் மரணத்துக்குப் பிறகு மாத்திரம் மீதியான உன் பணம் உன் புருஷனுக்குச் சேரவேண்டுமென்று ஏற்பாடு செய்திருந்தார்கள். அவன் மனைவி சாகும்வரை அப்பணத்திற்குக் காத்திருக்க விரும்பாத அத்துஷ்டன், ஒருநாள் வியாதியை உண்டாக்குகிற பக்திரியா (பூச்சி) சிலதைத் தன் சாஸ்திரத்தினால் தனித்து வைத்து வீட்டுக்குக் கொண்டுபோய்த் தன் மனைவியின் சாப்பாட்டில் கலக்கினான். மனைவி அதைப் புசித்து நோய்வாய்ப்பட்டுச் சீக்கிரத்தில் இறந்தாள். அதினால் அவள் பணம் எல்லாம் அவனுக்கு வந்தது. மனைவி வியாதிபிடித்தவளாக மரித்தபடியால் அவன் அவளைக் கொன்றான் என்று ஒருவருக்கும் தெரியாது. அவனும் மிகவாய் விசனப்பட்டவனாகப் புதைக்கப்பட்ட நிலத்துக்குப் போனான். கொஞ்சகாலம் ஆன பிறகு அவன் வேறொரு திரவிய சம்பத்துள்ள பெண்ணை விவாகம் செய்து கொண்டான். அவளும் சில மாதங்களுக்குள் வியாதி பிடித்து இறந்து போனாள். மூன்றாம் தடவையும் அவன் ஒரு திரவியமுள்ளவளை விவாஹம் செய்துகொண்டு அவளையும் இவ்வாறே கொன்றான். கடைசியில் இச்சங்கதிகளை எல்லாம் கண்ட பக்கத்து வீட்டுக்காரர் இதெல்லாம் எப்படி ஆயிற்று, இதில் ஏதாவதொரு குற்றம் கலந்திருக்கும் என்று சந்தேகப்பட்டு போலீசாரிடம் பிராது செய்து அவர்கள் அந்த, ரசாயன சாஸ்திரியைப் பிடிக்கச் செய்தார்கள். கோர்ட்டிலே விசாரணை நடந்ததின் பேரில் அவன் செய்த குற்றமெல்லாம் வெளிவந்து, அவனைத் தூக்கிலிட்டுக் கொன்றார்கள்.

நாம் இச்சரிதையைக் கவனமாய்ப் பார்த்தால் அறிவு நல்லதுதான். ஆனாலும் சன்மார்க்கத்தைச் சேராத அறிவு மோசமுள்ளது என்பது தெளிவாகத் தோன்றும். அதே அறிவு அனேக சாஸ்திரிகளுக்கும் இருந்தது. அவர்கள் அதை நன்மை செய்வதற்காகவே



உபயோகித்தார்கள். இவன் மகாபாவம் செய்ய இதை உபயோகித்தான். காரணம்:—அவர்கள் நல்லவர்கள். இவன் கொடியவன். ஆதலால் நாம் பள்ளிக்கூடத்தில் பிள்ளைகளுக்கு அநேக பொருள்களைப் படிப்பித்தால் அவர்கள் எப்படிச் சன்மார்க்கமாய்ச் ஜீவிக்க வேண்டும் என்று அவர்களுக்குப் போதிக்காமலிருப்பதும் அல்லது அவர்களுக்கு முன் மாதிரியாக ஜீவிக்கவும், சீர்கெட்ட உபாத்தியாயரை அவர்களுக்கு படிப்பிக்கவும் நாம் தெரிந்துகொண்டால், படிப்பினால் நமது பிள்ளைகளுக்கு என்ன பயனாகும்? பிள்ளைகளை நல்வழியில் நாம் வளர்க்கவேண்டுமானால் அவர்களின் குணத்தை நன்றாய் வளர்ப்பது நமது முதல்கடமை. அதற்கு இரண்டு உபாயங்களுண்டு. அவை:—சன்மார்க்கப் போதனையைப் பள்ளிக்கூடங்களில் போதிப்பதும், அவர்களைப் படிப்பிக்க நற்குணமுள்ள உபாத்தியாயரையே தெரிந்து கொள்வதுமாம். இந்த இரண்டு காரியங்களையும் நாம் கவனித்தால் படிப்பு நமது பிள்ளைகளுக்கு மிக நலமாகும்.

---

## “முன்னவன் முன்னம் முடி”

(136-ம் பக்கம் தொடர்ச்சி.)

திரு. தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான், பி. ஏ.

“தோகையும் பிரிந்தனள் எந்தை துஞ்சினன்
வேகவெம்பழி சுமந்துழல வேண்டலேன்
ஆதலின் யானினி யிதனுக்காமிட
மேகுதி யீண்டு நின்றிளவலே”

என்று தம்பிமேல் வைத்த காதலால் உரைக்கின்றான். இவ்வுரை கேட்ட இலக்குவன் “அண்ணலே! இடர் தன்னை வென்றானன்றே வீரர்களாவர். நீர் கருதும் செய்கை புகழுடையதாகுமோ. அதுதான் இருக்கட்டும். என்னை உம்முடன் அனுப்பிய என் அன்னை” “மன்னும் நகர்க்கே இவன் வந்திடின் வா. அதன்றேல் முன்னம் முடி” என்றன்றோ பணித்துள்ளாள். அத் தாயுரையை நிலை நிறுத்த வழி

யற்ற போதன்றோ நீர் இவ்வாறு என்னை இயலும்", என்று கனிந்து கூறும் மொழிகள் அழகுடையதாகவே அமைந்துள்ளன

"என் தாய் உன்முன் ஏவிய யாவும் இசையினால்
பின்றாது எய்திப் பேரிசை யாளாத் தழிவுண்டேல்
பொன்றா முன்னம் பொன்றுதி யென்றாள் உரை பொய்யா
நின்றாலன்றோ நிற்பது வாய்மை நிலையம்மா"

என்பது நல்லியல் கவிஞரின் நலமுடைய வாக்காக அமைந்து தாய் மொழிந்த உரைவழி நின்ற தாயனது பெருமையை உலகுக்குப் பறை சாற்றுகின்றது. இன்னும்

"கேட்டார் கொள்ளார் கண்டவர் பேறார் கிளர் போரில்
தோட்டார் கோதைச்சோர் குழறன்னைத் துவளாமல்
வீட்டா னென்னும் பேரிசை கொள்ளான் செருவெல்ல
மாட்டான் மாண்டான் என்ற பின் மேலும் வசையுண்டோ."

என்று இலக்குவன் கூறிய செம்மை சான்ற சொற்கள் இராமனது உளத்தில் ஆழ்ந்து பதிந்தன. உண்மை உணர்ந்த வீரர் இருவரும் ஒருவர் முன் ஒருவராய் இகலிச் சென்று கவந்தனது கைகளை அறுத்தெறிந்தனர்.

இவ்வாறு தாயுரை தலை மேற்கொண்டு, தமையனுக்குத் தொண்டு செய்து வந்த தம்பியும் இந்திரசித்தன் விடுத்த மலரவன் கணையால் மாழ்கி, மண்மீது விழுந்து கிடந்ததைக் கண்ட இராமன்.

அறந்தாய் தந்தை சுற்றமுமற்று மெனையல்லால்
துறந்தாயென்று மெய் மறவாதாய் துணைவந்து
பிறந்தாயென்னைப் பின்பு தொடர்ந்தாய் பிரிவாற்றாய்
இறந்தா யுனைக்கண்டும் இறவாதிருந்தேன் எளியேன்"

என்று பன்னிப் பன்னி அளவிறந்த சோகத்தால் நலிந்த நிலையைச் சித்திரிக்கும் கம்பரது கவிப்பெருமையேபெருமை. இராமனும் இலக்குவனும் அவர் தம் சேனையும் ஒருங்கே வீழ்ந்து கிடந்ததைக் கண்ட அரக்கர்கோன் சிறையிருந்த செல்வியாய சீதையைத் தனது விமானத்திலேற்றிப் போர்க்களத்தை அவளுக்குக் காட்ட, மண்மீது கிடந்த மன்னன் மைந்தர்களைக் கண்டமங்கை மயங்கி



"விழுந்தாள் புரண்டாள் உடல் முழுவதும்
வியர்த்தாள் உயிர்த்தாள் வெதும்பினாள்
எழுந்தாளிருந்தாள் மலர்க் கரத்தை
நெரித்தாள் சிரித்தாளேங்கினாள்
கொழுந்தா வென்றாள் அயோத்தியர் தம்
கோவேயென்றாள் எவ்வுலகும்
தொழுந்தாள் அரசேயோ வென்றாள்
சோர்ந்தாள் அரற்றத் தொடங்கினாள்."

என்று கூறும் கம்பர் கவிநலம் நயஞ்சான்றதாகும். களங்காண வந்த நங்கை களத்திடையே இலக்குவன் மயங்கிக் கிடப்பதைக் கண்ட போழ்து, இளைய வீரனது இணையற்ற பெருமையை நினைந்து நங்கை புலம்பலுற்றாள்.

"மேதா இளையோய் விதியார் வினைவால்
போதா நெறியெம் மொடு போதுறு நாள்
மூதானவள் முன்னர் முடிந்திடெனும்
மாதா உரையின் வழி நின்றனையோ."

என்று மங்கைமருகிக் கூறும் உரை சாலவும் அழகுடையதாகும்.

"முன்னவன் முன்னே முடிந்திடு" என்று தாயுரைத்த மொழியின் தலை நின்று உயிர் துறந்துள்ளனரே இலக்குவன் என்று மயங்கக்கூறும் செம்மை சான்ற சொற்கள் இலக்குவன் தாயுரை பேணிய தகைமையைப் பெரிதும் விளக்குவதாகும்.

மலரோன் படையால் மயங்கிய வீரர்கள் மாருதி கொணர்ந்த மருந்தினால் உயிர் பெற்றெழுந்தார்கள். பின்னர் இலக்குவன் இந்திரசித்தினது முடித்தலை துமித்து, அவன்றன் தலையுடன் வந்த தம்பியைத் தழுவிய இராமன்,

"கம்ப மதத்துக் களி யானைக்
காவற் சனகன் பெற்றெடுத்த
கொம்புமென்பால் இனிவந்து
குறுகினாள் நன்றெனக் குளிர்ந்தேன்
வம்பு செறிந்தமலர்க் கோயில்
மறையோன் படைத்த மா நிலத்தில்
தம்பியுடையான் பகையஞ்சான்
என்னும் மாற்றந் தந்தனையால்"

என்று போற்றியுரைக்கும் நலம் அழகுடைய்தாகவே அமைந்துள்ளது. "தம்பியுடையான் பகையஞ்சான்." என்னும் முதுமொழிக்கு இலக்கியமாய் அமைந்த இலக்குவன் தன் தலைவனான இராமனுடனே மற்றும் நகர்க்குத் திரும்பிவந்து அண்ணனுடன் இணைபிரியாது வாழ்ந்தான் என்பர் கவியரசர்.

இதுகாறும் கூறியவற்றால் "மன்னும் நகர்க்கே இவன் வந்திடின் வா அதன்றேல் முன்னம் முடி" என்று தாயுரைத்த மொழிகளைத் தலைமேற் கொண்டு வாழ்ந்த பெருமகன் இலக்குவன் என்பதும் அவன் அண்ணன்பால் மாறாத காதலுடையோன் என்பதும் அவனது ஆரா அன்பினை அளவிட்டுரைக்கும் ஆற்றல் படைத்தவர் கல்வியில் பெரிய கவியரசராகிய கம்பர் பெருமானே என்பதும் எனது தாழ்மையான கருத்தாகும் என்று கூறி என் பணி முடிக்கின்றேன். திருவருள் முன்னிற்க—சுபம்.

---

# மார்கழியின் மாட்சி
## ஆண்டாள் அன்பு.

(சென்னிமலையான் எழுதியது.)

உலக ஆரவாரங்களின் முழக்கத்தில் தவிக்கும் ஆடம்பரம் மிகுந்த ஆலயங்களில், மக்கள் புறத் துன்பங்களினூடே வீழ்ந்து எண்ணாத எண்ணங்கள் கொண்ட மனத்துடன் இறைவனைக் காணுவதைக் காட்டிலும், சாந்தம் தவழும் உஷக்காலத்தில் பந்தன மற்ற மனதுடன் செய்யும் அமைதியான பிரார்த்தனை மிகவும் மாண்புடையதாகும். இத்தகைய அர்த்தமுடைய பிரார்த்தனையினால் மக்கள் வாழ்க்கை இன்பகரமாகவும், ஒழுக்கமாகவும் முடிவெய்தப்படுவது திண்ணம்.

ஆண்டாளும் மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளில் தன் ஆயர் சிறுமிகளையும் தன் அருமைத் தோழிகளையும் நோக்கி,



கீசுகீ சென்றெங்கு மானைச் சாத்தங் கலந்து
பேசின பேச்சரவங் கேட்டிலையோ பேய்ப்பெண்ணே!
காசும் பிறப்புங் கலகலப்பக் கைபேர்த்து
வாச நறுங்குழ லாய்ச்சியர் மத்தினா-
லோசை படுத்த தயிரரவங் கேட்டிலையோ!

——" அதாவது,

"கீழ்வானம் வெள்ளென் றெருமை சிறுவீடு—
மேய்வான் பரந்தன காண்—"

என்று கீழ்திசை ஆகாயமானது வெளுத்தது; எருமைகளெல்லாம் மேய்வதற்காக வயல்களில் புகுந்திருப்பது மன்றி, எங்கணும் புள்ளினங்கள் ஒன்றோடொன்று கூடிக் கீச்சு கீச்சென்று சம்பாஷிப்பதின் ஒலியை ஆயர் சிறுமியே! நீ இன்னும் கேட்கவில்லையா? மேலும், நறுமணம் கமழும் கூந்தலுடைய ஆயர்குலப் பெண்கள், தங்கள் அச்சுத் தாலியும் ஆமைத் தாலியும் கலகலவென்று ஒலிக்கும்படியாகக் கரங்களினால் மத்தை ஓசைப்படுத்த அதனால் உண்டாகும் தயிரின் ஒலியும் நீ கேட்கவில்லையா? ஆகையால் "நாயகப்பெண் பிள்ளாய்! நாராயணன் மூர்த்தி-கேசவனைப் பாடவுங் கேட்டே கிடத்தியோ-தேசமுடையாய் திறவேலோ ரெம்பாவாய்" என்று பெண்கள் நாயகமே! கண்ணபிரானுடைய பிரார்த்தனையில் நாங்கள் ஈடுபட்டுநிற்க, நீ மாத்திரம் உறங்கிக்கிடப்ப தெங்ஙனம்? ஆகையால் சௌந்தர்யமுடையவளே!! எழுந்துவந்து எங்களுடன் பிரார்த்தனையில் கலந்துகொள் என்று உணர்த்தித் தன்னுடன் அழைத்துக்கொண்டு; நந்தகோபர் இல்லத்திற்குச் சென்றார்.

அன்று குருக்ஷேத்திர யுத்தபூமியில் அர்ஜுனனுக்கு பிரமாண்டமான விஸ்வரூபத்தைக் காட்டிய ஸர்வேஸ்வரன், நந்தகோபருடைய மாளிகையில் லீலா விபூதியின் தனிப்பிரகாசமாகத் துலங்கும் காட்சி மிகவும் அர்த்தபுஷ்டியுடையதாகும். அன்று கீதையை யுணர்த்திய அர்ஜுநன் ஒன்றுமறியாப் பாலகனாய் நந்தகோபர் திருமாளிகையில் செய்த செயல்களினால், அவனது [illegible]ப்பு மேலோங்குகிறதே ஒழிய, "ஸ்க்குரூ உலூஸ்" என்பவர்கள் [illegible]ணுவதுபோல் வீழ்ச்சிக்கு யாதும் காரணம். எனெனில், எம்பிரான் தொண்டருக்கு எளியவனன்றோ!

"நந்தகோபன் குமரன் ஏரார்ந்த கண்ணி யசோதை யிளஞ் சிங்கம்" கடவுள் தன் அன்பனிடம் இயங்கும் தன்மை என்ன அற்புதமாகத் துலங்குகிறது! நந்தகோபன் குமரனும் எம்பிரான், "பார்க்கினண்டபிண்டப் பரப்பனைத்து நின்செயலே—யார்க்குஞ் செயலிலையே யையா பராபரமே" என்று சொன்ன பூஜ்யரான தாயுமானவர் மொழிக்கிணங்க; அண்டபிண்ட சராசரங்களையும் கட்டியாளும் தந்தைக்கு ஆயர்குலத் தலைவனாகிய நந்தகோபர் தந்தையாவதும், ஏரார்ந்தகண்ணி யசோதாபிராட்டிக்கு, 'பேய்முலை நஞ்சுண்டு கள்ளச் சகடங்கலக்கழியக் காலோச்சி' 'மாவாய் பிளந்தானை மல்லரை மாட்டிய' 'புள்ளின்வாய் கிண்டானை' 'பொன்றச் சகடமுதைத்தாய்' முதலிய வீரம் மிகுந்த செயல்களால் இளஞ் சிங்கக்குட்டியாகப் புலனாவதும், பின்பு அவ்வனிதா மணிக்கே; குழந்தை வாஞ்சை மிகுதியால் 'குன்று குடையா வெடுத்தாய்!' போன்ற தீரச்செயல்களைப் புரியும் வல்லமையுடைய எம்பிரானை, 'பூணித்தொழுவினில் புக்குப் புழுதியளைந்த பொன்மேனிகாணப் பெரிதுமுகப்பன் ஆகிலும் கண்டார் பழிப்பர்-நாணெத் தனையு மிலாதாய்! நப்பின்னை காணிற் சிரிக்கும்-மாணிக்க மேயென் மணியே! மஞ்சன மாட நீவாராய்' என்று பெரியாழ்வார் திருமொழிப் பிரகாரம் நப்பின்னைப் பிராட்டி உன்னுடைய அழுக்குப் படிந்த திருமேனியைக் கண்டால் நகைக்கும். ஆகையால் நீராட வரவும் என்று பரிகாசமாகச் சொல்வதையும், துருவித் துருவி ஆராயுங்கால் இறைவன் தன் பக்தர்களிடம் அகப்பட்டு உழலும் பான்மை அந்தோ எத்துணை சிறப்புடையது? இதனாலன்றோ நம்மாழ்வாரும்,

"பத்துடையடியவர்க் கெளியவன் பிறர்களுக் கரியவித்தகன்-மலர்மகள் விரும்பும் நம் அரும்பெறலடிகள்-மத்துறு கடைவெண்ணெய் களவினில் உரவிடை யாப்புண்டு எத்திறம்! உரலினொடிணைந் திருந்தேங்கிய வெளிவே" என்று சொன்ன, ஸர்வேஸ்வரன் தன் பக்தர்களிடம் காட்டும் ஸௌலப்ய குணம் கவனிக்கற்பாலது.

தன் அடியார்கள் நலனுக்காக கர்மகண்டத்தோடு ஒட்டினவராக லீலா விபூதியில் ஈடுபட்டு. நந்தகோபருடைய மாளிகையில் பிரகாசித்துக் கொண்டிருக்கும் கண்ணனை அணுகத் தன் ஆயர் தோழிமார்களுடன் சென்ற ஆண்டாள், அங்குத் திருமாளிகை வாசல் காவற்றொழில் புரிந்து வருகின்ற காப்பானை விளித்து,



நாயகனாய் நின்ற நந்தகோபனுடைய கோயில் காப்பானே! கொடித்தோன்றுந் தோரண, வாசல் காப்பானே மணிக்கதவந் தாள் திறவாய்," என்று இரங்கிக் கேட்டு உட்புகுந்து, "எம்பெருமான் நந்தகோபாலா வெழுந்திராய்! கொம்பனார்க் கெல்லாங் கொழுந்தே குலவிளக்கே எம்பெருமாட்டி யசோதா யறிவுறாய்!" என்று முதலில் நந்தகோபரையும், பின்பு யசோதா பிராட்டியையும் துயிலெழுப்பி, நப்பின்னை நாயகனைச் சேவிக்கப் பெற்றோர்களிடம் அநுமதி பெற்று; நப்பின்னை தேவியின் இருப்பிடத்தை யணுகி,

"உந்து மதகளிற்றனோடாத தோள்வலியன்
நந்தகோபாலன் மருமகளே; நப்பின்னாய்!
கந்தங் கமழுங்குழலீ! கடைதிறவாய்
வந்தெங்குங் கோழியழைத்தன காண்-மாதவிப்
பந்தல்மேல் பல்கால் குயிலினங்கள் கூவினகாண்,
பந்தார் விரலி! உன் மைத்துனன் பேர்பாட
செந்தாமரைக்கையால் சீரார் வளையொலிப்ப
வந்து திறவாய் மகிழ்ந்தேலோ ரெம்பாவாய்"

என்று, நறுமணங் கமழும் கூந்தலையுடைய, நந்தகோபருடைய மருமகளான நம்பின்னைப் பிராட்டியே! குருகத்திக் கொடிகளாகிய பந்தலின்மேல் துயிலுறுகின்ற குயிற் கூட்டங்களும், கோழிகளும் கூவுகின்றன. உனது வாழ்க்கைத் துணைவரது சேவைக்காக நாங்கள் இங்கு போந்து காத்திருக்கிறோம். ஆகையால் மேன்மை மிக்க உன் கை வளையல்கள் ஒலிக்கும்படியாக வந்து, செந்தாமரைக் கரத்தினால் கதவைத் திறந்துவிடு என்று கூறி நப்பின்னையின் நன்னோக்கத்தையும் பெற்று, தன் துணைத் தோழிகளுடன் ஆண்டாள் கண்ணனைச் சேவிக்க நெருங்கினாள்.

ஈண்டு, "செந்தாமரைக் கையால் சீரார்
வளை யொலிப்ப வந்து திறவாய்"

என்ற விஷயத்து, ராமானுஜர் வாழ்க்கையில் நிகழ்ந்த ஓர் சம்பவமும் திருப்பாவையின் தனிப் பிரகாசத்துக்கு ஓர் உதாரண[illegible]ம். உபநிஷத்தின் எதிரொலியான திருப்பாவையின் உள்ளு[illegible] பொருள் அற்புதமானதாகும். இத்திருப்பாவையை அடிக்கடி [illegible]மானுஜர் மனதிலேயே அநுஸந்தித்து வருவாராய் இத்தகைய மனனத்துடன் ஓர் நாள் மாதுகரத்துக்காக ஸ்ரீ பெரியநம்பி என்ற

அறிஞர் இல்லத்துக்குச் சென்றார். அவ்வமயம் சாத்தப்பட்டிருந்த கதவைப் பெரிய நம்பியின் 'அத்துழாய்த் தேவியார்' இராமானுஜரை வரவேற்கத் திறக்கவே, இராமானுஜர் அப்படியே மூர்ச்சித்துக் கீழே விழுந்தார். தேவியார் திகைத்து அறிஞரான பெரிய நம்பிகளிடம் இச்சேதியைத் தெரிவிக்க, அன்னவர் உடையவரின் உயரிய எண்ணத்துக்கு மகிழ்ந்து "உந்து மதகளிற்றன்' பாசுரம் அனுஸந்தானமாயிருக்கும் என்றார். ஆனால் 'அத்துழாய் தேவியார்' மீண்டும் குழம்பி நிற்பதைக் கண்ணுற்ற நம்பிகள் "செந்தாமரைக் கையால் சீரார் வளையொலிப்ப வந்து திறவாய்'' என்று மனனம் செய்யும் சமயமும் நீ சென்று கதவைத் திறந்ததும் ஒத்திருக்கவே உன்னையே நப்பின்னைப் பிராட்டியாக நினைத்து, சேவித்து மூர்ச்சையானார் என்றுரைத்தார். ஸ்ரீ பாஷ்யகாரரின் மனத்தூய்மைக்கு யாரே பாஷ்யம் கூறமுடியும்!,

உட்சென்று கண்ணனை யணுகிய ஆண்டாள்,

"உம்பர் கோமானே! உறங்காதெழுந்திராய்!!'' உணர்த்தி;

"சிற்றஞ் சிறுகாலே வந்துன்னைச் சேவித்துன் பொற்றாமரை யடியே போற்றும் பொருள் கேளாய்''

என்று உஷக்காலத்தில் இவண்போந்து உன்னைச் சேவிக்கும் காரணமென்ன வெனில்;

"எற்றைக்கு மேழேழ் பிறவிக்கு முன்றன்னோ டுற்றோமே யாவோ முனக்கே நாமாட் செய்வோம் மற்றை நங் காமங்கள் மாற்றேலோ ரெம்பாவாய்.''

அதாவது எந்நாளும் உன்னுடைய சேவையைச் செய்யவே இச்சையுடைவோம். மேலும் உனக்கு மாத்திரமே நாங்கள் அடிமை செய்யவுங் கடவோம். ஆனால் எங்கள் இதர இச்சைகளைக் களைந்து ஆட்கொள்ளவேண்டும் என்று கேட்கலுற்றார்கள்.

உஷக் காலத்தில் பிரார்த்தனை வன்மையுடையதா யிருக்கிறது. ஆண்டாள் இறைவனுடைய லீலா விபூதியில் ஆழ்ந்தாள் என்று சொல்வது மிகையாகாது.

இத்தகைய மார்கழி மாதத்துப் பரிசுத்தப் பிராதக் காலத்தை மணிவாசகப் பெருந்தகையாரும மிக்க பயன் படுத்திக் கொண்டு, "போற்றியா மார்கழி நீராடேலோ ரெமபாவாய்'' என்ற முடியைக்



கொண்ட இருபது பாக்கள் திருவாசகத்தில் வெளியிட்டார். திருவெம்பாவை என்பது இதற்குப் பெயர். ஆண்டாள் திருப்பாவையில் "எல்லே யிளங்கிளியே யின்ன முறங்குதியோ'' என்ற பாவின் நளினத்தை ஒத்தே;

"ஒண்ணித் திலநகையாம்! இன்னம் புலர்ந்தின்றோ?
வண்ணக் கிளிமொழியா ரெல்லாரும் வந்தாரோ?''

என்று திருவெம்பாவையிலும் ஓர் பாசுரமும் மிளிர்கிறது.

உஷக்காலத்தைத் தழுவிச் செய்யும் பிரார்த்தனையில் சொரியும் நளினமும், வீரமும் மக்கள் உள்ளத்தை இன்பத்திலாழ்த்து மென்பது திண்ணம். பாரதியாரும் நம் தாய் நாட்டைக் குறித்துச்சொல்லும் பொழுது,

"பொழுது புலர்ந்தது; யாம் செய்த தவத்தால்
புன்மை யிருட் கணம் போயின யாவும்,
எழுபசும் பொற் சுடர் எங்கணும் பரவி
யெழுந்து விளங்கிய தறிவெனும் இரவி
தொழுதுனை வாழ்த்தி வணங்குதற் கிங்குன்
தொண்டர்கள் பல்லாயிரர் சூழ்ந்து நிற்கின்றோம்
விழிதுயில் கின்றனை யின்னு மெந்தாயே!
வியப்பிது காண்! பள்ளி யெழுந்தருளாயே!

என்றார். என்னே! உஷக்காலத்தின் மாட்சி!!

யாதவ இளைஞர்களே!

எல்லாச் சமூகங்களும் தங்கள் தங்கள் குலமுன்னேற்றங் கருதி ஏகோபித்துப் பாடுபடுகின்றன. அதன் காரணமாகப் பற்பல நற்பயனகளையும் பெற்று வருகின்றன; நமது யாதவ சமூக முன்னேற்ற வாழ்க்கை நமது யாதவகுல வாலிபராகிய உங்கள் கையில் இருக்கிறதென்றே நீங்கள் உணர்வீர்களாக. ஆதலின் நமது மரபினர் வசிக்கும் கிராமங்கள் தோறும் மகிழ்வுடன் சென்று அங்குள்ளார் அனைவருக்கும் கல்வியில் ஆர்வமும் கற்பதில் ஊக்கமும் உண்டாமாறு தொண்டுபுரியுங்கள். சங்கங்களையும் ஆங்காங்கே ஸ்தாபியுங்கள். வாழிய நலனே! வாழிய நலனே! ப-ர்.

# குசேலர்.

(103-ம் பக்கத் தொடர்ச்சி.)

திரு. வீராசாமி பிள்ளை.

---

மகிழ்வுடன் சென்ற குசேலர் ராஜவீதியில் உள்ள மாளிகைகளில் தீற்றியிருக்கும் ஓவியங்களைக்கண்டு திகைப்புற்று நின்றார். அதில் தீற்றியிருக்கும் ஓவியங்களில் கண்ணபிரான், கொடுங்கோள் வேந்தனும் தனது அம்மானுமாகிய கஞ்சன் செய்த வஞ்சனைகளையும், அதற்காக அவனைக் கொன்ற வரலாற்றையும், சாலுவன் என்பான் தனது நண்பனான சிசுபாலன் மணஞ் செய்து கொள்ள விரும்பிய உருக்குமணிப் பிராட்டியை ஸ்ரீகண்ணபிரான் மணஞ் செய்தருளக் கவர்ந்து சென்றபோது, வழிமறித்துச் சாலுவன் போர்தொடங்கித்தோற்று இக்காரணத்தால் யாதவகுல மக்களின் மேல் பகைமை கொண்டு சிவபெருமானைக் குறித்துத் தவமிருந்து அச் சிவபெருமானருளால் மயன் சிருட்டித்துத் தந்த இரும்பு விமானத்திலேறி எங்கும் தடையின்றி உலாவிக் கண்ணபிரான் கடபுலனுக்குத் தோன்றாமல் கரந்துவசித்துக் கண்ணன் துவாரகையில் இல்லாத சந்தர்ப்பம் அறிந்து சேனையோடு வளைத்துக்கொண்டு மாயாவினோதனாய் இருபத்தொருநாள் வரையில் இடையறாமல் யாதவ வீரர்களோடு போர் புரிந்ததையும் பாண்டவர் வேள்வி காக்கச்சென்ற கண்ணபிரான் துவாரகைக்கு எழுந்தருளி அச்சாலுவனுடன் போர்புரிய அச்சாலுவன் தன் மாயையினால் வசுதேவரைச் சிருட்டித்துப் பிடித்துக்கட்டித் தலையறுத்து வீராவேசத்துடன் போர் புரிந்ததையும் இம்மாயையைக் கண்டு ஸ்ரீகண்ணபிரான் சிறிதும்வருந்தாமல் அச்சாலுவனைத் தன் சக்கராயுதத்தால் தலைகொய்து யாதவ வீரர்களைக் காப்பாற்றி வசுதேவரைக் கண்டு மகிழ்ந்ததையும் சேதிதேசத்து அரசனும் ஸ்ரீ கண்ணபிரானுக்கு அத்தைமகனுமாகிய சிசுபாலன் இளமைப் பருவந்தொட்டு ஸ்ரீ கண்ணபிரானோடு பகைமை பாராட்டிக்கொண்டிருந்து இந்திரப்பிரஸ்தநகரில் தர்மராஜனால் நடத்திய ராஜசூயவேள்வியில் தர்மராஜன் ஸ்ரீ கிருஷ்ணபகவா



னுக்கு அர்க்கபூஜை (முதற்பூசை) செய்ததைக்கண்டு பொறாமை கொண்டு அளவிறந்தவசை மொழிகளை அச்சபையிற் பிதற்றி ஸ்ரீ கண்ணபிரானுடைய (சுதர்சனம்) சக்கரப் பொறிக்கு இரையாகி மடிந்து அவன் சாயுச்சிய பதவிபெற்ற சாத்திரத்தையும்; யவன தேசாதிபதியாகிய காலயவனன் சிவபிரானிடம் பெற்ற பல வரங்களோடு அமையாமல் கிருஷ்ண பலராமர்களையும் வெல்லவேண்டி நாரதமுனிவரிடம் வரம்பெற்று இணையில்லா வீரனாக மதித்துப் போர்க்கோலங்கொண்டு வடமதுரை சென்று அந்நகரைச் சூழ்ந்து அங்குள்ள யாதவமக்களைத் துரத்த எண்ணி வருவது கண்ணபிரானுக்குத் தெரிந்து யாதவமக்களுக்கு நாசமுண்டாகாமல் காப்பதற்குத் தக்கபடி கடலில் துவாரகாபட்டணம் நிருமித்து மதுரையில் உள்ள யாதவர்களனைவரையும் குடிபுகச்செய்து தான் சர்வஞ்ஞனாய் சர்வசக்தியுடையவனாய் இருந்தும் நாரதர் காலயவனனுக்குத் தந்த வரம் காரணமாய் நிராயுதபாணியாய்ப் பயந்தோடினவர் போல் ஓட நாரதர் சொன்ன அடையாளத்தால் காலயவனன் தெரிந்து கண்ணபிரானைத் தொடர்ந்து செல்ல அவர் குகையில் ஒளிந்ததையும், அக்குகையில் முன் ஒருகாலத்தில் அசுரரை வென்று நெடுங்காலம் நித்திரையின்றி விண்ணுலகத்தைப் பாதுகாத்து அலுத்துப் போய்ப் பின்னர் தடையின்றிப் பெருந்தூக்கம் தூங்கவும் அவ்வாறு தூங்கும்போது எவன் தன்னை எழுப்புவானோ அவன் உடம்பெரியப் பட்டுச் சாம்பலாய்ப் போகவும் தேவர்களிடத்தில் வரம்பெற்று நெடுங்காலம் அக்குகையில் துயிலும் முசுகுந்தனை நோக்கி இவனே கண்ணபிரானென்று நினைத்துக் காலயவனன் காலால் உதைக்க முசுகுந்தன் துயிலுணர்ந்து கண்விழித்துப் பார்க்க அந்த யவனன் உடம்பெரிபட்டு இறக்கக் கண்ணபிரான் செய்த சூழ்ச்சியையும் இளமைப்பருவத்தில் கண்ணபிரான் செய்த அற்புதத் திருவிளையாடல்களையும் காடுகளூடுபோய்ப் பசுக்களை மேய்த்துத் திரும்பும் கண்ணபிரான் கோலத்தையும் பொல்லாங்குழல் கொண்டு இனிய தேவகானங்களைப் பாடிக்கொண்டும் பதினாறாயிரம் கோபிமார்களுடன் இயற்றிய லீலாவினோதங்களையும் அத்துவாரகையில் மேல்நிலை முதலிய இடங்கள் தோறும் சித்தரித்திருப்பதைக்கண்டும், அவ்வீரச் செயல்களை நகரமாந்தர்கள் கேட்போர் செவிக்கின்பம் பயக்கப் பாடிக்கொண்டிருப்பதைச் செவிக்கமுதாகக் கேட்டுக் கொண்டும் சென்றார்.

எல்லா உலகங்களையும் தன் திருவுதரத்தினுள் அடக்கியும் வெளிப்படுத்தியும் காக்கும் பெருமானான ஸ்ரீ கண்ணபிரானை இக்நகரத்து உயர்ந்த திருமாளிகைகள் தன்னிடத்துக் கொண்டும் வெளிப்படுத்தியும் இருக்கும் இந்நகரத்தின் மாண்பை எடுத்துக்கூற ஆயிரம் நாவுடைய ஆதிசேஷனுக்கும் அரிது. இந்நகரத்தின் முடிவைக் கண்டு கூற ஆயிரம் கண்கள் படைத்த தேவேந்திரனுக்கும் அருமையானது. முரசின் ஆர்ப்பு எக்காலத்தும் நீங்காத இத்துவாரகை வலமார்பில் பல்லாண்டு பல்லாண்டாய் வாழும் மாந்தளிர் போன்ற மேனிவாய்ந்த) திருமடந்தைக்கு மணாளனை எம்பெருமான் பூமியைச் சிருஷ்டிக்குங்கால் தன் நாபிக்கமலத்தில் பிரமனைப் படைத்து அப்பிரமனால் இத்தவிதமாய் நகரத்தை நிர்மாணம் செய்யென்று அருளிய பின் தன் நான்குகரங்களால் சிருஷ்டித்தது போலும் என்று இறும்பூதெய்தி மெல்ல நடந்து சென்றார்.

துவாரகையின் ஒரு பகுதியின் வளத்தை மாத்திரம் கண்டு ஆச்சரியப்பட்ட இக்குசேலர்க்கு அநேக காவதம் நடந்து வந்ததனாலாகிய மெய்வருத்தமும் இளைப்பும் பசியும் இருந்தவிடந்தெரியாமல் விட்டு நீங்கின. நீர்பெருகி நாவு குளிர்ந்தது. மிக மெலிந்த உடம்பும் காண்பவர் வியப்புறும்படி தழைத்துப் பூரித்தது. தோற்கருவி, தொளைக் கருவி, நரம்புக் கருவி, மிடற்றுக்கருவி ஆகிய ஐவகை வாத்திய கோஷங்களும், அரசர்களின் வீரக்கழலின் ஆர்ப்பும், குதிரைகளின் கனைப்பும், யானையின் பிளிறலும், தேர்களின் ஓசையும் ஒன்று சேர்ந்து தேவலோகத்தின் முகடுவரையில் முழங்குகின்ற பல்வளம் நிறைந்த ஸ்ரீ கண்ணபிரான் வசிக்கும் அரண்மனையின் முதல் வெளிவாயிலைக் குசேலர் அடைந்தார்.

தலைவாசலின் பெருஞ்சிறப்பைக் கண்டு மனத்தில் திகைப்பும், அச்சமும், மகிழ்ச்சியும், அடங்காதவராய் எள்ளிடுவதற்கும் இடமில்லாமல் நெருங்கியிருக்கும் மக்களிடையே நாம் ஒரு ஊழிவரையில் காத்திருந்தாலும் உள்ளே செல்லுவதெப்படி? என்றெண்ணி நாழிகைகள் பலகழிபக்காத்திருந்தவர், இனித் தாமதித்தல் காரியம் அல்ல; என்று துணிவு கொண்டு இந்த நெருங்கிய கூட்டத்தில் நுழைந்தால் வரக்கடவன வரட்டும் என்று மனத் துணிவுடன் அங்கிருந்து ஓர் அரசன் தன் நால்வகைப் படையுடன் உள்நுழையும் [illegible] கூடச்சென்றார். கஞ்சுகம் (சட்டை) அணிந்த ஒரு சேவகன்



வாளாயுதத்தால் பற்பலரைத் துரத்தலும் குசேலர் பயந்து நடுங்கி, கால்விசைத்தோடி நெடுந்தூரம் அகன்றார். மீட்டும் உள்ளே செல்ல எண்ணி மெல்ல ஒரு பக்கத்தில் வந்து சேர்ந்தார், கண்ணபிரான் திருவடிக்கண் வணக்கத்தோடு திறையாக அளக்கப்படும் செம்பொன்னின் பொதிகளைக் குவித்து வைத்திருக்கும் பக்கமாகிய இங்குக் காவலர்கள் பல ஆயுதத் தொகுதியோடு குழுமியிருக்கக் கண்டு இது ஒரு தனித்த இடம் என்றெண்ணி அங்குக் காலடி வைத்தவுடன் வாளை உறையினின்றும் உருவிக் காவலர் கையில் தாங்கிக் கொண்டு குசேலரை விரட்டினார்கள்; வற்றிமெலிந்த யாக்கையையுடைய குசேலர் மெய்நடுக்கிப் பயந்து, மயங்கி, ஓடி, உயிர்பிழைத்தார். பின்னர் யாம் எவ்வாறு உள்ளே செல்வதென்று தன்னுள் ஆராய்ந்து நிற்கும்போது ஸ்ரீ கண்ணபிரான் திருவருளால் ஓர் அரசன் சேனைத்தொகுதியோடு சென்றதைக் குசேலர் கண்டு அவன் சேனையுட்புகுந்து சொல்லற்கரிய துன்பத்தோடு நெருக்கில் அகப்பட்டுச் சகித்துப் பையப்பைய நடந்தார். உடம்பு நெருங்கி நெடுந்தூரம்வரையில் கால் நிலந்தோயாமல் தள்ளப்பட்டும், தன் கைகளைத் தொங்கவிடுவதற்கும் இடமில்லாததால் கைகளை உயரத் தூக்கிக்கொண்டும், பக்கத்தில் வருவார்களின் கைகளால் இடிப்புண்டும், இடத்துக்குத் தக்கபடி உடலை வளர்த்துக்கொண்டும், வேர்வைநீரால் நனைப்புண்டு மூழ்கியும், இது நமக்கு இரண்டாம் பிறப்பு என உணர்ந்து சிறப்புமிகுந்த துவாரபாலகர் நிற்கின்ற அக்கோயிலின் வளமிக்க வாயிலில் மெதுவாக வந்து நல்ல இடந்தேடி அடைந்தார். திருமாலின் அடியார் இவரென நிகழ்த்தும் அடையாளமாகிய சங்கு சக்கரப்பொறி ஒற்றிய புஜங்களும் துளவநளினாக்ஷ பவுத்திரமாலைகள் புரளும் திருமார்பும் திருமண் இலக்ஷணமாகத் தரித்த திருநுதலும், பாகைசூடிய முடியும், பீதாம்பரம் (பட்டாடை) தரித்த இடையும், உடையவர்களாய் வைணவசிகாமணியென விளங்கும் துவாரபாலகர்களைக் கண்டு அந்தமில் பேரின்பமழியா உலகமாகிய வைகுந்தமாநகரின் திருமாமணிமண்டப முகப்பில் வீற்றிருக்கும் ஜெயவிஜயர்கள் தாம் இவர்களை நிகர்ப்பவராவர் எனத் தன்மனத்தில் எண்ணினார்.

(தொடரும்.)

# கால்நடை வைத்தியம்.

(150-ம் பக்கத் தொடர்ச்சி.)

பதிப்புரிமை செய்யப்பட்டது.

திரு. S. பெருமாள்கோன்.

## (மேன்னை அடைப்பான்.)

பெயர்கள்:—இந்த வியாதிக்குத் தமுட்டி, மென்னை அடைப்பான், தொண்டை அடைப்பான் முதலிய பல பெயர்கள் வழங்குகின்றன. இந்த வியாதிக்கும் அடைப்பான் சப்பைநோய் என்ற வியாதிகளுக்கும் வித்தியாசம் எல்லாருக்கும் நன்றாய்த் தெரிகிறதில்லை. இதற்குக் காரணம் என்னவென்றால் இம்மூன்று வியாதிகளின் குறிகள் ஒரேவிதம் ஒத்திருப்பதுதான். இது பிராணிகளின் இரத்தத்தில் ஒருவகை விஷவஸ்துத் தோன்றுவதனால் உண்டாகிற மிகுந்த பிராணாபாயமான தொத்து வியாதி. இது முக்கியமாக எருமை மாடுகளுக்கு வருகிறது. ஆயினும் மற்ற மாடுகளும் இந்த வியாதியடையக்கூடியவைகளே. சில சமயங்களில் பன்றிகளுக்கும் இந்த வியாதி காணுகிறதுண்டு. குதிரைகளும் கழுதைகளும் கூட இந்த வியாதியினால் இறப்பதாகச் சொல்லப்படுகிறது. இது முக்கியமாக மழைகாலத்தில் உண்டாகிறது. ஆயினும் மற்றைப் பருவங்களிலும் விசேஷமாகக் கார்த்திகை மாதத்து மழைக்குப் பின்னும் உண்டாகக்கூடும். இது அப்போதைக்கப்போது வெள்ளம் வருகிற பள்ளமான பிரதேசங்களில் அதிகமாகச் சம்பவிக்கிறது. இது வயது முதிர்ந்த பிராணிகளுக்கு வருவதைக்காட்டிலும் சிறு வயதுள்ள பிராணிகளுக்கு அதிகமாக வருகிறது. சாதாரணமாக நம் தேசத்தில் காணுகிறபடி இந்த வியாதியின் முக்கியமான சின்னங்கள் என்ன வென்றால் தொண்டையில் பெரு வீக்கம் தோன்றுவதும் சுவாசம் விடுவதற்குக் கஷ்டப்படுவதும் பெரும்பாலும் சில மணி நேரத்திற்குள் மரணம் நேரிடுவதுமேயாகும். இந்த வியாதி வேறொரு விதமாகவும் வருவது உண்டு. அதனால் மார்பு பாதிக்கப்பட்டு, சுவாசாசய அழற்சியும் சில சமயங்களில் குடலழற்சியும் உண்டாகிறது. இந்த வியாதி மேலே கண்ட விதமாக நம் தேசத்தில் சாதாரணமாய் வருவதாகத் தோன்றவில்லை. (குறிகள்) மிகவும்



அதிகமான காய்ச்சலுண்டாகிப் பெரும்பான்மையாகத் தொண்டையில் வரையறையுள்ள வீக்கம் தோன்றுகிறது. நாக்கு வீங்கி வாயில் நீர் சுரந்துகொண்டிருக்கும். விழுங்குவதும் சுவாசிப்பதும் கஷ்டமாயிருக்கும். மூக்குத் துவாரங்கள் கண்கள் இவைகளின் தோல் ஊதாவர்ணமடையும். வீக்கம் சீக்கிரம் அதிகமாகி, சுவாசம் விடுவதற்கும் விழுங்குவதற்கும் வியாதிகண்ட பிராணி முன்னைவிட அதிகமாகக் கஷ்டப்படும். சுவாசம் விடும்போது கறகறென்ற ஒரு வகை சப்தமுண்டாகி அது அநேக கெஜ தூரத்தில் கேட்கக்கூடியதாயிருக்கும். மஞ்சள் நிறமும் வழுவழுப்பும் உள்ள நீர் மூக்கிலிருந்து வடியக் காணலாம். வீக்கம் தொண்டைக்குக் கீழ்நோக்கி மார்பு வரையில் பரவி வியாதி கண்ட பிராணி மூச்சுவிடமாட்டாமல் இறக்கும். இந்த வியாதியில் தோன்றும் வீக்கம் கடினமாயும் சூடாயும் நோவுள்ளதாயும் இருக்கிறதையும் அழுத்தப்பட்டபோது சடசடென்று சப்தமுண்டாகாமலிருக்கிறதையும் முக்கியமாகக் கவனிக்க வேண்டும். சில பிராணிகளுக்கு வீக்கம் தொண்டையில் உண்டாகாமல் வேறிடங்களில் அதாவது வயிறு முகம் அல்லது ஓடுகாலில் உண்டாகலாம். சில சமயங்களில் மூத்திரம் இரத்தம் போலவும் சாணி குழம்பாயும் இரத்தம் கலந்ததாயும் இருக்கும். இவ்வியாதியின் காலம் இரண்டல்லது மூன்று மணிமுதல் இரண்டல்லது மூன்று நாளில் அளவாக இருக்கிறது. வியாதி கண்டு மூன்று நாளைக்கு மேலே ஜீவித்திருக்கும் பிராணிகள் பெரும்பாலும் சொஸ்தமடைகின்றன. இந்த வியாதிகண்டது முதல் பத்து நாளில் சாதாரணமாய் ஓய்ந்துவிடுகிறது. இந்த வியாதிகண்ட பிராணிகளில் நூற்றுக்கு 80 வீதம் இறந்துவிடுகின்றன. எல்லாம் இறந்துபோவதுமுண்டு. வீக்கம் சுமாராகக் கடினமாயிருக்கிறது. அழுத்தப்பட்டால் சடசடென்று சப்தமுண்டாவதேயில்லை. அதை அறுத்துப் பார்த்தால் அதில் சாம்பல் வருணங்கலந்த மஞ்சள் நிறமுள்ள கொழு கொழுத்த வஸ்துவொன்றும் அதில் இடை இடையே கரிய இரத்தமுள்ள பாகங்களும் காணப்படுகின்றன. தொண்டை பாதிக்கப்பட்டிருந்தால் நாக்கின் அடிப்பாகம் வீங்கியிருக்கும். வாயின் பின் பகுதியிலும் நாக்கின் மேலும் ஊதா வருணமுள்ள பாகங்கள் காணப்படுகின்றன. தொண்டைப்பாகம் முழுவதும் மிகவும் வீங்கி நீர்கோர்த்திருக்கிறது. தொண்டைப் பாகத்திலுள்ள தசிரகோணங்கள் வீங்கி இரத்த குழுக்குகள் நிறைந்திருக்கின்றன. குரல் வளையி

லும் நுரையீரலிலும் சிவந்த நுரைநீர் அடங்கியிருக்கிறது. நுரையீரல் இரத்தச் சுரப்பு உடையதாயிருக்கிறது. இரத்தாசயம் தளர்ந்தும் அதன் அறைகளில் சரியாய் உறையாத அல்லது நீர்த் தன்மையான இரத்தம் சிறிதளவாக அடங்கியும் இருக்கிறது. தேக முழுவதிலும் உள்ள இரத்தம் சிறிதளவாக அடங்கியும் இருக்கிறது. தேக முழுவதிலும் உள்ள இரத்தம் அநேகமாக எப்போதும் சுபாவமான நிறமும் திண்ணமும் உள்ளதாயிருக்கிறது. மண்ணீரல் சுபாவமான பருமனும் தோற்றமும் உடையதாயிருக்கிறது. நான்காம் இரைப்பையிலும் குடல்களிலும் இரத்தங் கலந்த உணவு முதலியவைகள் காணப்படலாம். சாதாரணமாய் இரத்தம் ஒழுகியுள்ள பாகங்களும் காணப்படுகின்றன. (தொடரும்.)

---

# நோயும் மருந்தும்.

திரு. பண்டிதர், வீராசாமிபிள்ளை.

---

## க்ஷயரோகம்.

இஃது மனித தேகத்தில் இன்றியமையா உறுப்பாகிய நுரையீரல்களில் காணும் ஒரு கொடியவியாதி. இது பல ரோகங்களையும் தனக்குத் தோழமை கொண்டு தனியரசு செய்வதால் ராஜரோகம், ராஜாக்ஷயமரோகம் என்னும் பெயர் பெற்றிருக்கின்றது என்று, தமிழ் ஆயுள்வேதம் கூறுகின்றது. இது நாளடைவில் தேகத்தை மெலியச் செய்வதால் க்ஷயரோகம் என்ற பெயர் ஏற்றதாயிருக்கின்றது. இதற்கு ஈளை, இருமல், இரைப்பு என்று பல நாமங்களும் கூறுகின்றனர்.

"இது ஜ்வரரோகத்தை அரசனாகவும், காமாலையை மனைவியாகவும், பாண்டு ரோகத்தைச் சேனாதிபதியாகவும், ரத்தபித்தரோகத்தைப் புத்திரனாகவும், காசம், சுவாசம் இவைகளை மந்திரியாகவும், வாதபித்தங்களைக் காவற்காரர்களாகவும், வாந்தி, அரோசகம் (ருசியில்லாமை) இவைகளைக் [illegible]யக்காரர்களாகவும், சோபை, அதிசாரம்



இவைகளைச் சிநேகிதர்களாகவும், பீனசரோகத்தைப் பொக்கிஷத்திரவியமாகவும், கண்டத்தொனிகளைப் பேரிகை முதலிய வாத்தியங்களாகவும், மற்ற ரோகங்களைப் பரிஜனங்களாகவும் பெற்றிருப்பதால், "ராஜரோகம்" என்று "ஜீவரக்ஷாமிர்தம்" என்ற சிறந்த நூல் கூறும்.

தேகத்தில் இந்த ரோகம் திடீரென்று காணுகிறதென்றும், கரும பந்தத்தாலும், தேசகால வேறுபாட்டாலும், விஷவாயுவின் பரவலாலும், விஷக்கிருமிகள் பெருக்காலும், உண்டாகிறதென்றும், ஒட்டுவாரொட்டி வியாதியென்றும், வைத்திய நிபுணர்கள் பற்பல அபிப்பிராயம் கொள்ளுகின்றனர்; சுருதி, யுக்தி அநுபவம், ஆகிய பிரமாணங்களால் ஆராய்ச்சி செய்து பார்த்தால், அவர் கூற்றுக்கள் அனைத்தும் ஒருவாறு பொருத்தமானவையேயாகும்.

### "இவ்வியாதியின் வருகை"

மானுட தேகத்தில் இரத்தக்கெடுதியால் உண்டாகிற ஒருவித சிறிய கிரந்திகள், சுவாசப்பையின் கண்ணறைகளுக்கு மத்தியிலும், சுவாசக்குழலின் கிளைகளிலும், உண்டாகிப் பிரத கண்ணறைகளிலும், ... நாள் ஏறஏறப் பெரிமத்தில் சிறிதாய் உறுதியானதாய் இருந்து, நாள் ஏறஏறப் பெரிதாகும். இக்கிரந்திகளைச் சுற்றிப் புப்புஸத்தில் தாபனம் கண்டு சீழ் கொள்ளும். பின்னர், இக்கிரந்திகள் மெதுவுற்று உடைந்து, சீழ் சுவாசக்குழல் கிளைகளுக்குள்ளாக ஓடி, செருமலுடன் உண்டாகி, கபத்துடன் வெளிபடும். கபமும் சீழும் வெளியானவுடன் கிரந்திகள் உள்ள இடம் குழிவான பள்ளங்கள் உண்டாகும். இப்பள்ளங்கள் மருத்துவர்கள் கடவுள் கிருபையாலும், பெரியோர் ஆசியாலும், இளமையாலும், மறைந்து உலர்ந்து போவதுமுண்டு. இக்குழிகளைச் சுற்றிப் புதிய கிரந்திகள் உண்டாகி அவற்றைப் பெரிதாக்குவதும் வழக்கம்; இவ்விதம் சுவாஸப்பையில் கிரந்திகள் உற்பத்தியாகிய புப்புஸ ஸ்தானம் முற்றும் பல விடங்களில் கிரந்திகள் அதிகரித்து முடிவில் பிராணாதாரமான புப்புஸம் உதவாமற் செய்து விடுகின்றன. "புப்புஸம் = நெஞ்சறை (அல்லது) உள்ளே உள்ள ஒருவித ஜவ்வு" நுரையீரல்களை இந்த ஜவ்வு முகமில்லாத பைபோல் மூடிக்கொண்டிருக்கும்; இந்த ஜவ்வு பழுவெலும்புகளிலும் அதனோடு பற்றியிருக்கும் சதைகளிலும் ஒருங்குற [illegible] ஒட்டிக்கொண்டிருப்பதாகும். இதில் சிறிது ஜலமும் தங்கியிரு[illegible]

வைத்திய சாஸ்திரம் வல்ல பெரியோர் சாத்தியம், கஷ்டசாத்தியம் அசாத்தியம் என்று நோயையும், சிகிச்சையையும், வகுத்திருக்கின்றனர். சாத்தியம் என்பது, ஒருவித சிகிச்சையும் இல்லாமல் தேக சுகத்துக்குச் செய்யும் பத்தியபரிகாரத்தால் மாத்திரம் நோயை எளிதாய் நீக்கப் பெறுவது; கஷ்டசாத்தியம் என்பது மணி, மந்திர, ஔஷதங்களாலும் சத்திர, க்ஷார, அக்கினி முதலியவற்றாலும், வைத்தியத் திறமையாலும் நோய் நீங்கப் பெறுவது; அசாத்தியம் என்பது எந்த முயற்சியாலும் நோய் நீங்கப் பெறாதது.

## "இவ்வியாதியின் குறியும் காரணங்களும்"

சுரம் இடைவிடாமலும், பகலில் சுமாராய் இருந்து, பொழுது செல்லச்செல்ல அதிகமாயிருக்கும். அன்னத்துவேஷம் (பசியின்மை) கஷ்டசுவாசம், உடல்வலி, வியர்வை, பேதி சில சந்தர்ப்பங்களில் மலச்சிக்கல், குரல்கம்மல், இருமி இரத்தத்தோடு கபம் வீழ்தல், இரத்தம் வாந்தியோடு வருதல் வறட்சியுடன் புகைந்து புகைந்து வரும் இருமல்போல் இருந்து பிறகு வேறு குறிகளின்றி அப்படியே இருத்தல். இரத்தம் வாந்தியானால் களைப்பும் மூச்சுத் திணறலும் அதிகரித்து மூர்ச்சையுண்டாதல், க்ஷீணசுரமும், வேர்வையும் பலவீனமும் அதிகரித்தல், மாலைக்காலங்களில் குளிர் பிறத்தல், முகத்தில் பளபளப்பும், க்ஷீணமும் தோற்றல் இவைகளுடன் வயிறு மந்தமாயிருத்தலும் அசாத்தியமான பேதியுண்டாதலும் உண்டு. தாகம் அதிகமாயிருக்கும். ஆடவரைவிடப் பெண்களுக்கு இவ்வியாதி அதிகமாய் உண்டாகும். மூத்திரத்தில் கொழுப்பும், பசையும் வண்டலும் இருக்கும். காலையில் படுக்கைவிட்டு எழுந்திருக்கும்போது வேர்வையால் இவ்வியாதியாளர் மூழ்கியிருப்பார்கள். ஆடவராயினோர்க்கு இவ்வியாதி குதந்தர வியாதியோடு வருதல் உண்டு. கால் கைகள் குடைச்சல் உண்டாகிப் பின் வீக்கம் காணும். தேகம் வறண்டு வரவர மெலிந்து எலும்புந் தோலுந்தான் காணப்படும்.

இது பரம்பரை வியாதியாயும், ஒட்டு வியாதியாயும் வருவதோடு வியாதியாளரின் கபத்திலுள்ள கிருமிப் பெருக்கால், சுவாசிக்கும் ஏனையோர்க்கும் அணுகுவதுண்டு. இந்த ரோகத்தால் மரணம் அடைபவர் பிராணன் போவதுவரையில் பேசிக்கொண்டிருப்பர். சப்த சோதனைக்குழலைக் காதில் வைத்து வியாதியாளரைப் பரீக்ஷித்துப்பார்த்தால் உரோக ஆரம்பத்தில் சுவாஸ சப்தம் அதிகமாயும் அங்கிருந்து சிடசிட [illegible] ஒருவகை ஒலியும் கேட்கும்.



இருதயம் யார்க்கும் இடதுபக்கத்தில் தங்கியிருப்பதால் ஆங்குள்ள இடத்துக்குத் தக்கவாறு நுரையீரல் சிறிதாயும் வலதுபக்கம் பெரிதாயும் இருக்கும். இடதுபக்கந்தான் க்ஷயரோகம் விசேஷமாய் உண்டாகும். எந்த வயதிலும் இவ்வியாதி உண்டாகும். என்றாலும், 18 வயதிலிருந்து 30 வயதுக்குள் இவ் வியாதி கண்டால் தீருவது மிகவும் அரிது.

இது முன் கூறியபடி அசாத்தியமானதால் அதிக ஜாக்கிரதையாய்ப் பரிகாரஞ் செய்யவேண்டும்; கண்ட வியாதி அதிகப்படாமல் பரிகாரஞ் செய்யலாமேயன்றி முற்றிலும் சுகப்படுத்த முடியாது. வியாதி தேகத்தில் பரவி, ஊறி நிலைபெற்று, நுரையீரல், புப்புஸம் கெட்டுப்போனால், அந் நுரையீரலை எடுத்துவிட்டு மற்றொரு நுரையீரலை அவ்விடம் சேர்க்க யாராலும் கூடுமோ? கெடிகாரம் முதலிய இயந்திரங்களில் ஏதாவது ஒரு கருவி கெட்டுப்போனால், வேறொரு கருவி அமைத்துச் செப்பம்செய்து கொள்ளலாம். ஆனால், யாம் முற்கூறியபடி சித்தர்களின் ஔஷதங்களில் குற்றமறச் செய்த சுவர்ண தாளக நீறுகளாலும், வனமூலிகைகளாலும் நுரையீரல்களில் உற்பத்தியான கிரந்திகள் அழுகிச் சீழ்பிடிக்காமல் காப்பாற்றினால் ஒருக்கால் இவ்வியாதி வசத்துக்கு வரும்.

## வியாதியாளரைப் பேணும்வழி.

புஷ்டிதரும் உணவுகொடுத்துத் தென்றற்காற்று உலாவும் மலைகளிலும் மேட்டுப்பாங்கான இடங்களிலும் வியாதியாளரை வசிக்கச்செய்து விநோதக் காட்சிகளால் மனம் களிக்கச்செய்தும், மெதுவாய் உலாவச் செய்தும் கம்பளி உடைகள் உடுக்கச் செய்தும் மீன் நெய்யை (Cod liver oil) உபயோகப்படுத்தச் செய்தும் போஷிக்கும்படி இங்கிலீஷ் வைத்தியர்கள் கூறுகின்றனர். அன்றி, இவ் வியாதியாளருக்குப் பலத்தைத்தரும் இறைச்சி இனங்கள். பால், பாலேடுமுட்டை இவைகளும் பிராந்தி ஒயின், பீர் முதலிய சாராய இனங்களில் ஒன்றையும் உபயோகித்து வரச் சொல்லுகின்றனர்.

ஆரம்பத்தில் (Cod liver oil) மீன்நெய்யை ஒரு உத்தாணி வீதம் தினத்துக்கு 2, 3 தடவை கொடுத்துச் சில நாளைக்குப்பின் போஜனத்தின்மேல் ½ அவுன்ஸ் வீதம் [illegible] 3, 4 தடவை கிரமமாய் அதிகப்படுத்திக் கொண்டு வந்தால் [illegible]மாய் ஜீரணம் ஆகி, தேகத்தைப் போஷிப்பதோடு இருமல், [illegible]ராவேர்வை இவைகளையும் மீறவிடாமல் சமப்படுத்தும் என்[illegible]கின்றனர்.

சித்தர் வைத்தியத்தில் பவளம், முத்து, சுவர்னம் தாளகம், தாம்பிரம் வெள்ளி இவைகளின் நீறுகளாலும், தாளிசப்பத்திரி, திப்பிலி இவைகளின் ரசாயனம், லேகியம், வடகம் இவைகளாலும் இவ்வியாதி நிவிர்த்தியாய் இருக்கிறது. பெரியோர்களால் கையாண்டு வந்த தாளிசப்பத்திரி சூர்ணம், திப்பிலி ரசாயனம் இவைகளைச் செய்து கொடுக்க இவ்வியாதி வசத்துக்கு வந்திருக்கிறது. அம்முறைகளில் சிலவற்றைப் பரோபகாரார்த்தமாகப் பின் எழுதியிருக்கிறபடி செய்து குணம் காணலாம்.

### திப்பிலி ரசாயனம்.

அரிசித்திப்பிலி பலம் 11 சீனி வெள்ளைச்சர்க்கரை பலம் 12 இலவங்கப்பட்டை தாளிசப்பத்திரி சிறுநாகப்பூ நாட்டு ஏலம் இந்நான்கும் வகைக்குப் பலம் ½ விளாய்பிசின் பலம் 4, தேன் பலம் 8, பசுநெய் பலம் 8, பசுவின்பால் படி 4.

### செய் முறை.

அரிசித்திப்பிலியை நன்றாய் விளக்கிய இருப்புச்சட்டியில் இட்டு பசுவின்நெய் பலம் 2 விட்டு நன்றாய் வறுக்கவேண்டும். பின் இடித்துச் சூர்ணம் செய்து வடிகட்டி, பசுவின்பால் படி 2 விட்டு வேகவைக்க வேண்டும். இச்சூர்ணம் வெந்து பதமாய் இருக்கும்போது உலர்த்தி எடுத்துக்கொண்டு, மீதியான 2 படி பாலில் சர்க்கரையைக் கரைத்துப் பாகுசெய்து அதில் அரிசித்திப்பிலி சூர்ணத்தையும், இலவங்கப்பட்டை முதல் ஏலம் வரையில் உள்ள நான்கு சரக்கையும், இளவறுப்பாய் வறுத்து இடித்துச் சூர்ணம் செய்து வடிகட்டி வைத்திருக்கும் சூர்ணத்தையும் விரவிக்கொண்டு விளாம்பிசினை ½ பலம் பசுவின் நெய்விட்டு வறுத்து இடித்துத் தூள்செய்து வடிகட்டினதாள் (ஆக திப்பிலிசூர்ணம் மற்ற 4 சரக்குகளால் ஆகிய சூர்ணம் பிசின்சூர்ணம் மூவகைச் சூர்ணங்களையும்) முற்கூறிய பாகில் கலந்து மீதியாய் உள்ள நெய்யையும் தேனையும் விட்டுக் கிண்டி வைத்துக்கொள்க. இதுவே திப்பிலி ரசாயனமும் நெய் கலவாவிடில் ரசாயனமும் ஆகும். காலைமாலை ஆகிய இரண்டுவேளைகளிலும் சிறு சுண்டைக்காயளவு உட்கொண்டுவரக்கை, இருமல், இரைப்பு மந்தாரகாசம், அக்கினிமந்தம், சுவாசகாசம், சுவாசகுடிபம் சூதகவாய்வு இவைகள் தீரும். இதில் சுவர்னபஸ்பம் தாளகபஸ்பம் கூட்டிச் சாப்பிட விசேஷகுணம் தரும். மேற்கூறிய அசாத்தியவியாதியும் கடவுள் கிருபையால் குணமாகும். தாளகபஸ்பம் என்னும் விற்கும் கொடிய விஷபஸ்பத்தைச் சாப்பிட்டு நெஞ்சு புண்ணாகி மடிந்தவர் பலர். ஆகையால் சிறந்த வைத்தியர்களிடம் தமது குறைகளைச்சொல்லி அவர்கள் மனமகனிந்து கொடுக்கும் பஸ்பம் சேர்த்துச் சாப்பிடவும். தாளகபஸ்பத்துக்கு அதிகமான விலைகொடுத்து வாங்கிச் சாப்பிட வேண்டியதில்லை; தேகப் பிரயாசைக்குத்தான் சிறிது பொருள்கொடுத்து வாங்கியுண்ண வேண்டும். (தொடரும்)



# "சமூக முன்னேற்றச் சங்கவிதிகள்."

(153-ம் பக்கம் தொடர்ச்சி.)

திரு. எஸ் .காளைலிங்கம்.

9. நிர்வாகசபையின் அதிகாரங்கள்-நிர்வாகசபை தேவையானபோது "கிளைச்சபைகளை" நியமித்து அவைகளுக்குப் பிரதானமான காரியங்களைச் செய்ய அனுமதிக்கலாம். சங்கத்திற்கவசியமான சில இனங்களுக்குச் செலவு செய்ய அனுமதிக்கலாம். சந்தேகமான காரியங்களில் அவைகளுக்கேற்ற வெளிப்படையான விதிகள் ஏற்படுத்தலாம். சமூக அபிவிருத்தியின் எவ்வகையான நலனையுத்தேசித்தோ? அல்லது தனிப்பட்ட நபரின் நியாயமான கோரிக்கைகள் அரசாங்கத்தார் மூலம் நிறைவேற்றி வைக்கவேண்டிய திருத்தம், உதவியிலாது அக்காரியம் தடைப்பட்டிருக்கும் அந்த நபருக்காக, அக்கோரிக்கைகள் பற்றி அரசாங்கத்திற்கு அறிவித்துக் கொள்ளவோ, உதவியாக ஏற்பாடு செய்யலாம்.

10. கல்விப்பகுதி—இப்பகுதியைக் கவனிக்க ஒரு "கௌரவ காரியதரிசியையும்," இரு அங்கத்தினர்களையும், நியமிக்கவேண்டும். இவர்கள் உபந்நியாசம், முதலிய கல்விக்கடுத்த கூட்டங்களுக்காக ஆயத்தஞ்செய்து, சமூகமக்களிடையே வித்தையின் விருப்பத்தை ஊட்டச் செய்வதோடு, "புத்தகசாலை, பத்திரிகை," முதலியவைகளுக்கும் சவுகரியம் செய்யப் பொறுப்பாளிகளாக வேண்டும். வயதுவந்தவர்களைப் படிப்பிக்கச் சங்கத்தின் சார்பாக "இராப்பள்ளிக்கூடம்" ஏற்படுத்தவேண்டும். சமூக வாலிபர்களைக் கட்டாயமாகக் கல்விகற்கச் செய்யவேண்டும். ஒவ்வொரு பெற்றோர்களுக்கும் தங்கள், பிள்ளைகள் படிப்பதாலுண்டாகக் [illegible] நன்மைகள் இன்னவைகளென அறியச் செய்யவேண்டும்.

11. விளையாட்டுப் பகுதி-தேகா[illegible]ம் ஒவ்வொருவருக்கும் நோயணுகாமல் சரீரத்தைப் பாதுகா[illegible] முக்கியமென்பதைப் போதிக்கவேண்டும். அதற்குரிய சா[illegible] நிறுவவேண்டும்.

12. கௌரவ காரியதரிசியின் கடமைகள்—நிர்வாக சபைக் கூட்டங்கள், பொதுக்கூட்டங்கள், முதலியவைகளின் குறிப்புகளை அவர் எழுதிவைக்க வேண்டும். எல்லாவிதமான கடிதப் போக்குவரத்துகளும் அவரே செய்யவேண்டும். சங்கத்துக்குரிய பலவித சாமான்களும் அவர் பாதுகாப்பிலிருக்க வேண்டும். அவர் வசமிருக்க வேண்டிய புத்தகங்களாவன—அங்கத்தினர்களின் பதிவுப் புத்தகங்கள், கூட்டநடவடிக்கைக் குறிப்புப் புத்தகங்கள், சங்கத்திற்கு விஜயம் செய்பவர்களின் நாமதேயப் புத்தகம், அங்கத்தினர்களின், அபிப்பிராயங்களையும், ஆலோசனைகளையும், எழுதும் புத்தகம், சாமான்களின் விபரப்புத்தகம். அவசரமான செலவுகளுக்காக நிர்வாக சபையாரனுமதி பெற்று ரூபாய் பத்துவரை வைத்திருக்கலாம்.

13. கௌரவ பொக்கிஷதாரின் கடமைகள்—வெகுமதிகள், சந்தாக்கள், இன்னும் மற்ற பண வருமானங்களை வசூலித்து, அவைகளுக்கு ரசீது கொடுக்க வேண்டும். மாதக்கூட்டத்தில் தினசரிப் பதிவுக் கணக்குகளைச் சமர்பிக்கவேண்டும். பதினைந்து ரூபாய்க்கு மேற்பட்ட தொகைகளைச் சபையார் குறிப்பிடும் "நாணயசாலை"யில் சங்கத்தின் பெயரால் அமானிதம் செய்யவேண்டும். பொக்கிஷதார் கையெழுத்துடன், சபாநாயகர் கூட்டுக்கையெழுத்து இருந்தாலன்றி, நாணயசாலையிலிருந்து பணமெடுக்கலாகாது.

14. கணக்குப் பரிசோதகரின் கடமைகள்—சங்கத்துக்குரிய எவ்வித கணக்குகளையும் மாதந்தோறும் பரிசீலனை செய்து, சரியெனக் கையொப்பமிட வேண்டும். குற்றங்கள் ஏதாவது இருந்தால் பிரதம காரியதரிசிக்காவது, நிர்வாக சபைக்காவது தெரிவிக்க வேண்டும்.

15. மாதச்சந்தாவும், பிரவேசக்கட்டணமும்—எல்லா அங்கத்தினர்களுக்கும் பிரவேசக்கட்டணம் ஒரு ரூபாயாக ஏற்படுத்தலாம்.

அ. மாதமொன்றுக்கு ஒவ்வொரு அங்கத்தினரும் "இரண்டணு" சந்தா செலுத்தவேண்டும்.

ஆ. முன்பணமாக ஒரே தடவையில் இருபத்தைந்து ரூபாய் சந்தாவாகக் கொடுக்கும் அங்கத்தினர்கள், ஜீவிய அங்கத்தினராக ஏற்படுவார்கள். எல்லா உரிமைகளும் அவர்களுக்குண்டு.



16. ஆறுமாதச் சந்தாப் பாக்கியுள்ளவர்கள் அங்கத்தினரா[illegible]

17. எந்தப் பொதுக் கூட்டமும் சமூக அபிவிருத்திக்குரி[illegible] [illegible]நோக்கத்தோடும், வாலிபர்களின் "கல்வி விருத்திக்குரிய நோக்க[illegible] [illegible]டும், கூட்டவேண்டும். இதுபோல் இன்னும் அநேக விதிகளைச் [illegible]ந்தர்ப்பத்துக்கு உகந்தபடி அமைத்துக் கொள்ளலாம்.

சகோதரர்களே! எல்லோரையும் சமமான அந்தஸ்திலும், செல்வாக்கிலும், சந்தோஷத்திலும், யாவரும் ஒழுங்கான வழியில், "கல்வி கேள்வி"களில் பழக்கி முயற்சியுடன் நடக்கும்படியான, நிர்ணயமான மனப்போக்கையும் உண்டாக்கக் கூடியது சமூக சங்கங்களேயாகும். ஒவ்வொரு கிராமங்களிலும் சமூக சங்கங்களேற்பட்டு விட்டால், ஒவ்வொருவரும் தமக்குள் எவ்விதமான கட்டுப்பாடுகளாவது, சட்டங்களாவது செய்துகொள்ள வேண்டிய அவசியமேயில்லை. அடிப்படையான கடவுள் சிருஷ்டியிலுண்டான நமக்குள், வேறுபாடுகளும், தாரதம்மியங்களும், இருப்பதனுல் தான், மனிதர் தமக்குள் தத்தம் மதாச்சாரப்படி முன்னேற்றத்துக்குரிய சங்கங்களை ஏற்படுத்தி, ஜனங்களைச் சரியானவழியில் நடத்தி வருகிறுர்களென்பதை, நமது குல அறிஞர்களறிந்தும் வாளாவிருப்பதேனே? காரியங்களைச் சாதிப்பதற்குச் சந்தர்ப்பங்களில்லையென்றும், உலகம் ஏற்றதல்லவென்றும், பாராட்டாது என்னைப் போன்ற நங்குல இளைஞர்களை முயற்சியுன் வெற்றிக்கு முன்வர, இறைஞ்சிக் கேட்டுக்கொள்ளுகிறேன். சகலலோக இரக்ஷண்யகர்த்தாவான "கண்ணன் மணிவண்ணன் காகுத்தன் கருணை தந்து" சமூக எழுச்சிக்குத் துணைபுரிவாராக. சுபம்!

---

## சமுதாயக் கிளர்ச்சிகள்.

### யாதவகுல கவுன்சி[illegible]க்கு உபசாரம்.

நேற்று மாலை சம்பஸிரான் தெ[illegible]டாக்டர், கிருஷ்ணசாமி நாயுடு [illegible] 10வது, 5வது, 17வது, வீட்டில் திருச்சி யாதவகுல வாலிப[illegible]ர்களின் சார்பாக ஒரு [illegible]வார்டுகளில் தெரிந்தெடுக்கப்[illegible]சாரப் பத்திரங்களையும் [illegible]ண்டி விருந்து கொடுத்து [illegible]

யளித்துக் கொடுத்தனர். பல நகராண்மை கழகத்து அங்கத்தினர்களும்
விஜயம் செய்திருந்தனர். யாதவகுலத்தவர்களும், அவர்களின் முன்னேற்
றத்தில் பெரிதும் ஈடுபட்டுள்ளவர்களும் ஏராளமாகக் குழுமியிருந்தனர்.
மேன்மாடியில் சிற்றுண்டிகொண்டபின்னர் கீழ்க்கட்டத்தில் கூட்டம் நடை
பெற்றது. கடவுள் வாழ்த்துடன் நடவடிக்கைகள் துவக்கப்பட்டன. கூட்டத்
துக்கு வழக்கறிஞர் ஸ்ரீ. டி.வி. சோமசுந்தரம் பிள்ளை தலைமை வகித்தார்.

## உபசாசப் பத்திரங்கள்.

யாதவ குல வாலிப சங்கத்தின் சார்பாக 19வது வார்டு பிரதிநிதியா
கியவரும், சங்க நன்மையைப் பெரிதும் கோருகிறவருமாகிய ஸ்ரீ கோட்
டா ஆர். வேணுகோபால் செட்டியாருக்குச் சங்கத்து வைஸ் பிரசிடெண்டு
ஸ்ரீ. டி. கிருஷ்ணசாமி பிள்ளையும், 5வது வார்டு பிரதிநிதியாகிய ஸ்ரீ ராம
சாமிக் கோனருக்கு, (1) ஸ்ரீ வீராசாமி பிள்ளையும், 26வது வார்டு பிரதி
நிதியாகிய ஸ்ரீ எம். தாமோதரக் கோனருக்கு (2) ஸ்ரீ பி. பாலகிருஷ்ண
னும், 17வது வார்டு பிரதிநிதியாகிய ஸ்ரீ டி. கே. ஆறுமுகம் பிள்ளைக்கு
சங்க உபகாரியதரிசி ஸ்ரீ எம். கோபாலனும் வரவேற்பு உபசரிப்புப் பத்தி
ரங்களைப் படித்துக் கொடுத்தார்கள். பத்திரங்களில் முக்கியமாகச் சுகாதார
நிலை, தண்ணீர் வசதி, தீப வசதி, ஆரம்பக் கல்வி விருத்தி போன்ற
விஷயங்கள் கவனிக்கப்பட வேண்டுமென வேண்டிக் கொள்ளப்பட்டன.

சங்கத்தலைவர் ஸ்ரீ அய்யம்பெருமாள் கோனரால் வந்தனோபசாரங்கள்
செலுத்தப்பட்டதும் கூட்டம் கலைந்தது.

---

## பொங்கல் திருநாள் கொண்டாட்டம்.

### யாதவர் இளைஞர் சங்கம்.

சார்ஜ் டவுன்.

1932-ம் ஆண்டு பிப்ரவரி மீ 7௳ ஞாயிற்றுக்கிழமை மாலை 4-மணிக்கு,
சென்னை, இடைப்பாளையம் கார்ப்பொரேஷன் பள்ளிக்கூடத்தில், மேற்படி
சங்கத்தின் ஆதரவில் பொங்கல் திருநாள் கொண்டாடப்பட்டது. அவ்வ
மயம், திருவாளர் டி. பி. மீனாக்ஷிசுந்தரம்பிள்ளை எம். ஏ., பீ. எல்., கார்ப்
பொரேஷன் கவுன்ஸிலர் அவர்கள் தலைமைவகித்தார். குலமக்கள் அநேகர்
விஜயஞ் செய்திருந்தனர். புல்லாங்குழல் இன்னிசைக் கச்சேரியால் வந்
திருந்தோரெல்லாம் மகிழ்வெய்தினர்.

கடவுள் வணக்கம் ஆனதும், திருவாளர் சி. வி. திருவேங்கடம்பிள்ளை
அவர்கள் "பொங்கல் திருநாளைக் குறித்தும், அதன் பூர்வம்,
அனுஷ்டிப்பு முதலியவைகளைப் பற்றியும் தமிழில்சிறந்ததோர் சொற்பொழிவாற்



றினர். பொங்கல் பண்டிகையானது எல்லோராலும் இந்தியா முழுவதும்
அனுஷ்டிக்கப்படும் ஓர் தேசீய பண்டிகையென்றும், அது மார்கழிமாதம்
முதலில் ஆரம்பித்து தைமாதத்தின் துவக்கத்தில் முடிவடைகிறதென்றும்,
ஸ்ரீ ஆண்டாளவர்கள் இப்பண்டிகையைக் குறித்துத்திருப்பாவையில் சொல்
லப்படும் அரும்பெரும் விஷயங்களைக் குறித்தும் விஸ்தாரமாக எடுத்துக்
கூறினர். ஆயர்குலந்தோறும் முற்காலத்தில் இந்தப் பண்டிகையை மழைக்
கதிபதியாகிய இந்திரனுக்கே செய்து வந்தார்களென்றும், ஸ்ரீ கிருஷ்ண
பகவான், கீதையிற் சொல்லியபடி "நானே! கோவாயிருக்கின்றேன்,
நானே உலகத்தில் சகலமுமாயிருக்கின்றேன்" என்று சொல்லி, அந்தப்
பொங்கல் பண்டிகை தனக்கே உரியது என்று சொல்ல, இந்திரன் மகா
கோபங்கொண்டு விடாமழை பெய்விக்கவும், ஸ்ரீ கிருஷ்ணன் இங்குள்ள
கோவர்த்தனகிரி என்னும் பர்வதத்தைத் தன் கைவிரலின் முனையில் தூக்கி
எல்லோரையும், கன்று காலிகளையும் காத்துரட்சித்தார் என்று கூறி, இப்
பண்டிகை சுகாதாரத்தின் முறையிலும், வியாபாரவிஷயங்களிலும் முக்கிய
மானதே யென்று சொல்லிமுடித்தார்.

பின்பு திருவாளர் வி. ஆர். வரதப்பிள்ளை பீ. ஏ. அவர்கள் சங்கம்
செய்துவரும் அரும்பெருஞ் செயல்களைக் குறித்தும், அவைகளுக்கு உதவி,
ஒத்துழைப்பு அத்தியாவசிய மென்றும், திரு. எஸ். சட்டநாதக்கரையாளர்
எம். ஏ., பி. எல்., எம். எல். சி. (திருவாங்கூர்) அவர்கள் உபகாரச் சம்பளம்
நிதிக்காக ரூ. 250—அனுப்பிவைத்தது பற்றியும், இரவு இலவசபாடசாலைக்
காக மிஸ். பி. கமலம்மாள் என்பவர்கள் ரூ. 10—அனுப்பியது பற்றியும்,
இந்நிதி சேகரத்தின் பொருட்டு, மேற்படி சங்கத்தார் பிப்ரவரி மீ 20௳
சனிக்கிழமை இரவு "சீதா கல்யாணம்" என்னும் நாடகத்தைத் தமிழில்
விக்டோரியா பப்ளிக் ஹாலில் நடத்தப்போவது பற்றியும், இப்படிப்பட்ட
சுபகாரியங்களுக்கு எல்லோரும் தம் தம்மாலியன்றவரையில் சரீரசகாய
மோ, திரவியசகாயமோ செய்யவேண்டு மென்றும், வற்புறுத்திக் கேட்டுக்
கொண்டார். திரு. எல். சட்டநாதக்கரையாளர் பீ. ஏ. அவர்களும், சி.
ராதாகிருஷ்ணபிள்ளை யவர்களும் கம் சமூக முன்னேற்றத்திற்குக் கல்வியே
பிரதானம் என்றும், அதன் அத்தியாவசியத்தைக் குறித்தும் பேசினார்கள்.

அவைத் தலைவர் அவர்கள் தம் முடிவுரையில் மாட்டுப்பொங்கலை
யாதவரனைவரும் ஓர் சிறந்த பண்டிகையாகக் கொண்டாட வேண்டும் என்
றும், அப்படிச் செய்வதால் அதுவே குழந்தைகளுக்கெல்லாம் அவர்கள்
செய்யும், ஓர் சிறந்த பரிகாரம் என்றும், தற்பொழுது இந்தியாவானது
தரித்திரத்தால் பீடிக்கப்பட்டிருப்பதால் முதலில் வியாபாரத்தையே நோக்
கும்படிக்கும், இரண்டாவதாகக் கல்வியைக் கவனிக்கும்படிக்கும் கூறினர்.

காரியதரிசி அக்கிராசனர் அவர்களுக்கும், கரையாளர்களுக்கும், அங்
குக் குழுமியிருந்த குலமக்கள் அனைவோர்க்கும் வந்தனோபசாரம் அளிக்க
மங்கள வாழ்த்துடன் கூட்டம் இனிது முடிவுற்றது.

திரு. கு. புணிவண்ணம்பிள்ளை. காரியதரிசி.

இரவு இலவசபாடசாலை & உபாகாரச்சம்பளம் நிதிக்காகத் திரு. டி. எஸ். ராமசாமி அய்யர் பீ. ஏ. பி. எல். நகரபரிபாலன சபைத்தலைவர் அவர்கள் ஆதரவிலும், முன்னிலையிலும் யாதவ வாலிபச்சங்கத்தார்,

## சீதா கல்யாணம்,

என்னும் நாடகத்தைத் தமிழில் 1932-ம் வருஷம் பிப்ரவரி மீ 20 உ சனிக்கிழமை இரவு விக்டோரியா பப்ளிக் ஹாலில் நடத்துவார்கள்.

---

### வாலிபர் உலகு!

## இளைஞர் பரிசு!

1. இளைஞர் கடமை என்பது யாது?
2. பெண்மக்களுக்கேன் சம உரிமை வேண்டும்?
3. யாதவ ரென்போர் யார்?
4. கலப்பு மணமேன் செய்தல் வேண்டும்?
5. ஆணுக்குப் பெண் அடிமையா?
6. விதவா விவாஹம் வேண்டற்பாலதே!
7. பெண்ணுக்கும் ஆண்மை வேண்டும்!
8. மாதர் மறுமணம் யாதளிக்கும்?
9. இளமை மணமேன் ஏற்றதல்ல?
10. யாதவ தருமம் என்பதியாது?

என்னும் பத்துக் கட்டுரைகளையும் "யாதவமித்திரன்" பத்திரிகையில் "வாலிபர்உலகு" என்னுந் தலைப்பில் எழுதியனுப்புவோருக்குப் பத்துப் பரிசு வழங்கப்படும். கட்டுரை எழுதுவோர் சந்தாதார்களாகவும் இருபது வயதுக்கு உட்பட்டவர்களாகவு மிருக்கவேண்டும். ஒவ்வொரு கட்டுரைகளும் பத்திரிகையில் வெளியானவுடன் "ஸ்ரீ கோபால் மஹால்"லிருந்து பரிசுகளளிக்கப்படும். கட்டுரையெழுதுவோர் இதில் எதைவேண்டுமானாலும் முதலில் எழுதியனுப்பலாம். பெண்மக்களுக்கு ஏற்கனவே இடமளித்துவிட்டபடியால் இதில் அவர்கள் கலக்கக்கூடாது. இது சம்பந்தமாக எவ்விதக் கடிதப் போக்குவரத்தும், வைத்துக்கொள்ளப் படமாட்டாது. மார்ச்சு மாதத்துக்குள்ளாக அனுப்ப வேண்டும்.

காந்திதாசன் பர்மா.



## யாதவ வாலிப சங்கம்.

### பாளையங் கோட்டை.

இச்சங்கத்தின் மாதாந்தரக் கூட்டம் 1932ம் வருஷம் ஜனவரி மீ 2 தேதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு, திருவாளர் H. சங்கரதாஸ். Teacher M. E. L. M. High School Vadakangulam) அவர்கள் தலைமையின் கீழ் கனகவிலாஸ் மந்திரத்தில் அதிக விமரிசையாய் நடைபெற்றது.

அன்பர் N. ராமசாமி I. & C. "ஜீவகாருண்யம்" என்பது பற்றிப் பிரசங்கம் செய்தார்கள். அதன் பின்னர் திருவாளர்கள். S. வானமாமலைக் கோன், R. S. சுப்பையா, P. ஆறுமுகம், P. S. தேவதாஸ், S. ஜோதி K. ராமசாமி, C. M. ராம்தாஸ், S. A. பொன்னையாதாஸ், S. ஜோதிநாயகம், முதலியவர்கள். இவ்விஷயத்தைப் பற்றிய தத்தம் கருத்தை விவரித்துப் பல மேற்கோளுகளுடன் பேசினார்கள். பின்னர் தலைவரவர்கள் முடிவுரை கூறி இனி இச்சங்கம் ஆற்றவேண்டிய கடமைகள் இன்னின்னவென்று விளக்கி அதில் முதல் கடமை கிராமங்கள் தோறும் சென்று நமது யாதவ குடும்பத்தார்க்குக் கல்வியைப் பற்றிய ஆவசியகமும் தங்கள் தங்கள் புதல்வர் புதல்விகளைப் பள்ளிக்கூடம் அனுப்பிக் கற்று வருமாறு செய்வதின் கடமையும் எடுத்துக்கூறி அவர்களுக்கு ஊக்கமுண்டாமாறு செய்துவர வேண்டுமென்றும் நமது குல மித்திரனாகிய யாதவ மித்திரனை ஆர்வமோடு ஆதரித்துவர வேண்டுமென அவர்களை வற்புறுத்தியும் வரவேண்டுமென்றும் கூறி முடித்தார்கள். பின்னர் சங்கத்தார் அனைவரும் ஏகோபித்து ஆமோதிக்கப் பெற்று இத்தீர்மானம் நிறைவேறப்பெற்றது.

திரு. வெங்கடாசலதாஸ், காரியதரிசி.

---

### விலைகொடுத்து வியாதியை வாங்கல்.

வெள்ளைச் சர்க்கரை சீனி எனப் பேர் வழங்கும் அஸ்கா சர்க்கரையைச் சாப்பிடுவதால் ஜனங்களுக்கு நீரழிவு நோயும் இதர நோய்களும் வருகின்றன வென்று வைத்ய நிபுணர்கள் சொல்லுகின்றார்கள். இதற்குப் பதிலாக நாட்டுச் சர்க்கரை வெல்லம் அல்லது பனைவெல்லம் முதலியவற்றை உபயோகிப்பது நலமென்றும் இவைகள் தேகபோஷணைக்கு வேண்டிய உணவுப் பொருள்களைக் கொடுப்பதோடு இவைகளின் மூலமாய் வியாதிகளும் வருவதில்லை யென்றும் சொல்லப்படுகிறது.

வெள்ளைச் சர்க்கரையின் பிரதிகூலங்கள்.

(1) அதில் உணவுக்குரிய சத்தே இல்லை.

(2) அது அதிக விலையான பொருள்.

(3) இந்தியாவில் கரும்பிலிருந்து செய்யப்படும் நாட்டுச் சர்க்கரை பதனியிலிருந்து செய்யப்படும் பனை வெல்லமும் இருக்கும்போது என் வெள்ளை சர்க்கரையைச் சாப்பிட்டு வியாதிக்கு வரவு கூறவேண்டும்.

(4) [illegible] போன்ற வியாதி அதின் உபயோகத்தினால் உண்டாகிறது.

திக்காகத் திரு. டி.

(5) வெள்ளைச் சர்க்கரையை உபயோகிக்கிறவர்களைத் தலைவர் அவர் வியாதியை விலைகொடுத்து வாங்குவதோடு தன் பிள்ளை... மறியாத குழந்தைகளுக்கும் வியாதியை நல்வரவு கூறி அழைப்பதால் ...ளுக்கும் தங்களைச் சேர்ந்தவர்களுக்கும் தங்கள் குழந்தைகளுக்கும் பிரேதக் குழிதோண்டப்பட்டவர்களாகிறார்கள்.

இதை வாசிப்போர் இனியாவது எக்காரணத்தினாலும் வெள்ளைச் சர்க்கரையை உபயோகியாது நாட்டுச் சர்க்கரை, வெல்லம், பனைவெல்லம் ஆகிய உணவுப் பொருள்களையே உபயோகிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

## தபாற் கட்டண விகிதங்கள்.

உள்நாட்டுத் தபாற்கட்டண விகிதங்கள் சென்ற டிஸம்பர் மீ 12தேதியிலிருந்து பின் கண்டவாறு உயர்த்தப்பட்டுள்ளன. கடிதத்திற்கு ஒரு அ... மூன்று பைசா, கார்டுக்கு 9 பைசா இந்த உயர்ந்த விகிதப்படி ஒட்டப்படா கடிதங்களுக்கு விலாசதார்களிடமிருந்து வசூலிக்கப்படும். அப்படிப்பட்ட கார்டுகளோ குறித்த ஊர்களுக்கு அனுப்பப்படாமல் தபாலாபீஸிலேயே கிழித்தெறிந்து விடப்படும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

இராஜதல தீபிகை.

## கரந்தைத் தமிழ்ச்சங்கம், தஞ்சை:

### திரு. பா. வே. மாணிக்கநாயக்கரவர்கள் காலஞ் சென்றது பற்றி

# ஒரு இரங்கற் கூட்டம்.

1932 ஜனவரி மீ 3உ (பிரசோற்பத்தி, மார்கழி 19உ) ஞாயிறு மாலை 3மணிக்கு திரு. T. P. K. அழகர்சாமிபிள்ளை அவர்கள் தலைமையில் இச்சங்கத்தே ஒரு பொதுக்கூட்டம் ஒன்று கூடியது. அப்போது காலஞ்சென்ற மாணிக்கநாயக்கர் அவர்களது ஒப்புயர்வற்ற பன்மொழிப் புலமையினையும் தமிழாராய்ச்சியினையும், பிறதிறமைகளையும், அன்னாரது உள்ளம் நிறைந்துயர்ந்த உண்மைத் தமிழன்பினையும், அன்னார் இச்சங்கத்திற்கு ஆயுள் உறுப்பினராகி இச் சங்கத்தின் கண்ணாகி விளங்கியதையும், இச்சங்கத்திற்குப் புரிந்த பற்பல அருட் செயல்களையும், அவர்களது உரிமை அன்பர்களாகிய சங்க அன்பர்கள் பலரும் எடுத்துக்கூறித் துயர்க்கடலில் ஆழ்ந்தனர். கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஒருமனதாக ஒப்புக்கொள்ளப்பட்டன.

1. திரு நாயக்கரவர்கள் நல்லுயிர், எல்லாம்வல்ல இறைவன் தண்ணடி நிழலில் அமைதியுற்றிருக்க இச்சங்கம் இறைவனடியை இறைஞ்சுகின்றது.

2. திரு நாயக்கரவர்கள் குடும்பத்தினருக்கு இச்சங்கம் தன் மனமார்ந்த துயரினைக் கூறி அவரது பிரிவு ஆற்றாதாயினும் அவர்கள் ஆறுதல் குறித்து இறைவனடியை எண்ணி இறைஞ்சுகின்றது.

3. திரு நாயக்கரவர்கள் அரும்பெறல் ஆராய்ச்சிகளை யெல்லாம் தமிழுலகம் அறிந்து பயனுறுமாறு செய்து நாயக்கரவர்கள் புகழுடம்பினை நாட்ட இச்சங்கம் எண்ணியிருப்பதால் அவர் தம் ஆராய்ச்சிக் குறிப்புகளையெல்லாம் இச்சங்கத்திற்கு உதவியருளத் திருநாயக்கரவர்கள் குடும்பத்தினரை இச்சங்கம் வேண்டிக் கேட்டுக்கொள்ளுகின்றது.

(5) வெள்ளைச் சர்க்... வியாதியை விலைகொடு... ...யாத குழந்தைக... ...ங்களை...



ஸ்ரீமான் V. சோக்கலிங்கக் கோனார் அவர்கள்,
திண்டுக்கல்.

சமீபத்தில் [illegible] திண்டுக்கல் முனிசிபல் பொதுத் தேர்தலில் [illegible] அதிகப்படியான ஓட்டுகள் பெற்றுத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். [illegible] சமூகத்தில் அநேக [illegible]. [illegible] யாதவ சமூகத்தின் [illegible] ஸ்ரீமான்கள் R. M. செங்கமாலக்கோனார், K. முத்துக்கோனார் இவர்கள் [illegible] சுமார் 150 [illegible] விருந்தளித்தார்கள். [illegible] இனிது முடிவுற்றது.


...றம்.

# யாதவமித்திரன்

## ஒரு மாதப்பத்திரிகை

...நப்பினும் இ... மேனேட்டா... ...ந்து இடப்... பல ...

எனைத்தானும் நல்லவை கேட்க [illegible]னைத்தானும்
ஆன்ற பெருமை தரும்.

193

| | | |
|---|---|---|
| தொகுதி 3 | பிரஜோத்பத்தி மாசி, பங்குனிமீ<br>1932ளு பிப்ரவரி, மார்ச்சுமீ | பகுதி 7, 8 |


## கடவுள் வணக்கம்.

5 MAY 1932

நீண்டான் குறளாய் நெடுவானளவும்
அடியார் படும் ஆழ்துயராய வெல்லாம்
தீண்டாமை நினைந்து இமையோரளவும்
செலவைத்த பிரான் அதுவன்றியும் முன்
வேண்டாமை நமன்தமர் என் தமரை
வினவப் பெறுவாரலரென்று உலகேழ்
ஆண்டான் அவன் காண்மின் இன்று ஆய்ச்சியரால்
அளைவெண்ணெயுண்டு ஆப்புண்டிருந்தவனே

## நாகரிக முன்னேற்றம்.

திரு: K. G. கிருஷ்ணக்கோன். B. Se (Hons)

மானிட வாழ்க்கைவழி பண்டைக்காலந் தொட்டுப் புறப்பட்டு இவ்வளவு காலமாக வளர்ந்து வளர்ந்து வந்து தற்போது யாதொன்றுந் தோன்றாத எதிர்காலத்தை நோக்கி வெகு வேகமாகச் சென்று கொண்டிருக்கிறது. இம்மானிட மார்க்கத்தின் மர்மத்தை ஆராய்ச்சி செய்வதைப்போல எவ்வித ஆராய்ச்சியும் மனதிற்கு அவ்வளவு இன்பத்தைத் தரத்தக்கதன்று. இவ்வழிபற்றி வந்தவர்கள் புதிய உலகத்தின் மகத்துவத்தைக் கண்டு மகிழ்ந்திருக்கின்றனர். இவர்

(5) வெள்ளைச் சா[illegible]ங்களின் தோன்றலையும், சிற்சில மறை யோதியை விலகொடு பூகம்பங்களையும், வெள்ளங்களையும், புயற் காற[illegible] குழந்தை[illegible]க்கட்டிகளையும் கண்கூடாகக் கண்டு மறைந்த னர். இம[illegible] வாழ்க்கை வழியிலுண்டான சம்பவங்களாலும், மானிட முயற்சிகளாலும், மானிடர் தங்களுக்குச் சக்திகள் - தேக சக்தி, மூளைச்சக்தி, மனச்சக்தி—செவ்வனே கிடைக்கப்பெற்றுத் தங்கள் விடாமுயற்சியினால் மிக்க மேம்பாட்டை யடைந்திருக்கின்ற னர் புதிதாய்க் கண்டுபிடித்தவைகளின் மூலமாகவும், புதிதாய் உண்டாக்கியவைகளின் மூலமாகவும் இயற்கையாய் நிறைந்துள்ள சக்தியை மானிடர் தங்கள் பணிகளைச் செய்ய வைத்திருக்கின்றனர்.

மானிடக்கூட்டம் முன்னேற்றமடைய ஒருவர்க்கொருவர் உதவி ஒத்தாசைகள் இன்றியமையாதவைகளென மானிடர் நன் கறிந்தார்கள். இதைக் கற்றுக்கொள்ள மானிடர்களுக்கு மிக்க கால மும் மிக்க கஷ்டமும் உண்டாயின. இம்மானிட வாழ்க்கைவழியில், காரணங்களும் அவைகளின் உற்பத்திகளும், முயற்சிகளும், இகழ்ச்சிகளும், ஜெயமும், அபஜெயமும் உண்டாகி அவைகளால் மனிட முன்னேற்றம் தொடங்கிற்று. இப்படியான மானிட வாழ்க்கை வழிபற்றி உண்டான விருத்திக்கு நாகரிகமெனப் பெயர்.

வில்லும், அஸ்திரமும், கற்கோடாரிகளும், மற்ற ஆயுதங்களும் உண்டாக்கிய அந்நாளிலிருந்து நாகரிகம் தொடங்கிற்று. துஷ்ட மிருகங்களிடமிருந்து தப்பிக்கவும், வசிக்க வீடுகள் உண்டாக்கவும், ஆகாரங்கள் தேடிக்கொள்ளவும் மானிடர் ஒருவரோடொருவர் ஒற்றுமையோடு வாழ முற்பட்ட காலத்திலிருந்து மானிடர் நாகரிக மடையப்பெற்றுத் தற்போது எண்ணவும், எழுதவுங்கூடாத, கைத் தொழில், ஜனசமூக வாழ்க்கை முதலிய விருத்திகளில் உன்னத பதவியை யடைந்திருக்கின்றனர்.

ஒரு கூட்டத்தார் தங்கள் நாகரிகத்தில் முன்னேற்றமடைந்த வர்களென்றும் மற்ற கூட்டத்தார் அநாகரிகருள்ள காட்டுஜாதிக ளென்றுங் கூறிக்கொள்ளுவது சகஜம். இந்தியா, சீனா, ஜப்பான், கிரீக்ஸ், எகிப்த் முதலிய தேசங்கள் முற்காலத்தில் முதன் முதலாக நாகரிகத்தில் முன்னேற்றமடைந்த நாடுகள். அக்காலங்களில் காட்டு ஜனங்களாய்த் திரிந்த மேனாட்டார் கீழ்நாட்டின் நாகரிக வாசனையாலும் தங்கள் விடாமுயற்சியாலும் நாகரிகத்தில், முன்



னேற்றமடைந் திருக்கின்றனர். அப்படியிருப்பினும் இ[illegible]
ஜப்பான், இம்மூன்று தேசங்களிலும் மேனாட்டா[illegible]
அறிந்துகொள்ளக் கூடிய நாகரிகம் புதைந்து கிடப்[illegible] பல
மேனாட்டார் ஒப்புக்கொள்ளுகின்றனர். அமெரிக்[illegible]விலுள்ள
சிவப்பு இந்தியர்'கள் தங்கள் அற்ப வாழ்க்கையால நாகரிகத்தில்,
குன்றியவர்களென்று கூறுவர் பலர். ஆனால் சொல்திறம்பாமையி
லும், நம்பிக்கைத் துரோகமின்மையிலும், வைக்கரதிலும், நாகரிகத்
தில் மேன்மையடைந்த பல கூட்டத்தாருக்கும் மேலாகவிருக்கும்
போது அவர்களை எவ்வாறு முற்றிலும் நாகரிகமற்றவர்களெனத்
துணிந்து கூறிவிடுவது?

நாகரிகம் பற்பல விடங்களில் பற்பல விதமாகத் தோன்று
கின்றது. தங்களைச் சுற்றி இயற்கையா யமைந்துள்ளவைகளுக்கு
ஒப்பும்படிக்கு நடந்து கொள்ளக்கூடிய உயிர்கள் பலவிதங்களாய்ப்
பல விடங்களிலுண்டாகின்றன. மேலும் இவ்வுயிர்களின் கொள்
கைகளும் மாறுகின்றன. ஆதலால் பெர்ஸியன், கிரீக்ஸ், ரோமர்
கள், சீனர்கள் முதலிய இனங்களின் கொள்கைகள் தேசங்கள்
தோறும் பாஷைகள் வேறுபிருப்பது போலவே, மாறியிருப்பது
பிரத்தியட்சம். அமைதியாகவேயிருக்கும் 'பிரமிட்ஸ்' என்ற எகிப்த்
தேசத்துச் சிகரங்களும், கோவில்களும் நாகரிகத்தின் உயர்வை
உலகத்திற்குக் காட்டியபோதிலும் எகிப்து தேசத்தாருக்கு அதன்
உயர்ந்தவேலைகள் தோன்றவில்லை. மேல்நாட்டு நாகரிகம் ஓர் விதத்
தன்மையுடைத்ததே! இம்மேல்நாட்டாருக்குள்ளேயும் நாகரிகத்
தில் வேற்றுமை பல உள. ஆனால் இவ்வேற்றுமைகள் அவர்கள்
நெருங்கிப் பழகுவதினாலும், ஓரினத்தார் மற்றோரினத்தில் மணஞ்
செய்து கொள்வதினாலும் அதிகமாகக் குறைந்து வருகின்றன.
ஆனால் கீழ்நாடுகளில் இவ்விதப் பழக்கங்கள் இல்லாமையினாலும்,
தீண்டாமை முதலிய தீங்குகளாலும் நமது நாகரிகம் முன்னேற்ற
மின்றிப் பலர் நகைக்க மிதிபட்டுக் கிடக்கிறது.

பண்டைநாளின் தீயபழக்கங்கள் இன்னும் மானிடரை ஆண்டு
வருகின்றன. தங்கள் வம்சத்தார்களால் அநுசரித்து வந்த பழக்
கங்களைத் தொன்றுதொட்டுக் கடைப்பிடித்துத் தங்கள் வாழ்நாட்
களுக்கு இன்றியமையாதவைகளாகப் போற்றிவருவது மிகவும்
வருந்தத்தக்கது. இவ்வித வழக்கங்களைப் பொதுவாக எல்லா

ளும் (முக்கியமாகக் கீழ் நாட்டார்) கையாண்டுவருவது (5) வியாதின தங்கள் மூதாதைகளெப்படியோ அப்படியே தாங்களும் [illegible] வருகின்றனர். தங்கள் மூதாதைகள் நடந்து சென்ற அந்நெறி பற்றிச் செல்லாவிட்டால் பாவிகளாகி விடுவதாகவும் பெரும்பாலர் கருதுகின்றனர். ஏதாவதோர் விஷயம் முடிக்க வேண்டியிருப்பின், அதை முடிக்க நல்லதோர் வழியிருப்பினும் அதைப் புறக்கணித்து வழக்கமாகச் செய்து முடிக்கும் வழி (மிகக் கஷ்ட நஷ்டமானதாயினும்) ஏதோ அதனைக் கையாண்டு வருவது வருந்தத்தக்கதே. சட்டங்களாகப் பாவித்துவரும் நம் மூட வழக்கங்களை வேரோடு பிடுங்கிவிட்டு நம் பகுத்தறிவைக்கொண்டு எச்செயலையும் செய்து முடிப்பதே நாகரிக வளர்ச்சிக்கறிகுறி.

நாகரிகத்தின் விளைவு, முன்னேற்றம். இன்னும் மானிடர் முடிவான முன்னேற்றத்தை யடையவில்லை. ஆதலால் மானிடர் இன்னும் முயற்சியில் தளராது முன்னடக்கவேண்டி யிருக்கிறது. அறிவு விசாலப்படவும், நற்குணங்கள் விருத்தியடையவும், சுதந்தரம் பெருகவும், ஜன சமூகம் ஒற்று வாழவும் இவ்விதமான உயர்வையடைய வேண்டும். நாம் முன்னேறும் வழியில் தளர்ந்து நின்றுவிடக் கூடாது. அப்படி நின்றுவிட்ட தேசத்தார் யாரோ அவர்கள் அழிந்தவர்களே, அச்சமூகம் எதுவோ அது அழிந்ததே.

முன்னேற்றம் பொதுவாக, ஒரு பக்கம் தனித்தனி மானிடர்களின் மேன்மையாலும், மறு பக்கம் ஓர் இனத்தாரின் மேன்மையாலும் காட்டப்படுகிறது. ஒவ்வொருவர் தனித்தனி மேன்மையும் பேரின்ப வாழ்வும் பெறவே முற்படுவது சகஜம். ஆனால் தற்காலம் ஒருவர்க்கொருவர் உண்மையான உறவு,ஒற்றுமை,நடக்கை முதலியவைகளில் முன்னேற்றமடையாது தனித்தனி முன்னேற்றம் எவ்வாறடைவது? தனித்தனி முன்னேற்றத்திற்குரிய செய்கைகளைச் செய்தால் சுதந்தரம் எவ்வாறடைவது? நாகரிகமடைந்த மனிதரின் நோக்கந்தான் என்ன? ஏன் மானிடர் விடாமுயற்சியைக் கடைப்பிடிக்க வேண்டும்? கடைசியான வாழ்க்கைதானென்ன? எதை அடைய மானிடர் வாழ்கின்றனர்? உடைக்கும் உணவுக்குமென்றால் எளிதில் பதில் உரைத்துவிடலாம். ஒருவன் நல்ல பின் வாழ்க்கையை யடைய, கடவுள் சிந்தனையிலேயே யிருக்கச் செய்ய வென்றாலும் எளிதில் பதிலுரைக்கலாம்; அன்றிப் பண்டை விஷயங்களை



யறியப் புஸ்தகங்களையே படித்து உண்மைகளையறிய [illegible] கழிக்க வென்றாலும் வாழ்க்கையடைவதை எளிதில் [illegible] லாம். உயிரின் முடிவையும், உண்மையான நாகரி[illegible] முடிவையும் அறிவது மிக்க எளிதல்ல. [illegible] முறை யடையவும், நன்னெறியில் சந்தோஷத்தை யடையவும், தன் இனத்தாரோடு நல்லவிதமாக, நல்ல நோக்கத்தோடு ஒற்று வாழவுமே ஒவ்வொரு மானிடரின் முக்கிய நோக்கமா யிருக்கவேண்டும். இதற்கு இன்றியமையாததா யிருப்பது நாகரிக முன்னேற்றமே.

ஆபிரிக்கா முதலிய தேசங்களில் வசிக்கும் ஆண் பெண் இருபாலர்களும் தங்கள் தேகங்களைத் துணிகளால் மறைத்துக் கொள்ளாது திரிவதனால் அவர்களை வெள்ளையர்கள் கொடிய காட்டு ஜனங்களென்று கூறிவிடுகின்றனர். தற்சமயம் ஜெர்மனி, ருஷியா முதலிய வெள்ளையர் நாடுகளில் "ஆடையணியாதவர்கள் சங்கங்கள்" பல உண்டாகி அதில் ஆண் பெண் இருவகுப்பினர்களும் அங்கத்தினர்களாகி வனங்களில் பிறந்த கோலத்துடன் தங்களை, "இயற்கைப்பிள்ளைகள்" என்றழைத்துக் கொண்டு திரிகின்றனர். இச்சங்கங்களுக்கு ஆதரவாக ஜெர்மன் கவர்ன்மெண்டார் சில சட்டதிட்டங்களை யமைத்து உற்சாகங் காண்பித்து வருவதாகவும் தெரிகிறது. இது ஒருபுறமிருக்க நாகரிகத்தில் தேர்ந்தவர்களென்று நகரங்களில் வசிக்கும் வெள்ளைச் சீமாட்டிகள் அக்காலத்தில் தங்கள் ஜாதியினர் கால் தெரியாது ஆடைகளணிந்ததைப் புறக்கணித்து இப்பொழுது கீழே முழங்கால்வரைக்கும், மேலே மார்புவரைக்கும் சுருங்கிய ஆடைகளணிந்து, முழங்காலிலிருந்து கீழ்ப்பாகங்களுக்கு "ஸ்டாக்கிங்" என்று சொல்லும் காலில் அணியும் சட்டையுமில்லாது திரிவது ஆபிரிக்கா தேசத்தாரைவிட நாகரிகத்தில் சிறந்ததென்று கூறுவது எங்ஙனம் பொருந்தும்? "காக்கைக்குந் தன்குஞ்சு பொன்குஞ்சு" என்றபடி ஒவ்வொரு இனத்தார் அவர்கள் நாகரிகமற்றவர்களென்று சொல்லும் இனத்தாரிடமிருக்கும் அரிய, பெரிய குணதனங்கள் தங்களிடமில்லாமை கண்டும் அவர்கள் நாகரிகத்தில் குன்றியவர்களென்றும் தாங்கள் மேன்மையடைந்தவர்களென்றுங் கூறிக்கொள்ளுகின்றனர்.

நாகரிகத்திலுண்டான நன்மைகளில் விளைவுபொருட்கள், நாடு நகரங்கள், வியாபாரம், கைத்தொழில்கள், கோவில், பள்ளிகள்,

ங்கள், சிறைச்சாலை, சட்டங்கள், ஆஸ்பத்திரிகள், தர்ம
(5) புகைவண்டிகள், பலவகைக் கப்பல்கள், கம்பியில்லாத் தந்திகள், மின்சாரத்தாலுண்டாகும் பல அரிய செய்கைகள், உடை, நடை, அழகு, இடாத்திரம் முதலியவைகளே யாகும். இவைகள் நாகரிகத்தாலுண்டான விளைவுகளே யன்றி நாகரிகத்தின் தன்மையின் உருவங்களல்ல. கடவுள் வழிபாட்டிலும், தர்ம ஊழியத்திலும், ஜனசமூக ஊழியத்திலும், கல்வி அபிவிருத்தியிலும் மானிடரின் ஒரே மனவொற்றுமையே நாகரிகத்தின் தன்மையைக் குறிக்கிறது. மானிடரின் நினைப்பின் வல்லமையும், குறைகுணங்களும், பலருக்கு உதவ வாழும் வாழ்க்கையும் இவைகள் உண்மையான நாகரிகத்தின் தன்மைகளில் சில.

சுமார் நூறு வருஷங்களுக்கும் இன்றுமுள்ள வித்தியாசங்களை நோக்கின் காட்டுத்தன்மைக்கும் நாகரிகத்திற்குமுள்ள வித்தியாசம் நன்கு புலனாகும். இயற்கையின் தன்மையும், மற்றும் எவ்விதக் கல்வி வாசனையுமடையாத ஒரு பண்டைக்காலத்து மனிதனை அவன் என்றும் பாராத ஓர் உலகத்தில் திடீரென்று தோனறச் செய்துவிட்டால் அவன் தன்னைக் காப்பாற்றும் வழியைத் தானாகவே உண்டுபண்ணிக் கொள்ளுவான். பசி சகிக்கமுடியாது ஆகாரத்தைத் தேடிக்கொள்ளுவான். மழை, புயல், சூரிய வெப்பங்களின் கஷ்டங்களைச் சகிக்காது அணிய ஆடையும், தங்க வீட்டையுங் கட்டிக்கொள்ளுவான். இவ்வித இயற்கையின் போதனையால், தான் செய்யுந் தொழில்களில் தேர்ச்சியடைந்து கொள்ளுகிறான். பிறகு, இயற்கையாலே தனக்கு வேலைசெய்யும் வழியைக் கண்டுபிடிக்க முயலுகிறான். ஆதலால் நாகரிகத்திற்கு இயற்கையாயுண்டான பலவித உணர்ச்சிகளே குருக்களாயிருக்கின்றன. பிறகு அவைகளே அடிமைத்தொழில் செய்யும் நிலைமையில் வந்துவிடுகின்றன. இன்னிலைமையையடைய எவ்வளவோ காலமான தென்றால் இன்னும் நாகரிகத்தால் எந்நிலைமையடைவமோ யாரறிவர்? மேனாட்டு நாகரிகத்தின் தன்மை எப்பொழுதும் மண்ணையும், பொன்னையுமே தழுவி நின்று வெகுவேகமாய்ச் செல்லுவதால் மனிதர் முற்காலத்தில் நாகரிகமற்று உண்டாகி யிருந்தபடி, அந்நிலைமைக்கு மறுபடியும் வந்துவிடுவார்களோவென்று நினைக்கவும், கீழ்நாட்டு நாகரிகம் எப்பொழுதும் நல்லெண்ணம், நற்செய்கை, கடவுள் வழிபாடு முதலியவைகளையே தழுவி மெதுவாய்ச் சென்றுகொண் டிருப்பதால் இன்னும் வெகுகாலம் நீடித்திருக்கக் கூடுமென்று கருதவும இடமுண்டு.



# ஸ்ரீராமருக்கு 129 தேவிமார்.

திரு. தி. அ. முத்துசாமிக்கோனார்.

சகல ஜனங்களையும் காப்பாற்றுவதன் பொருட்டு அவதரித்த ஸ்ரீ ராமமூர்த்திக்கு லட்சுமி சொரூபியாகிய சீதாதேவிமாத்திரம் தேவியா? அல்லது வேறு பத்தினிமார்களுமிருந்தார்களா? என்னும் விஷயத்தைப்பற்றி விசாரிக்கலாம்.

ஸ்ரீமத் ராமாயணம் பாலகாண்டம் 73-வது சர்க்கத்தில் சீதாதேவியின் பாணிக்கிரஹணம் ராமரால் செய்யப்பட்டதென்று வால்மீகி ரிஷியினால் சொல்லப்பட்டிருப்பதைப்போல், வேறு ஸ்திரீகளின் பாணிக்கிரஹணம் அவரால் செய்யப்பட்டதென்று அயோத்தியாகாண்டம் முதலான காண்டங்களில் சொல்லப்படவில்லை. ராமநாமங்களில் சீதாபதி, ஜானகிபதி முதலான சப்தங்களிருக்கின்றனவன்றி வேறுதேவி நாமமில்லை. ஸ்ரீராம ஸகஸ்திர நாமத்தில் "ஏகபத்நிவிரதன்" என்று கூறப்படுகிறது. ராமாயணத்தில் சில சந்தர்ப்பங்களில் (ஸ்ரீராமர்) தேவி விஷய ப்ரயோகங்களில் பஹுவசனம் (பன்மை) ஆகக் கூறப்பட்டிருப்பினும் மரியாதைக்காக வால்மீக ரிஷியினால் பஹுவசனம் (பன்மை) உபயோகப்பட்டிருக்கிறதே ஒழிய சீதாபிராட்டியாரைத் தவிர வேறு தேவிமார்களும் உண்டு என்பதை விளக்குவதற்காக அல்லவென்று வியாக்கியான கர்த்தாக்கள் எடுத்தோதியிருக்கிறார்கள்; ஆனதால் சீதாதேவியார் ஒருவரேதேவி என்று நிச்சயிக்கவேண்டியிருக்கிறது.

அப்படியிருப்பினும் ஸ்ரீராமபிரானுக்கு சீதையைத் தவிர வேறு தேவிமார்களும் உண்டு என்பதற்குச் சில உதாரணங்களும், மேற்கூறியவற்றிற்குச் சமாதானமும் இருக்கிறது.

இராவணன் முதலான ராக்ஷஸர்களின் நாசத்துக்கு முக்கிய ஹேதுவாக இருந்த சீதாதேவியின் விவாகத்தைப்பற்றி மாத்திரம் வால்மீக ராமாயணம் கூறிற்று. வேறு தேவிமார்களின் விவாகத்தைப் பற்றி "தேளர்வாசராமாயணம்" முதலிய கிரந்தங்கள் அந்தந்த இடங்களில் கூறுகின்றன.

…மேதயாகம் செய்பவருக்கு மூன்று பெண்சாதிகள் அவ(5)…ய் வேண்டியது. யாகம் செய்விப்பவர்களின் பத்தினிகள் அவ்வா…ன் கிரியைகளுக்கு ஒத்த, மஹிஷி, பரிவிருத்தி, வாவாதா என்னும் …பெயர்களுடன் தனித்தனியாய் விவரிக்க வேண்டியதென்று வேதத்திற் சொல்லப்பட்டிருக்கிறது. அதே மாதிரியாய் பாலகாண்டத்தில் அசுவமேதயாகத்தைப் பற்றிச் சொல்லும் 14-வது சர்க்கத்தில் கௌசலியை முதலானவர்கள் மஹிஷி முதலான சப்தங்களால் விவரிக்கப்பட்டிருக்கிறார்கள். இதேமாதிரியாய் ஸ்ரீராமரால் அநுஷ்டிக்கப்பட்ட அசுவமேதயாகங்களில் அவருக்கு மூன்று பத்தினிகள் இருந்திருக்கவேண்டியது. மேலும் ஸ்ரீராமாயணார்த்தோபப் பிரம்ஹணங்களான பிரமாண்ட புராணம், வால்மீக சரித்திரம், தௌர்வாச ராமாயணம் முதலான கிரந்தங்களில் அவ்வவ்விடங்களில் சீதாதேவியின் விவாகத்தின் பின் அவளுடைய அநுமதியைப்பெற்று, பூ, நீளை, விமலை, முதலான உத்தம ராஜ கன்னிகைகளின் பாணிக்கிரஹணம், ஸ்ரீராமபிரானாற் செய்யப்பட்டதென்று தெளிவாகச்சொல்லப்பட்டிருக்கிறது. இவைகட்கு ஆதாரமான வசனங்களைக் கொடுக்கிறேன்,

தூர்வாச ராமாயணத்தில்;— சுலோகம் "கோசலோ பானுமந்தச்ச மகதச்சித்ரபூஷண, யுதாசித் கேகயா தீசோ, காசி நாதப் ரதாதன.- கோசலன், பானுமந்தன், மகதன், சித்ரபூஷணன், யுதாஜிது, கேகயாதீசன், காசிநாதன், பிரதாதனன் முதலான எட்டு அரசர்கள், நல்ல லட்சணங்களோடு கூடியவர்களாயும், சர்வாபரண சம்பன்னர்களாயும், ஸ்ரீராமரிடத்தில் மோஹத்தையுடையவர்களாயும், அவர்கள் பிறந்த காலத்தில் ஸ்ரீராமருக்கு வேண்டுமென்று கேட்கப்பட்டவர்களாயுமான,

பாஞ்சராத்திராகமம், பத்மஸம்ஹிதை.

சீதா சீதம் தசங்காசா, பூமிர் நீளா மஹாயசா,
விமலோத் கர்ஷிணீ ஞான க்ரியாயோகபிதாசஸா.
ப்ரஹசந்தித்தேசானு, நுக்ரஹா துளசிபலா
சாந்திஸ்லாஸ்வதி ப்ரீதி, ரதிகாந்தி ப்ரபாவதி.
பத்ரா சுபத்ரா விஜயா, ப்ரஜ்ஞாகாந்திர் தயாமதி
மஹீபலா மதுமதி, பத்ராங்கி பதமினிஹ்யுஷா
லாஜ்ஜாப்ரபாஸா வசுதா ரேவதி சுபலாகலா
இத்யாதி புண்ய நாரீணாம், வவிம் சோத்தரம் சதம்.



சீதை, பூ, நீளை, விமலை, உத்கரிஷிணி, ஞானக்கிரிப்ப… கை, ப்ரஹசந்தி, சுக்கிரை, குலவிமலை, சாந்தி, சரஸ்வதி… காந்தி, ப்ரபாவதி பத்திரை, சுபத்திரை, விஜயை, ப்ரஜ்ஞா… தயை மதி, மஹீ, பலை, மதுமதி, பத்ராங்கி, பதுமினி, உஷை, லஜ்ஜை, பிரபா, வசுதை, ரேவதி, சுபலை, கலை முதலான 129-புண்ணிய மாதர்களை அதாவது ஒவ்வொரு அரசனும் 16-பெண்கள் வீதம் 8-பேரும் 128-மாதர்களைக்கொடுத்தார்கள். அப்பெண்களை ஸ்ரீராமரானவர், வசிஷ்டர் வாமதேவர் முதலான ரிஷிகளின் சந்நிதானத்தில் அக்கினிசாக்ஷியாய் சீதாபிராட்டியாரின் அநுமதியின் பேரில் கலியாணம் செய்துகொண்டு ஏகபத்னி விரதனாய் இருந்தாரென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆதலால் ஸ்ரீராமருக்கு அநேக ஸ்திரீகள் உண்டென்று தீர்மானிக்கவேண்டியிருக்கிறது. தவிரவும் பிரமாண்டபுராணத்தில் பிரம நாரதசம்வாதத்தில் நூறுபெண்சாதிகளோடு கூடினவனும், பத்மநாபனும், சதுர்புஜனுமிருக்கிற ஸ்ரீராமனை என்று சொல்லப்பட்டிருப்பதானது முற்கூறிய தூர்வாச ராமாயணத்துக்கு ஒத்திருக்கிறது.

பிரமாண்ட புராணத்தின் வசனத்தில் 'ஸ்ரீபூநீள' என்பதில் ஸ்ரீ என்று சொல்லியிருப்பதானது லட்சுமி சொரூபிணியாகிய சீதையைக்குறிக்கிறது. பூ, நீளை சப்தத்தால் கோசலாதி ராஜாக்களால் கொடுக்கப்பட்ட பெண்களைக்குறிக்கிறது. சத சப்தம் 100-பெண் ஜாதிகளென்கிற லட்சணையினால் 129-என்பதைக்குறிக்கிறது என்று அறிந்துகொள்ளவேண்டும். அன்றியும் வால்மீகி சரித்திரத்தில் "பந்துக்களாயும் தெற்குத்திக்கில் இருக்கப்பட்டவர்களாயும் பந்துத்வத்தைக் கொண்டாடுபவர்களாயுமிருக்கிற கோசலாதி ராஜாக்கள் தங்கள் தங்கள் பெண்களை ஸ்ரீராமருக்குக் கொடுத்தார்கள்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. மேலும் ஸ்காந்தத்தில் பிரமகண்டத்தில் பிரம்மாவைப்பார்த்துப் பகவான் சொன்னதாவது, "பூமியில், தசரத சக்கிரவர்த்தியிடம் நான் ஜனிக்கப்போகிறேன் விசுவாமித்ருடைய யாக சம்ரக்ஷணை செய்து, அகலிகை சாபவிமோசனம் செய்து மிதுலா நகரத்தில் தநுர்பங்கம் செய்து சீதையை பாணிக்கிரஹணம் செய்து அயோத்திக்குவர, மாமன் வரப்போகிறார், பிறகு பூமி நீளை முதலான 128-பெண்களை அக்னி சாக்ஷியாய் பாணிக்கிரஹணம் செய்யப்போகிறேன்." என்றிருப்பதுமன்றி "அஷ்டாவிம் சோத்தரம் கன்யா, சதம் சோத்வாஹனம் சு" என்று சொல்லி

[illegible]ல் ஸ்ரீராமருக்குச் சீதையுடன் 129-ஸ்திரீகளென்று தெரி[illegible] ராமருக்கு அநேக ஸ்திரீகள் உண்டென்பதற்கு ஆதாரமான [illegible]ங்கள் பிரமகண்டத்தில், சிவரஹஸ்யத்தில் பிரம விஷ்ணு சம்வாதத்திலும், அகஸ்திய ராமாயணத்திலும், வாசிட்ட ராமாயணத்திலும் இருக்கின்றன.

ஆனால் ஏகபத்நிவிரதன் என ஸ்ரீராமருக்கு ஒருபெயர் இருப்பதால் ஒரே பெண்ஜாதியுடன் கூடினவரென்று மேற்படி புராண வசனங்களுக்கு விரோதமாகச் சிலர் அர்த்தம் செய்கிறார்கள். அப்படிச் செய்வது பிசகு. ஏக என்கிற பதத்துக்கு முக்ய என்ற அர்த்தம் இருப்பதால் முக்கிய ஸதிரீகளோடு (அதாவது-கலியாணம் செய்து கொண்ட ஸ்திரீகளோடு) கூடினவரென்று அர்த்தம் செய்யவேண்டியது. இப்படிச் சொல்வதானது மேற்கண்ட புராண வசனங்களுக்கும், வால்மீகி ரிஷியினால் இராமாயணத்தில் பல இடங்களில் அநேக ஸ்திரீகள் உண்டென்று விளக்கக்கூடிய பன்மை வாக்கியங்களை உபயோகிக்கப்பட்டிருப்பதற்கும் ஒத்து இருக்கிறது.

---

# குசேலர்.

(177-ம் பக்கத் தொடர்ச்சி.)

பண்டிதர். திரு. வீராசாமி பிள்ளை.

---

ஸ்ரீ கண்ணபிரானின் சேவைக்காக வருபவர்களுக்கு மின்னலோடு ஒளி வீசப்படியான மதாணியும் முத்தாரங்களும் பிரகாசமுள்ள பட்டாடையும் பொன்னாலாகிய சிவிகையும் வேண்டுமாம். யாம் இப்போது எங்கே பெறுவோம்! இவைகளைப்பற்றி நம் மூதாதையரிடத்தும் கேட்டதில்லையே! இப்போது நாம் யாது செய்வோம்; "எண்ணித் துணியாக் கருமம் இழுக்குப்படும்" என்று நாம் தெரிந்திருந்தும் ஸ்ரீ கண்ணபிரான் அரியசேவை நமக்கு எளிதில் கிடைக்குமென்றல்லவோ வந்துவிட்டோம்! இதுகாறும் எவ்வளவோ இடர்ப்பட்டும் ஸ்ரீ கண்ணபிரான் முன்றிலில் வந்து சேர்ந்தும் நம்முடைய வறுமை அகலவில்லையே! கந்தையில்



முடிந்து வைத்திருக்கும் கையுறையாகிய (காணிக்கை[illegible]ரப்ப[illegible]) அவல் பொதியை எவரேனும் கண்டுவிட்டால் [illegible]னும் நகைத்து எள்ளி ஏசுவார்களே என்று பலவாறாக [illegible] மனம் புழுங்கி அவ்விடத்திலேயே தம்பம்போல் அசைவற்[illegible] சிறிதுநேரம் திகைப்புடன் குசேலர் வருந்தி நின்றார்.

இவர் மனவாட்டத்தைக் குறிப்பாலுணர்ந்த அறிவிற் சிறந்த காவலாளர் (துவாரபாலகர்) குசேலர் மனம் கன்றுமாறு கூறிய அறிவிலாப் பேதை மக்களைப் பார்த்து "இந்த மாதவத் தலைவனை யாரென்று நினைத்தீர்கள். பொய்மை யென்பதைக் கனவிலும் அறியாதவன். செய் தவத்தால் ஊன் வற்றிய யாக்கையையுடைய பெரியோன். வேதங்களின் கரை கண்டவன். இனிய சொற்கள் வாய்ந்த நல்லோன். இவன் எதையும் கருதி வேறிடத்துக்குச் செல்கின்றவனல்லன். இவன் செயலை ஆராய்ந்து மனங்கொள்ளுங்கள். அரிது அரிது மானிடராதலரிது அதிலும் கூன், குருடு, செவிடு, பேடு நீக்கிப் பிறத்தலரிது பிறந்தகாலையும் அந்தணராதல் அரிது" என்று வேதங்கள் முறையிடுகின்றன. "அந்தணரென்பர் அறவோர் மற்றெவ்வுயிர்க்குஞ் செந்தண்மை பூண்டொழுகலான்" "அந்தணர் குலவொழுக்கம் போதித்து அறத்தின்வழி நிற்றலான் ஆசாரியரும் தெய்வமும் ஆவர்" வேதம் ஓதற்கு உரிய பிரமன் முதலிய தேவர்களுக்கும் மேற்பட்டவர்கள். "அந்தணரே தெய்வமெனக்கென்று கண்ணன் உரைக்கவும் அயிர்த்தலென்னே" ஸ்ரீ கண்ணபிரான் அந்தணரே தெய்வ மெனக்கென்று கூறியிருக்கிறார். என்பது தெரிந்திருந்தும் நாம் சந்தேகித்தல் என்ன மடமை! வேதம் அறிந்த அந்தணர்களுக்குத் தெய்வ ஸ்தலங்களில் திருமாளிகை சமர்ப்பித்தவர்களும், பொன் உபகரித்தவர்களும், பாற் பசுக்களையும் வளமிக்க நிலங்களையும் தானமாகக் கொடுத்தவர்களும், விலாப்புடைக்க உண்ணும்படி அறுசுவையுண்டி யுதவினோர்களும், கொடுங்கோல் மன்னர்களாலும் அவர் பரிசனங்களாலும் பகைவர், கள்வர் புலி முதலிய தீய விலங்குகள் தீர் நெருப்பு இவைகளாலும் உண்டாகின்ற பயமுற்றோர்களைக் [illegible]ண்டு ஐயோ என்று மனமிளகி விரைவாகப் பொருளீந்து காப்ப[illegible]க உறுதி கொண்டவர்களும் இப்பிறப்பில் பல பெரும் செல்வம் பெற்று மைந்தர் பணியாளர் முதலியோர் தம்மைச் சூழ செழித்த போகத்தை நுகர்ந்து வருபிறப்பில் மகிழ்ச்சி பொங்கத் தேவர்க

[illegible]ந்து அரம்பை மேனகை திலோத்தமை ஊர்வசி முதலிய [illegible]மாதரின் சுகபோகங்களை அனுபவித்து முத்தியின்பம் பெற்[illegible]ள். இத்தன்மை வாய்ந்த அந்தணர்களை எளியர் என்று நினைத்தல் யாதுக்கு?

இங்கு எழுந்தருளியிருக்கும் தவசியர் பெருமானை முழு ஞானியென்று சொல்லவேண்டும். மெய்ஞ்ஞானிகளுடைய குறி குணங்களையும், உலக ஆசையில் மனம் உழலப்பெற்ற பொய்ஞ்ஞானிகளின் குணம் குறிகளையும் யாம் கூறுவோம் கேட்பீராக.

பிரமனாலும் செய்தற்கரிய செயலில் வழுவாது நின்று அந்தக்கரணமாகிய மனம் புத்தி சித்தம் அகங்காரங்களை ஒரு வழிப்படுத்தி வேதார்த்தத்தில் அடைவித்துப் பொன், நிலம், மாதர் ஆசைகளையும் வென்றவர்க்கு அரதனங்களாலும் சுவர்ணத்தாலும் எந்த அரசராலும் உங்களாலும் துவாரபாலர்களாகிய எங்களாலும் உண்டாகிற பிரயோஜனம் யாதுளது சொல்லுங்கள்? மேகங்கள் ஏழும் இடியோடு முழங்கி விடாத பெருமழைகளைப் பெய்தாலும் காற்று மலைகளை வேரோடு பிடுங்கி ஒன்றோடொன்று தாக்கி யெறிந்தாலும் சப்த சமுத்திரங்களும் நிலை கலங்கி உலகம் நடுங்கும் உற்பாதங்களைச் செய்தாலும் ஞானிகள் தங்கள் நிலையினின்றும் கலங்கமாட்டார்கள். நகையாடுவார்கள். பிரிய வசனங்கள்கூறி நறுமணமுள்ள கலவைச் சந்தனங்களைப் பூசினாலும் அற்பமாக வெண்ணி யவமதித்துப் பல புன் சொற்களைக் கூறினாலும் விருப்பு வெறுப்பு என்பன அந்த மெய்ஞ்ஞான முற்றியவரிடத்து என்றுமில்லை. மும்மலம் என்னும் அடிவேரை யகழ்ந்து பசி வேளையிற் கிடைத்த எதையும் அமுதம் போல் புசித்து மகிழ்வர். நாளைக்கு வேண்டுமென்று சிந்திக்கமாட்டார்கள். ஆகாயத்தில் பறத்தல் பாதாளம்வரையிற் சென்று பூமிக்கு வருதல் பரகாயப்பிரவேசம் நின்ற இடத்தில் யாவும் வரச் செய்தல் முதலிய பல சித்திகளை என்றும் விரும்பமாட்டார்கள். புண்ணிய பாவம் பெருமை சிறுமை பொய் மெய் இல்லாதவர். ஞானலகிரி மேற்கொண்டபோது கூத்தாடுவர். உன்மத்தர்போல் திரிவர். சிரிப்பர், கைகொட்டிப் பாடி நடிப்பர், இன்றைக்கிருந்த இடம் நாளைக்கு இருக்க மனம் கொள்ளார், சுற்றிலும் வந்து சேர்வாரோடு சேரார், கந்தையல்லது வேறு உயர்ந்த ஆடையைத் தேடித்திரியார். இத்தகைய ஞானிகளின் செய்கை இற்றென



யாவரே கணித்து இயம்புவர்! தலையில் உள்ள மயிரைப் [illegible] மயிற் பீலியைக் கையிற்கொண்டு பாய் உடை கட்டித்திரி[illegible]ரும் உருவம், வேதனை, குறிப்பு, பாவனை, விஞ்ஞான[illegible]னும் கந்தம் ஐந்தையும் கெடுத்து சீவரவாடை (துவராடை) போர்த்து விளங்கும் புத்தரும் நாமே பிரமம் மற்றவரைப்போல் தவஞ் செய்ய வேண்டியதில்லை. தேகமே ஆத்மா போகமே மோக்ஷம் என்று பிதற்றும் உலகாயுதரும் ஞானிகளாகார். இம்மதங்களைப் பெரியோர் கொள்ளார், அறிவாலுயர்ந்த ஞானிகள் போல் பேசி உடம்பில் பலவித இலச்சினைகளைத் தரித்துக்கொண்டு நல்லோர் தமக்கு எதிரில் வந்தாலும் விலங்குங்கள் என்று சமிக்கை காட்டித் தாண்டித் தாண்டிச் செல்லும் பாஷாண்டிகளும், இந்த நிலையே பிரம நிலையென்று வாய் ஞானம் பேசுபவர்களும் தான்கெட்டதுமல்லாமல் பிறரையும் அழிக்கின்ற எண்ணமுடையவரே யாவர். பொன் முதலிய பல பொருள்களிடத்தும் ஆசையற்றவர்போல் நடித்துத் துறவொழுக்கம் பூண்டு சந்தர்ப்பம் வாய்ந்தபோது வர்மங்கொண்ட மனம் உடையவராய்ப் பிறரை வருந்தச் செய்யும் நடிகர்களும் உடலின் மீதுள்ள விருப்பம் ஒருங்கே விட்டவர் என்று காட்டி உலகத்தகுதி வழக்குகளிலும் உயர்திணைவினை அஃறிணைவினையாய் அமையும்படி "இந்தச் சரீரம் அங்கே போயிற்று" "சாமி இங்கே வந்தது" என்றும் தன்மைப் பெயரை படர்க்கைப் பெயராகக் கூறியும் தன்னை இந்தசாமி என்று பேசியும் உழல்வதெல்லாம் பக்குவமில்லாத அறிவிலிகளை மயங்கச் செய்து, அவர் கையில் உள்ள பொருளைப் பறித்துக் கொள்ளற்கல்லவா?

மெய்ஞ்ஞான நெறியுணர்ந்த நல்லோர் இல்வாழ்க்கையாகிய நல்லற வழியில் இருந்து உண்டு உடுத்து மனைவிமக்களோடு கூடி வாழ்ந்தாலும் எதிலும் பற்றின்றி இருப்பர். ஆகையால் இவர்கள் துறவிகளைப் பார்க்கிலும் சிறந்தவர் என்று வேதம் கூறுகின்றது.

இந்த அந்தணன் பூரண ஞானியாய் இருந்தும் சத்கருமங்களை இடையறாமற் செய்து மெலிந்த யாக்கையுடையவனா யிருக்கிறான். மூவுலகத்தும் இவ்வந்தணனுக்கு இணையாவார் எவருமிலர். இது உண்மை. இப்பெரியோன் நம்மை ஆட்கொண்டருளவே எழுந்தருளியிருக்கிறான் என்று எண்ணுவீர்களாக.

(தொடரும்)

# செல்வம்.

திரு. கு. மணிவண்ணப்பிள்ளை. பி. ஏ.

செல்வம் இரண்டுவகைப்படும். அவை பொருட் செல்வம், கல்விச்செல்வம் என்பன. இவ்விரண்டினுள் கல்விச் செல்வமே மேலானது. ஏனெனில் அது எக்காலத்தும் எவ்வகையிலும் அழிவற்றது. அப்படிப்பட்ட கல்விச் செல்வத்தைத் தேடாது பொருட் செல்வத்தையே ஓம்பி நிற்போர் பலருண்டு. அதற்கும் தக்க காரணம் உண்டு. ஔவையாரும் "திரைகடலோடியும் திரவியந் தேடு" என்றார். பணமில்லாதவன் பிணமாகக் கருதப்படுவதை இவ்வுலகானுபவத்தில் கண்கூடாகப் பார்க்கிறோம். கல்வியானது, அறம், பொருள், இன்பம், வீடு என்னும் சதுர்வித புருஷார்த்தங்களை அளிக்கவல்லது என்று முன்னோர்கள் கூறியிருப்பினும், கல்வியினால் பொருளும், பொருளினால் மற்ற மூன்று புருஷார்த்தங்களும் சித்திக்குமென்பது பொருந்தும். இப்படி இம்மைக்கும், மறுமைக்கும் சாதனமாக இருக்கும் செல்வத்தைப்பற்றிச் சிறிது கூறுவோம்.

'பொருட் செல்வம்' என்பது இவ்வுலகின் கண் நிறைந்துள்ள வஸ்துக்களுக்கெல்லாம் உபயோகப்படும் ஓர் பொதுப் பெயராகும். வீடு, தானியங்கள், பழங்கள், மரம், கல் முதலியன வெல்லாம் செல்வமே. மற்றும், எல்லா ஜீவராசிகளையும் செல்வமென்னலாம், மாடு, குதிரை, யானை, ஆடு முதலியனவும் செல்வமே. உலகத்தில் செல்வம் நிறைந்தவனென்றால் பணக்காரன் என்றே கொள்ளுகிறார்கள். "செல்வம்" என்னும் பதத்திற்கு 'தனம், பணம்' என்னும் அர்த்தம் விசேஷமாகக் கொடுக்கப்படுகிறது. ஏனெனில் பணத்தைக் கொண்டுதான் மேற் கூறியவைகளை யெல்லாம் அடையக்கூடும். மேலும் முற்காலத்தில், மாடுகளைக் கொடுத்துவிட்டு, தானியங்களைப் பெறுவதும், தானியங்களைக் கொடுத்துப் பழங்கள் பெறுவதுமான "பண்டமாற்று" வழக்கத்திலிருந்து வந்தபடியால், தற்பொழுது அச்சிடப்பட்ட நாணயங்களாகிய பணம் வந்த காலத்து,



பண்டங்களைத் தனத்திற்கும் மாற்றுகிறார்கள். திரவியமானது மனிதனுடைய சாமர்த்தியத்தையும், திறமையையும் கா[illegible] அத்தாட்சி என்னலாம். திரவியம், ஒரு மனிதனை உ[illegible]மையில் மனிதனாகச் செய்கிறது போலவே, மனிதனும் திரவியத்தைச் செய்கிறான் என்பது பொருந்தும்.

அநித்யமான இவ்வுலக வாழ்க்கைக்கு நிலையில்லா அச்செல்வமானது மிகவும் அவசியமாயிருக்கிறது. உணவு, உடை முதலியவைகளை அடைதற்குச் செல்வம் இன்றியமையாதது. செல்வமில்லா சாதாரணமான ஒருவன் சாதிக்கும் காரியம் இவ்வுலகில் ஒன்றுமில்லை என்றே சொல்லலாம். ஆகையால்தான் பொருளில்லாரை 'நடைப்பிணம்' என்று கூறுகின்றனர். அறம், இன்பம், வீடு என்னும் மூன்று புருஷார்த்தங்களையும் தழுவிய பக்திக்கும் அநுகூலமாயிருப்பது செல்வமே. மாணிக்கவாசகர், திருமங்கையாழ்வார், ராமதாஸ் இவர்களெல்லோரும் தங்கள் பக்திமேலீட்டால் பொருளை அதர்மவழிகளிலாகிலும் சம்பாதித்து எம்பெருமானுக்குப் பணிகள் முதலியவைகள் செய்வதிலும், பக்தர்களுக்குத் ததியாராதனை புரிவதிலும், இது போன்ற இன்னும் பல தர்மங்கள் ஆற்றி வந்திருக்கின்றனர் என நாம் அறிகிறோம். திருவள்ளுவநாயனாரும் "பொருளல்லவரைப் பொருளாகச் செய்யும் பொருளல்லதில்லை பொருள்." என்று விளக்கிக் கூறியிருக்கின்றார்.

செல்வத்தைத் தேடுங்கால் நல்ல வழியிலேயே தேடல் வேண்டும். எவ்வளவு தேகசிரமம் எடுத்துக்கொண்டு செல்வத்தைத் தேடினாலும் அநியாயவழிகளில், அதர்ம முறைகளில், பொய் சொல்லியோ, ஒருவனை வஞ்சித்தோ, திருடியோ பொருளைச் சேகரம் செய்தல் கூடாது. சிலர் சூதாட்டங்களினால் நிதிசேகரம் செய்து விடலாம் என்று தப்பபிப்பிராயங் கொண்டு, அத்தீச்செயலைப் புரிகின்றனர். அது முற்றும் தவறாகும். ஏனெனில், காதல், களவாடல், கள்ளுண்டல், கொலைபுரிதல், பொய் மொழிதல் என்னும் பஞ்சமாபாதகங்களில் ஒன்றாகும் அச்சூதாட்டம்.

> சிறுமை பலசெய்து சீரழிக்குஞ் சூதின்
> வறுமை தருவதொன் றில்.

என்று தெய்வத்தன்மை பொருந்திய திருவள்ளுவநாயனார் ஓர் சித்திரகாரன் ஒரு பேருருவினை ஒரு சிறு கையகலத்துள் சித்தரித்துக்

டியவாறு விளக்கியுள்ளபடி நளச்சக்கரவர்த்தி சூதாட்டத்தால் பாடுபட்டார் என்று சொல்லவும் வேண்டுமோ! தருமர் முதலானோர் இதனால் என்ன கஷ்டம் அடைந்தார்கள் என்று எண்ணவும், நினைக்கவும் முடியுமோ!

ராஜதானியாகிய சென்னை நகரின்கண் வருஷமொரு முறை பெருந் தீவட்டிக்கொள்ளை யொன்று நடந்து வருகிறது. அதுதான் கிண்டிக் குதிரைப்பந்தயம். நம்மவர்கள் அதன் நோக்கமின்னதென் பதையும், அதனால் விளையும் தீமைகள் பல வென்பதையும் சற்று முணராமல், காலப்போக்குக்காகப் போகிறேன் என்கிறார் பலர், நம் அதிர்ஷ்டத்தைப் பார்க்கலாம் என்று போகிறார் சிலர், பொருள் சம்பாதிக்கலாமென்ற தப்பெண்ணத்தோடு போவோர் பலருமாய் இருக்கின்றனர். ஐயோ! என்ன பாபம்!! என்ன பரிதாபம்!!! ஏதோ செல்வவான்கள்தான் காலப் போக்குக்காகப் போகின்றனர் என்றாலும், ஏழை மக்களும், நடுநிலைமையி லுள்ளவர்களும் இரவு முழுவதும் இதே கவலையாயும், பலவித சட்டதிட்டங்கள் போட்டுப் பார்த்தும், அதனால் தங்கள் சரீர சௌக்கியத்தையு மிழப்பதுமல் லாமல், ஈஸ்வரன் தமக்குத் தந்தருளிய இந்தத் திரவியத்தை இப்ப டிப்பட்ட அதர்ம முறைகளில் செலவிடுவோரின் மனப்பான்மை யைக் குறித்து என்ன சொல்வது! அவர்கள் திரவியத்தின் தன்மை யைச் சகடம்போல் நிலையற்றது எனவும், 'உடைமையும் வறுமையும் ஒருவழி நில்லா' எனவும் உணரார் போலும். சூதாட்டத்தின் தீமை களைக் சொல்லப்புகின் விரிவுபடும்.

திரவியத்தின் சேகரத்திற்காகக் கொண்டிருக்கும் பேராவலே கெட்டதெனச் சொல்லலாம். கொஞ்சம் மனத்திருப்தி, சாந்தமிருந் தால்தான், திரவியம் எவ்வளவு கொஞ்சமாயிருந்த போதிலும், சந்தோஷத்தை யளிக்கும். இதனால்தான் அழுக்காறு, பேராசை, வஞ்சகம் முதலிய துர் எண்ணங்கள் ஒருவனுக்கு உண்டாகின்றன. திரவியம் நல்ல வஸ்துதான். அதை நல்ல விஷயங்களிலும், கெட்ட விஷயங்களிலும் உபயோகிக்கலாம். ஆனால் நல்ல வழிகளில் உப யோகிப்பதுதான் கஷ்டம். சத்விஷயங்களில் தனத்தைத் தேடிப் புதைத்து வைக்கும் மானிடரைப் பார்க்கிலும் பேதமையுடைய வர்கள் இல்லை என்றே சொல்லலாம். மூதறிவோரும்



"பாடுபட்டுத்தேடிப் பணத்தைப் புதைத்துவைத்துக்
கேடுகெட்ட மானிடரே கேளுங்கள்—கூடுவிட்டிங்
காவிதான் போயினபின் யாரே யனுபவிப்பர்
பாவிகா ளந்தப்பணம்" என்றருளியுள்ளனர். திருவள்ளுவரும்,

"வைத்தான் வாய்சான்ற பெரும்பொரு ளஃதுண்ணான்
செத்தான் செயக்கிடந்ததில்" என்றார். மற்றும்
"ஈட்ட மிவறி யிசைவேண்டா வாடவர்
தோற்ற நிலக்குப் பொறை" என்று பொருளை விரும்பிப் புகழை
விரும்பாதவர் பிறப்புப் பூமிக்குப் பாரம் என்றார்.

கொடுத்தலு முண்ணுதலு மில்லாதவர்க்குக் கோடி பொருளி ருந்தும் பயனில்லை என்று பொருள்படத் திருவள்ளுவர்

"கொடுப்பதூஉந் துய்ப்பதூஉ மில்லார்க் கடுக்கிய
கோடியுண் டாயினு மில்" என்றார். தானங்களி லெல்லாம்
அன்னதானமே மிகச் சிறந்ததாகச் சொல்லப்படுகிறது. ஆனதால் ததியாராதனையே புரிதல் தனத்தாலாகும் சிறந்த தர்மம். திரவிய முள்ளவர்கள் பிறரிடத்து அன்பாயும், காருண்யத்துடனும், இருப்ப தோடு அவர்களுக்கேற்படும் கஷ்டங்களையும் நிவர்த்திக்க வேண்டும். ஓர் ஆங்கில கவி "அறிவற்ற சிக்கனமும்—கண்யமான தானமும்" என்று சொல்லியிருக்கிறார். அதாவது திரவியம் சேகரித்து வைப் பதற்கல்ல- நமக்கும் பிறருக்கும் எவ்வளவு நியாயமோ அவ்வளவு வரையிலும் செலவழிப்பதாம். அளவுக்கு மிஞ்சியும் செலவழித்தல் கூடாது. அதனாலேற்படுந் தீமைகளைக் கீழ்வரும் பாட்டில் காணலாம்.

"ஆனமுதலில் அதிகம் செலவானால்,
மானமழிந்து மதிகெட்டுப் - போனதிசை
எல்லார்க்கும் கள்ளனாய் ஏழ்பிறப்புந் தீயனாய்
நல்லார்க்கும் பொல்லனாம் நாடு"

இப்பூவுலகின்கண் சாந்தியடைய வேண்டுமென்றால், கடவுள் நமக்கு எப்படி எல்லாவிதங்களிலும் நன்மைபுரிந்து வருகின்றாரோ அதே போல நாமும் பிறருக்கு நம்மாலியன்றவரையிலும் நன்மை செய்வதே நமது கடமை. தனவந்தர்கள் தம் தம் சமூகமுன்னேற் றங் கருதித், தம்மாலியன்றவரையில் உதவிசெய்வதும் பொருத்தமான காரியமாம். இந்தியாவில் ஜாதிமத பேதமில்லாமல் நடந்தேறிவரும் பெருங் கிளர்ச்சியின் நடுவில், யாதவ சங்கங்களும், யாதவ இளைஞர் சங்கங்களும் தங்கள் சமூகத்தை ஒருவாறு எல்லா விஷயங்களிலும்

யுள்ளதோர் சமூகமாக நிரூபணம் செய்யலாம் என்று கருதி ஆ... ரும் தொண்டுகளுக்கு யாதவ கனவான்கள் பலரும் உதவி செய்வ... அவர்கள் கடமையாகும்.

பணக்காரனொருவனுக்கு மிதமாயிருத்தல் அசாத்தியம். அது போலவே மிதமாயிருக்கும் ஒருவனுக்குச் செல்வமிருப்பது அரிது. மற்றும், விசனத்தை உண்டாக்குவது வறுமையல்ல. ஆனால் விருப்பமே. பயத்திலிருந்து தெளிவிப்பது திரவியமல்ல. ஆனால் சமாதான உணர்ச்சியே. ஒருவனுக்கு இந்தச் சமாதான உணர்ச்சி யேற்படுமானால் அவனுக்குப் பொருள் வேண்டுமென்னும் விருப்பமுமிராது, வறுமையினால் உண்டாகும் கஷ்டமும் தெரியாது.

செல்வத்தால் உண்டாகும் தீமைகள் பலவுண்டெனினும், முக்கியமான இரண்டு விஷயங்களையே குறிப்பிட விரும்புகிறேன். முதலாவதாகச் செல்வம் உண்டானால் கர்வம், மமதை உண்டாகின்றன. கடவுளுக்கு மேலும், சட்டங்களுக்கு மேலும் இருப்பதாக எண்ணுகிறான். எவரும் தனக்கு நிகரில்லை என்றும் எண்ணுகிறான். அதற்குத்தான் செல்வச் செருக்கு என்று பெயர், இரண்டாவதாக ஸ்தோத்ரப் பிரியத்தினால் தற்புகழ்ச்சியை விரும்புகிறான். இதனால் அவன்தான் செய்யும்படியான சுபகாரியங்களை யெல்லாம் மறந்து, தீயவழிகளில் பிரவேசிக்கிறான். இவ்விதத் தீமைகளை யெல்லாம் அகற்றி, காதல், கவறுடல், கொலைபுரிதல், கள்ளுண்டல், பொய் மொழிதல் என்னும் பஞ்சமகா பாதகங்களுக்குச் செல்வம் ஏதுவாயிருப்பினும் அவைகளையும் அறவே யொழித்து, திரவியத்தைச் சற்பாத்திரங்களில் செலவிட்டு, சர்வத்துக்கும் காரணனாகிய ஸ்ரீமந் நாராயணனைச் சற்று நேரமாகிலும் எண்ணி அவன் திருநாமங்களை நாவாரச் செப்பி, திருவிளையாடல்களை மனமாரச் சிந்தித்திருந்தால், இம்மைப் பயன்களை எய்துவதோடு மறுமையின் போகமாகிய மோக்ஷவீடு இம்மையிலேயே வந்தெய்தும்,

நன்மையும் செல்வமும் நாளும் நல்குமே
தின்மையும் பாவமும் இன்றித் தீருமே
ஜன்மமும் மரணமும் தேய்ந்து தீருமே
இம்மையே ராம வென்றிரண் டெழுத்தினால்.

---



# "வேணுவைப் பிடித்த பேய்."

ஒரு சிறு கதை.

---

திரு. (ஆரியூர். வ. பதுமநாப பிள்ளை.)

இராதாபுரம் கிராமத்திலே, பெரிய சம்பத்தும் வாசுதேவக் கோனார் நல்ல செல்வாக்குடைய பெரிய மனிதர். அவர் ஆங்கிலத் தில் 'பி. ஏ' பட்டம் பெற்றவராயிருந்தும், இன்னொருவரின் கீழ் அடங்கி ஒடுங்கி கைகட்டிச் சேவகம் செய்ய மனமில்லாதவராய், தனக்குச் சொந்தமான நிலங்களின் வேளாண்மையைக் கவனித்துக் கொண்டு ஊரோடேயே தங்கிவிட்டார். தமது ஊர் சேர்ந்த சில மாதங்களுக்குப் பின்னர், தமக்கு 'இசம் பாத்திய' வழியில் கிடைத்த அவ்வூர் மணியகாரர் உத்தியோகத்தை ஏற்றுக்கொண் டார். மூன்றாவது பாரத்தைத் தாண்டுவதற்கு முன்னரே, நடை உடை பாவனைகளில் 'இமிடேஷன் ஐரோப்பியர்க'ளாக மாறிவிடும் பலரைப் போல இல்லாவிட்டாலும், அவருக்கு ஆங்கில நாகரிக மோகம் முற்றும் நீங்கியபாடில்லை. அவருக்குப் பத்தினியாக வாய்த்த பாக்கியவதியோ, தமிழ்நாட்டு வைதிக மாதர்களின் ஆசாரத்திலும் தெய்வ பக்தியிலும் பெரிதும் பற்றுடையவள். அவ்விருவரது செல்வக்குமாரனாகப் பள்ளியில் படித்துக்கொண்டிருந்த வேணு கோபாலனுக்கு ஆறுவயது நடந்துகொண்டிருந்த போது, நமது இக்கதை தொடங்குகின்றது.

ஒருநாள் நண்பகல் சுமார் ஒரு மணிக்கு, இராதாபுரத்துச் சுடு காட்டை அடுத்துள்ள புளியந்தோப்பில் தனது தோழர்களுடன் விளையாடிக்கொண்டிருந்த வேணு, திடீரென்று கீழே விழுந்தான். விழுந்தவன், காக்கைவலி பிடித்தவனைப்போல் கால்களையும் கைகளை யும் உதறிக்கொண்டு மண்ணில் புரளத் தொடங்கினான். அதைக் கண்டு பெரிதும் திடுக்கிட்ட மற்ற சிறுவர்கள், வாசுதேவக் கோனார்

..டிற்கு ஓடிச் சென்று, கோனாரின் மனைவியாகிய தேவகியம்மா ளிடம் வேணுவின் நிலைமையைத் தெரிவித்தனர். அது கேட்ட அக்கணமே புறப்பட்டு அலறிப் பதறி அழுது கொண்டே வேணு கிடந்த இடத்தை அடைந்த தேவகியம்மாள், தனது செல்வ மகனை வாரி எடுத்துத் தோளின்மேல் போட்டுக்கொண்டு தனது வீட்டுக்குத் திரும்பினாள்.

வீட்டின் முதற்கட்டுக் கூடத்திலே, மெத்தையின்மேல் தன் மகனைக் கிடத்திய தேவகியம்மாள், அவன் தன்னை மிரள மிரள விழித்துப் பார்ப்பதையும் மெத்தை உறையை நகங்களால் கிழிக்க முயல்வதையும் கண்டு பெரிதும் அஞ்சினாள்; பின், மகனை நோக்கி, "என் கண்ணே! உனக்கு எப்படி இருக்கிறதடா உடம்பு?"—என்று பரிவுடன் வினவினாள். வேணுவும் தன் அன்னையை நோக்கி, "என் கண்ணே! உனக்கு எப்படியிருக்கிறதடா உடம்பு?"—என்றான். "ஐயோ! என் செல்லமே! இதோ பார்! நான் உன் தாய் இல்லையா?"—என்றாள் தேவகி. "ஐயோ! என் செல்லமே! இதோ பார்! நான் உன் தாய் இல்லையா?"-என்றான் வேணு. "உன்னைப் பிசாசா பிடித்திருக்கு?"—என்று வினவினாள் அன்னை. "உன்னைப் பிசாசா பிடித்திருக்கு?"—என்று அவளையே திருப்பிக் கேட்டான் மகன். இவ்வண்ணமே, தான் என்னென்ன சொன்னாலும் அதையதையே அவனும் திருப்பிச் சொல்லிக்கொண்டிருப்பதைக் கண்ட தேவகி யின் நெஞ்சம் பெரிதும் குழம்பத் தொடங்கிவிட்டது. பின், அவ் வூரில் சாமியாடி சுந்தரம்மாள் என்னும் கிழவியின் மேல் கன்னியம் மாள் ஆவேசம் அடிக்கடி வருவதுண்டு என்று கேள்விப்பட்டிருந் தது, தேவகியின் நினைவுக்கு வந்தது; உடனே, அவள் அந்தச் சணத்திலேயே வரவழைக்கப்பட்டாள்.

சுந்தரம்மாளிடம், தனது செல்வமகனைப் பிடித்திருக்கும் பேயை எப்படியாவது ஓட்டிவிடவேண்டும் என்று தேவகி மிகவும் கெஞ்சிக் கேட்டுக்கொண்டாள். "இது கெட்டெடது கழுதை; கன்னி யம்மா சத்திக்கு எதிரிலே, இந்த நாய் எம்மாத்திரம்? இந்த அரு மைப் பாலனை இன்னம் ரெண்டு நாழிக்குள்ளே எழுந்து வெள் ளாடச் செய்யறேன் பார்த்துக்கோ!"—என்று சபதம் கூறிய அக் கிழவி, ஒரு தட்டு நிறையக் குங்குமமும் ஒரு பலம் கற்பூரமும் ஐந் தாறு கொத்து வேப்பிலைகளும் கொண்டு வருமாறு கூறினாள்.



அவை கொண்டுவந்து வைக்கப்பட்டபின், குங்குமம் பரப்பப்பெற் தட்டில் கற்பூரத்தைக் கொளுத்தி வைத்துவிட்டு எதிரில் உ கார்ந்து கொண்டு கற்பூரச்சுடரை உற்று நோக்கிக்கொண்டிருந்த அக் கிழவியின் தலை, சிறிது சிறிதாக நடுங்கத் தொடங்கியது. வர வர நடுக்கம் அதிகரிக்கப்பெற்ற அவளது தலையின் வெண்மயிர், அவிழ்ந்து வேகமாகச் சுற்றத் தொடங்கியது. பின், வேப்பிலைக் கொத்துகளை எடுத்துத் தரையில் அறைந்த அக் கிழவி, வேணுவை நோக்கி "ஏ! நாயே! இந்தப் பாலயனை எந்த இடத்திலே புடிச்சே? உடனே, இந்த குயந்தையை உட்டுட்டு ஓடிப் போயிடு. இல்லா விட்டால், உன்னைப் படாதபாடு படுத்தி வச்சுடுவேன்."—என்றாள். "ஊகூம்! நான் போவமாட்டேன். உன் செபம் என்கிட்டே பலிக் காது. நான் ஆருக்கும் பயப்படமாட்டேன்"—என்றது வேணு வைப் பிடித்திருந்த 'பேய்'. "ஆகா! அப்படியா? எங்க கன்னியம்மா ளுக்குப் பூசை போட்டு, உன்னைக் கதறக் கதற ஓடவைக்கிறேன் பார்த்துக்கோ."—என்றாள் சாமியாடிக் கிழவி. பின் அவளது தலை யாட்டம் நின்றதும், தரையில் விழுந்தாள்; சாமியும் மலை ஏறிவிட் டது. பின்னர், அக்கிழவி தேவகியை நோக்கி, குழந்தையைப் பொல் லாத முனி புடிச்சருக்குது. முண்டியம்பாக்கத்திற்குப் போய் கன்னியம்மா மனசுகுளுர பூசை போட்டுட்டு வா. அப்புறம், இந்த முனி இங்கே தலையே காட்டாது"—என்று கூறிவிட்டுச் சென்றாள். அவ்வாறே, ஒரு வெள்ளியன்று கன்னியம்மன் கோயிலுக்குப் போய் தேவகியம்மாள் ஆடம்பரமாகப் 'பூசை போட்டு விட்டு' வீடு திரும்பி வந்தாள்.

அதன் பிறகுங்கூட வேணுவைப் பிடித்தபேய் விலகியபாடில்லை. அவன் ஒரு மாதத்திற்குள் ஐந்தாறு முறைகளில், திடீரெனத் தரை யில் வீழ்ந்து கை கால்களை உதறிக்கொண்டு இரண்டொரு மணி நேரம் பலவித சேஷ்டைகளைச் செய்யும்படி நேர்ந்தது. எவரும் சிறி தும் எதிர்பாராத சமயங்களில் அவன் அத்தகைய சேஷ்டைக ளுக்கு உட்பட்டுவந்ததால், அவனைக் கொடியதொரு முனி பிடித்து விட்டது என்பதில் எவர்களுக்கும் எத்தகைய ஐயமும் இல்லை.

இராதாபுரத்து ஐயனார், அக் கிராமவாசிகளில் பெரும்பா லோர்க்குக் குலதேவதை ஆகும். அந்த ஐயனார் கோயிலிலே 'உத்த வு' கேட்டால், நன்மையோ தீமையோ இரண்டிலொன்று விளங்கி

டுமென்பது அவ்வூராரின் நம்பிக்கை. தேவகியம்மாளுக்கும் அந்த ...க்கை இருந்தது. ஆதலால்; அவ்வம்மையார் ஐயனார் கோயிற் பூசா...யை வரவழைத்து, தன் மகனது நிலைமையை விவரித்துக் கூறி, அவனைப் பிடித்துள்ள பேய் விரைவில் விலகுமா விலகாதா என்பதை ஐயனாரிடம் உத்தரவு கேட்டுவந்து தெரிவிக்குமாறு வேண்டிக்கொண்டாள். ஐயனாரை உகப்பிக்கப் பலி கொடுக்க இரட்டைச் சேவல்களும் பொங்கலிட இரண்டுபடி அரிசியும் பூசாரிக்குத் தட்சணை ஒரு ரூபாயும் கொடுத்தனுப்பினாள். அவற்றைப் பேரானந்தத்தோடு பெற்றுக்கொண்டு புறப்பட்ட பூசாரி, ஒரு வெள்ளிக்கிழமையன்று மாலை, ஐயனார் கோயில் எதிரில் கோழிகளைப் 'பலி'யிட்டுப் பொங்கலைப் படைத்து, 'நல்ல உத்தரவு' தருமாறு ஐயனாரை மிகவும் பிரார்த்தித்துக் கொண்டான். ஐயனாருக்கு வலப்புறத்திலுள்ள ஆல மரத்தில் கெவுளி 'கிறீச்' என்று சத்தமிட்டால் நன்மை என்றும், இடப்புறத்திலுள்ள அரசமரத்தில் அத்தகைய சத்தம் கேட்டால் தீமை என்றும் தன் மனத்துக்குள்ளாகவே நினைத்துக் கொண்ட அவன், ஐயனார் எதிரில் பயபக்தியுடன் கைகளைக் கட்டிக் கொண்டு உட்கார்ந்து கொண்டான். பத்து நிமிஷங்கள் சென்றன; அரை மணி ஆயிற்று; இரண்டு மணி நேரமும் ஆயிற்று. பாழும் கெவுளி எந்த மரத்திலும் சத்தமிட்ட பாடில்லை. இரவு பத்துமணியானாலும் உத்தரவு கிடைக்கும்வரையில் உட்கார்ந்த இடத்தை விட்டு எழுந்திருப்பதில்லை என்பது பூசாரியின் வைராக்கியம். அத்தகைய பொறுமை அவனுக்கு ஏற்பட்டது பெரிதும் வியத்தற்குரியதே. இரவு எட்டுமணி இருக்கலாம்; நீலவானில் அழகிய முழுமதியம் தனது வெண்ணிலவின் தண்ணொளியைப் பரப்பித் திகழ்ந்து கொண்டிருந்தது. இறுதியில், ஐயனாருக்கும் திருவுள்ளம் இரங்கியது. போலும்! வலப்புறத்திலுள்ள ஆல மரத்தின் அடியிலே, கெவுளியொன்று 'கிறீச்' 'கிறீச்' என்று இருமுறை சத்தமிட்டது போல அவனது செவிகளில் கேட்டதுதான் தாமதம்! மறுகணத்தில் திடீரென எழுந்த அவன், ஐயனார் 'நல்ல உத்தரவு' கொடுத்து விட்டாரென்று ஆனந்தக்கூத்தாடியவனாய் அவரைக் குறித்துப் பலவாறு தோத்தரிக்கலானான். பின்னர், 'பிரசாதங்களை' எடுத்துக் கொண்டு புறப்பட்டு நேரே பணியகாரர் வீட்டுக்குச் சென்று தேவகியம்மாளைக் கண்ட பூசாரி, "ஐயனார் நல்ல உத்தரவு கொடுத்து விட்டார்; இனிமேலே எதுக்கும் பயமில்லே. வேணு



வைப புடிச்ச பிசாசு இன்னைக்கே தொலைஞ்சு போச்சுன்னு நெ... ...க்கோ! இனிமேலே பயப்படாதே தாயே"—என்று ...வ ...ளுக்கும் அவளது மகனுக்கும் விபூதி ...ச் சென்றான்.

ஐயனார் நல்ல உத்தரவு அளித்துவிட்டதாகப் பூசாரி அறிவித்து விட்டுச் சென்று ஒரு வாரம் சென்ற பின், ஒருநாள் மாலை தெருவில் விளையாடிக்கொண்டிருந்த போதே திடீரென்று தரையில் விழுந்த வேணு, பழையபடியே பேயின் சேஷ்டைகளுக்கு ஆளாகிக் கைகால்களை உதறிக்கொண்டு பலவாறு பிதற்றலானான். அது கண்ட தேவகி, ஐயனார் கொடுத்த 'நல்ல உத்தரவும்' பலித்தபாடில்லையே, என்று பெரிதும் வருந்தி நின்றாள். இரண்டு மணிநேரம் அத்தகைய நிலையிலிருந்த வேணு, பின்னர் அயர்ந்து உறங்கிவிட்டான். மறுநாள் மாலை, தன் வீட்டுத் தெருத்திண்ணையில் தேவகியம்மாள் கவலை மிகுந்த முகத்துடன் உட்கார்ந்து கொண்டிருந்தாள். அப்போது தெருவில் நின்றுகொண்டிருந்த கோனாரது நிலங்களில் பண்ணையாளாக வேலைபார்த்து வருபவனாகிய பரச்சுப்பன், தனது எஜமானியின் கவலைக்குக் காரணம் எதுவாக இருக்கக்கூடும் என்பதைக் குறித்துப் பெரிதும் யோசித்து நின்றான். சில நிமிஷங்களுக்குப் பின் ...னர் தனது எஜமானியின் கவலைக்குக் காரணம் இன்னதென்பதை அவன் தெரிந்து கொண்டவனை போல், "நம்ம சின்ன ஆண்டையை புடிச்சுக்கினு ஆட்டிவக்கிற பிசாசை நெனச்சி நெனச்சி அம்மா வங்காரப்போலே எக்குது. எங்க சேரியிலே, புறக்கோயில் தோப்பு நொண்டிக் கறுப்பனுக்கும் புட்டாலம்மனுக்கும் புளியந்தோப்பு சங்கிலிக் கறுப்பனுக்கும் பூசை சுடலை காத்த இருளாயிக்கும் கட்டாயமா நல்ல உத்தரவு போட்டு உத்தரவு கேட்டாக்கா, நம்ம சாமிங்கள் மனங்குளுரப் பண்ணாக்கா, கிடைக்கும். எங்க சாமிங்கள் மனங்குளுரப் பண்ணுக்கா, நம்ம சின்ன ஆண்டையைப் புடிச்சிருக்கிற பிசாசு இன்னுமே இங்கே தலை காட்டவே காட்டாது"—என்று தனது எஜமானி அம்மாளிடம் தெரிவித்துக் கொண்டான். அவன் கூறியதையும் செய்து பார்த்துவிடலாம் என்று தேவகியம்மாள் நினைத்தாள். அவ்வாறே சுப்பன் கேட்டபடி அத் தேவதைகளுக்குப் பலி கொடுக்கக் கொழுத்ததொரு ஆட்டுக்கடாவும் இரண்டு புட்டிச் சாராயம் வாங்கவும் மற்ற சில்லரைச் செலவுகளுக்கும் அவனிடம் பதினைந்து ரூபாய் கொடுத்து, பூசை போடத் திட்டம் செய்தனுப்பினாள்.

மறுநாள் இரவு ஒன்பதுமணி இருக்கலாம். சேரியைச் சேர்ந்த முனியாண்டி கோயில் எதிரிலே, பத்துப் பதினைந்து செங்கல்கள் நடப்பட்டு, அவற்றிற்கெல்லாம் 'விபூதிப் பூசைகளும் குங்குமப் பொட்டுகளும்' இடப்பட்டிருந்தன. அவற்றின் எதிரில் சில மட்பாண்டங்களில் சமைத்த மாமிசமும் சாராயப்புட்டிகளும் வைக்கப்பட்டிருந்தன. அங்கு, கூடியிருந்த எல்லாரிலும் நாட்டாண்மைக்காரனாக இருந்தவன், கற்பூரம் கொளுத்தி 'சாமிகள்' எல்லாவற்றிற்கும் காட்டிய பின்னர், கொம்புகள் ஊதப்பட்டன; பறைகள் கொட்டப்பட்டன; மற்ற சில்லரை வாத்தியங்கள் பலவும் முழக்கப்பட்டன. இடையிடையே அவ் வாத்தியங்களை முழக்கிக்கொண்டு, அனைவரும் சேர்ந்து தமது குலதெய்வங்களைக்குறித்துத் தோத்திரஞ் செய்யத் தொடங்கியவர்களாய், பின்வருமாறு பாடலாயினர்:—

"மதுரைக் கருப்பண்ணு! மாகாளி யாத்தாளே!
எதிரில்லாக் காட்டேரி! இங்கே வருவாயே!
சங்கிலிக் கருப்பண்ணு! சாமுண்டி வீரனே!
அங்காளம்மா தாயே! அன்புடனே வருவாயே!
மாரி! முனியாயி! பூவாடை யாத்தாளே!
சேரிப் புட்டாலம்மா! சீக்கிரம் வரவேணும்!
காத்தவராயா! கன்னியே! மோகினியே!
ஆத்தே! மாரியம்மா! அகமும் இரங்கலையோ?
ராதாபுரத் தாயே! ராசாத்தி! எங்களுக்கு
ஆதாரம் வேறே ஆரிருப்பார் சொல்லம்மா!"

இவ்வாறு ஒரு மணிநேரம் எல்லோரும் சேர்ந்து வேண்டிக்கொண்டிருந்த பின், அவர்களுக்குள் நாட்டாண்மைக்காரனாகிய வீரப்பன் மேல் மதுரைக் கருப்பணசாமியின் ஆவேசம் தோன்றலாயிற்று. சிறிது நேரம் உட்கார்ந்தவண்ணமே தலை சுற்றி ஆடிக்கொண்டிருந்த பின், திடீரென்று எழுந்திருந்து எழும்பி எழும்பிக் குதித்துச் சுற்றிச் சுற்றி வந்து, இருபுறம் இருவர் தன்னைப் பிடித்துக் கொண்டு நிற்க, அவர்களது பிடியினின்றும் திமிறிக்கொண்டே "ஆகா காகா! ஆகா காகா!! உவாய்! உவாய்!! அடாய் என் மக்களா! என் கொயந்தகளா!! ஏண்டா என்னை மூணு மாசமா நெனக்கவேயில்லே! ஒங்களுக்கு புதுத்திமிறு புடிச்சுட்டுதா என்ன? அடேய்! கருப்பண்ணனை என்னுன்னு நெனச்சுட்டீங்க? ஆகாகா! என் மக்களா! ஒங்களெ ஒங்களெ என்னபண்ணணும் தெரியுமா?"—என்று கர்ச்சித்தான் பாவீரப்பன் -இல்லை- 'மதுரைக் கருப்பண்ணன்'.



அவ்வுரைகளைக் கேட்டு மற்றவர்கள் பெரிதும் நடுநடுங்கினர். ஒருவன் முன்வந்து பயபக்தியுடன், "சாமி! ஆண்டவனே!! தெரிஞ்சோ தெரியாதோ இந்த எயைங்க செய்த குத்தமெல்லாம் பொறுத்துக்கணும் சாமீ! ஒன் குயந்தெவொமேலே நீயே இவ்வளவு கோவிச்சிக்கிறு எங்களுக்கு வேறே கதி யாரு ஆண்டவனே! இன்னமே உன்னை மறக்காமே மாசாமாசம் பூசை போட்டு வரோம் சாமீ! பெரிய மனசு பண்ணி எங்களெ நீதான் இந்தச் சமயம் காப்பாத்தணும் ஆண்டவனே! எங்க ஆண்டை கோனார் வூட்டு சின்ன புள்ளாண்டானை என்னமோ ஒரு பிசாசு புடிச்சிக்கினு படாத பாடெல்லாம் படுத்திவைக்கிது. அத்தைமாத்தரம் நீ ஓட்டி வச்சூட்டீன்னு, இன்னம் ஒன் மனசு குளுர நல்லபூசை போடரோம் சாமீ! நீ மாத்திரம் மனசு வச்சூட்டீன்னு அந்தப் பிசாசை ஒரே நொடிக்குள்ளே ஒழிச்சுடலாம் சாமீ!"—என்று வேண்டிக்கொண்டான்.

"அடா! கொயந்தே! இதுக்காடா இப்படிப் பயந்தூட்டே! அவனை நம்ம ஊரு சுடுகாட்டு முனியாண்டி புடிச்சூட்டிருக்கிறான். எங்கிட்டே அவன் என்ன பண்ணிக்கமுடியும்? கவலைப்படாதே கொயந்தே! அடுத்த செவ்வாக்கியமை அந்த முனியாண்டியை ஓட்டி வச்சுடரேன்று கோனாரு கிட்டே சொல்லு போ! முனியாண்டி எனக்கு ஒரு எதுரா? சதுரா? நான் போய் வரேண்டா கொயந்தே! என்னை மாத்தரம் மறந்தூடப் போரே, தெரிஞ்சுதா"-என்று கூறிக்கொண்டே வீரப்பன் மேல் ஆவேசித்திருந்த கருப்பண்ணசாமி, 'மலையேறிப் போய்விட்டது'. உடனே, கோனார் வீட்டுப் பண்ணையாளான சுப்பன் தனது எஜமானன் வீட்டிற்கு ஓடிப் போய், தனது எஜமானியம்மாளைக் கூவியழைத்து அந்த சந்தோஷ சமாசாரத்தை அடங்காப் பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்தான். அதைக் கேட்ட தேவகியம்மாளும், வேணுவைப் பிடித்த பேய் இனி தலைகாட்டாதொழியும் என எண்ணியவளாய் ஆனந்தம் அடைந்தாள். ஆயினும், அவளது ஆனந்தம் நீடித்தபாடில்லை. அச் சம்பவம் நிகழ்ந்ததற்கு அடுத்தவாரமே, வேணு பழையபடியே பேயின் சேஷ்டைகளுக்கு ஆளாகி வருந்தலானான்.

ஒருநாள், கோனார் வீட்டுக்கு, சென்னைக்குச் சமீபத்திலுள்ள திருவள்ளூரிலிருந்து ஒரு பாகவதர் விஜயம் செய்திருந்தார். அன்று மாலை, அவரிடம் தேவகியம்மாள் தனது மகனைப் பேய் பிடித்த

[illegible]யும் அப்பேயை ஓட்டுவதற்காகத் தான் மேற்கொண்ட முயற்சிகளையும் அம் முயற்சிகள் அனைத்தும் பயன்படாதொழிந்ததையும் விரித்துரைத்து, அப்பேயின் சேஷ்டைகளுக்குத் தன் மகன் ஆளாகாது தப்பக்கூடியதொருவழியைத் தெரிவிக்கவேண்டுமென்று அவரை வேண்டிக் கேட்டுக்கொண்டாள்.

தேவகியம்மாள் கூறியவற்றைக் கேட்டுப் பெரிதும் அகம் வருந்திய அப் பாகவதர், பின்வருமாறு அவளை நோக்கிக் கூறலானார்:—

“என்றென்றும் மறந்தும் புறந்தொழாத பழந்தனி வைணவப் பெருங்குலமாகிய யாதவ குலத்தில் பிறந்திருந்தும், கேவலம் சிறு தெய்வங்களது ‘கிருபை’யைப் பெற முயன்றது பெண் தன்மைக்கு உரிய பேதைமையையே காட்டுகிறது. தேவிற் சிறந்த திருமால் இருக்க, ‘காணிலும் உருப் பொலார் செவிக்கு இனாத கீர்த்தியார்-பேணிலும் வரம்தர மிடுக்கிலாத தேவர்’-என்று ஆழ்வார் அருளிச்செய்தபடி அற்ப தேவதைகளாகிய கருப்பண்ணனுக்கும் கன்னியம்மாளுக்கும் ‘பூசை போட’ச் செய்தது கேட்டுப் பெரிதும் வருந்துகின்றேன். ‘கண்டார் இகழ்வனவே காதலன் தான் செய்திடினும்—கொண்டானை அல்லால் அறியாக் குலமகள்’—என்று குலசேகரர் சாதித்தவாறு, எவ்வளவு துன்பங்கள் நேர்ந்தாலும் ‘களைவாய் துன்பம்; களையாது ஒருவாய்; களைகண் மற்றிலேன்’-என்று நமது ஒப்புயர்வற்ற குலதெய்வமான கண்ணபிரான் திருவடிகளிலேயே சரணம் புகவேண்டியது நமது கடமையாகும் என்பதை இனியேனும் மறந்துவிடாதே. மேலும், தேவதாந்தரங்களை ‘த்ருப்தி செய்வதற்காக’, ஜீவகாருண்யத்தைச் சிறிதும் நினையாமல் எப்பாவமும் அறியாத ஏழைப்பிராணிகளை அநியாயமாகப் பலியிடச் செய்ததும்; அவற்றிற்குக் களிப்பூட்ட மதுமாமிசாதிகளைப் படைக்கச் செய்ததும் பெரும் பாவச்செயல்களாகும். அத்தகைய கொடுமைகளுக்கெல்லாம் காரணம், கேவலம் குருட்டு நம்பிக்கையே. நடந்தது நடந்துவிட்டது; இனி என்ன செய்வது? அத்தகைய அறியாச் செய்கைகளுக்குப் பிராயச்சித்தமாக, எங்களதூருக்குச் சமீபத்திலுள்ள சோளசிங்கபுரத்திற்கு—வேணுவையும் கோனாரையும் கூட்டிக்கொண்டு போய், கடிகாசலத்தின் மேல் இருக்கும் நரசிம்மசுவாமி சந்நிதியை அடைந்து, பெருமாளுக்குத் திருமஞ்சனம் முதலியவற்றைச் செய்வித்து மனமார்ந்தப் பக்தியோடு பெருமாளைப் பிரார்த்தித்துக் கொள்வாயானால், வேணுவைப் பிடித்த பேய் என்றென்றும் தலைகாட்டாது ஓடியொழியும் என்பது நிச்சயம்”.



பாகவதரது பிரசங்கத்தைக் கேட்ட தேவகியம்மா[illegible] பேதைமையை எண்ணிப் பெரிதும் வருந்தியவளாய், அ[illegible] கூறியவாறே நடந்துகொள்வதாகச் சொல்லி அவருக்கு விடைகொடுத்து அனுப்பினாள். சில தினங்கள் சென்றபின், அவள் தன் கணவனையும் புதல்வனையும் அழைத்துக்கொண்டு புறப்பட்டு, சோளசிங்கபுரம் சென்று சேர்ந்தாள். நரசிம்மசுவாமி சந்நிதியை அடைந்து சுவாமிக்கு விசேஷத் திருமஞ்சனம் முதலியவற்றைக் குறைவறச் செய்வித்தபின், சந்நிதியைத் தேவகியம்மாளும் வேணுவும் இருபத்தொருமுறை பிரதட்சணம் செய்தனர். பின்னர், தாயார் ஸந்நிதி எதிரில் வேணுவை உட்காரவைத்து, தேவகியம்மாள் அருகில் நின்றுகொண்டாள். வேணுவின் தலை கொஞ்சங் கொஞ்சமாகச் சுழலத் தொடங்கியது. பின், சுற்றும் வேகம் சிறிது சிறிதாக அதிகரிக்கத் தொடங்கியது. எதிரில் நின்ற தேவகியம்மாள், அதட்டும் அதிகாரத் தொனியில், “ஏ! பேயே! இந்த இடத்தில் உன் ஆட்டமும் கொட்டமும் பலிக்காது. இவனை எங்கே பிடித்தாய்? சொல்லிவிட்டு ஓடிப் போய்விடு”—என்று கூறினாள். “ஐயையோ! ஐயையோ!! பொறுக்க முடியலையே! நான் போயிடறேனே! ஓடிப் போயிடறேனே! ராதாபுரத்துச் சுடுகாட்டுங்கிட்டே இந்த புள்ளையைப் புடிச்சேன். சத்திமா, எங்கப்பாணை, இந்தப் பாலவன் சோலிக்கு இனிமே எப்பவும் வரவேமாட்டேன். நான் இப்பவே ஓடிப்போயிடறேன். சாமீ! ஆண்டவனே! பெருமாளே! என்னை காப்பாத்து. எனக்கு நல்லவழி காட்டு”—என்று கத்தியது வேணுவைப் பிடித்திருந்த பேய். பின்னர், சுய உணர்ச்சியுடன் எழுந்து நின்ற வேணுவை அடங்காப் பெருமகிழ்ச்சியுடன் தூக்கி யெடுத்துக்கொண்டு இடையில் வைத்து இறுகத் தழுவி, அவனது அழகிய கன்னத்தில் பன்முறை முத்தமிட்டாள் அவனது அன்னை. பின்னர், இனி எத்தகைய துன்பங்கள் எய்தினும், ‘உன்னால் அல்லால் யாவராலும் ஒன்றும் குறைவேண்டேன்’-என்று ஆழ்வார் அருளியதற்கிணங்க, ஆயர்குல மணிவிளக்காகிய கண்ணபிரான் ஒருவனையே யல்லாது வேறு எத் தெய்வத்தையும் கனவிலும் கருதாத உறுதிநிலையை அளித்தருளுமாறு நரசிங்கப்பெருமாளைப் பிரார்த்தித்துக் கொண்டு, தேவகியம்மாள் தன் மகனோடும் கணவனோடும் புறப்பட்டு இராதாபுரம் மீண்டாள். அதன் பின், வேணு ஒரு முறையேனும் பேயின் சேஷ்டைகளுக்கு ஆளாகவே இல்லை. தன் மகனைப் பிடித்தாட்டிய

...ஙிய விதம், வாசுதேவக் கோனருக்கும் சிறந்ததொரு படிப்பினையும் ஆயிற்று. அது முதல் அவரும், பகவத்பக்தியில் சிறந்தவரானார். வேணுவுக்கு வந்த துன்பம், அவனது பெற்றோர்களைத் 'தேவு மற்றறியாத் திருமால் அடியவர்கள்' என்னும் பெரும் பேற்றினுக்காளாக்கியது. துன்பத்தின் முடிவு இன்பமே யன்றோ!

குறிப்பு:—மாமிசங்களில் இச்சைகொண்டு திரியும் ஆவிகளே, 'பிசாசுகள்' எனப்படுகின்றன. அவற்றின் ஆட்டங்களுக்கெல்லாம் பயம்-பயம்-பயமே முக்கிய காரணம். தங்களிடம் அச்சம் கொள்ளாதவர்களை தங்களை மதியாது அலட்சியப் படுத்துபவர்களை அப்பிசாசுகள் முதலியன ஒன்றும் செய்வதில்லை. எவ்வளவுக் கெவ்வளவு அவற்றைப் பற்றிய அச்சம் அதிகரிக்கின்றதோ, அவ்வளவுக் கவ்வளவு அவ்வண்ணம் அஞ்சுவோரை அவை ஆட்டிவைத்து வருகின்றன. பேய் பிசாசு முனி முதலியன சர்வசக்தியுள்ள கடவுளுக்கு அடங்கியனவே யாதலின்; மனமார்ந்த உண்மைப் பக்தியோடு இறைவனை வழிபட்டுவரும் அன்பர்கள் அவற்றிற்குச் சற்றும் அஞ்சவேண்டுவதில்லை. அப்பேய்களை மதியாதவர்களை, அவையும் கவனிப்பதில்லை. ஆகவே, செந்தமிழ் நாட்டினரே! இறைவனது இணையடிகளில் இடையறாத அன்பு உடைமையால், எவ்வேளைகளிலும் எத்தகைய பேய்களிடத்திலும் என்றென்றும் சிறிதளவும் 'அச்சமில்லை, அச்சமில்லை, அச்சமில்லை இல்லையே' என்று ஆண்மையுடன் வாழக் கடவீர்களாக. திரு அருள் முன்னிற்க.

பர்மாவில்,

## நமது மித்திரன் பிரதிநிதி.

நமது குலாபிமானியும் மித்திரனின் சந்தாதாரருமாகிய கண்ணன் அவர்களைப் பர்மாவுக்கு நமது ஏஜண்டாக நியமித்திருப்பதால் பர்மாவிலுள்ள அன்பர்கள் அவரிடம் சந்தா செலுத்தி ரசீது பெற்றுக்கொள்ளக் கோருகிறோம்.

மானேஜர்.



# வள்ளல் பாரி!

### மங்கையின் சோகமும் மன்னவன் தேற்றலும்.

(139-ம் பக்கத் தொடர்ச்சி.)

திரு. காந்திதாசன்.

பல்வகைவளமும், வனப்பும் வாய்ந்த, தனிச் செம்மொழியாகத் தனியரசு புரிந்த தமிழ்த் தெய்வத்தின் திருவருள் பெற்ற புலவர்கள் பாடும் புகழமைந்த புரவலனும், பொன்னாலிழைத்து மணியாற் பொதிந்த அழகிய அணிகளையணிந்து, கண்டோர் கண்களைக்கவரும் வனப்புவாய்ந்த கண்மணியாகிய யதுகுமாரியின் காதலனும், யதுகுலத்திற்கொப்பக் காணுவதற்கு எளியவனும், இன்சொற் சொல்பவனும், யாதவ தருமத்திற் சிறிதுங் குறையாதவனுமாகிய பாரி வேந்தனனவன்

"குணநாடி குற்றமுநாடி யவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்"

என்னுந் தெய்வமொழியைச் சிந்தையிற்கொண்டு, தன் கீழ்வாழ்வார் குற்றஞ் செய்தால், அக்குற்றத்தைநாடி, யாவர்கட்கும் முகங் கடுக்காது நடுநிலைமையைப் பொருந்தி அக்குற்றத்திற்குச் சொல்லிய தண்டத்தை அமைச்சர், பண்டிதர்களுடன் ஆராய்ந்து, அவ் அளவிற்குத் தக்கனவற்றைச் செய்யும் முறையை மேற்கொண்டு ஒழுகும் செங்கோல் வேந்தனைப் பாரி விளங்கினன்.

மிக்கப் புகழ்படைத்தும் வேண்டுவார் வேண்டியவைகளை எல்லாந் தருந்தன்மையதாகிய கற்பகமரத்தைப் போன்ற வேந்தர்க்கு, அழகில் திருமகளைப் போலவும், கற்பில் அருந்ததியைப் போலவும், கல்வியிற் கலைமகளைப் போலவும், நல்லொழுக்கங்கள் நிறைந்த குலமகளாம் "கோமகள் யதுகுமாரியை" வதுவை செய்து மணிமுடியுந் தரிக்கப்பெற்று சாந்திராயணம், ஏகாதசி முதலிய விரதங்களையனுஷ்டித்தும், தீர்த்தயாத்திரை, க்ஷேத்திரயாத்திரைகளைச் செய்தும் பல ஆண்டுகள்வரை புத்திரப் பேறில்லாதிருந்தது.

பெறுமவற்றுள் யாமறிவ தில்லை யறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற
எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்"

என்று பொய்யாமொழியார் எழுதியமைத்த பொதுமறையை அன்புறக் கற்று இன்பம் தருநரும் பாரியின் வாழ்க்கைத் துணைவியாகிய யதுகுமாரியானவள் மட்டற்ற வாட்டமுற்றாள், நெஞ்சங் குழைந்தாள், நெடுங்கண்ணீருதிர்த்தாள்.

"குழலினிது யாழினி தென்பதம் மக்கள்
மழலைச் சொற் கேளாதவர்"

என்று "பெருநாவலர்" அமைத்த "முதுமொழி"யையுணர்ந்த பாரிவேள் பாரி, பெண்மை, தாய்மை, இறைமை என்னும் முப்பொருளையுமுணர்ந்த முதல்வி, பெண்பிறவியின் விழுமிய நோக்கத்தை அன்பாலறிந்த அணங்கு,

"மங்கல மென்ப மனைமாட்சி மற்றதன்
நன்கல நன்மக்கட் பேறு"

என்று கூறும் "செய்யா மொழி"யின் செம்மைசான்ற சொற்களை நினைந்து நினைந்து நெஞ்சமுருகினாள். கவலைமேற் கவலையுண்டாகிப் பெருமூச்செறிந்தாள். அந்தப்புரத்தின் மேல் மாடியில் அசோதை பிராட்டியின் மடிமீதிலிருந்து அமுதமுண்ணும் கண்ணன் திருவுருவத்தைக் கண்ணாரக்கண்டு தன்னிருகரங்களையுங் கூப்பிச் சிரமேற்றி உள்ளமுருகப் பாடினாள்.

(1) "அன்றாயர் குல மகளுக் கரையன் றன்னை
அலைகடலைக் கடைந்தடைத்த வம்மான் றன்னைக்
குன்றாத வலியரக்கர் கோனை மாளக்
கொடுஞ்சிலைவா யச்சரந்துரந்து குலங்களைந்து
வென்றானைக் குன்றெடுத்த தோளினானை
விரிதிரை நீர் விண்ணகரம் மருவி நாளும்
நின்றானைத் தண்குடந்தைக் கிடந்தமாலை
நெடியானை யடிநாயேன் நினைந்திட்டேனே"

(2) "தந்தம்முறியி லவர் வைத்த
தயிர் பால் வெண்ணெய் கட்டாமற்
குந்தி யுரலின் மீதேறி
இளங் கோவியர் முன் கூத்தாடி



நந்தன் மனையி லசோதை யிரு
நயனங் களிக்க விளையாடு
மைந்தனிருநாள் ஒருநாளு
மறவா தாரே பிறவாதார்"

(3) "மாதவனுகியும்! மேதிலனுகியும்!
வஞ்சன்! கஞ்சன்! வரவிட்ட
பூதனைதன் னுயிர் முலை பொழிபாலொடு
போதர வுண்ட புயல்வண்ணா!
மாதவ! யாதவ! வாசவ! கேசவ!
மாயா! வாயா! மதுசூதா!
ஆதியு மந்தமு மாகிய நின்புக
ழல்லா துரையே னடியேனே!"

(4) "சேயபங்கயச் சிறுவிரலங்கையில்
திரட்டிய நறு வெண்ணெய்!
ஆயர் மங்கையர் இடஇட அமுதுசெய்
தாடிய திருக் கூத்தும்!
சேயமுங் குறமுறுவலும் புரிந்துபார்த்
தருளிய நெடுங் கண்ணும்!
மாயவன்! திருவடிவமும்! அழகும்! என்
மனதை விட்ட கலாவே"!

(5) "மனத்துளோர் தூய்மையில்லை!
வாயிலோ ரின்சொ லில்லை!
சினத்தினால் செற்றம் நோக்கி
தீவிளி விளிவன் வாளா
புனத்துழாய் மாலையானே!
பொன்னிசூழ் திருவரங்கா!
எனக்கினிக் கதியென்? சொல்லாய்
என்னை யாளுடைய கோவே"!

(6) "பொய்க் நின்ற ஞானமும் பொல்லா வொழுக்கு
மழுக்குடம்பும்
இந்நின்ற நீர்மை யினியாமுறாமை
உயிரளிப்பான்
எந்நின்ற யோனியு மாய்ப்பிறந்தாய்!
இமையோர் தலைவா!
மெய்ந்நின்று கேட்டருள்வாய் அடியேன் செய்யும்
விண்ணப்பமே"!

என்று முருகப்பாடித் துதித்தாள். பறம்புமலையிலிருந்து தேனருவித்திரையோடி வருவதுபோல் காவிமலர் போன்ற கண்களிலிருந்து அஞ்சனங்கரையுமாறு முத்துப்போன்ற கண்ணீருதிர்த்துக் கொண்டு, ஹே பிரபு,! ஏழைபங்காளா,! சகலசம்பத்துக்களிருந்தும் என்னை ஏழையினும் ஏழையாக வைத்திருக்கின்றாயே!, ஹே கண்மணி! இது உனக்குத் தருமமும் நீதியுமாகுமா? பரந்தாமா? ஏழையாகிய என் மீது நின் கருணை என்று சுரக்கும்? இராஜ சபையிலே பாஞ்சாலியின் மானத்தைக் காத்தவா! திக்கற்று முதலையால் வருந்திய கஜேந்திரன் ஆதிமூலமே என்றழைக்க உயிர்ப்பிச்சையளித்தாயே! வனத்திலே பாண்டவர்கட்காக வந்து ஐவர்களையும் ரக்ஷித்தாய்! அருங்கானத்திலிருந்த அறியாச் சிறுவனுக்கு அந்தர்யாமியாகி அருள்புரிந்தாய்! குன்றினால் மழைதடுத்தாய்! கன்றினால் கனியுதிர்த்தாய்! காளிங்கன் மீது நடித்தாய்! காலிகளை ஓட்டி மகிழ்ந்தாய்! கண்ணா! கண்ணா! நிராபராதியாகிய என் மீது கருணை காட்டாயோ? யதுகுல தீபமே! கோவிந்தா! ஓ கோபாலா! என் மீது நினக்குற்ற கோபம் யாது? கூறாயோ? உலகத்திலுள்ள என்போன்ற பெண் மக்களெல்லாம் மக்களைப் பெற்று மகிழ்ச்சியுடன் வாழ்ந்திருக்க, நான் ஒருத்தி மட்டும் பிள்ளையில்லாக் குறையால் தாழ்ந்திருப்பதியல்பாமோ? நிமிஷமும் நின்னை மறவாத ஏழை, நின்போன்ற மகவைப் பெற்று வாழாமல், ஏக்கமுற்றுத் துன்புறல் அறமாகுமா? என்று வருந்தி பூவுதிர்ந்த கொம்புபோல் பாரில் வீழ்ந்து புலம்பினாள்.

இவ்விதம் நிலைகுலைந்து, நெஞ்சு சுழன்று, செவ்வரிபடர்ந்த நெடியகண்களிலிருந்து வெள்ளருவிநீர் விரைந்து ஓடிவருவதுபோல, குவளைவிழிகளிற் கண்ணீர் வடிய நின்று கொண்டிருக்கும் பூங்கொம்பு போல்வாளாகிய பெண்ணரசியை, கோமளையை, யதுகுமாரியை, தனதுபாரியைப் பாரியானவன் உற்று நோக்கினான். மருண்—நோக்கமைந்த மான்விழியாளாகிய மங்கையின் கண்களினின்று பெருகிவடியும் நீரால், காவலன் கருத்தழிந்தான். மாதே! இம்மாநிலத்தில் நின்னை இகழ்ந்தவர் என்னை இகழ்ந்தவராவார். நினக்குத் தவறிழைத்தோர் யாவரேயாயினும் அவர்கள் எங்கு சென்றொளிப்பினும் இன்றே கொன்றழிப்பேன் என்று வஞ்சினங் கூறினான்.

சிவத்துப்பருத்த மேனியும், முறுக்கி நீண்டு வகிர்ந்த கறுத்த மீசையும், அமைந்த பாரியானவன் இவ்விதக்காரணம் நேர்ந்தது யாராலென வினவுதற்கு வாய்திறந்தான், பின்னும் சற்று யோசித்

# யாதவமித்திரன்

## ஒரு மாதப்பத்திரிகை.

எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்.

| தொகுதி | பிரஜோத்பத்தி௵ பங்குனிமீ | பகுதி |
|---|---|---|
| 3. | 1932௵ மார்ச்சுமீ | 8. |


## கடவுள் வணக்கம்.

பொன்னானைப் பொழிலேழும் காவல்பூண்ட
புகழானை இகழ்வாய தொண்டனேன் நான்
என்னானை என்னானை என்ன லல்லால்
என்னறிவன் ஏழையேன் உலக மேத்தும்
தென்னானை வடவானைக் குடபாலானைக்
குணபால மதயானை இமையோர்க்கு என்றும்
முன்னானைப் பின்னானை வணங்குஞ் சோதி
திருமுழிக் களத்தானை முதலானையே

## வள்ளல் பாரி.

### மங்கையின் சோகமும் மன்னவன் தேற்றலும்.

(140-ம் பக்கத் தொடர்ச்சி.)

திரு: காந்திதாசன்.

தான், இங்குமங்கும் உற்று நோக்கினான், கீழும் மேலும் பார்வையைச் செலுத்தினான். ஊறு விளைப்பார் ஒருவரையுங் காணாது, கண்ணே! என்றான். ஒன்றும் பதிலெழவில்லை, உலகுக்கெல்லாம் சுதந்தரமந்திரமாகிய "ஓம் நமோநாராயணா" என்னும் மந்திரத்தை உச்சரித்தான், தனது பார்வையைச் சுற்றிலும் மற்றொருமுறை செலுத்தினான், எதிரிலிருக்கும் எம்பெருமான் திருவுருவைக் கண்டான், கண்டதுதான் தாமதம் மனது ஸ்மரணையற்றான். சில நிமி

[illegible] தோழிமார் தேற்றத்தெளிந்து, மீண்டும் அம்மாயா விநோதனையே நோக்கினன். "மாயை யாரை விட்டது? ஒருவரையும் மாயைவிடாது. முற்றத்துறந்த முனிவர்களையும் மாயையானது விட்டபாடில்லை என்றால் கேவலம் பிரபஞ்ச வாழ்க்கையி லழுந்தியோர்களை மருட்டி வெருட்டி வாட்ட, மாயையால் இயலாதெனயார் இயம்பமுடியும்?", "கடந்தஞானியும் மறப்பரோ மக்கள்மேல் காதல்" என்னும் பெரியோருரை மனத்திலுதித்தது. ஆகா! குடும்ப விருக்ஷத்திற்குக் குழந்தையல்லவா கொழுங்கனி! கோடிதுன்பங்கள் நேர்ந்தாலும் குழந்தையைக் கண்டால் குறைந்து போகின்றனவென முன்னோருரைத்திருக்கின்றனர். ஏனென்றால் குழந்தை பொறாமை, வஞ்சனை முதலிய பெருங்காற்றில் வருந்துவதில்லை. அதன் முகமும், மனமும் களங்கமற்றவை, அது பொய்யொழுக்கங்களால் தன்னியற்கையை மறைக்க முயலுவதில்லை. தவழ்நடை நடந்தும், மழலைச்சொல் மொழிந்தும், மனம் குழையச் சிரித்தும் ஆனந்த மூட்டுகின்றது. இல்வாழ்பவனுக்கு இம்மைச் செல்வங்களில் மக்கட்பேறு முதன்மையானது. அஃதுள்ளவன் இம்மை மறுமை இரண்டிடத்திலும் இன்பமடைகின்றான். ஏழை முதல் இறைவன் வரையிலும் மக்களின்பம் மாறுபடுவதில்லை, அவ்வின்பம் அனைவருக்கும் ஒரு தன்மையாகவே யமைந்திருக்கின்றது. "காக்கைக்கும் தன் குஞ்சு பொன்குஞ்சு", குபேரன் அரண்மனைபோல் செல்வத்திற் குறைவற்றிருந்தாலும், குழந்தையில்லாத வீடு கொச்சையானது. எல்லாச் சாஸ்திரங்களும் குழந்தையைக் கொண்டாடுகின்றன. நாற்புறமும் விழுதுகள் வளர்ந்து வேரூன்றி முதல் மரத்தைத் தாங்குவதுபோல் தளர்பருவத்தில் தாய்தந்தைகளைத் தனயர் தாங்கிநிற்கின்றனர். அறுபதினாயிரம் ஆண்டு அரசுபுரிந்த தசரதன் கூட "நின்னையே மகனாகப்பெறப் பெறுவேன் எழ்பிறப்பும் நெடுந்தோள் வேந்தே" என்று கூறியதாக ஆழ்வார் அருளிச் செய்கின்றார். அஃதுணர்ந்தே நமது ஆருயிர்த் துணைவியும் அண்ணல் கண்ணனைப் போன்ற மகவுபெறக் கண்ணன் திருவருளை நாடிநிற்கின்றாள். என்பதை யுணர்ந்து கொண்டானென்றாலும், விஷயத்தையறிய வினவினன். தனது இன்னுயிர்ச் செல்வியின் இனிய முகத்தை மீண்டும் ஒருமுறை பார்த்தான். கண்ணருவி முடிக்கொண்டிருப்பதைக் கண்டு தாழாது தனது உத்தரீயத்தினால் துடைத்து, காதலி! இவ்விதத் தீங்கு விளைவித்தவர் யார்? யாராயிருந்தாலுஞ்சரி தெரிவித்



தால் இப்பொழுதே என் வாளுக்கிரையாக்குகின்றேன். இ[illegible] உலகத்தில் எங்கு சென்றாலும் விடேன். அவர் மாயாய்ப் பறந்தாலும் இருதுண்டாகவெட்டி இந்த க்ஷணமே எமனுலகனுப்பி விடுகின்றேன். என்று தனது அழகிய இடக்கரத்தால் அணைத்து வலக்கரத்தால் முகத்தைத் திருத்தி உள்ளதை உரைப்பாயென உசாவினன். நாயகி! சிறிதுந் தாமதிக்காது செப்புவாயென அமிர்த வசனங்களால் கேட்டான். இவ்வமிர்த வசனங்களைக் கேட்ட கோமகள் மன்னவன் மனநிலையை யறிந்து கொண்டாள். தன் கருத்தை முடிக்குங்காலம் வந்துற்றதென்று கருதினள், களிப்புற்றாள், கண்ணன் திருவுருவினில் ஒருமுறை கண்ணைச் செலுத்தினள். மழலைமொழிகுழறும் தனதழகிய வாய் திறந்து குயில்போல் கூறலுற்றாள்.

(தொடரும்)

# நமது சமூக இளைஞர்களுக்கு ஓர் வேண்டுகோள்.

திரு. S. நாராயணக்கோன்.

சகோதரர்களே!

நாம் நமது சமூகத்தின் எதிர்கால வாழ்க்கையைச் சீர்திருத்தும் பொருட்டு, இனி நாம் சிற்சில ஆராய்ச்சிகளில் புகுவது அவசியம் எனத்தோன்றுகிறது. தற்காலம் உலகம் போய்க்கொண்டிருக்கும் வேகத்தில் நமது சமூகச்சிறுவர்களின் எதிர்கால வாழ்க்கையை இனிமேலும் பலப்படுத்தாதிருந்தால் விளக்கைப் பிடித்துக் கிணற்றில் விழுந்த தன்மையாய்விடும். மிக்க மேம்பாடுற்ற நமது சமூகமானது தற்சமயம் அடைந்திருக்கும் சீர்கேட்டை நோக்கினால் மிகவும் பரிதாபகரமானதாய் இருக்கிறது. இவைகளைத் தெரிந்து நமது சமூகத்தலைவர்கள் எத்தனையோ வழிகளில் சமூகத் தொண்டாற்ற முன் வந்திருப்பது போற்றத்தக்கதே. அவர்களுடைய முயற்சி பயனளிக்குமாறு எல்லாம் வல்ல இறைவனை வழுத்துவோமாக.

நாளுக்குநாள் நமது தலைவர்களுடைய கோரிக்கைகள் பலப்பட்டு வருகின்றதாயினும் நமது சமூகம் தன்னிடத்திலுள்ள

குருட்டு நம்பிக்கைகளும், மூடப்பழக்க வழக்கங்களும் நீங்கி உலக நாகரிகக்கல்வி ஓங்கி ஒளிவீசக் காணவில்லை. நமது பழய பாடங்களும், பயனில்லாச் செலவுகளும் நீங்கினபாடில்லை.

சகோதரர்களே!

நமது அறிவெனப்பட்ட சுடரினால், குறைவான, அநாகரிகமான, பிரயோஜனமற்ற வீண்செலவுள்ள தொழில்களையும் மூட நம்பிக்கைகளையும் கொளுத்த மாட்டாமல் தயங்குகிறோம்.

எதனாலென்றால், நமது இளைஞர்களின் கிளர்ச்சியானது உணர்ச்சி ததும்பியிருந்தபோதிலும், வெளிப்போந்து விரைவில் முடிக்கும் வேலையைக் கைப்பற்றி, செய்கையில் காட்டமுன் வாராததினாலேயே. உணர்ச்சியுள்ள இளைஞர்கள் ஊக்கங்கொண்டு சமூகத் தொண்டேற்று முன் வருவார்களாயின் நமது சமூகத்திலுள்ள அஞ்ஞானத்துறைகள் அடியோடு அழியும் என்பதில் ஐயமில்லை. வாலிபர்களாலே இவ்வுலகம் வெற்றிபெற்று வருகின்றன. ஜெயம் பெறும் வீரனொருவனை நல்ல சமயத்தில் யுத்தகளத்திற்கனுப்பாமல் சிறைவாசப்படுத்தினால் எப்படி வெற்றிபெற முடியும்?

அஞ்சா நெஞ்சம் படைத்த இளைஞர்களே! இது சமயத்தில் நமது சமூக முன்னேற்றத்திற்குத் தொண்டுபுரிய நீங்கள் வெளிவரவில்லையாயின், நமது சமூகத்தின் எதிர்கால வாழ்க்கை மிகுந்த சீர்கேடடையும் அன்றோ? நமது சமூக முன்னேற்றத்திற்கு முக்கிய தேவை இளைஞர்களே. உங்களின் அரிய, பெரிய முயற்சியில்லையாயின் எந்தக் காரியமும் நடைபெறமாட்டாது. உங்களுக்கிருக்கும் அறிவும், ஆற்றலும் போற்றற்கரியது. ஊக்கமும் உணர்ச்சியும், உயரிய நலமே. பேசும் திறமையும் பெருமையும், பெறுவது நீங்கள்தான். மக்களுடைய மனதினில் பக்குவமான செயல்களை அப்பப்போது புத்துணர்ச்சிகொள்ள, புதுப்புதுச் செயல்களை அறிவிப்பதும், அதனாலடையும் நன்மைகளைச் சமயங்கண்டு தெரிவிப்பதும் உங்களாலேதான் முடியும்.

சகோதரர்களே! இனியாவது எக்காரணத்தை முன்னிட்டும் பின்வாங்காது நமது சமூகமுன்னேற்றத்திற்கு வேண்டித் தொண்டுபுரிய முன் வரும்படி உங்களைப் பன்முறையும் வேண்டுகிறேன்.



முதலாவது நமது சமூகத்திலுள்ள அஞ்ஞானத்துறைகளை அடியோடு தொலைய வழி தேடவேண்டும். அது தொலைதற்குக் கல்விதான் கருவியாகவேண்டும். கல்வி பயிலவேண்டிய வழிகளில் ஒவ்வொருவரும் சடினசிரத்தை எடுத்துக்கொள்ளுகிறார்கள். ஆயினும், பொருள் வருவாயும், போதிய செல்வாக்கும் இல்லையே என்று விழிக்கிறார்கள். அது சரியே, எத்தொழிலும் பொருள் கொண்டு தான்முடிய வேண்டியதாயிருக்கிறது.

சகோதரர்களே!

கல்வித்துறை ஓங்கி அஞ்ஞானத்துறை அமிழ்ந்து விளங்குவதற்குப் பொருளே சிறந்த சாதனமாகும் என்பது யாவரும் அறிந்ததே ஆகையால் நாம் இனிச் செய்யவேண்டியதென்ன என்று ஆராய்வோம்.

நமது தமிழ் நாட்டில் அதிலும் முக்கியமாகத் திருநெல்வேலி, தென் திருவிதாங்கூர் முதலிய இடங்களில் ஒரு உபயோகமற்ற, காரணமற்ற பொருட்செலவுகள் நடந்து வருகின்றன. வருடந்தோறும் நான்பார்த்தவளவில் திருநெல்வேலி ஜில்லாவில் நடக்கும், காளி, மாடன் முதலிய சிறு தெய்வங்களின் விஷயமாக லட்சக்கணக்கான பொருள்கள் விரையமாகின்றன. இந்த அனாவசியமான பொருட்செலவுகளைச்செய்ய அறிவுள்ள எந்த மக்களும் சம்மதிக்கமாட்டார்கள். ஆயினும் அது பழமையான காரியம், அதை நிறுத்தினால் சாமி அப்படிச் செய்வார், இப்படிச் செய்வார் எனப் பழயபாடம் ஓதி வரி யெழுதுவது வரிசையாக நடந்து வருகிறது. வரி கொடுக்க வழியில்லா ஏழைச்சனங்களை, பாத்திரம், பண்டம் முதலியவற்றைத் தூக்கியும், கடுமொழிபேசியும் துன்புறுத்துவது பிரசித்தம். அந்தோ! இதற்குக் கூடுங்கூட்டங்களும், மூஸ்தீபும், ஆத்திரமும், பரபரப்பும் சொல்லவேண்டியதில்லை. கொடை கொடுத்த மூன்றாம் நாள் சுடுகாட்டு வாடையும், இரத்த வீச்சும் தவிர அந்த இடங்களில் வேறு என்ன காணமுடிகின்றது. பேயாட்டம் பார்த்தவன் பேயாடப்பழகிவிடுகிறான். மனிதனாய்ப் பிறந்தவன் பேயாய் நின்றாடவும் துணிவது ஆச்சரியமே. மனித வுருவிலே, பேயுருவகித்து ஆடுபவர்கள் மனித சுபாவமாறிப் பேய்க்குள்ள சுபாவம் பெறுவது நிச்சயம்.

பேயாட்டத்தைப்பார்க்க நமது நாட்டில் இவ்வளவு பெரும் பொருள் வீணாகுவதைக்காண நமக்கு மிகுந்த ஆத்திரம் ஏற்படு

இறந்த தொன்மையில் நமது தகப்பன், பாட்டன் முதலியவர்கள் மதுபானம் செய்தாலும், விபசாரம் செய்தாலும், நாமும் அந்தப் பழக்க வழக்கத்தை விடக்கூடாமல் நடத்தித்தான் வரவேண்டுமென்று எந்த அறிவுள்ளவனாவது புகல்வானோ?

பள்ளிக்கூட கட்டடப்பணம் இல்லை, மற்ற சமூக நலன்களுக்கு வேண்டிய பொருளில்லை என்று சொல்வார்கள். கொடை கொடுக்கவும், கூத்துப்போடவும் பணம் சேகரிப்பதும் நடத்துவதும் காண, எருக்குமாறு செய்வோம் என்னும் இறும்பூப் புத்தி வகித்தவராவரன்றோ! சகோதரர்களே! மாடு ஆட்டுக் கடா மாறுப்பத்திரியும் கூறு கெட்ட கூட்டத்தீர்! நாடு கொடை கொடுக்க முன் வாராதீர்கள். அது அறிவுள்ள யாதவமக்களின் செய்கையல்ல. அது தெய்வ வழிபாடும் ஆகாது. பொருளாதாரத் துறைகளுக்கேற்றதும் அல்ல. புத்தி விசாலிக்கும் என்பதுமல்ல. அறிவற்றுச் செயலற்று நலமற்று புலமற்று நின்றிடும் ஆட்டமும் பாட்டமும் அன்றி அங்குவேறு என்ன காண இடம் இருக்கிறது!

இளைஞர்களே! நீங்கள் இவ்விஷயத்தை உஸாராமலில்லை ஆகையால் உணர்ச்சி கொண்டவர்களாய் மாறி உலகமறிய இச்சிறு தெய்வ வழிபாடு நீக்கினோம்! நீக்கினோம்!! என்னும் கூற்று எங்கும் கேட்கச் செய்வீர்களென்று நம்புகிறேன். அது உங்களால் முடியுமன்றி வேறு பிரயத்தனத்தால் நடவாது. வாலிப உலகமே சாலச் சிறந்தது. வயோதிகப்பழங்களின் வார்த்தைக்கு இடங்கொடுக்காதீர்கள். பேய்க்கூட்டங்களின் வார்த்தைக்கு இடங்கொடுக்காதீர்கள். நாம், பேயடிமைப் பார்த்திருந்த நாள் போதுமானது.

உலகம் போய்க்கொண்டிருக்கும் வேகத்தில் நாம் பின்னடைவது சரியல்ல. ஒவ்வொரு கிராமங்களிலும் பேய்க் கிடும்பணத்தைப் பிடுங்கி நமது இளைஞர்களின் எதிர்கால வசதியைச் சீர்திருத்துவோம். அங்கங்குள்ள வாலிபர்கள் அங்கங்கு நடக்கும் பேய்க் கொடைகள் நடக்கவிடாதபடி அதற்கு வேண்டிய முயற்சியோடு, சாத்வீகமாயும், சாமர்த்தியமாயும் பொது ஜனங்களின் மனதில் படியப் பிரசாரம் செய்துவரும்படி வேண்டுகிறேன்.

செங்கோட்டை மகாநாட்டில் ஜீவகாருண்யத்தின் பொருட்டு, மிருக பலியிட்டுக் கடவுளை வணங்கப் புரிவதை விலக்குவதாக 15-வது தீர்மானம் நடந்தேறி எழுத்திலிருக்கிறது. செயலிலொன்றும் காணவில்லை. ஆகையால் நமது கருத்துக்களைச் செயலினால் நடத்த முன்வரும்படி வாலிப மக்களாகிய உங்களை வேண்டுகிறேன்.



நமது திருநெல்வேலியில் இதற்கென ஒரு கமிட்டி [illegible] சாலச்சிறந்தது. ஏனென்றால் இந்த ஜில்லாவில் பேய்வாழாத இல்லொன்றிருக்கிறதாக நினைக்கமுடியாது வீடுகளிலும் பேய், தொழுக்களிலும் பேய், சந்தை, புந்தைகளிலும் பேய், வாழ்கின்றதால்தான் திருநெல்வேலிஜில்லா வாசியான திரு. சக்கரபாணி நம்பியார் பி. ஏ., பி. எல். அவர்கள் செங்கோட்டை மகாநாடு 15-வது தீர்மானத்தைப் பிரேரேபித்தார்கள் போலும். இனியும் அவர்களே, பேய்விலக்கும் கமிட்டியை ஆதரிப்பார்கள் என நம்புகிறேன்.

அன்பு மிக்க சகோதரர்களே! வாலிபர்களே!! நமது அரும் பெரும் சமூகம். தற்காலத்தில் அஞ்ஞானத்துறைகளிலமிழ்ந்து, குருட்டு நம்பிக்கையோடு சிறு தெய்வ வழிபாட்டில் சிறந்ததாய்க் காணப்படுகிறது. சிறு தெய்வ வழிபாட்டினால் சீருண்டா, சிறப்புண்டா, பேருண்டா, பெருமையுண்டா, என்றால் அவைகளில் ஒன்றுமில்லை. பேயாடின வீடு பிணமாடிப்போம் என்ற பழமொழியும், பேய்க்கிடுபவன் நோய்க்கிடுவான் என்ற முதுமொழியும் இவர்கள் அறியார். பெரும் அறிவுள்ள எந்த ஆண் மகனும் இக்கொடிய வழக்கத்தைக் கையாளமாட்டான். ஏதேனும் ஆகமங்களில் இந்த அனாசரிகமான முறையோடு கடவுள் வழிபாடு செய்யச் சொல்லுகின்றதா என்று பார்த்தால் அவ்வாறு இல்லை. பின் ஏதனால் நடந்து வருகிறது. முன்னோர்களுடைய வழக்கத்தை விடக்கூடாதெனப் புகல்கிறார்கள். அந்தோ இதென்ன மதி! பேய்க்கிடும் பணத்தில் பேர்பாதியைக் கல்விக்காக அளித்தால் நமது ஜில்லாவில் எத்தனை கலாசாலைகள் கட்டலாம். எவ்வளவு மக்களின் கண்களைத் திறக்கலாம். இதனால் எவ்வளவு உயர்வான பதவியை நமது யாதவ சமூகம் அடையும் என்பதைச் சற்று ஆய்ந்து பாருங்கள்.

நூறு யாதவ மக்கள் வசிக்கின்ற கிராமத்தில் காளிகோவில் கொடைக்கு 2 ரூ நபர் ஒன்றுக்கு வரியும், சாமிகோவில் கொடைக்கு 2 ரூ வரியும் போட்டு வருடந்தோறும் வசூலாகின்றன. ஆக ஒரு வருடத்தில் ஒரு கிராமத்தில் 400 ரூ வசூலாகின்றன.

இந்த நானூறு ரூபாயும் எந்த மக்களின் முன்னேற்றத்திற்குச் செலவழிக்கிறார்கள்? தெரியவில்லை. ஆனால் பேய்க்கூட்டங்களுக்குச் செலவழிக்கவில்லையானால் பிள்ளை, குட்டி, ஆடு, மாடுகளைப் பேய் வந்து தூக்கிப் போய்விடுமோவென்ற பயத்தால் பிள்ளை, குட்டி,

மாடு, ஆடுகள் ஜீவிக்கவேண்டி, அவ்விதம் செய்யலாம். சகோதரர்களே! ஆளைத்தூக்க ஆள் மாதிரிதான் வரவேண்டும். மாட்டைத் தூக்க மாடுமாதிரிதான் வரவேண்டும். அப்படியானால் நம்மை ஆள்கின்ற காருண்ய சக்கரவர்த்தியவர்களின் பிரங்கி வந்து பேய்க்கூட்டங்களைச் சுட்டு விடலாகுமெனச் சொல்லுங்கள். அல்லது பக்தியோடு எந்தத் தெய்வமாயினும் கடவுள் வழிபாடு செய்கிறோமென்றால் வரி பிரித்து மிருகப் பலியிட்டுப் பேயாடிக் கடவுளை வணங்குவதை விடுத்து, நமது குலப்பெருமானாகிய ஸ்ரீ கண்ணபிரான் திருக்கோயிலுக்கழைத்துச் செல்லுங்கள். அங்குள்ள தனிமுதற் பொருளின் தன்மையை எடுத்துரையுங்கள். இதுதான் கடவுள் வழிபாடென அவர்களுக்கு அறிவியுங்கள்.

அதன் பின்பு காலித்தனமான பேய்க்கிடும் பணத்தைப்பிடுங்கி, அறிவுள்ள கல்வித்துறைக்கு இட வழிதேடுவோம்.

---

# அனுமன் ஆற்றல்.

திரு. தொ. மு. பாஸ்கரத்தொண்டைமான். பி. ஏ.

---

உலகம் போற்றும் உயரிய இராமகாதையில் பாட்டுடைத் தலைவராய் விளங்கும் வீரர் பலருளர். அறத்தின் வழி நின்ற ஆரியர் கோனும் இராமனும், "தன்னரிய பெருநீதித்தனியாறு புகமண்டும் பள்ளம் எனுந்தகை"யான பரதனும் ஆரியர் உலகத்தை அழகு செய்ய, ஆற்றல்சால் அனுமனும் வலியுடைய வாலியும், அருந்தவமும் அளவில் ஆற்றலும் பொருந்திய அரக்கர்கோனும் தமிழகத்தை அழகு செய்வாராயினர். இவர்களில் இங்கு நம் கவனத்தைக் கவர்ந்தவர் அனுமனே. அனுமனையும் அவனது ஆற்றலையும் பிரித்தெண்ணுவது இயலாத காரியம். அனுமனது ஆற்றலை, கவியரசர் கம்பர் பெருமான் தனது கவியாற்றலால் புனைந்துரைக்குமிடங்கள் பலவுள.



அனுமன் பகையிலங்கையில் புகுந்து, சீதாபிராட்டியாரைப் பலவிடத்தும் தேடித்திரிந்து, இராவணன் துயிலும் இராஜ மாளிகையுட் புகுந்தான். அயர்ந்து துயில்கொள்ளும் அரக்கர்கோனைக் கண்ணுற்றான். அப்பொழுது அவன் உள்ளத்தில் எழுந்த உணர்ச்சியைக் கம்பர்,

"தோளாற்றல் என்னாகும், மேல் நிற்கும் சொல் என்னாம்,
வாளாற்று கண்ணாளை வஞ்சித்தான் மணிமுடியென்
தாளாற்ற லாலிடித்துத் தலைபத்தும் தகர்த்தே யென்
ஆளாற்றல் காட்டேனேல் அடியேனாய் முடியேனே"

என்று கூறுகின்றார். இவ்விடத்து அனுமனது தோளாற்றல், தாளாற்றல், ஆளாற்றல் எல்லாம் கவியரசர் கவியாற்றலால் மாண்புடையதாயிற்று. இன்னும் இவ்வுலகில் மஞ்சுதோய உயர்ந்த மலையையும் ஆழ்ந்து அகன்ற ஆழியையுமே பெருமை சான்ற பொருள்களாகப் புலவர் பலரும் எடுத்துரைத்துள்ளார்கள். மலையசைத்த மன்னனாய் விளங்கிய பெருமை அரக்கர் கோனுக்கு உரியதாக, கடல்கடைந்த பெருமை வானரவீரனும் வாலிக்கு உரியதாயிற்று. ஆனால் நம்மனுமனோ, தன்னுடைய ஆற்றலால் இம்மலையையே பெயர்த்து எடுக்கவும், இக்கடலையே கடக்கவும் வலிபெற்றிருந்தானென்றால் அவனது ஆற்றலை யாரே கணிக்க வல்லார். அனுமனையும் அவனது போற்றலையும் அறியாதார் 'அறியாதார்' என்றே கூற வேண்டும்.

கடல்கடந்து வந்து தன்னைக் கண்ட அனுமனை நோக்கிய
கற்பினுக்கரசி,

"இடந்தாயுலகை மலையோடும் எடுத்தாய்
விசும்பை இவை சுமக்கும்
படந்தாளரவை ஒருகரத்தாற் பறித்தாய்
எனினும் பயனின்றால்
கடந்தாய் இடையே என்றாலும்
நாணும் நினக்கு ஈனிர்க்கடலைக்
கடந்தாய் என்றால் என்னாகும்
காற்றும் அன்ன கடுமையாய்"

என்று விதந்து கூறிய தன்மை அனுமனது அளவில் ஆற்றலை இனிது விளக்கப் போதிய சான்றாகும். இன்னும் "பாழி நெடுந்தோள் வீர! நின்பெருமைக்கேற்ப, பகையிலங்கை ஏழுகடற்கு அப்

புறத்ததாகாது இருந்தது. அவ்விலங்கைக்கே ஒரு பெரிய இழிவாகும்'' என்று சீதை கூறுவதில், அப்பிராட்டி அநுமனது ஆற்றலை எவ்வாறு உணர்ந்திருக்கின்றாள் என்பது போதரும். கடல் கடந்த அநுமன் பின்னர் மலையசைக்கப் புறப்பட்டான். இலங்கை நகரினின்றும் பல்லாயிரம் யோசனைக்கு அப்பாலுள்ள மருத்துமாமலையை அடியொடு பெயர்த்து எடுத்து வந்து தன் தலைவனை இராமனையும் அவனைச் சேர்ந்தோர்களையும் வாழ்வித்த வுள்ளலாம் அநுமனது பெருமை அளவிடற்கரியதாகும். இவன் இலங்கை நகரினின்றும் அம்மலைமீது தாவிய காட்சியும் அம்மலையை அடியோடு பெயர்த்து எடுத்து அதனைத் தன் ஒருகையில் தாங்கி அதனுடன் அமர்க்களத்திடை குதித்த அநுமனது ஆற்றலையும்,

> ''ஆயிரம் யோசனை அகல மீதுயர்ந்து
> ஆயிரம் யோசனை ஆழ்ந்தது அம்மலை
> ஏயெனும் மாத்திரத்து ஒரு கை யேந்தினன்
> தாயினன் உலகெலாம் தவழ்ந்த சீர்த்தியான்''

என்று கவிஞர் கோமகன் அழகுற எடுத்துரைக்கின்றார். இவன் மருத்து மாமலையைப் பெயர்த்து எடுத்து வந்த பான்மையைக் கேட்ட அரக்கர் அவனைத் தேவர் மூவரோடும் ஒப்பவைத்து எண்ணி அஞ்சுவாராயினர்.

> ''முறை கெட வேண்டின்
> முன்பு நினைந்ததே முடிப்பன் முன் பின்
> குறைவிலாக் குணங்கட்கு
> ஆங்கோர் கோதிலர் வேதங் கூறும்
> இறைவர்கள் மூவரென்பது
> எண்ணிலார் எண்ணமே தான்
> அறைகழல் அநுமனோடு
> நால்வரே முதல்வர் அம்மா''

என்று பகைவரும் போற்றும் பான்மை வாய்ந்தவன் நம்மநுமன் என்பது போற்றத்தக்கதாகும். அநுமன் கருங்கடல் கடந்தது மட்டுமன்று, நகர்க்காவலாகிய பெருங்கடல் கடந்ததும், ஆடகத்தருவின் சோலையைப்பொடிபடுத்து அரக்கர் காக்கும் தேடரும் ஓமம் வாங்கியதும், அரக்கரில் வலியுடையரான சம்புமாலி அக்ஷய குமாரன் முதலியோர் முடித்தலை துமித்ததும் இலங்கா நகரையே எரியூட்டியதும் அவனுடைய மெய்யாற்றலுக்கு அளவிறந்த சான்றுகளன்றோ. இலங்கைநகரில் பல்லாயிரக்கணக்கான சேனையை அநுமன் தனிநின்று கொன்று முடித்ததை யுன்னில் யாரே அவனது ஆற்றலுக்கு அளவுரைக்க வல்லார்! அநுமன் முன்னே, அவ்வரக்கர் சேனை பட்டபாட்டை



> ''சூடுபட்டது கொடிநகர் ஆடு புலி துறந்த
> ஆடு பட்டதே பட்டனர் அநுமனால் அரக்கர்''

என்று விபீஷணன் அழகாக எடுத்துரைக்கின்றான்.

இத்தகைய ஆற்றல் வாய்ந்த அநுமனிடம் வானர வேந்தனும் சுக்ரீவனும், ஆரியர்கோனும் இராமனும் அளவிலா நம்பிக்கை கொண்டுளார்கள், என்பதை,

> ''கண்டு வருமென்றிருக்கும் காகுத்தன்
> கவிகுலக்கோன் கொண்டு வருமென்றிருக்கும்''

என்று கவிஞர் கூறும் மாற்றத்தில் நன்கு அறியலாகும். அநுமனது ஆற்றலை யுணர்ந்த இராமன்,

> ''அழியுங்கால் தரும் உதவி ஐயனே
> மொழியுங் கால் தரும் உயிரின் முற்றுமே
> பழியுங் காத்து அரும் பகையும் காத்து எமை
> வழியுங் காத்தனை மறையுங் காத்தனை''

என்று அவன் செய்த நன்றியை மறவாது நயம்பட எடுத்துரைக்கின்றான். இன்னும் மேகநாதன் மாயாசீதையைக் கொன்று, தம்மை மயக்கி, பின் நிகும்பலையில் வேள்வி செய்ய முயன்றான் என்பதை அறிந்த இராமன் ஐயம் தீர்ந்து

> ''தீர்வது பொருளோ துன்பம் நீயுண்டு தெய்வமுண்டு
> மாருதியுண்டு, நாம் செய் தவமுண்டு மறையுமுண்டு''

என்று மாருதியும் மறைப்பொருளும் உள்ளவரை தனக்கு ஒரு தீங்கும் வராது என்று கூறும் மாற்றமே அநுமனது அளவில் ஆற்றலை இராமன் இனிதுணர்ந்த தன்மையை அழகுற எடுத்துக் காட்டும்.

ஆற்றல் மிகுந்தவன் அநுமன் என்பதே மக்களின் பொதுக் கருத்தாகும். ஆனால் அவன் ஆற்றலை நினைவுகூருவார் எல்லாம் அவனது மெய்யாற்றலையே போற்றுவாராயினர். என்றாலும் கவியரசர் கம்பர் பெருமான் அத்துடனமையாமல் அவனது சொல்லாற்றலையும் செயலாற்றலையும் பலவிடத்தும் விளக்கிக் காட்டுகின்றார். முதன் முதல் இராமனும் இலக்குவனும் அநுமனைப் பார்த்தபொழுது இராமன் இளையோனிடத்து,

இல்லாத உலகத் தெங்கும் இங்கிவனிசைகள் கூறக்
கல்லாத கலையும் வேதக் கடலுமே யென்னுங் காட்சி
சொல்லாலே தோன்றிற்றன்றோ யார்கொல் இச் சொல்லின் செல்வன்
வில்லார் தோள் இளைய வீர! விரிஞ்சனோ விடை வல்லானோ!

என்று கேட்கும் வாயிலாக நம்மனுமனுக்கு "சோல்லின் சேல்வன்" என்ற திருப்பெயர் சூட்டுகின்றார். அனுமன்றன் சொல்லின் செல்வத்தை யாவரும் அள்ளிப் பருக ஒரு சில சான்றுகள் தரவிழைகின்றோம். அசோக வனத்துத் தலைவனைப் பிரிந்து நிற்கும் தலைவியாம் சீதை தன் நாயகனது நலமறிய விரும்பி அனுமனிடத்து அவன் நலம் என்னே யென வினவுகின்றாள். அதற்கு அனுமன், அவன் சுகமே உயிருடன் இருக்கின்றான் என்று சொல்லி அவன் இதுவரை உயிரை விடா திருப்பதற்குக் காரணமும் சொல்லுகின்றான். "ஈண்டு நீயிருந்தாய் ஆண்டு அங்கு எவ்வுயிர் விடும் இராமன்" உயிராகிய சீதை இவ்விடத்திருக்கும் பொழுது அவ்விடத்து அவன் எந்த உயிரை விட்டிடுவன் என்று கூறுந்திறன் போற்றுதற்குரியதாகும். இதே அனுமன் இலங்கையிலிருந்து கடலைக் கடந்து இராமனை அணுகி, சீதையின் நிலை உரைக்கும்போது,

"கண்ணினுமுளை நீ தையல் கருத்தினுமுளை நீ வாயின்
எண்ணினுமுளை நீ கொங்கை இணைக்குவை தன்னின்றெவ்வாது
அண்ணல் வெங்காமன் எய்த அலர் அன்பு துளைத்த ஆறாப்
புண்ணினுமுளை நீ நின்னைப் பிரிந்தமை பொருந்திற்றோமோ"

என்று கூறுஞ் சொற்களும் அனுமனது சொல்லின் செல்வத்தைப் பெரிதும் விளக்குகின்றதன்றோ. பிரிந்தவரைக் கூட்டிவைக்கும் ஆற்றல் மிகுந்த அனுமன் அவரவர்க்கு ஏற்பப்பேசி, அவர்களது கருத்திற்கிசையச் சொற்களைக் கூறுவதாய் அமைத்திருக்கும் கம்பர் கவி நலம் நாம் கண்டு மகிழ்வதற்குரியதாகும்.

நிற்க.

இன்னும் அனுமன் இந்திரசித்தன் பாசத்தால் கட்டுண்டு அமரர் தம் புகழ்விழுங்கிய அரக்கர்கோன் முன்பு நிறுத்தப்படுகின்றான். அவன் இவனை நோக்கி நீ யாவன் என்று வினவுகின்றான். இவன் அவனுக்குப் பதிலிறுக்கும் மாற்றமாய் "அல்லியங்கமலமேயனைய வில்லிதன் தூதன் யான்" என்று கூறியதோடமையாது.

"அன்னவர்க் கடிமை செய்வேன் நாமமும் அனுமன் என்பேன்
நன்னுதல் தன்னைத் தேடி நாற்பெருந்திசையின் போந்த



மன்னரிற் றென்பால் வந்ததானைக்கும் மன்னன் வாலி
தன் மகன், அவன்றன் தூதன், வந்தனன் தனியேன்"

என்று முடித்தான். இவ்விடத்து, அனுமன் இராவண! உனது வலி எவ்வளவினது என்பது தெரியும். வாலியென்றொருவன் வானரத் தலைவனாயிருந்தான் என்பது உனக்குத் தெரியும். அவனிடத்து—இல்லை- அவன் வாலினிடத்து நீ பட்டபாடு எனக்குத் தெரியும். அந்த வாலியின் மைந்தனும் அங்கதன் தூதுவனாய் நான் இவ்விடம் போந்தேன் என்று கூறுவது இராவணனைத்தான் எவ்வளவு எளனமாய்க் கருதியிருக்கின்றான் என்று காட்டவேயாகும். வாலியைப் பற்றி அனுமன் அரக்கர்கோனுக்கு ஞாபகமூட்டியதும் இராவணன். "வாலி சேய்விடுத்த தூத! வன்றிறலாய வாலி வஞ்சியன் கொல் அரசின் வாழ்க்கை நன்று கொல்" என்னலோடும் நாயகன் தூதன் நக்கான். அனுமனும் உடனே, "அஞ்சலை அரக்க! பார்விட்டந்தரம் அடைந்தானன்றே. வெஞ்சின வாலி மீளான் அவன் வாலும் போய் விளிந்த தன்றே என்று கூறி மறுபடியும் நகைத்தான். "அஞ்சலை அரக்க தன்றே என்று கூறி மறுபடியும் நகைத்தான். "அஞ்சலை அரக்க வெஞ்சின வாலி மீளான்; அவன் வாலும் போய் விளிந்தது" என்று எள்ளி நகையாடி, நிறைபடிர் கோல வாலின் நித்ததைக் எண்ணுந்தோறும் பறையடிக்கின்ற அந்தப் பயத்தை "இராவணனுக்குத் தீர்க்கும் மாற்றமாய்ச் சொல்லும் சொல்லின் செல்வம் யாவரும் பருக அமைந்த ஒரு பொருளாகும். இம்மட்டன்று இவன் இலங்கையினின்றும் திரும்பி இராமபிரானை அணுகி, சீதையைக் கண்டேன் என்று சொல்வதற்குப் பதிலாக,

"விற்பெருந்தடந் தோள்வீர! வீங்குநீர் இலங்கை வெற்பில்
நற்பெருந் தவத்தளாய நங்கையைக் கண்டேனல்லேன்
இற்பிறப்பென்ப தொன்றும் இரும்பொறை யென்ப தொன்றும்
கற்பெனும் பெயரதொன்றும் களிநடம் புரியக் கண்டேன்"

என்று கூறுகின்றான். தலைவியின் நிலையையும், நிறையையும் அறியாது அலமந்து நிற்கும் ஒரு தலைவனிடம், இவ்விதம் அழகாகத் தலைவியின் நிலையைத் தூதுவன் ஒருவன் கூறுவானேயானால் அது எவ்வளவு மாட்சியுடையதாகும்.

இனி, அவன் சொல்லாற்றல் மிகுந்தவனாய் மட்டும் அமையாமல் சேயலாற்றல் மிகுந்தவனாயும் அமைந்து விளங்குகின்றான்.

(தொடரும்)

# சமுதாயக் கிளர்ச்சிகள்.

## தேரிருவேலி யாதவ வாலிப சங்கம்.

நாளது பிரஜோத்பத்தி ௵ பங்குனிமீ 10௳ செவ்வாய்க் கிழமை மாலை 6-மணிக்குப் பூசேரி கிராமம் திருவாளர் அ. மு. வேணுநாதக்கோனர் தலைமையின் கீழ் ராமசுவாமி மண்டபத்தில் ஒரு பொதுக்கூட்டம் கூடியது. அவ்வமயம் திருவாளர் அ. மு. வேணுநாதக்கோன் அவர்களை உபதலைவராகவும் அணிகுருந்தன் கருப்பையா கோனர் அவர்களை உபகாரியதரிசியாகவும் தெரிந்தெடுக்கப்பட்டபின் இச்சங்க காரியதரிசி நா. முனியஸாமிக்கோன் அவர்கள் சங்கமுன்னேற்றம் என்னும் விஷயம் பற்றியும் திருவாளர் அ. மு. வேணுநாதக்கோன் அவர்கள் கல்வி என்னும் விஷயம் பற்றியும் பேசியபின் உபகாரியதரிசி கருப்பையாக் கோன் அவர்களால் சபையோர்களுக்கு வந்தனோபசாரம் கூறிச் சந்தனம் புஷ்பம் வழங்கப்பட்டுக் கூட்டம் இனிது கலைந்தது.

நா. முனியஸாமிக்கோன்,
காரியதரிசி.

## இரவு இலவச பாடசாலையின் நிதிக்காகவும்,
### உபகாரச் சம்பள நிதிக்காகவும் ஓர் நாடகம்.

சென்னை ஜார்ஜ் டவுன் யாதவ வாலிப சங்கத்தார், சென்ற பிப்ரவரிமீ 20௳ சனிக்கிழமை இரவு 9 மணிக்கு, திருவாளர் டி. எஸ். ராமசாமி ஐயர் பி. ஏ., பி. எல்., எப். எல். சி. நகரபரிபாலன சபைத்தலைவர் அவர்கள் ஆதரவிலும், முன்னிலையிலும் "சீதா கல்யாணம்" என்னும் நாடகத்தைத் தமிழில் விக்டோரியா பப்ளிக் ஹாலில் அதி விமரிசையுடன் நடத்தினார்கள். யாதவ மக்கள் நூற்றுக் கணக்காகக் குழுமியிருந்தனர்.

தசரதராகவும், நாரதராகவும் நடித்த திரு. ஆர். எம். சுப்புகிருஷ்ணப்பிள்ளை, விஸ்வாமித்திரர் ராமனைக் காட்டுக்கு அனுப்பும்படி கேட்டபொழுது, தந்தைக்குப் பிள்ளையின் மேலுள்ள அன்பு மேலீட்டால் உண்டான சோகத்துடனும், இராவணனுடைய ஆட்



சிக்கு ஒரு சூழ்ச்சி உண்டாக்கும்படி, நாரதராக அவன் சபையில் தோன்றி, அவனை, ஜனகன் அவமதித்துவிட்டான் எனத் தந்திரமாகப் பேசியும், கீர்த்தனைகள் பல பாடியும் அதிக விமரிசையுடன் நடித்தார்.

ஸ்ரீ ராமனைத் தோன்றிய திரு. பி. பட்டாபிராம்பிள்ளை பி. ஏ. தந்தையிடத்தில் உள்ள விசுவாசமும், பக்தியும், மரியாதையும் தோன்றவும், ஆசாரியரிடத்தில் கீழ்ப்படிதலும், சத்துருக்களாகிய தாடகி, சுவாகு, மாரீசன், பரசுராமர் முதலானோர்களிடத்தில் வெகு கோபத்துடனும், தீரத்துடனும் நடித்தனர். லக்ஷ்மணனைத் தோன்றிய திரு. கு. மணிவண்ணப்பிள்ளை பி. ஏ. தமையனிடத்தில் அன்பும், அடக்கமும், ஆசார்ய பக்தியும், சத்துருக்களிடத்தில் அடங்காக் கோபமும் உடையவராய் நடித்தார்.

விஸ்வாமித்திரராக வந்த திரு. எம். வி. பாபுபிள்ளை, தசரதன் ராமனை அனுப்ப மறுத்தபொழுது அடங்காக் கோபத்துடனும், சிஷ்யர்களாகிய ராமலக்ஷ்மணனிடத்தில் அன்பும், கருணையும் உள்ளவராய் நடித்தனர்.

இராவணனை நடித்த திரு. எஸ். ஆர். குருசாமிபிள்ளை, அதிக கம்பீரத்துடனும், ஜனகனிடத்தில் மணஓலை அனுப்பாதது பற்றித் தீராக்கோபத்துடனும், கணக்கப்பிள்ளையை மிரட்டியும், சிவதனுசை வளைக்கச் சக்தியற்றவனாய், மகா அவமானமடைந்து செல்லுதலும் வந்திருந்தோரனைவருக்கும் நகைப்பையும், ஆச்சரியத்தையும் உண்டாக்கின.

சீதையாக நடித்த திரு. கே. எஸ். வரதன் பி. ஏ. மணமகளுக்குள்ள ஓர் நாணம், அச்சத்துடனும், ஸ்ரீராமனை மிதிலையில் கண்ணுற்றபொழுது காதலின் மேலீட்டால் அற்புதமாகப் பாடியும் இன்பத்தை விளைவித்தனர்.

கணக்கப்பிள்ளையாக நடித்த திரு. எம். சீதாராம்பிள்ளையும், விதூஷகனாகவும், கர்னாடக அரசனுமாகத் தோன்றிய திரு. சீதாராமும் தம் தம் விதூஷகத் திறமையினால் அடங்கா நகைப்பை உண்டாக்கினர். தாடகை மாரீசனைத் தோன்றிய திரு. எ. துரைசாமிப் பிள்ளை ராக்ஷஸர்களுக்குள்ள முடுக்குடன் நடித்தார். ஜனகராக வந்த திரு. எல். எஸ். கரையாளர் பி. ஏ., யும், வசிஷ்டராகத் தோன்றிய திரு. ஸி. ராஜமன்னார்பிள்ளையும், திருவாளர்கள் எம்.

ராதாகிருஷ்ணப்பிள்ளை பி. ஏ., வி. ஜனார்த்தனம் நாயுடு, இவர்கள் அரசர்களாகவும், பாலசுந்தரம், பி. ராஜகோபாலன் தோழிகளாகவும், எம். வைத்தியநாதன் அகலிகையாகவும், ஸ்ரீபதிபிள்ளை சுமந்திரராகவும், சி. ராதாகிருஷ்ணப்பிள்ளை கௌதமராகவும் அதிக விமரிசையுடன் நடித்தனர்.

திரு. டி. எஸ். ராமசாமி ஐயர் அவர்கள் மாலை சூட்டப்பட்டு வரவேற்கப்பட்டனர். அவர் தம் சிறு சொற்பொழிவில், ஜார்ஜ் டவுன் யாதவ வாலிபச்சங்கமானது இதர சங்கங்களைப் போலவே, கல்வியின் அபிவிர்த்தியின் பொருட்டு அதிக ஊக்கங்கொண்டு வேலை செய்து வருவது பற்றியும், சங்கத்தார் சிறிது காலத்திற்குள் அவ்வளவு சிறப்புடன், நடை, உடை, பாவனை முதலியவைகளோடு நடித்ததைப்பற்றியும், அவர்கள் ஒருவித பயமும், அவசரமும் இன்றி, தம் தம் தினசரிவந்த நாளைப் போலவே எண்ணி நடித்தது மிகவும் வியக்கத்தக்கது என்றும், உதாரணமாகத் தசரதர் ராமனைப் பட்டாபிராமா என்றழைத்ததைக் குறிப்பிட்டும், இனி நடிப்பதில் சங்கத்தார் மிகவும் திறமையுள்ளவர்களாவார்கள் என்றும் கூறினார்.

திரு. பட்டாபிராம் பிள்ளை பி. ஏ. வுக்கு 2 மோதிரங்களும், திரு. கு. மணிவண்ணப்பிள்ளை பி. ஏ. வுக்கு ஒரு செயினும், எம். வி. பாபுபிள்ளைக்கு 2 மோதிரங்களும் பரிசளிக்கப்பட்டன. எல்லா நடிகர்களும் மாலைகள் சூட்டப்பட்டனர். இவ்வளவு சிறப்புடன் நாடகம் நடந்தேறியதற்கு, நம் கண்டக்டராகிய திரு. எம். சீதாராம்பிள்ளை யவர்களின் ஒப்பற்ற நடிக்குந் திறமையும், அதைப் போதிக்குந் திறமையுமே. காரியக்கமிட்டி அங்கத்தினராகிய அவர் சங்கத்தின் பெருநலிக்காக இவ்வளவு சிரமம் எடுத்துக் கொண்டதற்குச் சங்கத்தார் தங்கள் ஹார்மோனியம் வாத்தியம் ரங்கநாத பிள்ளைக்கும் பிடில் வாசித்த, திரு ப. ஞானசுந்தரத்திற்கும் தங்கள் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகின்றனர். நன்றியறிதலைச் செலுத்துகின்றனர். டிக்கட்டு விற்பனை முதலிய காரியங்களில் உதவியாயிருந்து வந்த தலைவர், உபதலைவர்கள், பொக்கிஷதார்கள், காரியக்கமிட்டி அங்கத்தினர்கள் அனைவருக்கும் என் மனமார்ந்த வந்தனத்தைத் தெரிவிக்கிறேன். பண உதவிசெய்து இக்காரியத்தை இனிதுறச்செய்த நம் போஷகர்களுக்கும், எனது மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்திக் கொள்ளுகிறேன். நம் குலமக்கள் நூற்றுக்



கணக்கில் இந்நாடகத்திற்கு வந்து நடிகர்களை ஆசிர்வதித்தது பற்றி அவர்களுக்கும் சங்கத்தார் தம் வந்தனோபசாரத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றனர்.

## நடிகர்களின் அமைப்பு.

| | | |
|---|---|---|
| தசரதர் / நாரதர் | | திரு. ஆர். எம். சுப்புகிருஷ்ணப்பிள்ளை. |
| வசிஷ்டர் | ,, | திரு. சி. ராஜமன்னார்பிள்ளை |
| சுமந்திரர் | ,, | பி. ஸ்ரீபதிபிள்ளை. |
| விஸ்வாமித்திரர் | ,, | ம. வ. பாபுபிள்ளை. |
| ஸ்ரீ ராமர் | ,, | பி. பட்டாபிராம் பிள்ளை பி. ஏ. |
| லக்ஷ்மணர் | ,, | கு. மணிவண்ணப் பிள்ளை பி. ஏ. |
| அகலிகை | ,, | வி. வைத்தியநாதன். |
| தாடகை / மாரீசன் | ,, | ஏ. துரைசாமிப்பிள்ளை. |
| சுவாகு | ,, | பி. ஸ்ரீபதிபிள்ளை. |
| கௌதமர் | ,, | சி. ராதாகிருஷ்ணப்பிள்ளை. |
| ஜனகர் | ,, | எல். சட்டநாதக் கரையாளர் பி. ஏ. |
| ராவணன் | ,, | எஸ். ஆர். குருசாமிப்பிள்ளை. |
| சதானந்தர் | ,, | ஏ. துரைக்கண்ணுபிள்ளை. |
| சீதை | ,, | கே. எஸ். வரதன் பி. ஏ. |
| தோழிகள் | ,, | ஏ. பாலசுந்தரம், பி. ராஜகோபாலன். |
| பரசு ராமர் | ,, | என். கோவிந்தராஜ பிள்ளை. |
| அரசர்கள் | ,, | எம். ராதாகிருஷ்ணப் பிள்ளை, பி. ஏ.<br>வி. ஆர். வரதப்பிள்ளை பி. ஏ.<br>வி. ஜனார்த்தனம் நாயுடு.<br>இன்னும் பலர் |
| விதூஷகன் | ,, | சீதாராம் பிள்ளை. |
| ஆர்மோனியம் | ,, | எம். ரங்கநாதபிள்ளை. |
| பிடில் | ,, | பா. ஞானசுந்தரம். |
| தபேலா | ,, | கேசவலு நாயுடு. |

திரு. கு. மணிவண்ணப்பிள்ளை பி. ஏ.,
காரியதரிசி.

பாளையங்கோட்டை:—

ஜனவரி பிப்ரவரி 14உ ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு, பாளையங்கோட்டை யாதவ வாலிப சங்கத்தாரின் மாதாந்தரக் கூட்டம் "கனகவிலாஸ் மந்திரத்தில்," திருவாளர் S. ஜோதிநாயகம், (Teacher Mary Arden School & President Yadava Youths League, Palamcottah.) அவர்கள் தலைமையின் கீழ் நடைபெற்றது.

அன்பர், P. ஆறுமுகம், (I. U. C. St, Xavier's College) "பெண்கல்வி" என்பதுபற்றிச் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். அவர்களுக்குப்பின் திருவாளர், S. வானமாமலைக்கோன் அவர்கள் "பெண்கல்வி அவசியமா" என்ற தலைப்பின்கீழ், பெண்களின் இருதயமே குழந்தைகளின் கல்விச் சாலையாயிருப்பதாலும், தாயைப் போலப் பிள்ளை, நூலைப்போல சேலை என்ற ஆன்றோர் வாக்கிற் கிணங்கவும், நெப்போலியன் சிவாஜிபோன்ற உத்தமர்கள் உலகப் பிரசித்திபெற்ற போர்வீரர்களாகவும் சக்கரவர்த்தியாகவும் திகழ்ந்ததற்கு அன்னார்களின் நற்தாயே காரணம் என்று சரித்திரவாயிலாக நாம் தெரிந்து இருப்பதாலும் பின்வரும் சந்ததியாராகிய குழந்தைகள் எல்லாம் நற்குண நற்சீலர்களாய்த் திகழவேண்டுமானால், அக்குழந்தைகள் தங்கள் தாயின் பரிபாலனத்தில் இருப்பதால், ஒவ்வொரு பெண்களும் கல்வி அவசியம் கற்கவேண்டும் என்பதாய் அநேக மேற்கோள்களுடன் எடுத்துச் சொன்னார்கள்.

அதன் பின்னர். அன்பர் P. K. ராமசாமி பெண்கள் படித்தால் மட்டிலும் போதாது (வீட்டுக்கல்வி) வீட்டுப்பழக்க வழக்கங்களுக்கு வேண்டிய கல்வியைப் புகட்டவேண்டும் என்று சொன்னார்கள். P. M. சுப்பையா. (II. U. C. St. Xavier's Collage) நம் இந்துப் பெண்களுக்கு உயர்தரக் கல்வி அத்தியாவசியம் இல்லை என்றும் ஆரம்பக் கல்வியே போதும் என்பது பற்றியும் பேசினார்கள்.

அவர்களுக்குப் பின் எங்கள் சங்கத்தின் அதிபால்யனும் நம் பெருமாள் என்னும் மாணவர் IV. Form. சொல் நயம், பொருள் நயத்துடன் சங்கோசம் என்பது ஒரு சிறிதுமின்றி அதிக உற்சாகத்துடன் முன் வந்து பெண்கல்வி என்னும் விஷயம்பற்றி நிரம்பவும் தெளிவாகப் பேசியது அவண் வந்திருந்த வளைய நம் யாதவ மாணவர்களுக்குத் தாமும் பேசவேண்டும் என்னும் புத்துணர்ச்சியை



உண்டுபண்ணியது புகழத்தக்கதே! அதன் பின்னர். நவநீதன், C. M. ராம்தாஸ், R. D. சுப்பையாமுதலியார் பேசினார்கள்.

கடைசியாக, எங்கள் சங்கத்தின் ஒவ்வொரு கூட்டத்திற்கும் எங்களிடையே வந்து எங்களுக்கு உற்சாகத்தைக் கொடுத்தும் எங்களைப் பேசும்படி செய்தும் எங்கள் சங்கத்துக்குப் பேருபகாரமும் சமுகத்தொண்டும் செய்து வருபவருமான திருவாளர் S. A. பொன்னையதாஸ், (Teacher St. Xavier's Collage) அவர்கள் பெண் கல்வியைப் பற்றிச் சுருக்கமாகவும் உயரிய கருத்துகளுடனும் பேசி முடிவாகத் தனது மாணவன் நம்பெருமான், திறம்படப் பேசியதை வியந்து அவன் எல்லா நலன்களையும் எய்துமாறு எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சித் தம் பிரசங்கத்தை முடித்தார்கள்.

பின்னர் தலைவரவர்கள், பெண்கள், ஆங்கிலத்தில் உயர்தரக் கல்வி கற்றால் கெட்டுப்போவார்கள் என்று குறுகிய புத்தியுடைய ஒரு சிலர் கருதுவது தவறு என்றும், அப்படி அவர்கள் கல்வி கற்றிருந்தால் அவர்களைப் பார்க்கிலும் அவர்கள் கணவன்மார்கள் ஒரு சிறிது அதிகமாய்ப் படித்திருப்பது நலம் என்றும், பெண்களுக்குக் கல்வி அத்தியாவசியம் என்று தங்களுடைய அநுபோகத்திலிருந்தும் அநேக மேற்கோள்களுடனும் பேசிமுடித்தார்கள். வந்தனோபசாரம் கூறச் சங்கம் இனிது முடிவுபெற்றது.

திரு. S. வெங்கடாசல தாஸ் (யாதவர்)
காரியதரிசி.

விளையாட்டுப் பகுதி:—

பாளையங்கோட்டையில் நடைபெற்ற Palamcottah Badmindon club, 2nd Annual Tournamentல், நம் யாதவ வாலிப சங்கத்தார் The Yadava Youth League A Team என்றும், The Yadava Youth League B. Team என்றும் இரண்டு டீம்களைப் பந்தயவிளையாட்டுக்கு அனுப்பியதில் இரண்டு டீம்களும் வெற்றி அடைந்து கொண்டு வந்து கடைசியாக Seoni finals விளையாட்டில் நம் A (Team) டீமிக்கும், B (Team) டீமிக்கும் 14—2—32ல் விளையாடினதில் The Yadava Youth League B Team. வெற்றி பெற்றார்கள். ஆனால் 19—2—31ல் finals விளையாடியதில் தோல்வி அடைந்தார்கள். ஆனபோதிலும் முதன் முதலாக நம் யாதவ வாலிபர்கள் வெற்றியடைந்து (Runners up

Medals) வெள்ளி மெடல்கள் கிடைக்கப்பெற்றது நம் குலத்திற்கு ஒரு புகழேயாகும். இந்த டீமில் விளையாடியவர்கள் P. K. ராமசாமியும், S. காந்தியுமாவார்கள். இவர்களுக்கு வெள்ளி மெடல்கள் கிடைக்கப் பெற்றன.

1930—31-ம் வருடங்களில் மதுரையில் நடைபெற்ற Inter-Collages Pentland Hockey Tournamentல் பாளையங்கோட்டை அர்ச்சவேரியார் கல்லூரி (St Xavier's Collage) மாணவர்களே வெற்றி அடைந்துள்ளார்கள். அன்னார்களுக்கு அர்ச்சவேரியார் கல்லூரியிலிருந்து சமீபத்தில் வெள்ளி மெடல்கள் பரிசு அளிக்கப் பெற்றிருக்கின்றன. அவர்களில் முதன்மை பெற்ற விளையாடுபவர்களில் ஒருவரான அன்பர் S. ஆதிமூலம் II. U. C. நம் யாதவ வாலிப சங்கத்தின் அங்கத்தினராவர்.

இவரும், நம் யாதவ வாலிப சங்கத்தின் (Hockey captain) திருவாளர் S. A. தங்கையாதாஸ் (Teacher) (St. Hondoney School Palamcottah) அவர்களும் சில மாதங்களுக்கு முன் தூத்துக்குடியில் நடைபெற்ற Gymkana hockey Tournamentல் வெற்றியடைந்து (Matchado Memorial silver cup a medals) வெள்ளிக்கோப்பைகளும்மெடல்களும்கிடைக்கப்பெற்றுள்ளார்கள்.

திருவாளர், S. A. தங்கையாதாஸ் அவர்கள். சென்ற சில ஆண்டுகளாக சிவகெங்கையில் நவராத்திரி காலங்களில் நடைபெற்ற Presidencey Hockey Tournamentல் தொடர்ச்சியாக மூன்று ஆண்டுகள் வெற்றி அடைந்து ரூ. 300 பெறுமான வெள்ளிக்கோப்பையும், அநேக தங்கமெடல்களும், வெள்ளி மெடல்களும் கிடைக்கப் பெற்றுள்ளார்கள்.

விளையாட்டுப் பகுதியில் இன்னார்கள் அடைந்துள்ள வெற்றியானது நம் யாதவ சமூகத்திற்கு ஒரு பெரும் புகழேயாகும். பாளையங்கோட்டை யாதவ வாலிப சங்கம், நம் மாணவர்களைக் கல்வியிலும், தேகப் பயிற்சியிலும், மற்றும் சமூகத் தொண்டு ஆற்றுவதிலும் முன் அணியில் நிற்க அரும்பிரயாசை எடுத்துக்கொண்டு வருகிறது. இதைப்பார்த்து ஏனைய ஊர்களிலுள்ள யாதவவாலிபர்களும் முன்வர வேணுமாய் எங்கள் சங்கம் யாதவ மக்களை மன்றாடிக் கேட்டுக்கொள்ளுகிறது.



## ஸ்ரீவைஷ்ணவ சமாஜத் திறப்புவிழா

# அழைப்புப் பத்திரம்.

## ஸ்ரீவைணவகுல சமூகத்தினர்களுக்கோர் வேண்டுகோள்.

அன்பார்ந்த ஐயன்மீர்!

நிகழும் பிரஜோத்பத்தி வருடம் மாசி மாதம் 5-ந் திகதி (17—2—32) புதவாரம் காலை 8-மணிக்குமேல் 9மணிக்குள் காரைக்கால் கைலாசநாதர் கோவில் வடக்கு மடவிளா 66 எண்ணுள்ள இல்லத்தில் இறைவனிணையடித் தொழுதலுடன்,

ஸ்ரீ வைஷ்ணவ சமாஜஸ்தாபன ஆரம்ப ஆண்டுவிழா வைபவமும் மாலை 6 மணி முதல் 8 மணி வரையில் மஞ்சைநகர் ஸ்ரீ வகுளபூஷணபாஸ்கரோதய சபையின் அங்கத்தினரும், தமிழ் வித்வானுமான நெல்லிக்குப்பம் உபந்நியாச பூசணம் ஸ்ரீமான் இரத்தின ராமாநுஜ ஸ்வாமி அவர்களால் "சமூக முன்னேற்றம்" என்பது பற்றியும், எண்கண் தமிழ் வித்வான் அவர்களும், கம்பராமாயணப் பிரசங்கியுமான ஸ்ரீமான் வேங்கிடாஜல முதலியார் அவர்களால் "சமூகத்தின் பண்டைப் பெருமை" என்பது பற்றியும், காரைக்கால் சர்க்கார் பாடசாலை மாஜித் தமிழ்த் தலைமை யாசிரியராகிய, தமிழ் வித்துவான் ஸ்ரீமான் பா. வேங்கட்டராம நாயுடு அவர்களால் அக்கிராசன முகவுரை, முடிவுரையும், சமூகக்கல்வி என்பது பற்றியும, சொற்பொழிவுகள் நடைபெற்றன.

அவ்வமயம், வைணவ நல சமூக சகோதர சகோதரிகள் அனைவரும் விஜயம்செய்து சமாஜத்தை கௌரவப்படுத்தி, சமூக வொற்றுமையைத் தெள்ளென விளக்கி நமது அரிய சமூகத்தையும், சமூகப் பணி புரியத் தோன்றும் நமது சமாஜத்தையும் சிறப்பித்தார்கள்.

"ஸ்ரீ வைஷ்ணவ சமாஜ" நிர்வாக சபையார்.

## ஸ்ரீ வைணவப் பெண்மணிகள் மகாநாடு.

மேற்படி மகாநாடு 1932 ம் ஆண்டு ஜனவரி மாதம் 3-ஆந்தேதி சென்னை ஸ்ரீ உப்புத்தூர் ஆழ்வார் செட்டி இராமானுஜ கூடத்தில் சென்னையில் காலஞ்சென்ற பிரபந்த வித்வானும் ஸ்ரீ யதுகுல சங்கஸ்தாபனத்திற்கு அடிகோலியா யிருந்து வந்தவருமான ஸ்ரீமாந்

தி. கோ. முத்துகிருஷ்ணப்பிள்ளை அவர்கள் திருமகளார் ஸ்ரீமதி பங்கஜம்மாள் அவர்கள் தலைமையின்கீழ் கூடியது. இவ்வம்மையார் கடவுள் விஷயத்தில் நாம் நடக்கவேண்டிய மார்க்கத்தைப் பற்றியும், மதப் பெருமையையும், நம் குலப் பெருமையையும் பிரதி வெள்ளிக்கிழமையிலும், மாலையில் பெண்கள் கூட்டம் கூட்டி, நாலாயிரப்பிரபந்தம் பண்ணிசையிலும், விடாசையாய்க் காலக்ஷேபம் செய்து வருகின்றனர். பகவத் பாகவத கோஷ்டியில் புகழ்பெற்றவர். ஸ்ரீபெரும்பூதூரில், ஆதிராமாநுஜ கூடத்தில் பிரதிவருஷமும், நன்கொடை அளித்தும், பலர் பணம் உதவியாலும், ததியாராதன காரியத்தில் தான் கஷ்டம் பாராமல் பாகவதர்களுக்கும் ததியாராதனை இப்பொழுது 110-வது வருஷத்திய கைங்கர்யம் தன் முன்னிலையில் செய்து வருகின்றனர். நிற்க.

ஸ்ரீ வைணவப் பெண்மணிகள் கூடிய இல்லம் முழுவதும் பெரும் கூட்டமாக இருந்தது. அவைத் தலைவியார் தம் தொடக்கவுரையில் தம் மத சித்தாந்தத்தை நன்கு கற்குமாறு தம் சகோதரிகளை வேண்டினர்; மத சித்தாந்தம் கற்பதற்கு ஆழ்ந்த கல்வியும், நல்லொழுக்கமும் இன்றியமையாதவை என்பதை இனிது விளக்கினர்; ஒரு சபையை ஏற்படுத்தி, அடிக்கடி ஒருங்குகூடி மதத்தையும் மத சித்தாந்தத்தையும் பற்றி ஆராய்ச்சி செய்ய வேண்டுமெனக்கூறினர்.

பின்னர் சபைக் காரியதரிசினியாராகிய பண்டிதை கிருஷ்ண வேணியம்மாள் அவர்கள் தம் சகோதரிகள் மதத்துறையில் சேர்ந்துழைக்க எண்ணித் தம் விருப்பிற்கிணங்கி எழுந்தருளியமைக்குத் தாம் பெரிதும் மகிழ்வதாகக் கூறினார்கள். அவ்வம்மையார் விரைவில் உலகமதமென நிலைபெறக்கூடிய பெருமதத்தைத் தழுவியவர்களாயிருப்பது நமது பெரும் பேறே எனக் கூறினர்; அவர்கள் ஆசாரியர்களின் அருளிச் செயல்களை இனிது கற்று, அவற்றைப் பிறர்க்கும் கற்பித்தல் வேண்டுமெனக் கூறினர்.

பின்னர், தமிழிலும் தெலுங்கிலும் பலர் பேசினர். அவர்களுள் சகோதரிகள் பத்மாவதியம்மாள், துரையம்மாள், சூரியகாந்தியம்மாள், ஆண்டாளம்மாள் இவர்கள் முதன்மையானவர்களாவார்கள். பேசியவர்களுள் ஒருவர் ஸ்ரீவைணவன் யார்'' என்னும் பாசுரம் ஒன்றைப் பாடிப் பொருள் விளக்கினார். பின்னர் வீணை முதலிய இசைக் கருவிகளோடமைந்த பாடல்களும், பாசுர மோதலும் நடைபெற்று, இரவு 7-30 மணிக்குக் கூட்டம் இனிது முடிவுற்றது.



## காமாக்ஷிபாய்,

அல்லது

## காதலர் வெற்றி.

(-96ம் பக்கத் தொடர்ச்சி.)

திரு. ரா. கோவிந்தராஜன்.

கோபிநாதன்:—இதற்கோ நான், ஒருவீணன், உங்களுடைய குமாரனாக, இப்புவிக்குப் பாரமாகப் பிறந்தேன்! தாய் தந்தையர்கட்கு இதந்தேடுவதே தனயனின் கடமையன்றோ! நான் என் உயிரையுங் கொடுத்துத் தங்களை எவ்வித கஷ்டத்தினின்றும் மீட்பது தாங்கள் என்னை ஈன்றெடுத்து இதுவரையில் வளர்க்கத் தாங்கள் பட்ட ஒரு கஷ்டத்திற்கு ஈடாகுமோ? ஐயோ! அம்மா! என்னைப் போலப் பாவிகள் இவ்வுலகிலும் வேறு எவ்வுலகிலும் இருக்கவும் மாட்டார்கள். இருந்ததும் கிடையாது.—அம்மணி! நான் அடிக்கடித் தங்களுடைய திருக்கழுத்திலிருக்கும்படியான திருமாங்கல்யத்தைக் காண்கிறேன். அது என் தந்தையார் உயிருடனிருப்பதற்கோர் அறிகுறியன்றோ? சற்று முன்னரே தாங்கள் புலம்பிக்கொண்டிருந்தவாறே, நான் என் தந்தையார் யாரென்றும், அவரிப்போது எங்கே இருக்கின்றார் என்றும் எனக்கு அறிவு வந்த இதுகாலை அடிக்கடித் தங்களைக் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டி வரும்போதெல்லாம், தங்களுடைய விசனகரமான முகத்தைக்கண்டு, தங்களிடம் யாதொன்றையும் கேட்டுத் தங்களை இன்னமும் அதிக மனச்சஞ்சலத்திலாழ்த்த மனமில்லாதவனாய்ப் பேசாமலிருந்து விடுவதுண்டு. ஆனால், இன்றைய தினம், சாக்ஷாத் சர்வேஸ்வரியின் செயலோ, யாதோ, அறியேன். சற்றுமுன் தாங்கள் கூறிய சங்கதிகளனைத்தையும், நான் தற்செயலாய் இங்கு வரும்படி நேரிடவே தெரிந்து கொள்ள வாய்த்தது—தாயே! எனது தந்தை எங்கு சென்று எக்கதியானார் என்பதைத் தயவுசெய்து சொல்லுங்கள்! தங்களை வெகுவாய்க் கஷ்டப்படுத்துபவன், நமது வீட்டிற்கு

அடிக்கடி வந்து போய்க்கொண்டிருக்கும், பாபுராவ் என்னும் மனிதனே என்று, அச்சண்டாளன் எழுதிய இக்கடிதத்தினால் தெரியலானேன். அம்மணி! இவ்வகண்ட பூமண்டலத்தில் மானிடனாய்ப் பிறக்கும், ஒரு நல்ல மானிக்கு, உடலபிமானம், உயிரபிமானம், உறவபிமானம் என்னும்படியான எல்லா அபிமானங்களைக் காட்டிலும், மானாபிமானம் என்பது யாவற்றையும் விட மிகவும் மேலானதும் சிறந்ததுமன்றோ? எவன் தன் மானாபிமானத்தைக் காத்துக்கொள்ள, அசத்தனாயிருக்கின்றானோ, அவன் கேவலம் அற்பப்பதருக்கு ஒப்பானவனன்றோ. எவ்விதம் கவரிமானானது தன் தேகத்திலிருந்து, ஒரு ரோமம் உதிர்ந்த மாத்திரத்தில், தன் மானத்தைக் காப்பாற்றிக் கொள்ளும் பொருட்டுத் தன் உயிரையே இழக்கின்றதோ, அதற்கொப்ப, ஒருசிறந்த மானாபிமானியானவன் தன் மானத்தைக் காப்பாற்றும் பொருட்டுத் தன் பிராணனையும் மதிக்கலாகாது. அம்மா! இச்சண்டாளன், தங்களைப் பெண்டாள எண்ணி இக்கடிதத்தில் எழுதியிருக்கும் ஒவ்வொரு வார்த்தையையும் பார்க்கப்பார்க்க எனக்குக் கோபம் தீமூண்டெரிகிறது. அம்மணி! தாங்கள் என் யாவர்க்கும் தாயான ஸ்ரீ கௌரிதேவியினிடம் முறையிடவேண்டும்? ஸ்ரீ கௌரிதேவியினருளால் தங்களுக்குப் பிறந்த நானிருக்கும்பொழுது, ஸ்ரீ கௌரிதேவி தன் தனயன் என, என்னை இவ்வுலகில் பிண்டம் பிடித்துப் போட்டிருக்கும் பொழுது; ஸ்ரீ கௌரிதேவி, தங்களுடைய கஷ்டங்களை நிவர்த்திக்கும் பொருட்டு என்னை இவ்வுலகில் தங்களுடைய திருவுதரத்திலேயே ஜனிக்கும்படிச் செய்திருக்கும் பொழுது; தங்களுடைய சுகதுக்கங்களுக்கும், யாவற்றிற்கும் சமபாத்தியதையுடைய நான் ஒருவன் தங்களுடைய புதல்வனென இப்பூதலத்தில் பிறந்திருக்கும் பொழுது; ஏன் என்னிடம் தாங்கள் தங்களுடைய கவலைகளைச் சொல்லக் கூடாது? தாய்தந்தையர்கள், தன் மைந்தனென உளமகிழ்ந்து அன்போடணைத்து, முத்தமீந்து குலவினீர்களே, அதற்கிணையாமோ ஒரு சற்குணப் புதல்வனின் கடமை? தன்னுயிரையுங் கொடுத்துத் தன் தாய்தந்தையர்களின் குறைகளை நீக்கி அவர்களைச் சந்தோஷ சாகரத்தில் மூழ்கவைப்பது சற்குணப் புதல்வனது கடமையல்லவோ?



"ஈன்று வளர்த்த தாய்தந்தைக் கெவரே கைம்மாறு இயற்றுவோர்,
ஆன்ற மதலை நூறு வயதளவும் அடிமைத்திறம் பூண்டு,
மூன்று புவனத்துள்ள பொருள் முற்றும் அளித்து முறைமுறையே
என்ற வழிபாடு இயற்றிடினும், ஒருநாள் வளர்த்தற் கிணையாதே."

என்ற வடநூற்புலவர் கூற்றின்படி, உலகில், ஓர் உத்தம மைந்தனுக்குப் பெற்றோரினும் உற்றோர் ஒருவரும் இலர் அன்றோ? தாங்கள் இதற்கு முன்னமேயே என்னிடம் சதியாலோசனையைச் சொல்லியிருக்கும் பக்ஷத்தில், நம்முடைய மானத்தைக் காப்பாற்றும் பொருட்டு, நமக்குத் தீங்கிழைக்கும், இச்சதிக்காரனை, என்னுடைய தாயிக்குத்தாயான ஸ்ரீ கௌரிதேவியினருளால், பழிக்குப்பழி தீர்த்திருப்பேனே! என் இப்பொழுததானென்ன? ஒன்றும் மிஞ்சிவிடவில்லை. தர்மசாஸ்திரத்தில் தன்னைக் கொல்லவந்த பசுவையும் ஒருவன் நீதி நோக்காமல் கொல்லலாமென்று கூறியிருப்பதால், இச்சண்டாளனை இப்பொழுதே அவனிருக்குமிடம் சென்று பழி தீர்க்கின்றேன். இந்த க்ஷணமே எனக்கு உத்திரவு தரவேண்டும். தாயே! நான் என்னுயிருக்கும் பயப்படேன். கட்டாயம் இக்காதகனின் ஆவியை என் கைகளினாலேயே போக்கித் தீருவேன்.—அம்மா! என்ன மௌனமாயிருக்கின்றீர்கள்? தயவு செய்து விடை கொடுங்கள். இவனைக் கொன்று பழி தீர்த்து, என் மனதைச் சாந்திசெய்து கொள்ளுகிறேன். அம்மணி! அந்த வஞ்சகநெஞ்சம் படைத்தவனும், உள்ளொன்று வைத்துப் புறமொன்றாக நடத்துகிறவனுமாகிய அச்சண்டாளன் தங்களுக்கு எழுதியிருக்கும், இந்தக் கடிதத்தைத் தங்களுக்குக் காண்பிக்கவே மாட்டேன். நற்காலத்தால் என்னிடம் இக்கடிதம் சிக்கியதால், இதை அச்சண்டாளனுடனேயே மடியும்படிச் செய்துவிடுகின்றேன். தாயே என் பொருட்டு, பெற்ற தாயின் கஷ்டத்தை இதுவரை கவனியாதிருந்த இப்பாவியின் பொருட்டு, ஆஹா!- பதினாறு வருடகாலம்!- எவ்வளவு நீடித்த காலம்!- தங்களுடைய கற்பென்னும் ஆபரணத்தைக் காத்துக் கொண்டு, உயிருடன் கஷ்டங்களினிடையே உழன்று கொண்டு, சகித்துவந்த தாங்களன்றோ, இப்பூவுலகிற்கும் மாதாவாவீர்—தாங்கள், அச்சண்டாளன், தங்களைச் சகோதரியாகக் கருதாமல், தன் பெண்டாகக் கருதி யெழுதியிருக்கும்

இக்கடிதத்தைத் தங்களுடைய திருக்கண்களால் பார்க்கவும், மனதினால் சிந்திக்கவும் தகாது. தங்களுடைய நாவினால் கூட இவ்வார்த்தைகளை நவிலவும் கூடாது. அம்மணி நான் பாவி—இப்பொழுதுதான் யாவற்றையும் நன்றாயறியலானேன். இப்பொழுதே அவனைப் பழிதீர்க்க உத்தரவு கொடுப்பீர்கள். அம்மணி" என்று உருக்கத்துடன் அலறிக் கேட்டான்.

தன்னருங் கண்மணியான கோபிநாதன், தனது கஷ்டங்களையெல்லாம், அச்சண்டாளன் தன்னைக் குறித்துக் கெடுதலான நோக்கத்துடன் எழுதியுள்ள கடிதத்தினால் அறிந்துகொண்டு பேசிய அனைத்தையும், கேட்டுவந்த ஆத்மாபாய் தானிருக்குமிடம் தெரியாமல் தன்னிருகண்கள் சுழலவும், உடல் நடுங்கவும் மெய்மறந்து, மயங்கி அப்படியே மூர்ச்சித்து விழுந்துவிட்டாள். கோபிநாதன், தன் தாய் கீழேவிழவொட்டாமல் தன் கைகளினால் தாங்கி, மஞ்சத்தில் வைத்து, முகத்தில் தண்ணீர் தெளித்துக் கொஞ்சம் குளிர்ந்த நீரைப் பருகுவித்து, மெல்லியகாற்று அவள் முகத்தில் வீசும்படி செய்து, அவளது மயக்கத்தை மெதுவாகத் தெளிவித்தான். ஆத்மாபாய் சற்று நேரங்கழித்துக் கண்விழித்தாள். தான் மூர்ச்சித்திடுமுன் நிகழ்ந்த செய்திகள் யாவும் மறுபடி நினைவிற்கு வரவும், வாய்திறவாது தனது விதிவசத்தை நினைந்து கண்ணீர் வடித்துக்கொண்டு இருந்தாள். தன் அன்புள்ள நண்பனின் தாயை, தாயற்ற தனக்கும் தாயென எண்ணிடும் ஸ்ரீனிவாசன். ஆத்மாபாயைப் பார்த்து "அம்மணி! இதென்ன, எல்லாமறிந்த தாங்கள், எங்களைவிட வயதிலும், அறிவிலும் முதிர்ந்த தாங்கள்; உலகானுபவத்தில் பலவிதத்தாலும் பட்டனுபவித்த தாங்கள் இப்படித் துக்கப்படுவது நியாயமல்ல. தாங்களே இவ்விதம் விசனப்பட்டால் கோபியினுடைய மனமும், என் மனமும் எப்படித் தவிக்கும் என்பதைத் தாங்களறியீரோ? இவையெல்லாம் விதிவசந்தான்.

"எழுதிய வாறேகாண் இரங்குமட நெஞ்சே!
கருதியவா றாமோ கருமம்?"

என்றபடி, விதியைவெல்ல எவரால் முடியும்? தேவர்களாலேயும், மூவர்களினாலேயும் முடியாதென்றால் முன் ஜன்மத்தில்



செய்த வினையின் பயனாக, இம்மானிட ஜன்மத்தை யடைந்த நம்மால் ஆகுமோ? வருவதையெல்லாம் அனுபவிக்கும் விதி நமக்கிருக்கும் பக்ஷத்தில், நாம்தானே அனுபவித்துத் தீர வேண்டும்? எல்லாம் ஈசன் செயல்—நான் இப்பொழுது அக்கடிதத்தைப் பார்த்ததில், அந்தப் பாதகன் இன்னும் இரண்டோர் நாட்களில் இங்கு வருவதாக எழுதியிருக்கிறான். அம்மோசக்காரன் இவ்விடம் வந்ததும் பார்த்துக்கொள்வோம். அதோ பாருங்கள், கோபிநாதன் கலங்குகின்றான். எழுந்திருந்து அவனுக்குக் கொஞ்சம் தேறுதல் சொல்லுங்கள்." என்று மன்றாடிக் கேட்டு நின்றான்.

கோபி:—அம்மா! என் மனம் பதைக்கின்றது. என் அறிவு மயங்குகின்றது. இப்பொழுதே தயவுசெய்து உத்தரவு கொடுங்கள். நான் இந்த க்ஷணமே சென்னைக்குச் சென்று நம்மைத் துன்பத்திலாழ்த்தும் இச்சதிகாரனைப் பழிதீர்த்து வருகின்றேன்.

ஆன்றமைந்த சான்றோருள் பேதை புகலின்னா
மான்றிருண்ட போழ்தின் வழங்கல் பெரிதின்னா
நோன்றவிந்து வாழாதார் நோன்பின்னா—ஆங்கின்னா
ஈன்றாளை ஓம்பா விடல்.

என்ற பெரியோர் வாக்கின்படி என்னை ஈன்றெடுத்த தாயை, எவ்விதமான துன்பங்களுக்கும் ஆளாக்காமல் தங்களைப் பாதுகாவாவிட்டால், நான் உயிருடன் வாழ்தலைக்காட்டிலும், உயிர் நீத்தல் உத்தமம். அம்மணி! இந்த நயவஞ்சகன் நம் குடும்பத்தில் எவ்விதம் கலந்தான்? இவன் யார்? என் தந்தை யார்? அவர் எவ்விதம் காணாமல் போனார்? தயவுசெய்து தாங்கள் தங்களுடைய சரித்திரம் முழுமையும் எனக்குத் தெரிவியுங்கள். இனிமேலும் நம் குடும்ப வரலாறுகளை என்னிடமிருந்தும் மறைக்கலாகாது." என்று மிகவும் வருந்தித் தன் தாயைக் கெஞ்சிக் கேட்டு நின்றான்.

ஆத்மா:—கண்மணி! கோபி! "நான் படுந்துயரம் போதாதென்று நீயும், துர்பாக்கியவதியான இப்பாவியின் சரித்திரத்தைக் கேட்டு, என் துயரத்தில் ஈடுபடநேர்ந்ததோ, விதி? நானும், என்னால் கூடியமட்டிலும் உனக்கு நம் வருத்தகரமான சரித்திரத்தைத் தெரிவிக்க வேண்டாமென்று இருந்தும், இன்று தற்

செயலாய் இவ்வித சந்தர்ப்பங்கள் வந்து சேர்ந்தது.'' ஆஹா! கௌரி உனது அருளிதுவோ! கண்மணி "மைலாபூரில், மணி சங்கரராவ் என்பவர் என் தகப்பனார். அவர் ஒரு வயிர வியாபாரி. என்னுடைய தாயார், என்னை ஈன்றெடுத்த தினமே ஜன்னியினால் இறந்து போனார்களாம். பிறகு என்னுடைய க்ஷேமத்தின் பொருட்டு, என் தகப்பனார் மறுவிவாகம் செய்து கொள்ளாமல், எனக்கு ஒரு செவிலித் தாயை வைத்து என்னை அன்புடன் வளர்த்தார். என்னை எனக்குப் பத்து வயதுவரை கல்வியும் போதித்துவந்தார். எனக்கு வயது பதினைந்கானதும், இச்சண்டாளன், பாபுராவ் என்னை விவாகம் செய்து கொள்ள வேண்டி எனது தகப்பனாரிடம் கேட்டானாம். என் தகப்பனார் இவன் துர்குணம் பிடித்தவன் என்றறிந்து, இவனுக்கு என்னைக் கொடுக்க மறுத்துவிட்டார். அத்துடன் அவனும் என் தகப்பனார் வீட்டுக்கு வருவதையும் நிறுத்திவிட்டான். பிறகு ஒரு நாள் என் தந்தையுடன் ஒரு யௌவன வாலிபர் எங்கள் வீட்டிற்கு விருந்தினராக வந்தார். அவர் பாபுராவிற்குச் சொந்தமான "ஜயலெக்ஷ்மி" என்னும் கப்பலின் காப்டன். அவர் மிக்கச் செல்வவந்தராயிராவிடினும், குணத்தில் மிகவும் சிறந்தவர். அவருடைய பெயர் ராமராவ் என்றும், என் தந்தையிடமிருந்து தெரிந்து கொண்டேன். தவிர, அவர் எங்களுக்கு நெருங்கிய உறவினர். என்றும், மறுபடி நான் கேட்டதில் தெரிந்து கொண்டேன். அவருடைய அழகிற்காகவும், சிறந்த குணத்திற்காகவும் அவரை நான் காதலித்தேன். அவரும் என்னைக் காதலித்தார். நாளடைவில், அவர் எங்கள் வீட்டுக்கு வந்து அன்புடன் பேசிவிட்டுப் போவதினால் பரஸ்பரம் எங்களுக்குள் காதல் வேரூன்றியது. இதை எப்படியோ அறிந்த உன் பாட்டனார் சந்தோஷித்து, எங்கள் இருவருக்கும் சிறப்பாக விவாகம் செய்துவைத்தார். விவாகமான ஆறு மாதத்திற்கெல்லாம் என் தகப்பனார் காலகதியானார். ஆகையினால், மைலாபூரில் தனிமையாயிருந்த என்னை உன் தகப்பனார் இவ்வீட்டிற்கு அழைத்துக்கொண்டார். இவ்விடம் வந்த ஒருவருடத்திற்கெல்லாம், உன்னைப் பெற்றெடுத்தேன். அதன் பிறகு மூன்று வருடங்களானதும், பாபுராவின் தூண்டுதலால் நம்மைப் பிரியமனமில்லாத, உன் தந்தை கப்பலின் காப்டனாக



லால் அதற்குச் சம்மதித்துக் கப்பலில் பிரயாணம் தொடுத்துச் சென்றார். நானும் உடன் வருகிறேன் என்று பன்முறை கூறியும், என்னைத் தடுத்துத் தனியேவிடுத்துச் சென்றார். ஆறு மாதத்திற்குப் பிறகு, உன் தந்தை சென்ற கப்பல் திரும்பி வந்தது. நான் உன் தகப்பனார் அக்கப்பலில் வருவாரென்று ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். ஆனால் இச்சண்டாளன் மட்டிலும் என்னிடம் வந்து, கப்பல் இந்துமகா சமுத்திரம் வழியாகத் திரும்பிவந்து கொண்டிருக்கும்பொழுது, உன் தகப்பனாரைக் கப்பலில் காணோமென்றும், பிறகு ஒவ்வொரு துறைமுகங்களுக்கும் தந்தியடித்து விசாரித்ததில் அதுவரையில் அவரைப்பற்றி யாதொரு தகவலும் கிடைக்கவில்லையென்றும், உன் தந்தைக்கு அவன் உயிர் நண்பனென்றும், அவர் காணாமல் போனதைக் குறித்து வருத்தப்படுவதாகவும், தானே நம்மைக் காப்பாற்றுவதாகவும், கூடியசீக்கிரத்தில் அவரைப்பற்றி நல்ல சமாச்சாரம் கிடைக்கக் கூடுமென்றும், அதற்காக விசனப்பட வேண்டாமென்றும், மிக்க அன்புள்ளவனைப் போல் சொல்லித் தேற்றினான். அது முதல் நாம் இவனுடைய போஷணையிலிருந்து வருகிறோம். ஆனால் இதுவரையில், உன் தகப்பனாரைப் பற்றி ஒரு தகவலும் கிடைக்கவில்லை. அடிக்கடி அயல் தேசம் சென்றுவரும் இக்காதகன், என்னைக் காணும்போதெல்லாம் ஆசை வார்த்தைகளை உபயோகித்து வந்தான். நானும் இவ்வளவு காலமாக, இவனுக்கு இடங்கொடாமல் தந்திரமாய்ப் புத்திமதிகளைச் சொல்லி, கடவுளின் கிருபையால் இவனுடைய வலையில் சிக்காமல் தப்பித்து வந்தேன். பதினாறு வருடமாகியும் உன் தகப்பனாரைப் பற்றி ஒன்றும் தெரியவில்லை, என்ன செய்வது! இச்சண்டாளனின் கடிதத்தைக் காண என் மனம் கொதிக்கின்றதே'' என்று நடந்தவை நடந்தவாறு கூறிக் கதறினாள். (தொடரும்.)

## மென்னை அடைப்பான்.

(தொடர்ச்சி)

திரு. S. பெருமாள் கோன்.

(வியாதியைப் பரிசோதித்தல்) இந்த வியாதிக்கும் அடைப்பான் அல்லது சப்பைநோய்க்கும் வித்தியாசம் தெரியாமற் போகக்கூடும். ஆகையால் அந்த வியாதிகளைப் பற்றிய அத்தியாயங்களை வாசிக்க

வேண்டும். மென்னை அடைப்பானினால் மார்பு பாதிக்கப்பட்டிருந்தால் அது தொத்துகிற சுவாசாசய அழற்சியோ என்று எண்ணக் கூடியதாயிருக்கும். ஆனால் இரண்டாவது சொன்ன இந்த வியாதி மார்பை மாத்திரம் பாதிப்பதும் ஆறும் அத்தியாயத்தில் பார்க்கலாம். (சிகிச்சை) சாதாரணமாய் இந்த வியாதியின் காலம் கொஞ்சமேயாகையால் வைத்தியம் செய்யவேண்டுமானால் சிறிதும் தாமசமில்லாமல் செய்யவேண்டும். சிகிச்சை செய்வதில் அனுகூலமுண்டு. இந்த வியாதி ஆரம்பத்திலேயே கண்டுபிடிக்கப்பட்டு வியாதி கண்ட பிராணி அதிக கஷ்டமில்லாமல் விழுங்கும் சக்தியுடையதாயிருந்தால் நல்ல பேதிமருந்தைக் கொடுக்கவேண்டும். 1-நிர் 2-நிர் மருந்துப் பட்டியைப் பார்க்க. மாமிசம் அழுகாமல் தடுக்கத்தக்க மருந்துகளை உள்ளுக்குக் கொடுக்கலாம். உதாரணமாக இரண்டு (க்வார்ட்) அதாவது பட்டணம்படியில் ஒன்றேகாற்படி ஜலத்தில் ஒரு அவுன்ஸ் அதாவது கால்வீசப்படி. பினைல் மருந்து கொடுக்கலாம். சில பிராணிகளுக்கு இந்தச் சிகிச்சையினால் அனுகூல முண்டாயிருக்கிறது. அங்கங்கே உள்ள வீக்கத்தைச் சொஸ்தப்படுத்துவதற்காகப் பழுக்கக் காய்ச்சிய சூட்டுக்கோலால் வரிவரியாகச் சூடு போடுவது வழக்கம். அதிக ஆழமாகச் சூடுவிழாதபடி ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். இல்லாவிட்டால் சூடுபோட்ட பாகம் சீக்கொள்ளும் 18-நிர் மருந்துப் பட்டியில் கண்ட மருந்துநீரைக்கொண்டு வாயை அடிக்கடி கழுவவேண்டும். அரைமணி நேரத்திற்கொருதரம் இளஞ் சூடாயுள்ள வெந்நீரை அபானத்தின் மூலமாய் உள்ளே செலுத்தலாம். கொஞ்சம் உப்புக்கலந்த நீர்மயமாயுள்ள கஞ்சியை வியாதிகண்ட பிராணி குடிக்கும்படி வைக்கலாம். அதில் 7-நிர் மருந்துப் பட்டியிற் கண்ட உற்சாகமருந்து சேர்த்துக் கொடுக்கலாம். பெரும்பாலும் இந்த வியாதிகண்ட பிராணிக்கு விழுங்குவது அதிக கஷ்டமாயிருந்தால் அடைப்பு நேரிடாதிருக்கும்படி மருந்து கொடுப்பதில் வெகு ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். சுவாசிக்க மாட்டாமையினால் மரணம் நேரிடக் கூடியதாயிருந்தால் அதன் குரல்வளையைச் சற்றேறக்குறையத் தொண்டையின் மத்தியில் அறுத்துத் திறந்து அந்தத் திறப்பு வழியாகச் சுவாசிக்கும்படி செய்வதுண்டு. இப்படிச் செய்வதனால் இந்த நோய்கண்ட சில பிராணிகள் மரணத்தினின்று தப்புகின்றன. ஒரு மந்தையில் முதலில் ஒரு கால்நடைக்கு இந்த வியாதி கண்டவுடனே மற்ற தொத்துவியாதிகள் உண்டாகும்போது என்ன செய்யவேண்டுமென்று சொல்லியிருக்கிறதோ அதே முன்னெச்சரிக்கையான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். சில மேய்ச்சல் நிலங்களிலே சில பருவங்களில் இந்த வியாதி உண்டாகிறதாகத் தெரிந்திருக்கிறது. ஆகையால் அந்தக் காலங்களில் அந்த மேய்ச்சல் நிலங்களிலே கால்நடைகளை மேயவிடக்கூடாது.

(மென்னை அடைப்பான் முற்றிற்று) 4-வது அத்தியாயம் தொடரும்.



# ஜீவகாருண்ய போதம்.

## உயிர்ப்பிராணிகள் ஓலமிடல்.

(திரு. காந்திதாசன் எழுதியது.)

''பரமானந்த மிகவுங் கோண்டேன்'' என்ற சந்தம்.

இராகம்-தேசிக-தோடி-தாளம்-ஆதி.

### பல்லவி.

ஜீவகாருண்யம்! என்ப திலையோ?
சித்தம் கல் மலையோ? (ஜீ)

### அநுபல்லவி.

கோப மெங்கள் மேற் கொள்வது முறையோ?
கும்பிகளுக் கெங்களுடலது இரையோ?
பாபம் நாங்கள்முன் செய்தவக் குறையோ?
பதறி கதறி உயிர் பறிக்கின்றீர்! தெரியோம்! (ஜீ)

### சரணம்.

மனம் இரங்கிடவேண்டும் என்றும்! காடுமலைநதியில்
மனம் போலவே வாழ்கின்றோம் நன்று! அஃதறிந்தெங்கள்
இன முழுமையும் அழித்தால் என்றும்! தர்மசபையில்
தினமும் ஜனசமூகம் நின்று! பதிலுரைக்கத்
தேடியே! நாடியே! கூற்றுவனழைப்பான் தெரிவீர்!
கண்ணொடிக் கதவு
மூடிய மாடிமேலோடினாலும் விடான் உணர்வீர்!
பாசத்தாற் கட்டி
வாடிடச் சாடிடுவார் எமகிங்கரர் அறிவீர்!
வாடாத தேகம்!
ஆடிடுமே! உயிர் ஆடிடுமே! நன் கறிவீர்!
வாயில்லா ஏழைப்
பிராணிகளைப் பிடித்துவதைத்துச் சிதைக்காதீர்!
பாழும் வயிற்றுச் சுடுகாட்டில் புதைக்காதீர்!
பிராணி யின்றியே இளம்வயதில் மலைக்காதீர்!
தாசன் கண்ணான் சொன்னேன் தேகம் நிலைக்காதே (ஜீ)

---

# ஒரு சந்தேகம்.

நான் கொங்குநாட்டுச் சரித்திரம் எழுதிவருகிறேன். இதற்காக அங்கங்கே சென்று பழைய வரலாறுகளை விசாரித்துவருங் காலத்துச் சமத்தூர் பாளயகாரரவர்களிடம் ஒரு தாம்பிரசாசன மிருந்தது. அதனிடையே ஒரு வெண்பாவைக் கண்டேன்.

> "கொங்குமலை நாடுங் குளிர்ந்தநதி பன்னிரண்டுஞ்
> சங்கரனார் தெய்வத் தலமேழும்-பங்கயஞ்சேர்
> வஞ்சிநகர் நாலும் வளமையா ஆண்டருளுங்
> கஞ்சமலர்க் கையுடையான் காண்"

......நாலுவஞ்சி சேரப்படைத்த சேரமான் பெருமாளையனவர்கள்........என்றுளது.

பன்னிரண்டு நதிகள், நான்கு வஞ்சிநகரம் என்பவற்றின் விவரம் தெரிந்த அறிஞர்கள், பத்திரிகை வாயிலாக வேனும் கடிதமூலமாக வேனும் தயவு செய்து தெரிவிப்பார்களெனக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இங்ஙனம்
திரு. முத்துசாமிக் கோனார்.
சைவசமாஜம், திருச்செங்கோடு.

# அசதிக் கோவை வேண்டும்.

தெய்வப் புலமைவாய்ந்த ஔவைப்பிராட்டியார் அருளிய அசதிக்கோவைச் செய்யுட்கள் யாரிடமிருப்பினும் தயவுசெய்து எழுதியனுப்புவோர்க்குச் செய்யுளொன்றுக்கு அரை ரூபா வீதம் விலை கொடுக்கிறேன். ஆனால், அற்றுங்கிய—அருஞ்சஞ்ச-அழற்கட்டு-அலைகொண்ட—அறங்காட்டிய—ஆலவட்—ஆய்ப்பாடி-ஆதித்தனை-ஆடுங்கடை—ஆயிரம் என்னும் முதலையுடைய செய்யுட்களல்லாத வேறு செய்யுளாக இருத்தல் வேண்டும். தங்களிடமிருக்குஞ் செய்யுட்களின் தலைப்புகளைமாத்திரம் எழுதியனுப்பினால் வேண்டுமென்பதைத் தெரிவிப்பேன். பின் முழுச்செய்யுளையும் எழுதியனுப்பினால் உடனே மணியார்டர் அனுப்புவேன்.

கிடைத்தமட்டிற் செய்யுட்களைத் திரட்டவேண்டு மென்ற கருத்தாதலின், பணம் விரும்பாது விருப்புடனனுப்பின் மிக்க வந்தனத்துடன் அவற்றைப் பெற்று மகிழ்வேன்.

திரு. முத்துசாமிக் கோனார்.
சைவசமாஜம், திருச்செங்கோடு.

256 A

# யாதவ மித்திரன் சந்தா விபரம்.

| | | |
|---|---|---|
| இந்தியா, சிலோன், பர்மா முதலிய உள்நாட்டிற்கு வருஷம் 1-க்கு | ரூ | 1—0—0 |
| பினங்கு சிங்கப்பூர், முதலிய வெளிநாட்டிற்கு வருஷம் 1-க்கு | ரூ | 1—8—0 |

தனிப்பிரதி விலை அணா 2.

ஒரு வருடத்திற்குக் குறைந்த சந்தாக் கிடையாது.

மாதிரிப் பிரதி வேண்டுவோர்
இரண்டரையணா, தபால் தலை அனுப்பவேண்டும்.

1. சந்தாதாரராய்ச் சேர்கின்றவர்கள் பெயரையும் விலாசத்தையும் தெளிவாய் எழுதியனுப்பவேண்டும்.

2. எப்பொழுதும் சந்தாத் தொகையை முன் பணமாகச் செலுத்தவேண்டும். வி. பி. மூலமாகவும் பெற்றுக் கொள்ளலாம். சந்தாத்தொகையை முன்பணமாக மணியார்டர் செய்தால் 2-அணாத்தான் செலவாகும். வி. பி. மூலம் பத்திரிகையை வரவழைப்பதில் 3-அணா அதிகச் செலவாகும், ஆதலால் முன்னடி மணியார்டர் அனுப்பிப் பெற்றுக்கொள்வதே நலம்.

3. எந்த மாதத்தில் சேர்ந்தாலும் அவ்வருஷ ஆவணி மாதம்முதல் கணக்கு வைக்கப்பட்டு ஆவணி மாதப் பத்திரிகை முதல் சேர்த்தனுப்பப்படும்.

4. யாருக்கேனும் சஞ்சிகை வந்து சேராவிட்டால் அம்மாதமுடிவிற்குள் தங்கள் சந்தா நம்பருடன் தெரிவித்துப் பெற்றுக் கொள்ளலாம். அதற்குப் பின்னர் தெரிவித்தால் விலை செலுத்தியே பெற்றுக் கொள்ளவேண்டும்.

5. இடம் மாறும் சந்தா நேயர்கள் தங்கள் புது விலாசத்தைத் தெரிவித்து, அது விபரத்தைத் தபாலாபீஸாரிடமும் அறிவித்துவிட வேண்டும்.

6. சந்தா நம்பரைக் குறிப்பிடாத கடிதங்களைக் கவனிக்க முடியாது. பதில் விரும்புவோர் தபால் தலை அனுப்பவேண்டும்.

விளம்பர விகிதம்.

| | | |
|---|---|---|
| 1-பக்கத்திற்கு | ரூ | 10—0—0 |
| ½-பக்கத்திற்கு | ரூ | 5—8—0 |

நீண்டகால விளம்பரங்களுக்கு யாதவ மித்திரன் ஆபீஸிற்கு எழுதித் தெரிந்து கொள்ளவும்.

ஐந்தாவது யாதவமகாநாடு போட்டோ படங்கள்.
வேண்டியவர்கள் யாதவமித்திரன் ஆபீஸுக்கு விபரமாகத் தெரியப்படுத்துவதுடன் முன் பணமாக ரூ 1—5—0 மணியார்டர் மூலம் அனுப்பிவைக்கவும்.

716 Reg., No. M - 2527







யாதவமக்களின்
முன்னேற்றங்கருதி வெளிவரும்

# மாதப்பத்திரிகை.


| தொகுதி 3 | ஆங்க-(ரஸ) சித்தி-வைகா<br>1932 ஏப்ரல், மே | பகுதி 9,10 |
|---|---|---|






பொருள் [illegible]


[illegible] 257
[illegible] 261
[illegible]
[illegible] 267
[illegible] 270
[illegible] 279
[illegible] 284
[illegible] 28[illegible]
[illegible] 289
[illegible] 292
[illegible] 301
[illegible] 306
[illegible] 308
[illegible]
[illegible] 311
[illegible] 314
[illegible] 31[illegible]


SEP 1932







Managing Editor:
கை. ப. கோபாலகிருஷ்ணக் கோன்,

256

# யாதவமித்திரன்.


ஆசிரியர் கூட்டத்து அங்கத்தினர்கள்

(Editorial Board Members.)

தலைவர்.

1\. திருவாளர், ஆ. கார்மேகக்கோனார் அவர்கள்
தலைமைத்தமிழாசிரியர், அமெரிக்கன் கல்லூரி, மதுரை.

2\. ,, ச. செல்லம் அவர்கள் (யாதவர்) சுசீந்திரம்.

3\. ,, J. சக்கரபாணி நம்பியார் அவர்கள், பி. ஏ., பி. எல்.
ஹைகோர்ட் வக்கீல், வைஸ் பிரசிடெண்டு.
ஜில்லாபோர்டு, திருநெல்வேலி.

4\. ,, V. கிருஷ்ணரெட்டியார் அவர்கள் (யாதவர்) பி. ஏ. பி. எல்.,
ஹைகோர்ட் வக்கீல், வேலூர்.

5\. ,, தி. அ. முத்துசாமிக் கோனாரவர்கள், வித்வான்,
திருச்செங்கோடு.

6\. ,, K. வீராசாமிப்பிள்ளை அவர்கள், (யாதவர்)
தலைமைத் தமிழாசிரியர், முனிசிபல் உயர்தர கலாசாலை,
திண்டுக்கல்.

7\. ,, R. வேங்கடாசலம்பிள்ளை அவர்கள், (யாதவர்)
தலைமைத் தமிழாசிரியர்,
S. P. G. உயர்தரக் கலாசாலை, தஞ்சாவூர்.

8\. ,, M. V. வேணுகோபாலப்பிள்ளை அவர்கள், (யாதவர்)
தலைமைத் தமிழாசிரியர், E. L. M. F. ஹைஸ்கூல்
புரசபாக்கம், சென்னை.

9\. ,, ஐயம்பெருமாள் கோன் அவர்கள், தமிழாசிரியர்,
ஸெயின்ட் ஜோஸப் காலேஜ், திருச்சினாப்பள்ளி.

10\. ,, K. கோபாலகிருஷ்ணன் அவர்கள், B. Sc. (Hons.)
M. R. A. S. பர்மா.


## வேண்டுகோள்.

வியாசங்கள் எழுதுவோர் தெளிவாகவும் தூஷணைகளின்றியும் முழுவிலாசத்துடன் சமூக முன்னேற்றத்திற்குரியனவும் அறிவு வளர்ச்சிக்குரியனவுமாகிய பொது விஷயங்களைப்பற்றிச் சுருக்கமாகவும், நடை எளிதாகவும் எழுதியனுப்பவேண்டும்.

பத்திரிகை வேண்டுவோரும், விளம்பரங் கொடுக்க விரும்புவோரும் அடியிற்காணும் விலாசத்திற்கு எழுதுக.


யாதவமித்திரன் ஆபீஸ், ஸ்ரீ கோபால் மஹால்,
வடக்குச் சித்திரைவீதி, மதுரை.


3 SEP 1932

# யாதவமித்திரன்.

ஒரு மாதப்பத்திரிகை.

எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்.


| | | |
|---|---|---|
| தொகுதி 3. | பிரஜோத்பத்தி௵ சித்திரை௴ 1932௵ ஏப்ரல்௴ | பகுதி 9. |


## கடவுள் வணக்கம்.

கார் வண்ணம் திருமேனி கண்ணும் வாயும்
கைத்தலமும் அடியிணையும் கமல வண்ணம்
பார் வண்ண மடமங்கை பத்தர் பித்தர்
பனி மலர் மேற் பாவைக்குப் பாவம் செய்தேன்
ஏர் வண்ண என் பேதை என் சொல் கேளாள்
எம்பெருமான் திருவரங்கம் எங்கே என்னும்
நீர் வண்ணன் நீர் மலைக்கே போவே னென்னும்
இதுவன்றோ நிறை யழிந்தார் நிற்குமாறே

திருமங்கையாழ்வார்.

## இல் வாழ்க்கை.

(தமிழ்ப்புலவர் திரு. மே. வீ. வேணுகோபாலப்பிள்ளை)

**அன்பின்மிக்க யதுகுல சகோதரிகளே!**

ஔவை யென்னுங் அருந்தமிழ் மூதாட்டியின் வரலாற்றின் பகுதியில் ஒரு சிறிதேனும் உணராதார் நம் தமிழ் நாட்டில் இரார் என்றெண்ணுகிறேன். அவ்வம்மை ஒருபோது மன்னன் ஒருவனைத் தன் மனமார வாழ்த்தக் கருதி, அவன் சபையிற் சென்று,

புலவர் பலருக்கிடையில் நின்று, 'வரப்புயர' என வாழ்த்தியதாகக் கன்ன பரம்பரையான செய்தி யொன்று வழங்கிவருவது பலர்க்குந் தெரிந்திருக்கக்கூடும். ஔவை அங்ஙனங் கூறியதைக் கேட்ட மன்னனும் மற்றைப் புலவரும் அவள் கருத்தறியாது விழிக்க, ஔவை தன் கருத்தை விளக்கு முறையில்,

"வரப்புயர நீர் உயரும்;
நீர் உயர நெல் உயரும்;
நெல் உயரக் குடி உயரும்;
குடியுயரக் கோன் உயரும்" எனக் கூறினளெனக்

கேள்வியுறுகின்றோம்.

கோன் உயர்தற்கு வரப்புயர்தல் இன்றியமையாதென்பது இதனால் தெளிவாயிற்று. இவ்வாறே இல்வாழ்க்கையின் உயர்வு நாட்டின் உயர்வுக்கு அடிப்படையாமெனக் கொள்ளுதல் பொருந்துமல்லவா? அங்ஙனமாயின், அவ்வில்வாழ்க்கை எங்ஙனம் அமைதல் வேண்டும் என்பதைப்பற்றி ஒரு சிறிது ஆராய்வதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

இல்வாழ்க்கை யென்னும் பெரு நாடகத்தை இனிது நடித்துக் காட்டற்கு முதற் பாத்திரர்களாக அமைந்தவர்கள் ஒருவனும் ஒருத்தியுமே. அவ்வொருவனும் அவ்வொருத்தியும் சரியான குலமும் நலமும் அறிவும் பெற்றிருந்தாலன்றி, இல்லறமாகிய நல்லற நாடகம் இனிது நடப்பதற்கு ஏது உண்டோ? இல்லை! இல்லை!! முக்காலும் இல்லையெனத் துணிந்து கூறலாம்.

நாடக மேடையில் அரிச்சந்திரனைத் தோன்றி நடிக்கும் ஆடவன் நடையுடை பாவனைகளிலும் சொல்லாற்றலிலும் அரிச்சந்திரனே என்று காண்போரும் கேட்போரும் கருதும்படி நடித்தாலன்றி, அந்நாடகம் நாடகமாகுமோ? பதியிழந்து நிதியிழந்து பாலனையிழந்து ஒருவனுக்கடிமைப்பட்டு அல்லலுற்று அழும் சந்திரமதிக்குப் பட்டுப் புடைவையும் பனாரஸ் இரவிக்கையும் கைக்கடிகாரமும் வைராபரணங்களும் காலில் ஜப்பான் மிதியடியும் எங்ஙனம் பொருந்தும்? இத்தகைய செல்வக் கோலத்தோடு இன்பஞ்செறிந்த சிங்கார வர்ணமெட்டுகளுடன் பாடல்களும் அமைந்துவிட்டால், காண்போரும் கேட்போரும் அரிச்சந்திர நாடகமென அதை எப்படிக் கருதமுடியும்? கருத இயலாதன்றோ? அரிச்சந்திரனை நடிக்



கும் நாடக பாத்திரன் அரிச்சந்திரனே யென்று கண்டோர் கருதும்படி நடிக்காவிட்டாலும், 'இவன் அரிச்சந்திரனைப் போல இருக்கிறான்', என்றாவது கருதும்படி நடிக்க வேண்டாமா?

ஆதலின், இல்வாழ்க்கையை இனிது நடத்த விரும்பும் காதலர்கள், மேற்கூறிய ஒழுங்கற்ற நடிகர்களைப்போலில்லாமல், உத்தம நடிகர்களாக அமைந்து நடித்தல் இன்றியமையாதது. நல்ல மனைவி யொருத்தி தன் கணவன் கண்டு களித்தற்குரிய வகையில் தன் நடையிலும் உடையிலும் பாவனையிலும் கண்ணோக்குள்ளவளாக இருத்தல் வேண்டும். அங்ஙனமின்றி, அவள் வீண் ஆடம்பரங்களில் நாட்டமுடையவளாய்த் தன் கணவன் வருவாய்க்குத் தகுந்த செலவைச் சிறிதும் அறியாதவளாய், நெறி கடந்து நடப்பவளாய் அமைந்தால், அவ்வில்வாழ்க்கை பண்பும் பயனும் அமையாத பாழ் நரக வாழ்க்கையாகு மென்பதில் ஐயமென்ன? பத்து ரூபாய்க்குப் படாதபாடெல்லாம் பட்டுப் பரிதபிக்கும் ஆடவன் ஒருவன், தன் மனைவி பட்டுச் சேலையும் பனாரஸ் இரவிக்கையும் பற்பல பணிகளும் மேற்கொண்டு ஆடம்பரம் காட்டக் கருதினால், என்ன செய்வான்? அப்படிப்பட்ட மனைவியை அவன் எங்ஙனம் விரும்புவான்? 'இல்லாள் அகத்திருக்க இல்லாத தொன்றில்லை' என்னும் அனுபவம் நிறைந்த வாக்கியத்திற்கு அவன் என்ன பொருள் கொள்வது?

"பத்தாவுக் கேற்ற பதிவிரதை யுண்டானால்
எத்தாலுங் கூடி யிருக்கலாம்—சற்றேனும்
ஏறுமா றாக இருப்பாளே யாமாகில்
கூறாமற் சன்னியாசம் கோள்" என்னும் ஔவை

வாக்கு அவனுக்கு அரிய உபதேசமாகுமன்றோ?

உடையும் அணியும் ஒரு புறம் கிடக்கட்டும். வாய்ச் சொற்கள் எத்தனை வம்புகளை விளைக்கின்றன? 'நீ சாப்பிட வா,' என்று அறியாமையால் தன் கணவனைக் கனிவுடன் ஒருமைச் சொல்லால் அழைக்கும் மனைவியைக் கற்ற கணவன் காதலிப்பது கூடுமோ? 'நீ என்ன செய்து விட்டாய்? கம்மல் சிமிக்கைகள் காசு மாலைகள் கண்டசரப்பளி கணையாழி இவற்றைக் காலிலிருந்து தலைவரையில் பூட்டிவிட்டாயோ? அண்டை வீட்டு அமிர்தம் செய்த புண்ணியம் நான் செய்தேனோ? திருடப் போனாலும் தெசை வேண்டாமா?

பஞ்சைக்குக் கொடுக்கப் பன்னிரண்டு வருஷம் படாதபாடு பட்டுப் பஞ்சவர்ணக் கிளியை வளர்த்த பாவிகளுடைய புத்திக்குப் பட்டம் கட்டவேண்டும்' என்று சரமாரியாகப் பல்லவி பாடும் பாவை ஒருத்தியைச் சுயமரியாதை இன்னதென்றறிந்த எவன்றான் பெண்ணெனக் கருதுவான்? சொன்னவை பொருளற்ற சொற்களாயினும், அவற்றினின்று விளைவன கருகரிய பெரும்பழிகளல்லவோ?

இனி நடையை ஒரு சிறிது கவனிப்போம்; மனைவி உள்ளன்புடையவளாயினும், அவ்வுள்ளன்பை நடைமுறையில் வெளிப்படுத்தாவிட்டால், அவளது உண்மையன்பு கணவனுக்கு எப்படிப் புலப்படும்? கட்புலனுக்கு எட்டாத கடவுளைக் கல்லில் கருதிய உருவமைத்து வணங்குவது எதற்காக, ஆதலின், உள்ளக் கனிவை உருப்படுத்திக் காட்டும் நல்ல நடை மனைவிக்கு அமையவேண்டுவது அவசியமன்றோ? ஆயின், இந்நடை அவர்களுக்கு எவ்வாறு அமையும்? 'நடையும் நடைப் பழக்கம்' அன்றோ? ஆதலின், நன் மனைவி தனக்கு முன்மாதிரியாக அமைந்துள்ள திருவள்ளுவர் மனைவியார் வாசுகியம்மையார், குசேலர் மனைவியார் சுசீலையம்மையார், காரைக்காலம்மையார், மங்கையர்க்கரசியார், கண்ணகியார் முதலிய எண்ணற்ற கற்பரசிகளின் வரலாறுகளைப் போற்றிக் கற்று, அவர்களுடைய நல்லொழுக்கத்தைப் பின்பற்றி நடத்தல் வேண்டும். "கல்லென்றாலும் கணவன்; புல்லென்றாலும் புருஷன்' என்னும் நம் நாட்டு முதுமொழியின் முழுப்பொருளை நம் பெண்மணிகள் ஆராய்ந்து உணர்வார்களானால், அவ்வெண்ணமும் உணர்ச்சியுமே நாளடைவில் கல்லையும் புல்லையும் ஒத்த கசடர்களையும் உத்தமக் கணவர்களாக்கிக் காட்டும் என்பதில் தடையென்ன? எம் குலப் பெருஞ் சகோதரிகளே, நீங்கள் இதை நன்கு கவனியுங்கள். இதை விரதமாகக்கொண்டு நீங்கள் நடந்து பாருங்கள். உங்கள் இல்வாழ்க்கை எவ்வளவு நல்வாழ்க்கையாக விளங்குகிறது என்பதை நீங்கள் மிக விரைவில் உணர்வீர்கள். எத்துணைச் சீரும் சிறப்பும் பெற்ற குடும்பமும் இவ்விரதத்தைக் கைக்கொள்ளாவிட்டால் ஏழாகும நரகினும் கீழாகும் நரகமாம் என்பது உண்மை.

'பெண்வயப்பட்டதே இப்பேருலகம்' என்பது அறிஞர் கருத்து. ஆகையால், பெண்மக்கள் அடையும் திருத்தம் ஆடவர்களை விரைந்து பற்றும் என்பதுண்மை. ஒவ்வோரில்லமும் இவ்வகையில் சிறப்படைத் தோங்குமானால், உலகமே சிறப்படைந் தோங்குமென்பதைச் சாற்றவும் வேண்டுமோ?

# *சுயமதிப்பு.

(திரு. ரா. தேசிகன்)

தினகரன் ஏதேனும் உத்தியோக மொன்று கேட்கிறான். அவனை அரசாங்க வரவு செலவு காரியாலயத்தில் எடுத்துக் கொள்வதா? அல்லது இராணுவத்தில் அமர்த்துவதா? இவைகளைப்பற்றிக் கேள்வி இல்லை. அனுகூலம் ஒன்றே. இதனை நிர்ணயிக்க வேண்டியதால், எது அனுகூலமானதோ அதுவே தேவை. தினகரன் பண விவகாரங்களைக் கவனித்துக் கணக்குகள் தயாரித்துக்கட்ட எவ்வளவு கெட்டிக்காரனோ, அவ்வளவு ஆயுதந் தாங்கிப் போர் புரியச் சமர்த்தனுவான். அவன் எல்லாவற்றிலும் வல்லவன் என்று அவன் நண்பர்கள் கூறுகிறார்கள். அவனுக்கு ஒரு விஷயத்தின் சாதுரியம் மற்றொரு விஷயத்தின் சாதுரியத்தைக் காட்டினும் மேம்பட்ட இல்லை. அதாவது அவன் எதற்கும் அருகன் இல்லை என்பதே.

பலர் இதற்கிணங்க இளமைப் பருவத்தில் தங்களைப் பெரிதாக எண்ணி, சோம்பலாலோ அல்லது சுகானுபவ ஆவலாலோ, கெடுத்துக்கொண்டு, சிறிது வயதேறின காலத்தில், பிறர்க்குதவியற்ற நிலையில் அல்லது வறுமையில் இருந்தால், அரசாங்கம் தங்களுக்கு ஒரு உத்தியோகமோ அல்லது உதவியோ கொடுக்குமென்று நினைக்கிறார்கள். இத்தகையோர் பின் வரும் கற்பனையை மறந்து மதிப்பிழக்கிறார்கள். மனிதர்கள் தங்கள் இளமைப் பருவத்திலேயே, கல்வியினுலும் முயற்சியினுலும் தாங்கள் இன்னார் என்று ஆக வேண்டும். அரசாங்கம் அவர்களின் வேலைத் திறத்தையும் கல்வியின் விளக்கத்தையும் தேடும் நிலைமையில் இருத்தல் வேண்டும். அரசாங்கம் தன் சொந்த அனுகூலங்களை அவர்கள் மூலம் பெற்றுக்கொண்டே அவர்களின் உன்னத வாழ்க்கைக்கும் ஐஸ்வரியத்திற்கும் ஆதாரமாய் இருத்தல் வேண்டும்.

* இது பிரஞ்சு நூலாசிரியர் "ஷத்தாபிரியான்" என்பார் எழுதிய ...குணங்கள் என்னும் நூலைத் தழுவி வரைந்தது.

ஒரு குறித்த விஷயத்தில் நாம் திறமைபெற முயற்சித்தல் வேண்டும். மற்றவை நம்மைச் சேர்ந்தவையல்ல. அவைகளுக்குப் பிறர் இருக்கின்றனர்.

* * * *

ஒரு சித்திரத்தில் காணும் நிழல் அச்சித்திரத்தில் உள்ள உருவத்துக்கு எத்தன்மைத்தோ, அத்தன்மைத்தே மதிப்புக்கு அடக்கம். சாதாரண புறக்கோலம் சாமானிய மனிதர்களின் ஆடையாகும். அது அவர்களுக்கென அவர்கள் அளவிற்கு அமைந்தது. தங்கள் ஜீவியத்தில் அரிய பெரிய காரியங்களைச் செய்த அறிஞர்களுக்கு அப் புறக்கோலம் ஓர் சிறந்த அணியாகும். அவ்வணியை, புறக்கணிக்கப்படா, ஆனால் நன்றாக விளக்கமுற்று நிற்கும் ஓர் அழகிற்கு ஒப்பிடலாம். சிலர் தாங்கள் எடுத்த காரியம் ஏறக்குறைய ஒழுங்காக நிறைவேறிய உடனே தங்களைத் தாங்களே மதித்துச் சந்தோஷமுற்று, தாங்கள் அறிஞராகிவிட்டதாக எண்ணி, அடக்கம் அறிஞரிடத்தமைவது என்று சொல்லக் கேட்டு, அடக்கத்தைக் கைக்கொள்ள முயற்சிக்கின்றனர். இதனால் சாதாரணவற்றையும இயற்கையானவற்றையும் மாறுபடச் செய்கின்றனர். கதவின் மேற்சட்டம் இடிக்குமென அஞ்சி தலை குனிந்து உள்ளே செல்லும் குள்ள மனிதர்களின் செய்கைக்கு இவர்கள் செய்கை ஈங்கு ஒப்பாகும்.

* * * *

தனபாலன்மீது தங்கம் பிரகாசிக்கிறது. வர்த்தகரிடத்திலுங்கூட அத்தங்கம் பிரகாசித்துக் கொண்டுதானிருக்கிறது. தனபாலன் பட்டுப் பீதாம்பரங்கள் அணிந்திருக்கிறான். அப் பட்டுப் பீதாம்பரங்கள் கடைகளிலும் விரிக்கப்பட்டுக் கிடக்கின்றன. தனபாலன் உடைகளில சித்திரக் கரைகளும் சரிகை வேலைகளும் நேர்த்தியாக அமைந்திருக்கின்றன. அவைகளைச் செப்பஞ் செய்த வேலைக்காரனின் திறத்தைத்தான் மெச்ச வேண்டும். மணி என்னவென்று கேட்டால் தனபாலன் தன் சட்டைப் பையிலிருந்து ஓர் உயரிய அபூர்வ கெடியாரத்தை இழுத்துப் பார்க்கிறான். அவன் காதிலும் கையிலும் வைரங்கள் மின்னுகின்றன. பிரயோஜனத்திற்கன்றி தற்பெருமைக்காக அணியப்படும் வஸ்துக்களில் ஒன்றேனும் அவனிடத்தில் குறைவுபடுவதில்லை. ஆடைகளையும் ஆபரணங்களையும் அப்புறப்படுத்தித் தனபாலனைப் பார்ப்போம். அவன் இன்னானென்று நமக்கு ஏறக்குறையத் தெரிகிறது.



அவன் செல்லும் புதுமேனியான ஊர்தியைக் கொண்டும், அதை யிழுத்துச் செல்லும் ஆறு அழகிய குதிரைகளைக் கொண்டும், அதன் பின்னால் தொடர்ந்து ஓடிவரும் ஏவலர் கூட்டத்தைக் கொண்டும், தான் பெரிதும் மதிக்கப்படுவதாக எண்ணி அவன் மோசம் போகிறான். அவனுக்குப் புறம்பான இந்த ஆடம்பரங்களை நீக்கினால் அவன் ஒரு பதராக இருப்பதை அவனைப் பார்ப்போர் காண்பார்கள். அவனும் அவரவர்கள் பார்வையைக் கொண்டு தான் ஒரு பதர் என்று உணர்ந்துகொள்வான்.

* * * *

சிலர் தம்மை அறியாதாரை வலியச் சென்று காண்கின்றனர். தம்மை அறியாத சிலரை வேறு சிலரிடம் அழைத்துச் சென்று அறிமுகப்படுத்தி வைக்கும்படி வற்புறுத்துகின்றனர். கேள்வி மாத்திரத்தாலே தெரிந்திருக்கக்கூடிய ஒருவருக்கு நிருபங்கள் வரைந்தனுப்புகிறார்கள். இராஜேந்திரன் இத்தகையோரைச் சேர்ந்தவன். கௌரவமான பெரியோர் கூட்டத்திலேயே இராஜேந்திரன் வலிய நுழைந்து கொள்ளுகிறான். அக் கௌரவஸ்தர்களுக்கு இவன் இன்னானென்றே சில சமயம் தெரியாதிருக்கிறது. அக் குழுவில் தன்னை எவரும் எதுவும் கேட்கா முன்னம் இராஜேந்திரன் குறுக்கிட்டுப் பேசுகிறான். பெரும்பாலும் அவன் பேச்சு ஏளனத்திற்குரியதாயிருக்கிறது. ஒரு நாள் பொதுஜனக் கூட்டம் நடக்கும் ஓர் கட்டிடத்திற்கு இராஜேந்திரன் சென்றான். அங்குள்ள எவரையும் கவனியாமல் ஓர் ஆசனத்தில் அமர்ந்துகொண்டான். சற்று நேரத்திற்கெல்லாம் ஒருவர் அவனை அணுகி "ஐயா! இது கூட்டத்தின் காரியஸ்தர் இருக்கும் இடமாகும். தாங்கள் வேறிடம் தேடிக் கொள்ளுங்கள்" என்று கூறினார். இராஜேந்திரன் அவ்விடத்தை விட்டுப் போய் வேறொரு ஆசனத்தில் உட்கார்ந்து கொண்டான். அவனைச் சுற்றி இருந்தவர் எல்லாம் நகைக்க ஆரம்பித்தனர். அவன் முகத்தில் எவ்வித மாறுதலும் காணப்படவில்லை. கூட்டத்தில் இருந்த ஒருவர் அவனை நோக்கி, "சமூக மரியாதை அறியாத மனிதரே! தலைவர்க்குள்ள இருக்கையில் நீர் உட்கார்ந்து கொண்டது தகுதியோ? நீர் வெளியில் செல்வதே உமக்குப் பொருத்தமானது" எனக் கடுகடுத்துச் சொன்னார். அச் சொற்கள் இராஜேந்திரனுக்கு நாணத்தைத் தரவில்லை என்றால் அவனை என்னென்று புகல்வது? இவன்தான் சுயமதிப்பற்றவனாவன்.

# அனுமன் ஆற்றல்.

திரு. தொ. மு. பாஸ்கரத்தொண்டைமான். பி. ஏ.

(237-ம் பக்கத் தொடர்ச்சி.)

அவன் செய்கின்ற செயல்கள் யாவும் அவன் உள்ளக் குறிப்பைத் தெள்ளிதில் உணர்த்துவதுடன் அவைகளில் ஆழ்ந்த கருத்துக்கள் அமைந்திருக்கக் காண்கின்றோம். இவ்விடத்துத் தான் கம்பர் கவியாற்றல் அனுமன் செயலாற்றலாய் அமைந்து கிடக்கின்றது. சீதையைத் தேடிச்சென்ற அனுமனும் மற்றைய வானரங்களும் திரும்பிக் கிட்கிந்தையை அடைகின்றனர். அத்தோற்றத்தைக் கண்முன் தெற்றெனக் கண்ட வான்மீகர் அவ்வானரங்களெல்லாம் "கண்டோம் சீதையை" என்று குதித்தன என்று கூறுகின்றார். ஆனால் கவியரசராகிய கம்பர் கண்ணுக்கும் அதே தோற்றம் காணப்படுகின்றது. ஆனால் வான்மீகியின் கட்புலனுக்கும் செவிப்புலனுக்கும் தெரிந்தவாறு கண்டோம் சீதையை என்று ஒரு வானரமாவது குதித்ததாக இவர் கண்ணுக்குத் தோன்றவில்லை ஆனால் இவ்விடத்து அனுமனது செயலாற்றலை விளக்க, ஒரு சித்திரம் தீட்டுகின்றார். இராம இலக்குமணரும் சுக்ரீவனும் தெற்கு நோக்கி அனுமன் கீழ்ச்சென்ற வானரங்களை எதிர்பார்த்த வண்ணமாய் அமைந்திருக்கின்றனர். அனுமன் தலைமையில் வானரப்படைகள் தெற்கிருந்து வடக்கு நோக்கி வருகின்றன. தலைவனும் அனுமன் இராமனது திருவடியில் வடக்குநோக்கித் தண்டமிடுவதை விடுத்து அவனுக்கு நேரே காலை நீட்டிக்கொண்டு தெற்கு நோக்கித் தண்டமிடுகின்றான். பக்கலிலிருந்த யாவரும் வியப்புற்று, அனுமன் அடாத செயல்செய்து விட்டதாகக் கருதி ஒருவரையொருவர் பார்க்கின்றனர். இராமபிரான் ஒருவனே அவன்றன் கொள்கையைக் குறிப்பினால் உணர்ந்தான். சீதை தெற்கேயிருக்கிறாள்,



அவள் நல்ல நிலையில் இருக்கிறாள், அவள் நான் வணங்கத்தக்க வெற்றியை உடையவளாய், கற்புடை மங்கையாய் இன்னும் இலங்குகின்றாள் என்னும் குறிப்புகளால் வெள்ளிடைமலைபோல் விளங்கத் தன் செயலால் காட்டினான் என்பதை உணர்ந்தான் இராமன். கண்டேன் சீதையை என்று மட்டும் அனுமான் கூறியிருப்பானேயானால், அவள் எங்கே இருக்கிறாள் அவள் சுகமெப்படி அவளது நிறையின் நிலை எப்படி என்ற கேள்விகள் எழுந்திருக்கும். நெடுநாளாய்த் தலைவியைப் பிரிந்து வருந்தும் ஒரு தலைவனை இவ்வளவு கேள்விகட்கும் ஆளாக்காது தனது ஒரே செயலினால் காட்டிய அனுமனது ஆற்றலேயாற்றல், அவ்வாறமைத்த கம்பர் கவிப்பெருமையே பெருமை. இவ்வளவு கருத்துக்களையும் கம்பர்,

"எய்தினன் அனுமனும் எய்தி யேந்தல்தன்
மொய்கழல் தொழுகிலன் முளரி நீங்கிய
தையலை நோக்கிய தலையன், கையினன்
வையகம் தழீஇ நெடிதிறைஞ்சி வாழ்த்தினான்"
"திண்டிறல் அவன் செயல் தெரிய நோக்கினான்
வண்டிய லோதியும் வலியள் மற்றிவன்
கண்டது முண்டு அவள் கற்பும் நன்றெனக்
கொண்டனன் குறிப்பினால் உணருங் கொள்கையான்"

என்ற இரண்டு செய்யுட்களில் அமைத்துக் கொடுத்திருக்கின்றார். ஆகவே அனுமனது மெய்யாற்றல் சொல்லாற்றல் செயலாற்றல் எல்லாம் கம்பரது கவியாற்றலினால் அழகுறுவதாயிற்று.

அனுமனைப்பற்றிக் கம்பர் கொண்டிருந்த கருத்துத்தானென்னையென்றால், "தன் பெருங்குணத்தால் தனனில் தானலது ஒப்பிலாதான்" என்ற உயரிய கொள்கையே யாகும். "ஆற்றலும் நிறையும் கல்வியமைதியும் அறிவும் என்னும் வேற்றுமை இவனோடில்லை" என்று கவி கூறுந் திறம் அனுமன் தனிப் பெருமையினை நன்கு விளக்குவதாகும். அனுமன் ஆற்றல் மிக்க தலைவன் என்பதோடமைட்டும் அமையாது தமிழ்மக்களில் கலைமெல்லாம் கனிந்து விளங்கிய பேருருவம் என்றே கொண்டு கம்பர் கவிகளால் அனுமனைப்புகழ்ந்துரைக்கின்றார். பண்டைத் தமிழகத்து அரசியல் முறையை ஐம்பெருங்குழுவும், எண்பேராயமும், பாவைமன்றமும் 'இன்னனைய பிறவும் அழகு செய்கின்றன. இவைகளில் அரசர்க்கறிவுறுத்தும் அமைச்சர், காலக்கணிதர், சேனைபதியர், தூதுவர் ஒற்றர் ஐம்

34

பெருங்குழுவினரின் தன்மையெல்லாம் ஒரு பெரும் உருவினனை அனுமனிடத்து விளங்கக் காண்கின்றோம். அனுமன் போர்க்களத்தில் ஒப்பற்ற சேனாவீரனாய் விளங்கியதும், சீதையைத் தேடிச் சென்று, காலமறிந்து, அண்டர் நாயகனுக்குத் தூதுபோய் அரக்கர் நாட்டில் ஒற்றாடி தன்னில் மறைந்து கிடந்த தன்மையெல்லாம் விளக்கினான் என்பதும் எவரும் அறிந்த உண்மை. சோமேசர் முதுமொழி வெண்பாவில் சிவஞான சுவாமிகள் கூறும்.

> "கால் சேய் கதிர்சேயைக் காத்து அரசன் நட்புதவித்
> தூலமுடி சூட்டுவித்தான் சோமேசா—சாலப்
> பிரித்தலும் பேணிக் கொளலும் பிரிந்தார்ப்
> பொருத்தலும் வல்ல தமைச்சு"

என்ற செய்யுளில் அமைச்சனது இலக்கணத்திற்கு எடுத்துக் காட்டாக அமைந்த இலக்கியம் நம்மனுமனே யாவன்.

இவ்வாறு ஆற்றல் சால் அனுமன் அடக்கமுடையவனாயும் திகழ்கின்றான். ஆற்றலும் அடக்கமும் உடன் செல்லுவதாயிற்று. இவன் இலங்கை சென்று அவ்விடத்துத் தான் நிகழ்த்திய வீரச் செயல்களை யெல்லாம் ஒருவருக்கும் தானேயுரைத்தானில்லை. "சென்றேன் சீதையைக் கண்டேன் மீண்டேன்" என்றமட்டில் நிறுத்திவிட்டான். ஆனால் கவியரசர் கம்பர்

> 'பொருதமை புண்ணே சொல்ல, வென்றமை போந்த தன்மை
> உரை செய்ய, ஊர் தீயிட்டது ஓங்கிடும் புகையே ஓதக்
> கருதலா பெருமை தேவி மீண்டிடாச் செயலே காட்ட
> தெரிதர நன்குணர்ந்தேம் என்னினிச் செய்தும் என்றார்"

என்ற செய்யுளில் அனுமனது அடக்கத்தையும் வானரர் அறிவையும் ஒருங்கே அமைத்துக் காட்டுகின்றார்.

இத்தகைய வீரன்,

> "பாழிய பணைத் தோள்வீர! துணையிலேன் பரிவு தீர்த்த
> வாழியர் வள்ளலே யான் மறுவிலா மனத்தே னென்னில்
> ஊழியோர் பகலாயோதும் ஆண்டெலாம் உலகமேழும்
> ஏழும் வீவுற்ற ஞான்றும் இன்றென இருத்தி"

என்று சீதையருளிய செம்மைசேர் நலத்தால் அன்றும் இன்றும் என்றும் இறவாத பெருவாழ் வெய்தினன் என்பது கருதத்தக்கதாகும்.

---

# வள்ளல் பாரி.

தெய்வபக்தியும் தேவியுக்தியும்.

(227-ம் பக்கத் தொடர்ச்சி.)

திரு: காந்தி தாசன்.

> "மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
> நிலமிசை நீடு வாழ்வார்" (குறள்)

கண்ணாளரே! உலகத்தில் ஒவ்வொருவரும் சுகத்தையே நாடுகின்றார்கள். ஆனந்தமடைய ஆசைப்படுகின்றார்கள். இவ்வரிய இன் கின்றார்கள். ஆனந்தமடைய ஆசைப்படுகின்றார்கள். தம்மாலியன்ற முயற்சிகளைச் செய்கின்றார்கள். பத்தை அடைதற்குத் தம்மாலியன்ற முயற்சிகளைச் செய்கின்றார்கள். ஆனபோதிலும் அவர்களெல்லோருமே சுகத்தையடைவதில்லை. முற் பிறவிகளில் கடவுளை வழிபட்டிருப்பவர் மாத்திரமே அவ்வானந் தத்தையும் சுகத்தையும் அடைகின்றார்களென்பது யாவருக்குந் தெரிந்த விஷயம்.

பிராணகாந்த! இப்பிறப்பில் நாம் செய்யும் முயற்சிகளெல் லாம் பலமாயிருப்பினும், சிரத்தையாயிருப்பினும், மற்றவர்கள் செய்வதற்கு ஒப்பாயிருப்பினும், ஒவ்வொருவருக்கும் வாய்க்கும் பயன் அவரவர் முற்பிறப்புகளிற் கடவுளை வழிபட்டுள்ள வகைக் குத் தக்கவாறு வேறுபட்டிருக்கும் என்று தெளிவாகத் தெரியலா கும். அன்றியும் முற்பிறப்புகளிற் செய்த பாவங்களின் பயனாக இப் பிறப்பிற் கடவுளை வழிபடும் விரதத்திற்குத் தக்கவாறு அவர்கள் அந்தக் கஷ்டங்களை ஒருவாறு குறைத்து முடிவில் கடவுளது அரு ளினால் அழியாச் சுகமான ஆனந்த பதவியை அடையலாகுமென் பது நம்மிற் பலருக்கும் அநுபவசித்தமான விஷயமாகும். ஆனதால் கடவுளை வழிபட்டு அவரது கருணைக்குப் பாத்திரராவோர் இம்மை யிலும் மறுமையிலும் துக்கலேசமே இல்லாத ஆனந்த நிலையை அடைவார்களென்பது திண்ணம்.

கடவுளை வழிபடுவதற்கு இரண்டு முறைகளுண்டு. ஒன்று ஒரு பிரதிமையைக் கடவுளின் அறிகுறியாகக் கொண்டு தேவர்க்குரிய உபசாரங்களை எல்லாம் அதற்குச் செய்து அதனைப் பெருமைப்

படுத்துவது ஒரு முறையாம். அது விக்ரக ஆராதனை (சகுணோபாசனை) எனப்படும். அதாவது சலனமில்லாமல் நிலையாயிருக்கிற ஒரு வடிவத்தில் (அசேதனரூபத்தில்) கடவுளை ஆராதிப்பதாம்.

மற்றோர் முறையாவது ஏழைகளுக்கும் எளியவர்களுக்கும் இரங்கி உதவிபுரிந்து அவர்களது துன்பத்தையும் துக்கத்தையும் தணிப்பது பிறிதோர் ஆராதனை முறையாம்,

உலகத்திலுள்ள எல்லா வஸ்துக்களிலும் ஈஸ்வர சைதன்யம் அமைந்திருப்பினும், ஸ்தாவர வஸ்துக்களில் அதிகமாக விளங்குகின்றதல்லவா? ஆதலால் இதுவே உண்மையான ஈஸ்வர ஆராதனையாகும். முற்கூறிய அசேதன விக்ரக ஆராதனையைக் காட்டிலும் இந்த சேதனரூபத்திற் செய்யும் ஆராதனையே சிறந்ததாகும். இதுவே கடவுளுக்கும் இனிமையானது. மிக ஏற்புடையது. இவ்வழிபாட்டைக் கடைப்பிடிக்கிறவர்கள் கடவுளின் அருளுக்கு விக்ரக ஆராதனை செய்வாரைக் காட்டிலும் சீக்கிரமாகவும் எளிதாகவும் உரியவராவார்கள். ஆகையால் சேதன சேதன வஸ்துக்கள் நிரம்பிய இவ்வுலகம் முழுமையும் கடவுளின் பரிணாமமே எனக் கருதி பசி, தாகம், பிணி முதலியவற்றால் பிடிக்கப்படுகிற ஏழை எளியவர்களது துன்பங்களைத் தணிப்பதற்குக் கங்கணங் கட்டிக்கொண்டு உழைக்கிறவர்கள் கடவுளை உண்மையாக வழிபடுகிறவர்களாவார்கள். ஏழை எளியவர்கட்கு இரங்குதலால் கடவுள் அருள் பெற்று இம்மையிலும் மறுமையிலும் இன்பமே நுகர்வார்கள். இவ்விஷயம் பெரும்பாலார்க்குத் தெரிந்திருந்தும் அவர்கள் அவ்வுயர்தரமான முறைப்படி கடவுளை வழிபடுவதில்லை. போதிய பொருளும் சக்தியுமில்லாமையால் ஏழைகள் இம்முறையைக்கைக்கொள்ள முடியாதவர்களாகிறார்கள். செல்வவான்கள் பேராசைப் பெருக்கத்தால் இம்முறையை மேற்கொள்வதில்லை.

நாதா!

"நெல்லும் உயிரன்றே!
நீரும் உயிரன்றே!
மன்னனது உயிர்த்தே!
மலர்தலை யுலகம்"!

என்று இணையற்ற நீர்மைவாய்ந்த மன்னவன் பெருமையை விரித்துரைக்கும் புறநானூறு அழகுற, அருளியவாறு தாங்கள் கொண்ட



கொள்கையானது, உலகம் உள்ளவரை அழியாத பெருங்கீர்த்தியை விளைவித்துக் கொண்டிருக்கும். விக்ரக ஆராதனை செய்தலும் ஏழைகட்கு இரங்குதலும் இன்னோரன்ன பலவித பெரும் புண்ணியத்தைச் செய்தும், இதுவரையிலும் வாழ்ந்தும் என்ன பயனைப் பெற்றவர்களானோம்! (கண்ணீருதிர்க்கின்றாள் மன்னவன் அக்கண்ணீரைத் தனது உத்தரீயத்தால் துடைக்கின்றான்) என மனங்கவன்று வாட்டமுற்ற முகத்தோடு விளம்பலுற்றாள்.

அரசன்:—உயிரனையாய்! யாது குறையுளது? நின்வசனங்கள் என் மனதைத் துளைத்துவிட்டன! இவ்வித துன்பம் நேருவதற்குக் காரணமில்லையே! கண்ணே விரைவில் தெரிவித்தால் தயங்காது நீக்கத் தயாராக விருக்கின்றேன்.

அரசி:—நாதா! தங்களை மணந்த எனக்கு யாது குறையுளது. ஒரு குறைவுமில்லை என்றாலும் ஸ்ரீ கோபிகாவல்லபன் நம்மைச் சோதனை செய்துவிட்டான்.

அரசன்:—பிரியநாயகி! ஸ்ரீ யதுகுலாதிபன் நம்மைச் சோதிப்பதற்குக் குற்றமொன்றுமில்லையே! நாம் எதில் தவறிழைத்திருக்கின்றோம்? தேவாராதனை குறைந்துவிட்டதா! திருவிழா மறைந்துவிட்டதா! பெரியோர் திருநாளை மறந்துவிட்டோமா! விரதாதிகளைத் துறந்துவிட்டோமா! ஏழை மக்களைக் கைவிட்டோமா! எளியார்க்கு இரங்காதிருக்கின்றோமா! நாம் ஒரு நீதியையும் தவறிவிடவில்லையே!

அரசி:—பிராணபதி! தேவாராதனை! திருவிழா! பெரியோர்கள் திருநாள் விரதாதிகள்! ஏழை எளியோர்க்கிரங்கல் தெய்வபக்தி ஒன்றுங் குறையவில்லை, (தனக்குள்)

"உனது பாதம் போற்றும் அடியார்கள் சிந்தையில்
உகந்து நீ என்று முறலால்
உன்னுடைய திருமாதர் எண்மருஞ் சேர்வரவ
ருற்றதால் நிதிகள் சேரும்
கனநிதிகள் சேர்ந்திடத் தனதன் வருவான் வரக்
கருணைபுரி நேயன் வருவான்
காதல னடுத்ததால் உமைவருவள் அன்னையால்
கந்தன் வருவன் மருகனால்
தனது மாமன் வருவன் அரசன் வரலாற் சகல
தேவருங் கண்டு வருவர்
தருமஞ் செழிக்கும் அருள் சேரும் அதுவன்றிபே
தவமொன்று செயல் வேண்டுமோ

வனசரோருக மருவு மங்கைவளர் களமூரின்
மணவாள நாராயணன்
மணிதிலுறையலர் மேலு மங்கை மணவாளனே!
வாத வேங்கட நாதனே!''

(என்று தனக்குள் வணங்கிக் கொண்டாள்)

ஸ்ரீமந் நாராயணனை வழிப்பட்டு வருவதால் பொருட் செல்வம் கல்விச் செல்வம் சொற் செல்வம் முதலியவைகள் ஒருங்கே வாய்க்கப் பெற்றிருக்கின்றோம். ஒருசிலர் போல செல்வம் வந்துற்றபோது தெய்வத்தைப் பேணாமலும சொல்வன அறிந்து சொல்லாமலும் சுற்றத்தார் துணைவரை நோக்காமலும் எக்காரியத்திலும் வெற்றியடைவதையே கருமமாகக் கொள்ளாமலும் கர்வமடையாமலும் பொறுமைப்படாமலும் சொல்லத்தகாத துன்மார்க்க வார்த்தைகளைப் பிரயோகிக்காமலும் ஒருவர் குடியைக் கெடுக்காமலும் மிக்க அருளோடும் கருணையோடும் அறிவோடும் நமது நாட்டு மக்களை நம இருகண்ணும் உயிருமெனப் பாதுகாத்து வருகின்றோம். நம் குறைமட்டும் அகன்றபாடில்லை என்று திருந்திய மொழிகளால் வருந்தியுரைத்தாள் யாதரி.

(தொடரும்)

---

# சிறையிருந்தவள் ஏற்றம்.

திரு. S. A. பொன்னையாதாஸ். (யாதவர்)

உலகத்தில் இலங்கும் அரும்பெருங் காவியங்களுள் கம்பராமாயணம் மிகச் சிறந்தது என்றும், நவில் தோறும் நயம் வளரும் நூலாய் விளங்குகின்றதென்றும் பாவலரும் நாவலரும் கற்றோரும் மற்றோரும் இந்நாள்வரை பிராட்டிப்பாராட்டி வருகின்றனர். இவ் இதிகாசத்தில் சிறையிருந்த சீதாபிராட்டியின் ஏற்றத்தைக் கம்பர்



மான் எவ்வாறு விளக்கிக் காட்டுகின்றார். என்பதை ஒரு சில குறிப்புகளாற் காட்டவே இச்சிற்றுரை எழுந்ததாகும்.

“பரித்ராணாய சாதூநாம் விநாசாயச, துஷ்க்ருதாம்
தர்மசம்ஸ்தாபநார்த்தாயா சம்பவாமியுகே, யுகே''

என்று கீதாசாரியன் திருவாய் மலர்ந்தருளிய படியும்

“அறந்தலை நிறுத்தி வேதமருள் சுரந்தறைந்த நீதித்
திறம்தெரிந் துலகம் பூணச் செந்நெறி செலுத்தித் தீயோ
ரிறந்துக நூறித் தக்கோர் இடர்துடைத் தேகவிண்ணோ
பிறந்தனனவன் பொற்பாத மேத்துவார் பிறப்பறுப்பான்.''

என்று கம்ப நாட்டாழ்வாரருளிச் செய்தபடியும் ஸ்ரீமந் நாராயணன் முழுமுதற் கடவுள் திருவயோத்தில் தசரத சக்கரவர்த்திக்குத் திருக்குமாரனாகவும் அவருடைய சங்குசக்கரம் ஆதிசேஷனும் பரதன் சத்ருக்கனன் இலக்குமணனாகவும் வந்து அவதரித்தார்கள்.

அப்படி அவதரித்தபொழுது ஸ்ரீமந் நாராயணனுக்கு வல்லபையாய், பரமதயா பத்தினியாய், சர்வாத்மாக்களுக்கும் ஸ்வாமினியாய், நிருபாதிக மாதாவாய் அந்த வாசுதேவனோடு நித்யஸம்யுக்தையாயிருக்கின்ற பிராட்டியே.

“உழுகின்ற கொழுமுகத்தி னுதிக்கின்ற கதிரொளிபோல்
பொழிகின்ற புவிமடந்தை திருவெழிப்பட்டெனப் புணரி
எழுகின்ற தெள்ளமுதோ டெழுந்தவளு மிழிந்தொதுங்கத்
தொழுகின்ற நன்னலத்துப் பெண்ணரசி தோன்றினாள்''

“.................................................................

உறைந்த பாற்கடற் சேக்கை யுடனெறிஇ
அறந் திறம்புமென் றைய னயோத்தியில்
பிறந்த பின்பும் பிரிவில ளாயினாள்''

இவ்வாறு மிதிலையில் பிறந்து தானில்லாமல் ஒரு வேளை அறம் திறம்புமென்று இராகவனோடு அயோத்தியில் சேர்ந்தாள்.

பிதுர்வாக்கிய பரிபாலனத்தின் பொருட்டு ஸ்ரீராமன் தண்டகாருண்யம் செல்வதற்குத் தன் அரும்பெரும் துணைவியாகிய சீதாபிராட்டியினிடத்தில் விடை பெற்றுக்கொள்ளப் போனபொழுது அவள் தன் பர்த்தா நிலைமையைப் பார்த்து நடுநடுங்கி நின்றாள். அப்பொழுது காகுஸ்தர் “நான் என் தந்தையின் கட்டளைப்படி சில காலம் காட்டிற்குச் சென்று வருகின்றேன். அதுவரை நீ இங்கே கன்னி இரு'' என்று மொழிந்தார். அப்பொழுது.

"நாயகன் வனம் நண்ணலுற்றா னென்றும்
மேயமண் ணிழந்தானென்றும் விம்மலள்
நீ வருந்தலை நீங்குகென் யானென்ற
தீயவெஞ்சொல் செவிச்சுடத் தேம்புவாள்."

விருப்பத்தையே மொழியத் தக்கவளாயும், எப்பொழுதும் இனிய வசனங்களை யேபேசுகிறவளாயு மிருக்கின்ற ஜானகி இவ்வாறு அன்பின் அவதாரமூர்த்தி அனந்த கல்யாண குணங்களிறைல் மொழிந்த வார்த்தைகளைக் கேட்டு அவர்மேல் வைத்திருந்த அதிப் பிரேமையினால் கோபமடைந்து அவரை நோக்கிக் "காயாம்பு நிறத்தோனே! நீங்கள் பரம இலேசாய்ச் சொன்ன வார்த்தைகள் என்னைச் சுடுகின்றன. மாதா, பிதா, புத்திரன், சகோதரன், ஆகிய இவர்கள் எல்லாம் தம் தம் கர்ம பலன்களை அநுபவிக்கிறார்கள். மனைவி ஒருத்திதான் தனது கணவன் செய்த புண்ணிய பாவங்களின் பயனைப் பகுத்து அநுபவிக்கிறாள். ஆகையால் வனவாசம் செய்யவேண்டு மென்ற கட்டளை எனக்கும் அளிக்கப்பட்டதுதான். இம்மையிலும், மறுமையிலும் பெண்களுக்குத் தன் பர்த்தாவே கதியாவார்.

"பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுந்
திண்மை யுண்டாகப் பெறின்"

பெண்களுக்குக் கற்பே ஆபரணமாம். அவர்களுடைய பர்த்தாக்களுடைய திருவடி நிழலே அவர்களுக்குச் சிறந்த துணையாம். சாவித்திரி சத்தியவானோடு செல்லவில்லையா, தமயந்தி நளனோடு கானகம் ஏகவில்லையா! நான் புதிதாகச் செய்யப் போகிறது ஒன்றுமேயில்லை. மேலும் நான் பிறந்தகத்திலிருக்கும் பொழுது "நீ சில காலம் வனத்தில் வசிக்கும்படி வரும்" என்று ஜோதிடமறிந்த சில பிராமணர்கள் சொல்ல நான் கேட்டிருக்கிறேன். மேலும் ஜனகன் தங்களைப் புருஷவேஷமும் பெண் தன்மையும் உள்ளவர் என்று நினைக்க மாட்டாரா? ஒரு வேளை கல்லுமுள்ளும் மிகுந்த காட்டில் வர உன் மேனி நோவாது என்று சொல்வீர்களாகில் உம்மைப் பிரிவதிலும் அது சுடுமோ? தாங்கள் இருப்பது காடாயினும் அதுவே எனக்குத் தெய்வத் திருநாடாகும். தங்களைப் பிரிந்து வாழ்வது பொன்னுடாயினும் அது இடுகாடேயாகும்" என்று சொல்லிச் சரோ
லென்று உள்ளே போய் மரவுரிதரித்துக் கொண்டு இராமபிரானுடன்
[illegible]
...ன் கானகம் சென்றாள்.

(தொடரும்)



காட்டில் மாரீசன் செய்த சூழ்ச்சியால் இராமர் இலக்ஷமணர் இருவரும் சீதையை விட்டுப் பிரிந்த காலத்து இராவணன் வந்து தனது கீர்த்திப் பிரதாபங்களை வெளியிட்டுத் தன்னுடைய இஷ்டத்தைப் பூர்த்தி செய்விக்கும்படியாகவேண்ட அப்பொழுது,

"செவிகளை தவிர்க்கையாலே சிக்குரச் சேமஞ் செய்தாள்
கவியினும் வெஞ்சிலைக் கைவென்றிக் காகுத்தன் கற்பினேனைப்
புவியிடை யொழுக்கம் நோக்காப் பொங்கெரிப் புனிதற்காய
அவியை நாய் வேட்டதென்ன வென்சொன்னு யரக்கவென்று"

(இப் பாசுரத்தின் கருத்தும் நாச்சியார் திருமொழியில் ஸ்ரீ ஆண்டாளுடைய கருத்தும் ஒன்றாகவே முடிகின்றது என்பது இங்கு நோக்கத்தக்கது)

"வானிடை வாழும் அவ்வானவர்களுக்கு மறையவர்
வேள்வியில் வகுத்த அவி
கானிடைத் திரிவதோர் நரி புகுந்து கடப்பதும்
மோப்பதும் செய்வதொப்ப
ஊனிடையாழி சங்கு உத்தமர்க்கென்று உன்னித்
தெழுந்த என்தடமுலைகள்
மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழகில்லேன்
கண்டாய் மன்மதனே."

ஜானகி தன்னுடையசெவிகளை மாந்துளிர்போலச் சிவந்து மிருதுவாயிருக்கின்ற தனது கைகளினால் மூடிக்கொண்டு "ரிஷீஸ்வரர்களுக்குக் கொடுக்கின்ற ஆகுதியை நாய் இச்சித்தது போல் காகுஸ்தனுடைய கற்புடைய மனைவியை நீ இச்சிக்கின்றாய். நின் பிராணன் பிழைக்கவேண்டுமானால் இராமபாணம் வருவதற்கு முன்னால் ஓடி ஒளித்துப் போ" என்றாள்.

சீதாபிராட்டியின் சீலமெல்லாம் அவள் சிறையிருந்த காலத்தில் தான் ஏற்றமாக இலங்குகின்றது. அவள் அசோகா வனத்திலிருக்கும் பொழுது

"துயிலெனக் கண்களிமைத்தலு முகிழ்த்தலுந் துறந்தாள்
வெயிலிடைத் தந்த விளக்கென வொளியிலா மெய்யாள்
மயிலியற்குயின் மழலையாள் மானினம் பேடை
அயிலெயிற்று வெம்புலிக்கு ழாத்தகப் பட்டதன்னாள்"
"ஆவியந்துகில் புனைவதொன் றன்றி வேறிலாள்
தூவியன்ன மென் புனலிடைத் தோய்கிலா மெய்யாள்

> தேவுதென் கடலமிழ்து கொண்டனங்க வேள்செய்த
> வோவியம் புகையுண்டதே யொக்கின்ற வுருவாள்".

சீதாபிராட்டி கோதண்டபாணியை விட்டுப் பிரிந்ததினாலுண்டான விரகவேதனையினால் சிறிதுங் கண்ணுறக்கமின்றி நீராடிக்கொள்ளாமல் திருமேனியின் நிறம் மழுங்கி அரக்கியராகிய புலிகளின் கூட்டத்தில் ஒரு பெண்மானைப் ஜானகி அஞ்சப்பட்டுத் துடித்தாள். அவள் அரையிலுடுத்திய ஒற்றைத் துகிலோடும் அநேக நாட்கள் நீராடுதல் முதலியன இல்லாமையாலும் "ஆகரித்து அமுதில் கோல் தோய்த்து அவயவம் அமைக்கும் தன்மை யாதெனத் திகைக்கும் அல்லால் மதனற்கும் எழுதவொண்ணாச் சீதை" இப்பொழுது அச்சித்திரப் பிரதிமை புகைபேறப்பெற்றது போலிருக்கின்றாள் என்று சித்தரித்துக் காட்டும் கம்பரது கவிநலம் களிப்பேரின்பம் பயப்பதொன்றாகும்.

இவ்வாறு பிராட்டி இருந்த நிலைமையை ஆஞ்சநேயசுவாமி அசோக வனத்தில் பார்த்தபொழுது

> "பேண நோற்றது மனப் பிறவி பெண்மை போ
> ஞண நோற்றுயர்ந்தது நங்கை தோன்றலால்
> மாண நோற்றீண் டிவளிருந்த வாறெல்லாம்
> காண நோற்றில னவன் கமலக் கண்களால்."

ஜானகி அவதரித்ததினால் குடிப்பிறப்பும், பெண்களுக்குரிய அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு, முதலிய குணங்களும் ஒப்புயர்வில்லாத சிறப்பும் உண்டாயிற்று என்று அவ் இராகவன் தனது செந்தாமரைக் கண்களினால் பார்க்கத் தவம்பெற்றானில்லை போலும் என்று கம்பர் பெருமான் கூறும் சொற்கள் சாலச் சிறப்புடையதேயாகும்.

பின்பு இராவணன் அசோக வனத்தில் வந்து அவன் எவ்வளவோ இதமான வார்த்தைகளைச் சொன்னபொழுது அவனை நிந்தித்துப் பேசி அவனது போகபாக்கியங்களையும் ஒரு சிறு துரும்பாகக் கருதி "ஒவ்வொருவனும் நெறிதவறாது நிற்கவேண்டுவது இன்றியமையாதது என்பதனை," கம்பர் கீழ்வரும் பாசுரத்தால் சீதையின் வாயிலாக வெளியிடுகிறார்.

> "இப்பெருஞ் செல்வ நின்கணிந்த பேரீசன் யாண்டு
> மப்பெருஞ் செல்வந் துய்ப்பானின்று மாதவத்தினன்றே
> யொப்பருந் திருவு நீங்கி யுறவொடு மூலக்கவுன்னித்



> துப்புதியறத்தை யேழாய் தருமத்தைக் காமியாதே."
> "பொறை யிருந்தாற்றி யென்னுயிரும் போற்றினேன்
> அறையிருங் கழலவற் காணுமாசையால்"

என்று கவியரசர் கம்பர், பிராட்டி தன் பிராணனை வைத்துக்கொண்டிருப்பதின் காரணத்தைச் செம்மைசான்ற சொற்களால் எடுத்துரைக்கின்றார். மேலும் "சில மின்னதென்று அருந்ததிக்கு அருளிய திருவே" என்று கவிச் சக்கரவர்த்தி அருந்ததிக்கும் ஒருபடி மேலாக வைத்துப் போற்றும் தன்மைவாய்ந்த சீதா பிராட்டியும் "தான் உயிரோடிருத்தல் உலகம் கொள்ளாது" என்று தன்னைத் தானே நொந்துகொள்கிறாள்.

> "வஞ்சனை மானின் பின் மன்னனைப் போக்கியென்
> மஞ்சனை வைது பின் வழிகொள்வா யென
> நஞ்சனை யானகம் புகுந்த நங்கையான்
> உஞ்சலெனிருத்தலு முலகங் கொள்ளுமோ?"

ஆகையால் உயிர் விடுதலே சாலச் சிறப்பாகும் என்று தீர்மானம் பண்ணிக்கொண்டு குருக்கத்தி மரச்செறிவிலே சென்றாள். அப்பொழுது ஞான பண்டிதனான அநுமான் ஓடித் தேவியாரைப்பார்த்து "நான் ராமதூதன் தங்களைத்தேடிவந்தேன். என் தோளின் மீது ஏறிக்கொள்ளுங்கள், ஓர் க்ஷணப்பொழுதில் இராகவனிடம் சேர்க்கிறேன் என்றார். "அப்பா வாயுபுத்ரா! உன் வல்லமைக் கேற்றதையே சொற்றனை. ஆயினும் அது உசிதமல்லவே. நான் நினைத்தால் இவ்விலங்கைமாத்திரம் அல்ல; அளவில்லாத அனைத்துலகங்களையும் ஒரு வார்த்தையினாலேயே எரிந்து சாம்பராகும்படி செய்ய மாட்டேனா? அவ்வாறுசெய்வது வீரக்கழலையுடைய இராமனின் வில்லின் ஆற்றற்கு மாசென்று விசினேன். மேலும் நீ, ஐம்பொறிகளை அடக்கிய பிரமச்சாரியே ஆனாலும் உன்வடிவம் ஆணுருவம் அல்லவா? ஆகையால் நான் மேனியைத் தீண்டுதல்கூடுமோ?

> "அன்றியும் பிறிதுள்ள தொன்றுரியன்
> வென்றி வெஞ்சிலை மாசுணும் வேறினி
> நன்றி யென்பதும் வஞ்சித்த நாய்களி
> னின்ற வஞ்சனை நீயு நினைத்தியோ"
> "பொற் பிறங்கலிலங்கை பொருந்தல
> ரெற்புமால் வரையாகில தேயெனி
> னிற் பிறப்பு மொழுக்கு மிழுக்கமில்

கற்புயான் பிறர்க்கெங்ஙனங் காட்டுகேன்"
"அல்லன் மாக்களிலங்கைய தாகுமோ
வெல்லை நீத்த வுலகங்கள் யாவுமென்
சொல்லினாற் சுடுவேனது தூயவன்
வில்லினாற்றற்கு மாசென்று வீசினேன்."
"வேறுமுண்டுரை கேளது மெய்ம்மையோ
யேறு சேவகன் மேனியல்லாலிடை
யாறுமைம் பொறிநின்னையுமா னெனக்
கூறுமிவ் வுருத்தீண்டுதல் கூடுமோ?"
"தீண்டுவானெனினித்தனை சேண்பக
லீண்டுமோவுயிர் மெய்யினிமைப் பின்முன்
மாண்டுதீர் வுனென்றே நிலம் வன்மையாற்
கீண்டு கொண்டெழுந் தேகினன் கீழ்மையான்"

மும்மையா முலகந்தந்த முதல்வற்கு முதல்வன் றாதாய்ச் செம்மையா னுயிர்தந்த தாகிய அநுமானே! இனி இராமபிரானால் சிறை மீட்கப்படாமல் இவ்விலங்கையிலே இருந்து இனிய உயிரை நீக்கப் பெற்றாலும் மற்றொரு ஜென்ம மெடுத்து இவ்வுலகத்திலே வந்து தோன்றி அவர் திருமேனியைத் தழுவும்படியான பாக்கியத்தைப் பெறவேண்டுமென்று நமஸ்கரித்து வேண்டிக்கொண்டாள் என்று விண்ணப்பிப்பாயாக.

"ஈண்டு நானிருந்தி ன்னுயிர் மாயினும்
மீண்டுவந்து பிறந்து தன் மேனியைத்
தீண்டலாவதோர் தீவினை தீர் வரம்
வேண்டினாடொழுதென்று விளம்புவாய்"

சீதாபிராட்டியினிடத்தில் சிறிய திருவடி விடை பெற்றுக் கொண்டு சர்வலோக சரண்யனான ஸ்ரீ இராகவனிடத்தில்:

"கண்டனன் கற்பினுக் கணியைக் கண்களாற்
றெண்டிரை யலைகடலி லங்கைத் தென்னகர்
அண்டர்நாயக வினிவிடுத்தி யையமும்
பண்டுளதுயரு மென்றனுமன் பன்னுவான்."
"விற்பெருந் தடந்தோள்வீர வீங்குநீ ரிலங்கைவெற்பின்
நற்பெருந் தவத்தளாய நங்கையைக் கண்டே னல்லேன்
இற்பிறப்பென் பதொன்றும் இரும்பொறை யென்ப தொன்றும்
கற்பெனும் பெயரதொன்றுங் களிநடம் புரியக்கண்டேன்."
"சோகத்தாளாய நங்கை கற்பினாற் றொழுதற்கொத்த



மாகத்தார் தேவிமாரும் வான் சிறப்புற்றார் மற்றைப்
பாகத்தா ளிப்போதீசன் மகுடத்தாள் பதுமத்தாளும்
ஆகத்தாளல்லள் மாயனாயிரம் மௌலிமேலாள்"

"த்ருஷ்டா சீதா" என்று ஸ்ரீ வால்மீக ராமாயணத்தில் சொல்லியபடியும் கண்டேன் கற்புடைய சீதையை என்றும் அவள் கற்பினால் உலகம் உஜ்ஜீவிக்கின்றது என்றும் மங்கை கற்பினால் உமாபதியும் கூட அப்பெருமானது தலைமேலிருக்கச் சிறப்புப் பெற்றாள் என்றும் எடுத்துரைத்தார்.

சிறையிருந்த பொழுது அரக்கர் தலைவரான பிரதாமலங்கேஸ்வரனுடைய திருத்தம்பியாகிய விபீஷணர் சீதையை விட்டுவிட வேண்டுமென்றும் அச்சீதையின் கற்பின்தழலே அவ்விலங்கையை எரித்தது என்றும் எடுத்துக்காட்டினார்.

"கோனகர் முழுவது நினது கொற்றமும்
ஜானகி யெனும் பெயர் உலகின்றம்மனை
ஆனவள் கற்பினால் வெந்ததல்லதோர்
வானரஞ் சுட்டதென் றுணர்தல் மாட்சியோ!"

மேலும் கற்பில் சிறந்தவளாகிய இராவணன் பத்தினி மண்டோதரியும் சீதையின் கற்பின்தழலே இவர்களை எரிக்கப்போகின்றது என்ற உண்மையை அறிந்து

"பஞ்செரி யுற்றதென்ன அரக்கர் தம் பாவை யெல்லாம்
வெஞ்சின மனிதர் கொல்ல விளிந்ததே மீண்டதில்லை
அஞ்சினேன், அஞ்சினேன், இச்சீதை யென்றமிழ் தாற்செய்த
நஞ்சினால் இலங்கை வேந்தன் நாளை இத்தகைய என்றே."

எனக் கவலைப்படுகிறாள்.

அப்பால் இராவண சம்ஹாரம் நடந்து சீதையைச் சிறை மீட்டிய காலத்தில் சிறையிருந்தவளேற்றத்தை ஸ்தாபிக்கவேண்டியும் உலகத்தார் அவள் கற்பின் நிலைமையை அறியும் பொருட்டும் அவளைக் கடிந்துரைக்க அவள் இலக்ஷ்மணரால் எரிஎழச் செய்து யான் கற்பிழந்தேனெனில் என்னைச் சுடுதி என்று கூறி

"கனத்தினாற் கடந்த பூண் முலையங்கைவளை
மனத்தினால் வாக்கினால் மறுவுற்றேனெனின்
சினத்தினாற் சுடுதியாற்றீச் செய்லா வென்றாள்
வனத்துழாய் கணவற்கும் வணக்கம் பேசினாள்"

அக்னிப் பிரவேசமானாள். அக்னியானவன் சீதாதேவியின் கற்பின் வெம்மையைத் தாங்கமுடியாமல் இராமனை இறைஞ்ச உலகத்தார் அறிய காகுஸ்தர் மறுபடியும் சீதையை ஏற்றுக்கொண்டார்.

பின்பு அயோத்தி சேர்ந்து ராஜ்ய பரிபாலனம் செய்துகொண்டிருக்கும் பொழுது "ஒரு ஸம்வத்ஸரகாலம் இராவணன் வீட்டில் தங்கியிருந்தவளை சக்கரவர்த்தித் திருமகன் சேர்த்துக்கொண்டிருப்பதுபோல் நான் செய்யப் போகிறேனா" என்று வண்ணான் சொன்ன வார்த்தைகளின் மேல் இலக்ஷ்மணனைக் கொண்டு சீதையைக் காட்டிற்கு அனுப்பிவிட்டார். சீதை அங்கே வால்மீகர் ஆசிரமத்தில் மனவருத்தத்தோடு வசித்து வந்தாள். கொஞ்சகாலம் கழித்து வால்மீகி சீதையோடு அயோத்திக்கு வந்து இராமரை, சீதையை அங்கீகரிக்கும்படி வேண்ட, 'அவர் மறுபடியும் அக்னிப் பிரவேசம் ஆனாலொழிய சேர்க்கமுடியாது' என்றார். உடனே பிராட்டி பூமிதேவியை நோக்கி "நான் பதிவிரதா சிரோன்மணியானால் நீ எனக்கு வழிகொடு" என்று கேட்க, அவ்வாறு நடக்க, பூமியோடு ஐக்கியமானாள் பூமியிற் பிறந்த பிராட்டி.

"வினைப் பாசத்தை யறுத்து முனிவேள்வி காத்து மிதிலைபுகுந்
தெனக்காக வீசன் வில்லிறுத்தென்றனைக் கைபிடித்த வெழிலாரும்
புனைக்காயாம்பு நிறத்தானை யன்றிமற்றோர் பூமனையான்
மனத்தால் வாக்கானினை யேனேல் வழிதா வெனக்கு மண்மகளே"
"வருந்தியே பயந்த நீ மற்றென் கற்புமவ்
வருந்ததி கற்பு மொன்றனை யென்றிடின்
பெருந்துதிமா நிலம் பிளந்தி யென்றனள்
இருந்துதி யமரரு மேத்துங் கற்பினாள்."

(உத்தரகாண்டம்)

ஆகவே இச்சோகத்தாளாய நங்கையின் அரும்பெருங் குணங்களை ஆராய்ந்து பார்த்ததில் நமக்குக் கிடைக்கப்பெற்றது யாதெனில் ஏசுநாதர் பாபிகளுடைய பாபத்தைத் தீர்க்கச் சிலுவையில் அறையப்பட்டது போல் உலகத்திலுள்ள பாபங்களைப் போக்கவும் அரக்கரை நாசம் செய்யவும் தருமத்தை ஸ்தாபனம் பண்ணவும் பெண்களுக்கு இடுக்கண் வந்தகாலத்தில் தங்கள் கற்பை இழக்கக்கூடாதென்றும், தன் நாயகன் திருவடி நிழலே தனக்கு ஆஸ்பதம் என்றும் இகபர சுகம் அவனே என்றும், பாகவத அபசாரம் பிராட்டிக்குக்



றும், பரமபாகவதனை இளையபெருமாளிடத்தில் அபசாரப் பட்டத்தினாலன்றோ சிறையிருக்கும்படி வந்ததென்றும்,

"தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை."
"சிறை காக்குங் காப்பெவன் செய்யு மகளிர்
நிறை காக்குங் காப்பே தலை."
"பெற்றாற் பெறிற் பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழு முலகு."

(திருக்குறள்.)

ஒருவன் நல் மனைவியை அடைவானானால் சகல பாக்கியமும் அடைந்ததற்கு ஒப்பும் என்பதையும் உலகத்திற்குத் தன் சீலத்தினால் சிறையிருந்து விளக்கிக் காட்டினார் சீதாபிராட்டியார்.

---

# ஊக்கம்.

## திரு. C. இராஜகோபாலப் பிள்ளை.

ஊக்கம் ஆக்கம் அளிக்கும். ஊக்கம் உடையார் ஒழுக்க முடையார். ஊக்கத்திற் சிறந்த உயர் பொருளில்லை யென ஊக்கத்தைப்பற்றிப் பலவாறாக ஆன்றோர் பணித்தலை அறிந்து நடத்தல் யாவர்க்கும் இன்றியமையாக் கடமையாகும். ஆதலின் நாமும் நமது சிற்றறிவிற் கெட்டியவாறு ஆய்ந்தறிந்து அதன்படி நடத்தற்கு முதலாவதாக அதனை இன்னதன்மையது. இவ்வாறு கைக் கொள்ளத்தக்கது. இன்ன பயனை அளிப்பது என அறிந்து
ண்டாலன்றி அதன்கண் பற்றுண்டாகாதாதலின் அதனை ஒரு
சுருக்கிக் கூறுதற்கு இங்கு முன்வந்துள்ளேன்,

நாம் எந்தத் தொழிலைச் செய்ய ஆரம்பித்தபோதிலும் அந்தத் தொழில் தொடங்கி முடியும் வரையும் நம் மனதின்கண்ணே யிருந்து அந்தத் தொழில் முடிவதற்கேற்ற உதவிபுரிந்து வருவதாகிய ஒரு வஸ்து உண்டு. அந்த வஸ்து இன்றேல் நாம் யாதொரு தொழிலையும் முடித்தற்குக் கூடாதவர்களாய் இருப்பதோடுகூட நம்முடைய வலிமையையும் இழந்தவர்களாகி விடுகின்றோம். ஆதலின் பெறலரிதாகிய மானிடப் பிறவியில் வந்த நாம் அடையும் இம்மை இன்பத்திற்கும், மறுமை இன்பத்திற்கும், முதற்காரணமாய் விளங்குவது அந்த வஸ்துவே யென்று தெற்றெனத் தெரிகின்றதல்லவா? அந்த வஸ்துவைத்தான் யாவரும் ஊக்கமென்று சொல்லுகின்றார்கள். ஒருவன் தான் இருந்த இடத்தினின்று எழுந்திருக்க வேண்டுமானாலும் ஊக்கமே ஊன்றுகோலாக உதவுகின்றது என்னும் விஷயத்தை நாம் உற்றுநோக்கின் யாவரிடத்தும் எளிதில் உணரலாம். குயவன் ஒரு குடத்தைச் செய்யவேண்டின் எவ்வாறு மண்ணின்றிச் செய்ய முடியாதோ அவ்வாறே நாமுமொரு தொழிலைச் செய்ய வேண்டின் ஊக்கமின்றி முடியாது.

பசித்த குழவிக்குத் தாயும் வாடின பயிருக்கு மழையும் இல்லாவிடின் எவ்வாறு அவைகள் பசியையும் வாட்டத்தையும் நீக்கிக் கொள்ள மாட்டாவோ அதுவேபோல் நாமும் ஒரு தொழிலை முடித்துக்கொள்ள எண்ணின் ஊக்கமின்றி, அத்தொழில் முடிவுபெறாது. சூடாமணி நிகண்டு ஆசிரியரும் பதினோராவது தொகுதியில் ஊக்கமென்ற சொல்லிற்குப் பொருள் கூறுமிடத்து வலிமை உற்சாகம் உள்ளக் கிளர்ச்சி என மூன்றுபொருள் கூறுகின்றார். இந்தவிடத்தில் நிகண்டு ஆசிரியர் சொல்லியிருப்பதைக் கொண்டு சில விஷயங்களை ஆராயவேண்டி யிருக்கின்றது.

அதாவது உலகவாழ்க்கையில் செம்மைப்பட விரும்புகின்ற ஒவ்வொருவரும் முதன் முதலில் அடையவேண்டுவது வலிமை. வலிமையின்றேல் யாதொரு சுகவாழ்க்கையுங் கிடையாது. வலிமையில்லான் வாழ்வு வானின்றிப் பெய்த மழைக்குச் சமம். முக்கியமாக நோக்குமிடத்து அவனவன் தன்தன் உடலைத் தாங்கிச் செல்வதற்கும் வலிமை வேண்டுமென்றால் வேறு எத்தொழிலைத் தானொருவன் வலிமையின்றிச் செய்ய முடியும். தொழில் செய்ய வலிமையின்றேல் பொருள் சம்பாதிப்பதெப்படி? பொருளின்றேல் புகழின்று. புகழின்றாகவே புனிதப்பிறவியின்பயனை ஒருவன் எவ்வாறு அடையமுடியும். இதுபற்றியே தெய்வப் புலமைத் திருவள்ளுவரும் "உடையர் எனப்படுவது ஊக்கம் அஃதில்லார் உடையது உடையரோமற்று" என்றும். "உள்ளமுடைமை யுடைமை பொருளுடைமை நில்லாது நீங்கிவிடும்." என்றும் கூறியுள்ளார். அதாவது ஊக்கம் உள்ளான் உரிமை உள்ளான் யாவும் உள்ளான். ஊக்கமில்லான் யாவுமில்லான் என்னும் நீதியை நிலைநாட்டுகின்றார். எப்பொருளிருந்தும் ஊக்கமில்லானேல் அவன் அப்பொருளைக் காக்கும் ஆற்றல் இலனாம். ஆதலின் அஃதில்லான் உடையது உடையரோ என்று உறுதியிட்டுக் கூறுகின்றார்.



இத்தகைய வலிமையோடு வாய்ந்த ஒருவன் ஒரு காரியத்தைச் செய்யப்புகின் அக்காலத்து அவனுடைய மனம் உற்சாகத்துடன் விளங்க வேண்டும். உற்சாகமாவது செய்யும் தொழிலினாலேற்படும் களைப்பைச் சகித்துக் கொண்டு தொழில் முடிவதைக் குறித்து ஆனந்தித்திருக்கும் நிலைமை. இந்நிலைமையிருந்தாலன்றி எடுத்த தொழில் இனிது நடவாது. ஆதலின் எத்தொழிலைச் செய்யப் புகுந்தபோதிலும் அத்தொழிலைச் செய்யும் ஒவ்வொருவருக்கும் அது முடிவதைக் குறித்து மனதில் உற்சாகம் ஏற்படவேண்டும்.

உயரிய திறமை வாய்ந்தார்க்கும் உற்சாகமின்றேல் எடுத்த காரியம் இனிது முடிவது இயலாததாகும். யானை பரியது கூர்ங்கோட்டதாயினும் அதனிடத்து ஊக்கமின்மையின் பரியதும் கூர்ங்கோட்டதும் ஆகாத ஊக்கத்தோடு கூடிய புலி தாக்குறின் அது நடுங்குகின்றது. அதுபோல ஒருவன் எவ்வளவு மெய் வலியுடையனாயினும் ஊக்கமில்லாதவனாயின். ஊக்கத்தோடு கூடிய மெய்வலியில்லாத ஒருவனுக்கு அஞ்சும் நிலைமையுடையவனாகின்றான். உற்சாகமில்லான் உச்சநிலையடையான் ஆதலின் உச்சபதவியை யடைய விரும்பும் ஒவ்வொருவரும் உற்சாகத்துடனிருக்கவேண்டும்.

இத்துடன் உள்ளக் கிளர்ச்சி என்ற உயரிய குணத்தை ஒவ்வொருவருமுடையவராயிருத்தல் வேண்டும். ஏனெனில் மனமானது எக்காலத்தும் ஒரே நிலையில் இருத்தல் அரிது. ஒருகால் இன்பத்தையும், ஒருகால் துன்பத்தையும், ஒருகால் வீரத்தையும் ஒருகால் சோகத்தையும், மாறி, மாறி, அநுபவிக்கக்கூடிய தன்மையது,

ஆதலின் அத்தகைய மனதை நம்மறிவினால் எக்காலத்தும் கிளர்ச்சித்திருக்கும்படி செய்து கொள்ளல்வேண்டும். அவ்வாறு செய்து கொண்டால் நாம் எக்காலத்தும் நிதானத்துடனிருந்து சகல காரியங்களையும் எளிதிற்செய்து அவற்றின் பலனை அடைந்து இன்புறுதற்குத் தக்க ஏதுவாகும்.

இவ்வாறான ஊக்கத்தைப் பலரும் கையாளுகின்ற முறையில் தவறினவர்களாய் எடுத்த காரியம் இனிது முடியாமையின் பின் கண்கலங்கி நிற்கின்றனர். செய்தும் பயனின்றி விழலுக் கிறைத்த நீராயிற்றே என்று வெய்துயிர்க்கின்றனர். நாம் செய்த காரியத்தில் நம் பெருமானுக்குக் கிருபையில்லைபோலும் என்று நாவில் வந்தவாறு நாதனை நிந்திக்கின்றனர், இன்னும் பல பல வாறான குறைகளைக் கூறிப் பலரையும் பகைத்துக் கொள்கின்றனர். ஆ! ஈதென்ன அறியாமை, விளக்கைப் பிடித்துக்கொண்டு கிணற்றில் விழுபவர்களைப் போல, அவரவர்களுக்குப் போதுமான பகுத்தறிவைக் கடவுள் அளித்திருந்தும் அதனைத் தக்கவாறு உபயோகிக்காமல், ஆற்றைக் கடத்தற்கு அளித்த ஓடத்தைக்கொண்டு சமுத்திரம் புக்கவர்களைப் போலவும் களைபறிக்கக் கொடுத்த கோலைக் கொண்டு கண்ணைப் பறித்துக்கொண்டவர்களைப்போலவும், ஒன்றுகிடக்க ஒன்றாயறிந்து உற்றாரையும் ஊராரையும் பகைத்துப் பல தீமைகளை யடைகின்றனர்.

இவ்வாறு இவர்கள் அடைதற்குக் காரணம் ஊக்கக் குறைவும், உற்சாக மின்மையுமேயாகும். முதலிலே கெட்டிக்காரன் முடிவிலே சோம்பேறி யென்பதுபோல ஒரு காரியத்தைத் துவக்குங்கால் ஊக்கம் உள்ளவர்களாய்ப் பின் வர, வர, உற்சாகம் கெட்டுக் களைப்பு மேலிட்டால் கண் தெரியாமல் இன்ன காரியஞ் செய்கின்றோம் இதனால் இன்ன பயன் கிடைக்குமென்ற உணர்வு மழுங்கி ஓய்ந்து விடுகின்றார்கள். இத்தகைய ஆரம்ப சாமர்த்தியம், யாவர்க்கும் அநர்த்தத்தைத் தருவதுள் ஒன்றாதலின் இது இருத்தலின் இல்லாமை நன்று. யார் ஒருவர் ஒரு காரியத்தைத் துவக்குகின்றார்களோ அக்காரியம் முடியும் வரையும் தனக்கு ஏற்படும் இடையூறுகளை இனிதிற் போற்றி மேன்மேலும் ஊக்கத்துடன் செய்தாலன்றி அது இனிது முடியாததுடன் எண்ணிய பலனையும் ஈந்திடாது. ஒரு காரியத்தைத் தொடங்குங்காலம், செய்யுங்காலம்,



முடிக்குங்காலம், ஆகிய முக்காலத்தும் ஊக்கமிருந்தாலன்றி உரிய பொருளையடைதல் அருமையாம். ஊக்கமின்றேல் முயற்சியில்லை. முயற்சியின்றேல் பொருளில்லை. பொருளின்றேல் கொடையில்லை. கொடையின்றேல் செருக்கில்லை, ஆதலின் எவனொருவன் வள்ளியம் என்னும் செருக்கடைய விரும்புகின்றானோ அவனுக்கு அடிப்படையான காரணமாகத் தக்கது ஊக்கமேயாம். "ஆக்கம் அதர் வினாய்ச் செல்லும் அசைவிலா-ஊக்கமுடையா னுழை" என்ற பொய்யில் புலவர் பொருளுரை தேரின், ஊக்கத்தின் தன்மையை இனிதுணரலாம். அதாவது 'உலகத்தவர் செல்வத்தைத் தேடுதல் இருக்கச் செல்வந்தானே ஊக்கம் உடையானுழைச் சென்றடையுமாயின், ஊக்கத்தின் தன்மை எத்தகையது' என்று நீங்களே யோசித்துப் பாருங்கள். ஆதலின் எம்மதத்தினரும், எச்சாதியினரும் தங்கள் தங்கள் மதத்திலும் ஜாதியிலும் சிறந்து விளங்க விரும்பின் அவரவர்களும் ஊக்கத்தைக் கையாள வேண்டுமென்பதே இக் கட்டுரையின் முக்கிய நோக்கமாகும்.

---

# சமூக சீர்திருத்தத்தில் ஓர் பகுதி.

திரு. V. S. குழந்தைவேல்சாமி.

அறிவிற்சிறந்த பெரியோர்களே,

"நமது சமூக நிலைமையைப்பற்றிப் பேசிப்பேசி ஒவ்வொருவருக்கும் நாவும் தழும்பேறி விட்டது. அங்ஙனம் தழும்பேறிய பலன் ஒன்றைத் தவிர கொஞ்சமும் சீர்திருத்தத்திற்கு வந்தபாடில்லை. பன்முறையும் இதைக் குறித்து அநேகர் எழுதி இருப்பினும் நானும் எனது கருத்தில் தோன்றிய சிலவற்றை எடுத்துக் கூறி இக் கட்டுரையை முடிக்கவேண்டுமென்பது எனது அவா.

இப்பொழுது சொல்லப்போகும் விஷயங்களில் அநேகருக்குச் சில அருவருப்பு உண்டாகலாம். அப்படி உங்கள் மனம் கசந்த போதினும் கூட நான் அதைக் கூறியே ஆகவேண்டியதிருக்கிறது. ஒரு குலத்தில் இருந்துவரும் இழுக்கான நிலையை அடுத்த குலத்தவர்கள் கண்டு கேவலமாய்ப் பேசும்போது அக்குலத்திலேயே உள்ள ஒருவனுக்கு உண்டாகும் சாதியபிமானத்தைப்போல பிறகுலத்தவர்கட்கு ஒரு சிறிதும் ரோஷம் ஏற்படுமா என்பதை நாம் நன்கு ஆராய்ச்சி செய்து பார்த்தால் இனிது விளங்கும்.

இளம்பருவம் வாய்ந்த அழகியை மணந்து கொள்வது எதற்காகவோ, பால் தயிர் மோர் விற்கும் பாவனையும் காய்கனி முதலிய வியாபாரங்களைக் கொண்டு பட்டினங்களிற் சென்று தெருத்தெருவாய் தன்னந்தனியாய் வீடு வீடாய் நுழைந்து நுழைந்து விலை கூறி விற்று வயிறு வளர்ப்பதற்காகவா வாழ்க்கைத் துணைவி எனப் பெயர் புனைந்துளது. "பரிதாபம். ஊதியம் கிடைப்பதை மட்டிலும் கருதினோமே தவிர அவ் ஆதியத்தால் சேரிடும் கேவலத்தை உற்று நோக்க வேண்டாமா. நாம்தானா உலகத்தில் பிறந்தோம்.!"

நமது இளம் பெண்மக்களுக்கு இதுதானா சுதந்திரமான தொழில்! மேற்குறிப்பிடும் தொழில்களையெல்லாம் புருஷர்கள் செய்யக் கூடாதா! அப்படிச் செய்தால் இழிவு வந்துவிடுமா! ஒரு மணமகன் ஒரு மணமகளை வைத்துப் பாதுகாக்கும் கடமை இதுதானா? "இதைப் பார்க்கிலும் வேறு என்ன கேவலமிருக்கிறது! இல்வாழ்க்கையைச் செவ்வனே நடத்துவதற்காக அல்லவா மனைவியை அடைவது. அங்ஙனமிருக்கக் கல்யாணம் செய்த ஒருவாரம் கழிந்தவுடன் பெண் மக்களைப் பொருள்தேட விடுவதென்றால் ஒரு ஆண் மகன் என்ற பெயரும் அவனுக்கு வேண்டுமா?

'தான் மணம் செய்த மனையாளுக்கு வேண்டிய வசதிகளைத் தேடிக் கொடுக்கும் ஆற்றல் இல்லாமற்போனால் அவன் உலகத்தில் எந்தக் காரியத்தையாவது செய்துமுடிக்க இயலுமா' என்பதைச் சற்று யோசியுங்கள். நமது பால்ய மங்கையர்களை அயல் ஊர்கட்குச் சென்று வியாபாரம் செய்துவரச் சொல்லி விட்டுவிடுகிறோம். அவர்கள் கடைவீதிகளிலும், மற்ற வீதிகளிலும் போய் பால் தயிர் மோர் காய்கனி கிழங்கு முதலியவைகளைத் தூக்கிச் சுமந்து விற்பனை செய்கிறார்கள். இப்படி விற்பனைசெய்வதில் முக்கியமாய்ப்பெண்களில்லாத



சாப்பாட்டு விடுதியிலும் அரசாங்க சேவகர்கள் வசிக்குமிடத்திலும் வியாபாரிகளிருப்பிடங்களிலும் தான் நமது யாதவ மங்கையர்கள் வியாபார ஒப்பந்தங்கள்.

அப்படி ஒப்பந்தம் பேசித் தினந்தினம் சாதாரணமாகத் தனியாய் வீட்டினுள் வந்து கொண்டிருக்கும் பால்ய மங்கையைக்கண்ட இளைஞரது இருதய நிலை என்ன கெதியில் ஆகும் என்பதை நன்கு யோசனை செய்து பார்த்தால் தெரியும். இத்தகைய பெரும்பழிக்கு ஆளாகவா நமது இளம்பிராய மங்கையர்களை அடைந்தோம்."

"கற்புடைய மங்கையர்க் கரசியாம் கோகுலக்
கன்னியர் பிறந்த நாட்டில்
கட்டுமுறை யில்லாத அழிதகையெனும் பெயர்க்
காளாகுமாகையாலே"—

நாம் மானமிக்குடையராயின், கேவலத்தைத் தருகின்ற பால் மோர் விற்பனைகளைப் புருஷர்களேனும், 50 வயதுக்கு மேற்பட்ட பெண்களேனும் கொண்டுபோய் விற்றுவரச் செய்யவேண்டும். நமது சமூக வாழ்வில் முக்கியமாக மாதர் பகுதியைச் சீர்திருந்தச் செய்வதே முதற்கடமை என்பது அனைவரும் ஒப்புக்கொள்ள வேண்டுவது மாத்திரமல்ல; முயல்வது அவசியமாகும்.

சுபம்! சுபம்!! சுபம்!!!

## மகளுடைத்தால் மண்கலம் மருமகளுடைத்தால் பொன் கலம்.

திரு. சு. ஆண்டியப்பா.

திருவிதாங்கூரைச் சார்ந்த நாகர்கோவில் என்னுமிடத்தில் தெற்கு வீதியில் ஒருநாள் சுமார் 2-மணிக்கு மாடிவீட்டினுள்ளி

ருந்து ஒரு மாது வெளியே வந்து வாயில்திண்ணையில் உட்கார்ந்து கொண்டாள். நாகர்கோவிலில் அனேகமாய் ஆண்மக்கள் யாவரும் உத்தியோகத்திலிருப்பதால் அவரவர்கள் வேலைக்குப் போய்விட்டால் வீட்டுப் பெண்களுக்கு வேலைகளிருப்பதில்லை. வீட்டுவேலைகள் முடிந்தவுடன் தாய்மார்கள் பெண் குழந்தைகளின் படிப்பில் சிரத்தை எடுத்துக்கொண்டிருந்தால் அக்குழந்தைகளுக்குப் புஸ்தகம் வாசிப்பதிலோ, பத்திரிகை படிப்பதிலோ புத்தி செல்லும். இக்காலத்திலோ சிலர் இரண்டும் கெட்டவர்களாக இருப்பதால் அவர்களுக்கு ஒன்றிலும் புத்தி செல்வதில்லை. வம்பு வளர்ப்பதில் மாத்திரம் அவர்கள் சலிப்பதில்லை. அப்படியே வீட்டின் வாயிலை அடைந்த அம்மாள் தன் சபைக்கு அங்கத்தினர் யார் வருகிறார்களென்று பார்த்துக்கொண்டிருந்தாள். பாக்கி அவ் வீதியிலிருக்கும் மாதர்கள் தங்கள் காரியங்களை முடித்துக்கொண்டு வாயிலை அடைந்தார்கள். அவ்விருத்த மாதுக்கு அவர்களைப் பார்த்து அளவற்ற ஆனந்தமுண்டாயிற்று. அவர்களுக்கு மிகுந்த நல்வரவு கூறி ஏண்டி "மீனு" (மீனாக்ஷி) தச்சி (தனலெக்ஷுமி) பாப்பு (பாப்பாத்தி) சரசு. (சரோஜனி) பிச்சு என்று ஒவ்வொருவருக்கும் கால் பெயர், அரைப் பெயர், முக்கால் பெயராகச் சொல்லிக் கூப்பிட்டு முதல்நாள் சபை கலைந்ததிலிருந்து இன்றைய தினம் சபை கூடியவரையில் கேட்டுக் கொண்டு சமையல் முதலான விஷயங்களையும் கேட்டுக் கொண்டாள். இவர்கள் யாவரும் வந்துகூடிய சற்றுநேரம் கழித்துக் கடைசியாக ஒரு பெண் அங்கு வந்து சேர்ந்தாள். அவளை யாவரும் ஒரே முகமாய் நோக்கி ஒரேவாக்காய் ஓ பத்தாசி (பத்மாசனி) எப்ப வந்தே? ஆறுமாதமாய் உன்னை இவ்வூர்ப் பக்கமே காணலியே. உன் மாமியார் வீட்டில் யாவரும் க்ஷேமமா? என்று விசாரித்தார்கள். அவளும் அவர்களுக்கு இன்முகம் காட்டித் தன்னுடைய சுகக்ஷேமங்களைக் கூறிவிட்டு அந்த விருத்தமாதை நோக்கி, பாட்டி உன் மருமாள் (தமையன்மகள்) மருமான் அவனகமுடையாள் யாவரும் க்ஷேமமா? என்று கேட்டாள்.

"பத்தாசி, எல்லோரும் சௌக்கியமே ஏன் நிற்கிறாய்? திண்ணையில் வந்துட்காரு" என்று அவளுக்கு ஆசனம் கொடுத்து வம்பர் மகாசபை அங்கத்தினர் யாவரும் வந்துவிட்டார்களா வென்று



பார்த்தாள். அவளுக்கே அங்கிருந்த யாவர் வாயைக் காட்டிலும் வாய் பெரிதாக இருந்தபடியால் தானே அச்சபைக்கு அக்கிராசனம் பெற்றுக்கொண்டாள்.

இவர்கள் இப்படியிருக்கப் பத்தாசி வந்த சந்தோஷத்தில் இவர்கள் போட்ட கூச்சலால் வீட்டிற்குள் வேலை செய்துகொண்டிருந்த மன்மதிஎன்பாள்என்னவிசேஷமோ வென்றுபார்ப்பதற்காகவாயிலையடைந்து எட்டிப்பார்த்தாள். தங்கள் வீட்டின் திண்ணையில் பெண்கள் கூடியிருப்பதையும் தன் புருஷனின் அத்தை அக்கிராசனம் வகித்திருப்பதையும் பார்த்தாள். இன்றையதினம் இவர்கள் வாயில் யாருடைய பெயர் அகப்பட்டுக் கொண்டு அரைபடுமோ தெரியவில்லையே! ஜகதீசா, என்றையதினம்தான் மாதர்களுக்கு வம்பு பேசும் தொழில் வேறாக்கப்படுமோ தெரியவில்லையே! என்று அவ்விடமே நின்றிருந்தாள்.

மேற்கூறிய மாதர்கள் பத்தாசி வந்த சந்தோஷத்தினால் மெய்மறந்து, அங்கு மன்மதி நிற்பதையே கவனியாமல் அடியில் வருமாறு பேசலானார்கள்.

பத்தாசி—பாட்டி, உன் மருமாள் புருஷன் வீடு போய் இரண்டு வருஷமாகிறதே இன்னும் குழந்தை ஒன்றையும் காணம் போலிருக்கிறதே?

பாட்டி—(மிகுந்த வருத்தத்துடன்) ஆமம்மா! தாய் தகப்பனற்ற குழந்தை ஆண்டவன் தான் கண் திறந்து பார்க்கணும்.

பத்தாசி—உங்க மருமாளகமுடையாள் இவ்விடமிருக்கிறாளா? அல்லது பிறந்தகம் போயிருக்கிறாளோ?

பாட்டி—பத்தாசி! நான் அச் சிறுக்கியுடன் ஒரு மாதமாய்ப் பேசுவதே கிடையாது. அவளைப் பிறந்தாத்தில் யாரழைக்கிறார்கள். இங்கு தான் கிடக்கிறது.

பத்தாசி:—(சற்று விவேகமுள்ளவளானபடியால்) பாட்டீ! அவள் என்ன தவறுதல் செய்தாள்? நீங்கள் அவளுடன் ஏன் பேசுவதில்லை?

பாட்டி—ஏன்? சொல்லறேன் கேள். மாதாமாதம் ஏதோ ஒரு பத்திரிகை வெளி வருகிறதாம். அதில் இவள் ஏதோ கதை

யாம், வியாசமாம், புத்திமதியாம் எல்லாம் தான் எழுதி அவர்களுக்கு இனமாகக் கொடுத்து விடுகிறாளாம். என்ன அநியாயம் ? என்ன துணிச்சல் ? அதை எனக்காவது சொன்னாளா ? அதுவுமில்லை. பொம்மனாட்டி கட்டை ஆம்பளை மாதிரி இதெல்லாம் எழுதலாமோ ? ஒரு நாள் நான் என் மருமானாத்துக்குப் போயிருக்கும் போது அவர் என்னிடம் "உங்காத்து மாட்டுப் பெண் எழுதி யிருப்பதை நாங்கள் படித்தோம். ரொம்ப நன்றா யிருந்தது" என்றான். எனக்கு அப்படியே நாக்கைப் பிடுங்கிக் கொள்ளலாமாவென்று இருந்தது. உடனே ஆத்துக்கு வந்தேன். இவள் என் மருமானுக்குச் சாதம்போட்டுக்கொண்டிருந்தாள். என்ன அநியாயம் ? இம்மாதிரி எல்லாத்திற்கும் எழுதலாமா? என்று கேட்டேன். அதற்கு இந்தத் துணிச்சல் இதெல்லாம் எழுதலாமென்றும் அதனால் ஒரு கெட்ட பெயரும் வராதென்றும் ஒரு நாழி இறைத்தாள். என் மருமானும் அவளுடன் சேர்ந்துகொண்டு "அத்தே ! அதில் ஒன்றும் தப்பிதமில்லை" என்று பரிந்து பேசினான். மாயச்சிறுக்கி அவனுக்கும் ஏதாவது மருந்து இட்டு விட்டாளோ என்னவோ? அன்று முதல் நான் அவளுடன் பேசுவதே கிடையாது. எனக்கென்ன? மெத்தக் காலமாச்சு. இவர்களுக்கு வரும் மான அவமானம் எனக்கா இவளுக்கா ? எக்கேடு கெட்டு எருக்காய் முளைக் கட்டுமே.

பத்தாசி:—பாட்டீ ! மன்மதி இவ்வளவு புத்திசாலியா ? ரொம்ப அடக்கமா யிருக்கிறாளே ? நீர் இவ்வளவு கோபப்படுவது நியாயமல்ல. அது போகட்டும் உங்க மருமாளெப்படி ? அவளாவது உங்க இஷ்டப்படி யிருந்தால் தானே உமக்கு சந்தோஷமா யிருக்கும்?

பாட்டி:—இவளைச் சொன்ன வாயால் அவளைச் சொன்னால் வாய் வெந்து போகும். எவ்வளவு சிக்கனம், எவ்வளவு அடக்கம். புருஷன் வீட்டிற்குப் போய் இரண்டு வருஷம் தானே ஆகிறது. எவ்வளவு பொறுப்பா யிருக்கிறாள் தெரியுமா ? இவள் அவர்கள் வீட்டுக்குப்போகும் வரையில் எங்கள் மாப்பிள்ளை மாதம் முப்பது ரூபாய்கொடுத்து ஒரு மோட்டார் ஓட்டி வைத்துக் கொண்டிருந்தார். என் மருமாள் அவர் வீடு போனதும்

# யாதவமித்திரன்.

## ஒரு மாதப்பத்திரிகை.

எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்.

| தொகுதி 3. | ஆங்கிரஸஹு வைகாசிமீ 1932ஹு மேமீ | பகுதி 10. |
|---|---|---|

### கடவுள் வணக்கம்.

தாய் நினைந்த கன்றே யொக்க என்னையும்
    தன்னையே நினைக்கச் செய்து தான் எனக்காய்
நினைந்தருள் செய்யும் அப்பனை
    அன்று இவ்வையக முண்டுமிழ்ந்திட்ட
வாயனை மகரக்குழைக் காதனை
    மைந்தனை மதிட்கோவலிடைகழி
யாயனை அமரர்க்கரி யேற்றை என்
    அன்பனை அன்றி ஆதரியேனே.

திருமங்கையாழ்வார்.

### நமது பத்திரிகை

நமது யாதவமித்திரன பத்திரிகைக்கு இத்திங்களுடன் மூன்று ஆண்டுகள் நிரம்பிவிட்டன. இதற்கு, முதல் வருடத்தில் சந்தாதார்கள் 4000 பேர்கள் சேர்ந்தார்கள். வருட முடிவில் இவர்களுள் பணம் அனுப்பியோர் 2000 பேர்கள். 2000 பத்

திரிகைகளுக்குப் பணம் வரப்பெறவில்லை. இரண்டாம் ஆண்டில் சந்தாதாராக இருந்தவர்கள் 2000 பேர்கள். இவர்களுள் பணம் அனுப்பியோர் 1000 பேரே. மீதி 1000 பத்திரிகைகளுக்குப் பணம் வரப்பெறவில்லை. மூன்றாம் ஆண்டில் சந்தாதார்களாக இருந்து பத்திரிகை பெற்றோர் 1000 பேர்கள். இவர்களுள் பணம் அனுப்பியவர்கள் 600 பேர்களே. ஆகவே ஒவ்வோராண்டிலும் சந்தாதார்கள் பப்பாதி குறைந்து, பணம் அனுப்பியவர்கள் அதனிலும் பாதிப்பெயராகக் குறைந்துபோயினர். இவ்வளவு நஷ்டங்கள் ஏற்பட்டும் சமூக நலங்குறித்து அவற்றையும் பொறுத்துக்கொண்டு இதுவரை பத்திரிகை நடத்தப்பெற்று வந்தது. இவ்வாண்டில் வந்திருக்கும் சந்தா வரவை நோக்குமிடத்து இனிப் பத்திரிகையை நிறுத்தி விடுவதைத் தவிர மேற்கொண்டு பத்திரிகை நடத்தமுடியாதென்று தோன்றுகின்றது. நம் சமூகத்தினர்க்கு ஓர் பத்திரிகை இல்லாதது பெருங் குறைவாக இருக்கிறதென்று நம் குலப் பிரமுகர்களும் மற்றையோர்களும் மகா நாடுகளில் மிக வருந்திக் கூறிவந்தபடியால் அக்குறையை நிவர்த்தி செய்யும் பொருட்டே இப்பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டு மூன்றாண்டுகளாகச் சிறந்த தொண்டாற்றி வந்திருக்கிறது. இதனை ஆரம்பித்த பிறகு முதலில் பத்திரிகை வேண்டுமென்ற பெரியோர்களெல்லாம் இதைப்பற்றிய சிரத்தையும் கருத்தும் சிறிதும் கொண்டதாகத் தெரியவில்லை. தங்களுக்குரிய சந்தாக்களையாவது அனுப்பினோர்களுமில்லை. பத்திரிகையின் ஆக்கத்திற்குரிய செயலை மேற்கொண்டார்களுமில்லை. இவைகளை எல்லாம் உத்தேசிக்கிறபோது நம்மவர்க்கிருக்கும் குல அபிமானம் எவ்வளவு வரை உண்மையானதாக இருக்கின்றதெனத் தெரிய வருகிறது. மிகுந்த செலவினைக்கொண்ட இப்பெருங்காரியத்தைத் தைரியத்தோடு ஒரு பெரியார் ஆரம்பிக்க முற்பட்டும் அதற்குத் தங்களாலியன்ற சிறிய உதவியையும் நம்மவர் செய்ய முன் வராதது மிகுந்த வருத்தம் விளைக்கத்தக்கதாயிருக்கிறது. நம்மவர்கள் இம்மாதிரியான மனப் பான்மையோடு இருக்கும் வரை நம் குலம் எவ்வாறு மேன்மையடையக்கூடும்? இப்போதிருக்கிற சந்தாதார்கள் ஒவ்வொருவரும் குறைந்தது இரண்டு இரண்டு சந்தாதார்களையாவது சேர்த்து ஐப்பசி மீ 30உக்குள் அனுப்பி வைக்காவிட்டால், முந்தின சந்தாதார்களும் மறுபடியும் சந்தா



தார்களாகச் சேர்ந்து ஊக்கம் அளிக்காவிட்டால் ஏற்படுகிற பெரிய நஷ்டங்களை உத்தேசித்து ஆவணித் திங்களோடு நம மித்திரன் வெளிவரமாட்டா என்பதனைக் குலாபிமானிகளுக்கு மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

நமது மகாநாடு:—

நமது ஏழாவது மகா நாட்டைத் தஞ்சாவூரில் நடத்துவதாக ஒப்புக்கொண்ட பெரியார்கள் அதற்கேற்ற முயற்சிகளை ஆரம்பத்தில் மிக விரைவாகச் செய்ய முற்பட்டுப் பத்திரிகைகளில் விளம்பரங்கள் முதலியன செய்துவிட்டு இப்போது வாளாவிருக்கிற காரணம் தெரியவில்லை. வருடந்தோறும் நடைபெற்று வந்த மகாநாடு இவ்வருடம் தடைபட்டிருப்பது மிகவும் வருந்தத் தக்கதாகவிருக்கிறது. இவைகளை எல்லாம் நோக்குமிடத்து நம் குலத் தலைவர்களது முயற்சி வர வரத் தளர்ந்து வருகிறதெனக் கருத இடந்தருகிறது. தஞ்சைத் தலைவர்கள் விரைவில் மகாநாட்டை நடத்தும் முயற்சியை மேற்கொள்ளுவார்களென்று நம்பி எதிர்பார்க்கிறோம்.

வாலிபர் சங்கங்கள்:—

நம் சமூகத்தில் ஆங்காங்கு பெரிய ஊர்களில் வாலிபர் சங்கங்கள் ஏற்படவேண்டுமென்பது நமது மகாநாட்டுத் தீர்மானங்களில் ஒன்றாகும். அவ்வாறே சிற்சில ஊர்களில் வாலிப சங்கங்கள் ஏற்பட்டு நடைபெற்று வருகின்றனவென்பதை நேயர்கள் பத்திரிகை வாயிலாக அறிந்திருக்கலாம். அவ்வாறு நடந்து வரும் அச் சங்கங்களில் சில வாலிப முன்னேற்றங்களுக்குரிய லக்ஷியங்களாகிய கல்வி வளர்ச்சி, நல்லொழுக்கம், குலாபிமானம், தனிப்பட்ட தங்களது வாழ்க்கைகளைப் புனிதப்படுத்தும் உயர்ந்த குணங்களாகிய சகிப்புத் தன்மை, பொறுமை எதிர்ப்பு, அடக்கம், தன்னல மறுப்பு, பாஷாபிமானம், தற்கால நாகரிகம், நியாய நெறியில் தைரியம் முதலியவற்றை வளர்ப்பதற்குரிய நெறிகளைக் கடைப்பிடித்துத் தொண்டாற்றுவதைக் கைவிட்டு ஊரிலுள்ள பெரிய மனிதர்கள் தலையிட வேண்டிய ஊர்ப் பொதுக்காரியங்களில் தலையிட்டும் கட்சிப்பிரிவுகளை உண்டாக்கியும் ஊர் நலத்தைக் கெடுக்க முற்படுகிறதாகத் தெரிகிறது. இனியும் இவ்வாறு இச்சங்கங்கள் இம்முறையில் நடைபெறுமானால் ஊர்களில் ஒற்றுமை சிதைந்து பல கட்சிகளும், பல

சங்கங்களும் ஏற்பட்டுச் சங்கத்தின் பயன் வாலிபர்கட்குக் கிட்டாது போய்விடும். ஆதலால் இத்தகைய முறையை மேற்கொள்ளும் சங்கங்கள், இனியும் அவ்வாறு நடைபெறாமல் வாலிபர் முன்னேற்றம் ஒன்றையே முக்கிய அம்சமாகக் கொண்டு நடைபெற வேண்டுமென்று விரும்புகின்றோம்.

நற்செய்தி:—

நமது மித்ரன் ஆசிரியர் கூட்டத்துள் ஒருவராகிய திருநெல்வேலி திருவாளர். J. சக்கிரபாணிநம்பியார் பி. ஏ., பி. எல்., அவர்கட்கு உதவிப் பப்ளிக் ப்ராசிகியூட்டர் பதவி கிடைத்திருக்கிறதென்பதையும் நமது ஆசிரியர் கூட்டத்துள் ஒருவராகிய தஞ்சை பண்டிதர் திருவாளர் R. வெங்கடாசலம் பிள்ளையவர்கள் திருவையாறு சமஸ்கிருத காலேஜ் தமிழ் விரிவுரையாளராக நியமிக்கப்பட்டிருக்கிறார்களென்பதையும் அறிந்து நாம் மிக மகிழ்ச்சியுறுகின்றோம். இவர்கள் இன்னும் இதற்கும் உயரிய பதவிகளை எய்தி நலத்துடன் வாழத் திருவருளைப் பிரார்த்திக்கிறோம்.

---

# ஆநிரை பின்சென்ற அச்சுதன்.

(ஆரியூர். திரு. வ. பதுமநாபபிள்ளை.)

ஆருயிர்கட்கெல்லாம் ஆனந்தமூட்டும் மனோகரமான வசந்த காலம்! செஞ்சுடர்க் கதிரோன் கீழ்த்திசையில் எழுவதன் முன்னர், தனது கிரணங்களை மெல்லமெல்லப் பரப்பிக் குணதிசையை வெண்மைபெறச் செய்தான். பலவகைப் பறவைகளும் இரைதேடும் நோக்குடன் பறந்து திரிந்தன. சோம்பலை உதறித் தள்ளி அவரவர்களுக்கு உரிய வேலைகளில் உற்சாகத்துடன் தலைப்படுங்கள் என்பது போல, கோழிகள் 'கொக்கரகோ' என்று கூவலாயின. மன மகிழ்ச்சி இருந்தால் வினையிலும் மகிழ்ச்சி விளையும் என்பதைக் குறிப்பதுபோல், குயில்கள் 'குயில்' 'குயில்' என்று கூவ, வந்தவிட்ட



கதிரவனைக்கண்டு சிரித்தமுகத்துடன் வரவேற்பதுபோல் தாமரை இதழ்களைச் செவ்விதில் விரித்துப் பொலிந்தன. ஆலயங்கள் தோறும் காலைப் பூசையை முன்னிட்டு மணிகள் கணகணவென ஒலித்தன; சங்கினங்கள் பொம்பொம் என முழங்கின. 'ஏற்ற கலங்கள் எதிர் பொங்கி மீதளிப்ப மாற்றாதே பால் சொரியும் வள்ளல் பெரும் பசுக்கள்' எல்லாம், இரவு முழுவதும் தொழுவில் அடைபட்டுக் கிடந்த துயர்தீர, எப்பொழுது தமது சிந்தைக்கினிய செல்வனோடு வனங்களை அடைந்து ஓடியாடித் திரிவோம் என்னும் ஆர்வத்துடன் 'அம்மா' 'அம்மா' என்று கத்தலாயின.

வெண்ணிறந்தோய் தயிர் தன்னை வெங்கதிரோன் முன்னெழுந்து இடை இருபாலும் வணங்க இளைத்து இளைத்து ஏங்கி, தண்மலர்க் கைகள் இரண்டும் சோர்ந்து தழும்பேறுமாறு தயிர் கடையவேண்டிய ஆயர்பாடிக் கோபிகைகள், சிற்றஞ் சிறுகாலே வந்து பனிதலையில் வீழ வாசல் கடைப்பற்றிக் காத்துநின்று, அடிகளின் வண்ணமும் கரங்களின் திறலும் இணையற்ற புகழும் இடர்களையும் கழலையும் அருட்பெருங் குணத்தையும் அங்கை வேலையும் போற்றிப் புகழ்ந்து, உம்பர் கோமானே! ஊற்றமுடையாய்! தோற்றமாய் நின்ற தொல்மணிச் சுடரே! நெடுமாலே! மணிவண்ணா! கோவிந்தா! என்று கூவிக்கூவி யழைக்க, அன்பின் மாண்பை அனைவர்க்கும் உணர்த்த அவதரித்தருளிய கண்ணபிரான் கட்டிலில் அடிக்கடி புரண்டு புரண்டு படுத்துக்கொண்டிருந்தான். நெடுநேரத்திற்கு முன்னமே அப்பெருமான் விழித்துக்கொண்டுவிட்டானாயினும், தன்னைத் துயிலினின்றும் எழுப்பப் பெருமுயற்சி செய்துநிற்கும் பெண்மணிகளைச் சோதிக்கும் எண்ணத்துடன் பொய்யுறக்கங் கொண்டு புரள்வானாயினன். விழித்துக்கொண்டே தூங்குவதுபோல் பாசாங்கு செய்வோரை எழுப்புவது எளிதோ? சிறிது நேரத்திற்குப் பின் எழுந்து உட்கார்ந்துகொண்டு, அக்கோபிமார் கேட்கும் கேள்விகள் எவற்றிற்கும் எவ்வித பதிலும் சொல்லாமல் புன்முறுவல் பூத்த முகத்தினனாக இருந்த அவனிடம், அளவற்ற அன்புடைய அவனது அன்னையாகிய அசோதைப்பிராட்டி வந்து நின்று, "கண்ணா! பதினாறு பருவங்கள் நிரம்பியபின்னும், பச்சிளங் குழந்தைபோல் இன்னும் உறங்குவது உனக்கே அழகாக இருக்கிறதா? பாவம்! உன்னிடம் அன்பு மிகுந்த பலரும் நெடுநேரமாக உன்னை எழுப்பப் பெருமுயற்சி செய்து நிற்கின்றனர் போலும்!

உனது சிந்தைக்கினிய நந்தினியும் கபிலையும் சுரபியும் எவரையும் கிட்டே நெருங்கவொட்டாது இடர் செய்கின்றன. உனது பட்டுக் கைகள் பட்டால் தான், அவை தம் பாலை அளிக்கும் போலும்! இதோ, இக்கலங்களை எடுத்துச் சென்று, அவற்றின் பாலைக் கறந்து கொண்டுவா! அதற்குள் உன் தோழர்களோடு நீ வனத்திற்கு எடுத்துக்கொண்டு போகச் சிறந்த சித்திரான்னம் தயாரித்து விடுகிறேன்'' என்று கூறிச் சென்றாள்.

அவள் அகன்றவுடனே, தன்னிடம் பேரன்பு கொண்டவர்களைப் பெரிதும் சோதிக்கும் இயல்பினனாகிய கண்ணபிரான், தன் எதிரிலிருந்த பெண்மணிகளை நோக்கி, 'கலகல' என்று ஒரு குறும்புச் சிரிப்புச் சிரித்துவிட்டு, கலங்களை எடுத்துக்கொண்டு தொழுவை நோக்கி ஓடிவிட்டான். தங்களது மனங்குளிரப் பவளவாய் திறந்து உரையாடுவான் என்று நெடுநேரம் பேரார்வத்துடன் காத்துக் கொண்டு நின்றிருந்த கோபிமார் அனைவரும் பெரிதும் ஏமாற்ற மடைந்தவர்களாய், நேற்றிரவு யமுனை யாற்றங்கரையில் சொன்ன மாற்றத்திற் கிணங்க—வனத்திற்குச் செல்வதன் முன்னர் தனது சிந்தைக்கினிய மித்திரவிந்தையிடம் வராமலிரான் என்று துணிந்தவர்களாய் அவ் வனிதையின் வீட்டிற்குச் சென்று சேர்ந்தனர்.

எப்பொழுதும் தங்களை இன்பக் கடலுள் ஆழ்த்தும் தங்களது தோழனும் தலைவனுமான கண்ணனைக் கண்ட வளவில், சீர்த்த காம்பு பற்றி வாங்கக் குடம் நிறைக்கும் 'நந்தினி' 'கபிலை' 'சுரபி' எனும் வள்ளற் பெரும் பசுக்கள் மூன்றும், தம் மடியின் கீழ் கலங்களைப் பிடித்த வளவில், கனைத்துக் களித்துக் காம்புகளின் வழியே இனிய பாலைப் பெருகவிட்டன. அக் காம்புகளில் கண்ணன் திருக்கைகள் பட்ட வளவில் அப் பசுக்கள் அடைந்த ஆனந்தம், வானுலகத்துக் காமதேனுவுக்கும் வாய்த்தற்கரிய ஆனந்தமாகும். அப் பெருமான் பால் கறந்த அவ் வற்புதக் காட்சி, பிற்காலத்தில் அவன் நல்லறிவாளர் எல்லோரும் நுகர்ந்து அளப்பரிய ஆனந்தம் அடையும் வண்ணம் பார்த்தனைக் கன்றாகக்கொண்டு உபநிடதங்களாகிய பசுக்களின் மடிகளிலிருந்து கீதாமிருதமாகிய பாலைக் கறந்தருளப் போவதைக் குறிப்பிப்பது போன்று விளங்கியது. கலங்களை வீட்டிற்கு எடுத்துக்கொண்டு போகுமாறு தனது தோழர்களுக்குக் கட்டளை யிட்டுவிட்டு, அப் பசுக்களின் முகங்களில் அன்போடு



முத்தங்கள் பல தந்து முதுகில் தட்டிக் கொடுத்துவிட்டுத் தனது சிந்தைக்கினிய மித்திரவிந்தையின் வீட்டுக்குச் சென்றான்.

தங்களது எண்ண மனைத்தும் கண்ணனிடத்தில் செல்ல—தாங்கள் விரும்புமளவு தங்களை விரும்பாதவன் போல் காணப்படும் அம் முகில்வண்ணனை வெறுக்கவும் கூடாமல்—தங்களது ஆர்வம் தீர இன்பம் தருவன் என்று மகிழவுங் கூடாமல்—அல்லும் பகலும் அவனது திருவருளைப் பெறுவதிலேயே ஆர்வம் மிகுந்தவர்களாய்த் தவித்து நிற்கும் கோபிமாரிடையில், கோவலர் கொழுந்தாம் கோவிந்தன் சென்று நின்றான். பல வழிகளிலும் தன் மனத்தைப் புண் படுத்தும் காதலனிடம் ஊடல் கொண்ட மித்திரவிந்தை, அவனது ஒப்பற்ற வடிவழகைக் கண்டுவிட்டால் தனது பிணக்குகள் அனைத்தும் இருந்த இடம் தெரியாமல் ஒழிந்துவிடுமென்ன உன்னியவளாய்—தனது கூர்விழிகளாகிய இணை வேல்களை எவின், அவை அவனது மார்பழகில் மயங்கித் தம் வலி இழந்து அவனுக்கு அடிமைப்பட்டு விடும் என எண்ணியவளாய்—நிலத்தைக் குனிந்து நோக்கியவாறே நின்றாள். அப்பொழுது மெய்யன்பர்கட்குப் பேரின் பூட்டும் கண்ணன் கழலிணை அவளது கருத்தைப் பெரிதும் கவர்ந் திடவும், அவற்றின் ஒப்பற்ற அழகோடு காதலிகளைக் கட்டித் தழுவிக் களிபெருங் கடலுள் ஆழ்த்தும் அவனது கைகளின் அழகை ஒப்பிட்டு நோக்கும் ஆர்வம் மிகுந்தவளாய் நிமிர்ந்து நோக்கினள். அவ்வளவே! அப் பெருமானது இந்திரநீலம் ஒத்து இருண்ட குஞ்சியும், சந்திர வதனமும், உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் தந்திரம் வல்ல இணைவிழிக் கணைகளும், சிந்தையை மயக்கும் செங்கனி இதழும், சுந்தர மணி வரைத் தோள்களும், எப்பொழுதும் அவனது எழிற் கழுத்தைத் தழுவி நிற்கும் இன்பத்தைப் பெற்ற மணிமாலைகளும், என்றும் அவனது மார்பகத்தைத் தனக்கு உரிய இடமாகக் கொண்ட கவுத்துவம் என்னும் கவின்பேரணியும், வனத்தில் அவன் மனத்தில் பெருமகிழ்ச்சி பெருகுந்தோறும் அவனது செங்கனிவாயின் இன்சுவையை நன்கு அனுபவிக்கும் தனிப்பெரும் பேறு பெற்றுத் திருக்கரத்தில் திகழும் வேணுவும், கொண்டல் வண்ணமும் குளிர்ந்த நோக்கமும் மித்திரவிந்தையின் நெஞ்சினின்றும் ஊடலை வெருட்டி ஓட்டிவிடவே, அவள் தன்னையும் மறந்து தனது ஆருயிர்க்கரசனாகிய ஆர்வலனை இறுகத் தழுவினாள்.

அக் காட்சியைக் கண்டு வியந்து நின்ற ஏனைய கோபிமாரின் சார்பாக, அவர்களுள் ஒரு நங்கை அச்சமயம் கண்ணபிரானை நோக்கிப் பின்வருமாறு பேசலானாள்:—

"எமது சிந்தையில் குடிகொண்ட செல்வரே! விண்மீன்கள் போன்ற எங்களிடையில் பூர்ணசந்திரன் போலும் விளங்குபவரே! எம்மவர் எல்லோரையும் இன்பூட்டி நிற்கும் தனிச்சுடர் மணியே! உமது வஞ்சகச் செயல்களையும் பெண்ணின் வருத்தம் அறியாத பெற்றியையும் பொய்மொழிகளையும் பன்முறைகளில் கண்டறிந்திருந்தும், எங்களது நெஞ்சம் உம்மையே தஞ்சமாக அடைந்துவிட்டது. எம்மிடம் உண்மையன்பில்லாத உம்மிடம், மீண்டும் மீண்டும் வெட்கம் இழந்து, தன் மதிப்பு ஒழிந்து சென்றுவிடுகின்ற எமது பேதைநெஞ்சை அவ்வாறு செல்வதினின்றும் தடுத்து எங்களிடமே நிறுத்திக்கொண்டுவிட எவ்வளவோ முயன்று பார்த்தும், இன்றளவும் அம்முயற்சியில் வெற்றி பெற்றோமில்லை. 'தன்னை நினையாதாரைத் தான் நினைந்து உருகுவது பெரும் பேதைமையாகும்' என்பதைப் பன்முறைகளிலும் அறிவுறுத்திவந்திருந்தும், எமக்கு உரிமையாக இருக்கவேண்டிய எமது நெஞ்சம், எம்மை விட்டு நீங்கி உம்மிடமே சென்றுவிடுகின்றது! எமது நெஞ்சமே எமக்குத் துணையாகாதொழிந்தால், வேறு எங்களுக்கு 'ஆவாரார் துணை?' கண்டவர் சிந்தை கவரும் கட்டழகில் மேனிக்கு இந்திரநீலத்தை இணையாகக் கொண்ட நீர், இமைப்பொழுதில் எம்மவரை உமக்கு அடிமைப் படுத்திக்கொள்ளும் இந்திரஜாலத்தைத் துணையாகக் கொண்டு எத்தகைய பிணக்குகளையும் எளிதில் ஒளித்துவிட வல்லவராக விளங்குகிறீர்! மாயவரே! உமது மாயம் எவராலும் அறியவொண்ணாதது! எவரையும் எளிதில் வென்றுவிடக் கூடியது! உமது மாயையும் உம்முடனேயே நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வருகிறது!

எப்பொழுது எமது நெஞ்சை அடிமை கொண்டீரோ, அப்பொழுது முதல் அதன் கவலையை அகற்றவேண்டியது எம்மை உய்விக்கத் தோன்றிய உமது முதற் பெருங் கடமையன்றோ? உமது வஞ்சகவினைகளால் அது படும் சஞ்சலத்தைக் கண்டும், அதன்மேல் திருவுள்ளம் இரங்கி அதற்கு 'அஞ்சல்' 'அஞ்சல்' என்று அருளாத உம் ஆண்மை என்ன ஆண்மை? கருவுற்றிருந்த காலத்தில், தனக்குப் பிறக்கவிருக்கும் குழந்தை பெண்குழந்தையாகவே பிறக்கும் என்று சோதிட வல்லுநர் கூறக்கேட்ட அசோதை, பிரசவ காலத்திற்கு முன்னரே பெண்குழந்தைக்கு உரிய சிறந்த நகைகளையெல்லாம் செய்து வைத்துக்கொண்டிருந்து, இறுதியில் நீர் ஆண்குழந்தையாக இருந்தது கண்டும் அந்நகைகளையே உமக்குப் பூட்டிவளர்த்து வந்ததனால், நீரும் ஆண்மையை இழந்துவிட்டீர் போலும்! பெண்மணிகளின் பொருட்டுப் பண்டைய வீரர்கள் தத்தம் உயிரையே வழங்கியிருக்க, எம் போன்ற ஏழையராகிய பெண்களின் உயிரையே கவர்ந்துகொள்ளும் உமது வீரம் வெகு அழகாக இருக்கிறது! நீர் கடியீர்! கொடியீர்! அறிவரிய பெருமாயத்தீர்! ஆயினும், கொடிய எம் நெஞ்சம் உம்மையே என்றும்—எப்பொழுதும்—எந்நிலையிலும்—தஞ்சமாகக் கொண்டுவிட்டது! ஒருநாள், தலையில் தயிர்க்குடத்தையும் பாற்குடத்தையும் வைத்துக்கொண்டு தெருவில் விற்கப்புறப்பட்ட காளிந்தி, 'தயிரோ தயிர்' 'பாலோ பால்' என்று கூவவேண்டியிருக்க, உம்மிடம் கொண்டுவிட்ட காதற்பித்தினாலே—தான் சொல்வதைத் தானே அறியாதவளாய்—'கோபாலா' 'கோபாலா' 'கண்ணா' மணிவண்ணா' என்று கூவத்தொடங்கிப் பலராலும் பரிகசிக்கப்பட்டாள்!



உம்மிடம் நாங்கள் கொண்டுவிட்ட கரவறியாத தூய மெய்க்காதல் எத்தகையதென்பதைக் கேவலம் வாய்மொழிகளால் விரித்துரைத்து விளக்கிக்காட்டக்கூடிய சக்தி எனக்கில்லை. அனைவர் மனத்தையும் அறிந்து வைத்துள்ள தனிப்பெருங் கள்வராகிய தமக்கே, எமது காதலின் தன்மை எத்தகையதென்பது இனிது தெரியும். இத்தகைய எமது சீரிய காதலைச் சிறிதும் மதியாது புறக்கணித்துவிட்டு, உம்மைப் பிரிந்திருக்கும்போது அப் பிரிவுக்கு ஆற்றாமைப்பட அறியாத பசுக்களின்மேல் அளவிறந்த அன்பு கொண்டவராய் எங்களை இங்கே தவிக்கவிட்டுவிட்டு அவற்றின் பின் ஓடிப்போய்விடுவதும் உமக்குத் தருமந்தானோ? ஆருயிர்களைக் காப்பது உமது தொழிலானால், ஆநிரையைக் காப்பதோடு எங்களையும் காத்தருள்வது உமக்கு அரிதாகுமோ? குறிப்பிட்ட இடத்தில் வளைத்துவைத்த கோக்களைக்காக்கும் திறத்தை விட, பல மனைகளில் வசித்திருப்பினும் சிந்தையை உம்மிடம் செலுத்தி நிற்பவர்களான எங்களைக் காக்கும் திறம் பன்மடங்கு சிறந்ததன்றோ?

உமது கமலமலரைப் பழித்த திருவடிகளின் பெருமையையும் மென்மையையும் நாங்கள் பெரிதும் போற்றுகின்றோமேயன்றி, நீர்

சிறிதும் மதிப்பவராகக் காணோம்! நாங்கள் ஆராக்காதலோடும் பேரச்சத்தோடும் வருடும்படியான கோமள மலரடிகளைக் காட்டிலும் மேட்டிலும் கல்லிலும் முள்ளிலும் நீர் வருந்தச்செய்துவருவதை நினைக்க நினைக்க எமது நெஞ்சு பெரிதும் நெக்குருகுகின்றது! உமது திருவடி மலர்களின் அருமையை உணராது அவற்றைத் தினமும் சிவந்து வருந்தித் திரியச்செய்வித்து வரும் பசுக்களையெல்லாம் திருவாய்பாடியினின்றும் துரத்திவிட்டாலும் எங்களது சஞ்சலம் நீங்கிவிடும். எங்களது நெஞ்சகத்தில் வைத்துக்கொண்டு மனம் குளிர்ந்திருக்க விரும்பி நிற்கும் உமது செங்கமல வண்ணமென்மலரடிகளை, அன்பின் பசையற்ற வன்கண்ணரது நெஞ்சம்போலும் வெப்பம் மிகுந்த காட்டில் வீணில் வருந்தச் செய்யப் போகிறீரே! என்றும் நீர் வனத்திற்குப் புறப்படுவதைக் காணுந்தோறும், எமது நெஞ்சம் அனலிடைப்பட்ட மெழுகென உருகா நிற்கும். மேலும், வீட்டில் விளையாடிக் கொண்டிருந்தபோதே உம்மைக் கொல்ல எண்ணி வந்த அசுரர்களைப் போலவே காட்டிலும் மாயம்வல்ல பற்பல அசுரர்கள் வஞ்ச நெஞ்சக் கஞ்சனால் ஏவப்பட்டவர்களாய்த் தக்க சமயம் பார்த்திருந்து உமக்குக் கேடுசூழ முயற்சிக்கக்கூடும் என்னும் பேரச்சம் இன்னும் எங்களது நெஞ்சினின்றும் நீங்கியபாடில்லை. எங்களது இன்னுயிர்க்கு இன்பூட்டக்கூடிய இணையற்ற துணைவராகிய நீர் எம்மை விட்டுப்பிரிந்து ஆநிரை பின் சென்று விட்டால், எமது அகத்துயரை ஆற்றக்கூடிய துணைவர் வேறு எவர்? எங்களுக்கு நீர் துணையாய் உமக்கு நாங்கள் துணையாய் இருப்பதாகவே நாங்கள் எண்ணியுள்ளோம்? ‘துணை’ என்னும் சொற்பொருளுக்கு நீர் ஒருவரேயல்லவோ தனி உரிமை உடையவராவீர்! தோழிமாரும் ஏனையோரும் எமது துயரை நீக்கக்கூடிய துணைவர்கள் ஆவாரோ?

எச்சமயத்தில் எவ்விடத்தில் எந்நிலையில் இருந்தாலும் எத்தொழிலில் ஈடுபட்டிருந்தாலும்-உம்மையே உன்னி உன்னி உருகும் உள்ளத்தை உடையவர்களாகிய எங்களைப் புறக்கணித்து நீர் ஆநிரை பின் சென்றுவிட்டீராயின், எமது கருவிழிகளென்னும் ஊற்றினின்றும் எழும் கண்ணீர்ப் பெருக்கு மார்புக் குன்றுகளின் வழியே இழிந்து எரியெனப் பரவி, உடலையும் உயிரையும் ஒருங்கே சுடத் தொடங்கி விடுகிறதே! இங்கிருந்து இவ்வளவு நேரம் எங்கட்குக் காட்சியளித்தருளியதன் பயனாக இன்பம் அனுபவித்தற்கு உரிய சிற்சில கணங்களிலும், எப்பொழுது எழுந்து சென்று மறைந்து



விடுகிறீரோ என்று எங்களது நெஞ்சில் மிகும் சஞ்சலம் அக்கொஞ்ச நேர இன்பத்தையும் அனுபவிக்கவொட்டாமல் செய்து விடுகின்றதே! உம்மைப் பிரிந்திருக்க நேரும் ஒரு பகல் நேரம், எமக்கு ஊழிக்காலம் போலல்லவா தோன்றுகிறது! உமது பிரிவைப் பொறுக்க இயலாமல் இவ்வளவு பாடுகள் படும் எங்களை இங்கே தவிக்க விட்டுவிட்டு, வனத்திலே உம் எதிரிலேயே உமக்கு வெகு தூரத்தில் மேய்ச் சென்றுவிடுவனவாய உமது பிரிவின் வருத்தம் தெரியாத பசுக்களின் பின்னே சென்றுவிட நித்தமும் பேரார்வம் கொண்டு நிற்பது, அன்பின் திறத்தை நன்கறிந்துள்ள உமக்கே அழகாக இருக்கிறதா? உம்மையே தஞ்சமாகக் கொண்ட எம்மவரை இவ்வாறெல்லாம் தினமும் வருந்தவைத்து வரும் வரையில், ‘தன்னைச் சரணடைந்தோரைக் கைநழுவ விடாதவன்’ என்னும் பொருளுடைய ‘அச்சுதன்’ என்னும் திருநாமத்தை வகிப்பது உமக்குப் பொருந்துவதாகுமோ?” என்றிரங்கினாள்.

இவ்வாறு அவ்வாயர்மாது பேசக்கேட்ட கண்ணபிரான், தனது செந்தாமரைக் கண்களால் அந் நங்கையைக் குளிர நோக்கியருளி, “உங்களது நெஞ்சில் என் வடிவம் என்றும் குடிகொண்டிருக்குமாயின், எனது தூல உடலைக் காணாது நீங்கள் ஏங்குவானேன்? யான் ஆன் பின் போனால் தான் என்ன? வனத்தில் திரியும் னேன்? யான் ஆன் பின் போனால் தான் என்ன? வனத்தில் திரியும் வேளைகளிலும் என் மனத்தில் உங்களை மறப்பதுமுண்டோ? எனது பெற்றோர் இட்ட கட்டளைகளைத் தட்டின்றிச் செய்யவேண்டுவது எனது கடமையாதலின், ஆநிரை பின் செல்லாது நிற்கவும் கூடுமோ? யான் பிரிந்து சென்ற பின்னும் எனது வைபவங்களைச் சிந்தித்துச் சிந்தித்துச் சிந்தைத்துயரை ஒருவாறு தேற்றிக்கொண்டிடக்கூடிய ஆற்றல் பெற்றுள்ள உங்களுக்காக, யான் அருகில் இல்லாவிட்டால் வயிறாரப் புல்லை மேயவும் மனங்கொள்ளாமல் வாடித் தவிக்கும் ஏழைப்பிராணிகளாகிய பசுக்களை ஏங்கச்செய்யத் துணிவு கொள்வது நன்றேயோ? அப் பசுவினங்கள் எனது குழலிசையைக் கேட்டு அனுபவிக்கும் இன்பத்தையும்-காட்டிலுள்ள ஒப்பற்ற இன்பம் ஊட்டும் இயற்கைக் காட்சிகளையும் எனது மனத்திற்கினிய தோழர்களோடு விளையாடித்திரிவதிலுள்ள மகிழ்ச்சியையும் இவிடத்தில் யான் காணக்கூடுமோ? ஆதலால், என் பிரிவுக்காக வருந்தாது

ற பாலலீலைகளிலே சிந்தையைச் செலுத்தி மகிழ்ந்திருப்பீர்களின், மாலை வேளையிலே உங்களுக்கு உவகையூட்டும் பலவகைக்

காட்டுப்பூக்களையும் இனிய கனிகளையும் சேகரித்துக்கொண்டு வந்து தருவேன். நீங்கள் அவ்வாறு இன்புற்றிருக்க இசையாவிடினும், பிரிந்திருந்து வருந்தினால் தானே பிரிந்துசென்ற எனது அருமை உங்களுக்குச் செவ்விதில் தெரியக்கூடும்!"—என்று கூறி, அவ்வாயர் மாதரது நெஞ்சங்களெல்லாம் தன்னோடு தொடர்ந்துவரத் தொழுவை யடைந்து, தனது வரவுக்காகப் பேரார்வத்துடன் காத்துக்கொண்டிருந்த தனது மானிடத்தோழர்களாய ஆயர்சிறுவர்களோடு மிருகத் தோழர்களாய பசுக்களை ஓட்டிக்கொண்டு உற்சாகம் மிகுந்த உள்ளத்துடன் காட்டை நோக்கிச் சென்றான்.

உண்மை யன்பினர் பக்கலில் கொண்ட கைம்மாறு கருதாத கருணைப் பெருக்கின் பயனாகத் தனது எல்லையில்லாத தனிப்பெரும் சிறப்புகளையெல்லாம் பொருட்படுத்தாதவனாய், கரவறியாத எளியவரோடு கலந்து விளையாடித் தனது லீலாவிபூதியின் மாண்பை மாநிலத்தவர்க்கு விளக்கிக் காட்டியருளத் திருவுள்ளம் கொண்டருளிய திருமால் திருவவதரித்தருளிய ஆயர் குலத்தில் பிறக்கும் பேறுபெற்ற அன்பர்காள்!

"தொழுதையோம் தனிமையும் துணை பிரிந்தார்
துயரமும் நினைகிலை கோவிந்தா! நின்
தொழுத்தனில் பசுக்களையே விரும்பித்
துறந்தெம்மை யிட்(டு) அவை மேய்க்கப்போதி!
பழுத்த நல்லமுதினின் சாற்று வெள்ளம்
பாவியேன் மனமகந்தோறும் உள் புக்(கு)
அழித்த—நின் செங்கனிவாயின் கள்வப்
பணிமொழி நினைதொறும் ஆவிவேமால்"

என்று கண்ணபிரான் பக்கலில் மிகுந்த சீரிய காதலின் பயனாகத் தன்னை விட்டுத் தனது ஆருயிர்க்காதலன் ஆநிரையின் சென்றுவிடுவதைச் சகிக்கவொண்ணாது, 'யான் நின்னைப் பிரிந்திருக்க ஆற்றேன்; எம்பெருமான்! பசுமேய்க்கப் போகேல்!'—என்று பெரிதும் வேண்டி நின்றும், அக்காதலியின் வேண்டுகோளுக்கு இசையாதவனாய்த் தனது சிந்தைக்கினிய ஆநிரையின்பின் அச்சுதன் சென்றருளியதன் நுட்பத்தை உணர்ந்து கொண்டீர்களோ? 'பரம பதத்தில் இருப்பைக் குலைத்தன்றோ, பசுநிரை மேய்க்கப் போந்தது!' என்றும், 'பசுக்களையும் இடையரையும் ரட்சிக்கைக்கன்றோ, கோவிந்தாபிஷேகம் பண்ணிற்று!'—என்றும் நமது ஆன்றோர் கோவிந்னது கோரட்சணத்தில் ஈடுபட்டிருப்பதைச் சிந்தித்துச் சிந்தித்து உண்மை உணருங்கள்! உங்களது தாய்மாரையொத்த பசுக்களிடம் இனியும் அலட்சிய புத்தி பாராட்டுவீர்களானால்—உங்களிடமுள்ள பசுக்கள் பாலைத் தருவனவாயினும் தருவதற்கியலாத கிழப்பருவமுடையவையெனினும் எக்காலத்திலும் அவற்றைத் தக்கவாறு பேரன்புடன் காப்பாற்றிவரத் தவறுவீர்களானால்—கேவலம் சுயநல நோக்கம் ஒன்றையே குறிக்கொண்டு கோமாதாக்களின் சம்ரட்சணத்தில் தக்க சிரத்தை எடுத்துக்கொள்ளா தொழிவீர்களானால்—நமது குலத் தெய்வமாகிய கோபாலனது திருவருளுக்கு இலக்காவது அரிதாகும். ஆதலின், இனியேனும் உங்களது தனிப்பெருஞ் செல்வமாகிய பசுக்களைப் பெரிதும் போற்றி வளர்த்துக் கண்ணனது இன்னருளைப் பெற்று உய்வீர்களாக.



---

# குப்த சாம்ராஜ்யம்.

## ( கி. மு. 335—375 ) முதலாம் சந்திர குப்தன்.

கோவை திரு. சி. கு. நாராயணசாமி முதலியார்.

ஆந்திர சாம்ராஜ்யமும், குப்தசாம்ராஜ்யமும் ஒரேகாலத்தில் நிலைகுலைந்து போயின. இவைநிலைகுலைந்தகாலமுதல் ஒரு நூற்றாண்டு வரை தேச வரலாறுகளின் விஷயங்களை அறியக்கூடாதவாறு அந்தகாரப் பட்டிருந்தன. நான்காம் நூற்றாண்டில் மீண்டும் இந்துதேச சரிதம் தொடங்கப்பெற்றது. நாடுகளனைத்திலும் நாகரிகம் என்கிற புதியவொளி பிரகாசித்துக்கொண்டிருந்தது.

பாடலீ புத்திரத்திற்குச் சமீபத்திலுள்ள சிறுபாகம் ஒன்றுக்கு 'சந்திர குப்தன்' அரசனாய்ப் புகழ்பெறுக அரசு செய்து வந்தான். இவ்வரசன் காலத்திலேதான் மீண்டும் தேசத்தில் ஒற்றுமை தலைகூடி விளங்க முந்தியது. இவனே குப்தவமிசத்திற்கு முதலாம் அரசன். இவ்வரசன் 'இச்சவி' என்றநாட்டின் கன்னிகையான "குமாரதேவி"

யை (A. D.) 308 ஆம் ஆண்டில் திருமணம் செய்துகொண்டான். இச்சவி நாட்டினர் நேபாளதேசத்திற்கு அரசர்களாயிருந்தனர். இவர்களது அரசு, செல்வம், போர், கீர்த்தி முதலியனபற்றி அஜாதசத்துருகாலத்திலிருந்து இக்குமாரதேவி விவாகம் வரையில் எந்த நூலிலும் பிரஸ்தாபம் காண்பதற்கில்லை. சந்திரகுப்தன், குமாரதேவியை மணம்புணர்ந்தபின்னர் தான் மிகவும்கீர்த்திபெற்று மகதராஜ்யத்தின் பேரரசனாய் அரியாசனத்தை அலங்கரித்தான், மகதநாட்டின் தலைநகரம் 'பாடலீபுத்திரம்' (Patna) பாடலீபுத்திரம், தனதுமாதுலரின் சுவாதீனத்திலிருந்தே அவ்வரசுரிமையைச் சந்திரகுப்தன் எளிதாகக்கைகக்கொள்ளச்சாத்தியமாயிற்று, தனது தாதை, தந்தைகாலத்திலிருந்தே இளவரசுப்பதவியிலிருந்த சந்திரகுப்தன் இச்சவி நாட்டாரது சம்பந்தம் பெற்றபின்னரே இராஜாதிராஜனுனன் என்பதை வாசகர் உணரவேண்டும். சந்திரகுப்தன் தாதைபெயர் 'குப்தன்', தந்தைபெயர் 'கடோற்கஜன்' குமாரதேவியின் கணவன், தனது நாணயங்களின்மீது தன்னுடையவும், தனது தேவியினுடையவும், இச்சவிநாட்டாருடையவுமான சின்னங்களை (அடையாளம்) முத்திரையிட்டு வழங்கினுன். இதுபோலவே இவனது பின்சந்ததியாரும் வழங்கிவந்தார்கள். முதலாம் சந்திரகுப்தனுகிய இவனது நாடுகள் கங்கை, யமுனைகளின் சங்கமஸ்தானம்வரை வியாபித்திருந்தன. இவற்றுள், 'திருஹுத்' 'தேன்பீஹார்' அயோத்திமுதலிய தேசங்கள் அடங்கியிருந்தன. இவன் ஆட்சியில் ஒரு நூதனசகம் ஆரம்பமாயிற்று. அது "குப்தசகம்" என்பது. அப்புதியவாண்டின் ஆரம்பகாலம் (A D. 29—2—320 — 13—3—321.)

சந்திரகுப்தன், கல்வியிலும், அறிவிலும், அரசியலிலும், போரிலும், சாகஸசமர்த்திலும் மிகவும் திறமை பெற்றிருந்தான். இவற்றால் இவனது கீர்த்தி உலகெங்கும் வியாபித்திருந்தது. இவன் பேரரசனைப் பிறங்கியதனுல், தனது ராஜ்யத்தை விஸ்தரிக்கச் செய்யவேண்டுமென்ற அவா உண்டாயிற்று. இதனுல் தனது வாழ்நாளின் பாதிக்காலத்தைப் போர் புரிவதிலேயே போக்கினுன். இவனது போரின் வன்மையையும், பராக்கிரமச் செயலையும், வெற்றியையும் பற்றி சம்ஸ்கிருத கவியொருவர் அழகாகப்பாடி வருணித்தனர். அவ்வருணனையின் பாகங்களையே அசோகனது ஞாபகச் சின்னத் தூண்களில் பல விடங்களில் செதுக்கி வைக்கப்பட்டன. சந்திரகுப்தனது திக்விஜயம் நான்கு பாகங்களிலும் அறியப்படுகிறது. அவை தெற்கு,



வடக்கு, கிழக்கு, மேற்கு திசைகள். இவற்றில் உபதிசைகளும் அடங்கும். தென்திசையில் பதினொரு அரசர்களும்; ஆர்யாவர்த்தத்தில் ஒன்பது அரசர்களும்; காட்டுஜாதி தலைவர்களும்; குடிகளும், மேற்கு வடக்குப் பாகங்களிலுள்ள சில சுதந்தர நாட்டரசர்களும், இவனது வெற்றியினுள் அடங்கினோராவர். அந்திய நாட்டாருடன் சம்பந்தம் கூடாதென்பது சந்திரகுப்தனது கொள்கைகளுள் ஒன்று. சந்திரகுப்தன் தனது திக்விஜயத்தை முதன் முதல் தெற்கில் ஆர்யாவர்த்தத்திலுள்ள அரசர்கள்மீது செலுத்தினன். அங்கு பூர்ண வெற்றிகொண்டான். தோல்வியுற்ற அரசர்கள் பெயர் இப்பொழுது அறியுமாறில்லை. இந்தியாவினுடைய ராஜ்யத்தைச் சார்ந்த 'மார்வர்' (பத்மாவதி) என்ற நாட்டில், 'கணபதிநாகன்' என்னும் பெயரிய அரசனைவென்று நாடுகளனைத்தையும் கவர்ந்துகொண்டான்.

பின்னர் அங்குநின்றும் தனது பெரும்படையை மகாநதிபிரவகிக்கும் பிரதேசத்திலுள்ள தட்சிண கோசல நாட்டின்மீது செலுத்தி அத்தேசத்தையும், அரசன் மகேந்திரனையும் வெற்றி கண்டான். அந்நாட்டைச் சார்ந்த ஒரிஸா பாகங்களிலுள்ள கொடியரும், குரூரருமான காட்டு ஜாதியர்களைத் துரத்தியடித்து அவர்களில் பிரதான தலைவர்களைச் சிறை செய்தான். அங்குநின்றும் சற்று முன்னேறிப் பிட்டாபுரம் வரை சென்று யாவரையும் ஜயித்து சுவாதீனங் கண்டான். அதன் பின்னர் சென்னைமா நகர்க்குத் தென்பாகத்திலுள்ள 'காஞ்சீபுர'த்தின்மீது தனதுபடையைச்செலுத்தி அப்பொழுது அங்கு அரசனுகவிருந்த 'விஷ்ணு கோபனை' வெற்றிகண்டு, பின்னர் வடக்கிலுள்ள ஆந்திர நெல்லூர் ஜில்லாவிலுள்ள 'பலக்கா' (Palakka) அரசன் 'உக்கிரசேன'னை ஜயித்து அந்நாட்டைச் சுவாதீனப்படுத்திக் கொண்டு மேற்குத் திசையிலுள்ள மகாராஷ்டிர வீரர்களின் தேசத்தின் மீது சேனையைச் செலுத்தி 'நிஜாம்ராஜதானி'யைச் சென்றடைந்தான்.

* 'இடிவலி' என்ற பண்டிதர் அபிப்பிராயத்தை மேற்கொண்டால் சந்திரகுப்தன் தெற்கில் காஞ்சீபுரம் வரை செல்லவில்லையென்றும், மகாராஷ்டிர தேசத்தில் காலடி வைக்கவில்லையென்றும் கூறவேண்டும். ஆனபோதிலும் இவை ஆராய்தற்குரியவையேயாம்.

அங்கும் வெற்றியடைந்து வடக்கில் கங்கை, பிரமபுத்திரா, டெட்டா முதலான பிரதேசங்களையும், நேபாளம் முதலான ராஜ்யங்களையும், தன் அதிகாரத்தின் கீழாக்கி, பஞ்சாப், இரஜபுத்ரஸ்தானம்,

மால்வா முதலான பிரஜா சாம்ராஜ்யங்களையும் சுவாதீனப்படுத்தி அங்குள்ள பொற்குவியல்களையும், பொன்னாபரணங்களையும், மற்றும் அரும்பெரும் வஸ்துக்களையும் பெருவாரியாக அள்ளிக்கொண்டு தனது சொந்த நாட்டிற்குத் திரும்பினான். இவனது திக் விஜயகாலம் கி. மு. 348 முதல் 350-ஆம், ஆண்டுவரை. சந்திரகுப்தனுடைய ராஜ்யவிஸ்திரணம், கிழக்கில் 'காமரூபம்' மேற்கில் 'சம்பல்நதி' வடக்கில் ஹிமாலயத்திலிருந்து 'நர்மதை' முதலிய எல்லைகள் வரை. பிறவேந்தர்கள் இவனது சாமந்தர்களாகவே இருந்தார்கள். (Subordinate Alliance) பின்னும் இவனுக்குக் காபூல் தேசத்து அரசனும், சிம்மள தேசத்து (சிங்களம்) அரசனும் நெருங்கிய நட்பினர்களாக இருந்தார்கள்.

சந்திரகுப்தன் காலத்தில் இலங்கைத்தீவில் பௌத்தமதத்தைப் பரவச் செய்வதில் மிக்க விருப்பம், பெருமுயற்சியுடைய "மேகவண்ணன்" என்னும் பெயரிய அரசன், இரு பௌத்த சந்நியாசிகளைப் பௌத்தமதத்தைப் பரப்பவும், பௌத்த மடங்களை நிர்மாணிக்கவும் இந்தியாவுக்கு அனுப்பிவைத்தான். அவர்கள் இந்தியா வந்து பல விடங்களில் சுற்றியலைந்தும் அவர்கள் கோரிவந்த காரியம் நிறைவேறாததனால் தாங்கள் சிங்கள நாட்டிற்கே திரும்பிச் சென்றார்கள். பின்னும் அச்சிங்கள மேகவண்ண அரசன், அவர்களிலும் திறமை வாய்ந்த மற்றொரு பௌத்தமத சந்நியாசியிடம், உயர்ந்த மரகதம், மாற்றுயர்ந்த தங்கம் முதலான பொருள்களை மிகுதியாகக் கொடுத்து, சந்திரகுப்தனுக்குக் காணிக்கைசெலுத்திக்கண்டுகொளும்படி அனுப்பிவைத்தான். அங்ஙனம்வந்த பௌத்த சந்யாசியைச் சந்திரகுப்தன் நல்வரவேற்றுக் காணிக்கைபெற்று நன்கு உபசரித்தான். பின்னர் அச்சந்நியாசி, சந்திரகுப்தனிடம், பாடலிபுத்திரத்தில் போதிவிருக்ஷத்தின் அருகில் பௌத்த பிட்சுக்கள் வசிப்பதற்குத் திருமடம் ஒன்று கட்டிக்கொள்வதற்கு உத்திரவு வேண்டினான். அரசன் அநுமதித்தான். அப்பௌத்தன் அவ்விடத்தில் நாற்பதடி உயரமும், அதற்கேற்ற அகலமும், மூன்றந்தஸ்தும் கூடிய பெரியதொரு மாளிகையைக் கட்டிமுடித்தான், கண்கவர் வனப்பும், நல்லமைப்புமான அம்மாளிகையில் பொன்னாலும் வெள்ளியாலும் செய்யப்பட்ட புத்தவிக்கிரகங்களை முறைப்படி பிரதிஷ்டை செய்தான். ஏழாம் நூற்றாண்டில் இந்தியாவுக்கு விஜயம்செய்த சீனதேச யாத்திரிகர் 'யுவான் சுவாங்' என்பவர் இப்பௌத்தப் பள்ளியில் ஆயிரம்



பௌத்த பிட்சுக்கள் இருந்தார்களென்றும், சிங்கள தேசத்தினின்றும் வருகிற பௌத்தசந்யாசிகளைச் சந்திரகுப்தன் அன்புடனும், மிக்க மரியாதைகளுடனும் வரவேற்று உபசரித்தானென்றும் தமது நூலில் எழுதியுள்ளார்.

சந்திரகுப்தன் திக்விஜயஞ்செய்துமுடித்தபின் அசுவமேதயாகம் ஒன்று செய்து அவ்விழாவில், பொன்னும், வெள்ளியும் ஏதேஷ்டமாக எளியவர்கட்குத் தானஞ்செய்தான். அசுவமேத யாகத்தின் பொருட்டுக் கல்லினால் அழகிய குதிரையொன்று தேர்ந்த சிற்பவல்லவர்களைக் கொண்டு செய்யப்பட்டது. அது லக்னோ நகரத்துக் கண்காட்சியில் இன்றும் வைக்கப்பட்டுள்ளது.

சக்கரவர்த்தி சந்திரகுப்தனுக்குக் கவி இயற்றலதிலும் சங்கீதத்தைச் சிரவணிப்பதிலும் மிகுதியான விருப்பம். இவன் சுயமாகவே அரியபெரிய நூல்களை வடமொழியில் இயற்றியுள்ளான். எப்பொழுதும் ஞானசம்பன்னர்களான வித்வான்களுடன் கூடியிருப்பதிலேயே சந்திரகுப்தனுக்குப் பேரவா. இவனுடன் நிழல்போல் நீங்காது "வசுமந்தன்" என்ற பௌதமதப் பெரியார் இருந்துவந்தார். சந்திரகுப்தன் தனது குடிகளைக் கண்களை இமைகாப்பதுபோல் காத்து, குறையென்ற சொல்லேயில்லாமல் கவனித்து வந்தான். இவற்றால் அந்நாட்டில் அமைதியும், சாந்தமும், சந்தோஷமும் குடிகொண்டு நிலைகொண்டு நடித்துக் கொண்டிருந்தன. பேரறமும், தண்ணருளும் நிறைந்த இச்சந்திரகுப்தன் தனது தலைப்புதல்வனும் இளவரசனுமாகிய இரண்டாம் சந்திரகுப்தனைத் தனது வாழ்நாளிலேயே தனக்குப்பின் அரசனாகத் திருமுடிபுனைந்து அரியாசனத்தமர்ந்து செங்கோலோச்சுவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்திருந்தான். கி. மு. 375-ஆம் ஆண்டில் இவ்வுலகவாழ்வை நீத்து விண்ணுலகெய்தினன்.

இவனது அரசாட்சி ஆரம்பகாலம் கி. மு. 335. முடிவுகாலம் 375. அதாவது நாற்பது வருடம் ஆட்சிபுரிந்தான்.

# குப்த சாம்ராஜ்யம்.

## ( கி. மு. 376 — 413 ) இரண்டாம் சந்திரகுப்தன்.

கோவை. திரு. சி. கு. நாராயணசாமி முதலியார்.

இரண்டாம் சந்திரகுப்தனுக்கு "விக்கிரமாதித்தன்" என்று விருதுப்பெயருண்டு. இவன் கி. மு. 376-ஆம் ஆண்டில் தனது தந்தை செய்த ஏற்பாட்டின்படி திருமுடி புனைந்து அரியாசனத் தமர்ந்தான். சந்திரகுப்தன் திருமுடிதரித்துச் செங்கோலேந்தும் போதே, அரசியல் நிர்வாகங்கள் அனைத்திலும் அநுபவம் பெற்றிருந்தான். அதனால், அவனது ஆட்சியும், நீதியும் மிகவும் திறமையுடையதாய் விளங்கின. இவன் பன்னிரண்டு ஆண்டுகள் வரை அதாவது கி. மு. 388-ஆம் ஆண்டு. தனது தந்தையார் ஜயித்த ராஜ்யங்களனைத்தும் அமைதி குலையாமல் நிலைபெறச் செய்துவிட்டு, தந்தை வெற்றிகாணாது விட்டிருந்த வேற்றரசர்கள் மீது படையெடுத்துச் சென்றான். இவனது திக்குவிஜயம் பதினாறு ஆண்டுகள் வரை நீடித்திருந்தது. அதாவது கி. மு. 388-ஆம் ஆண்டுமுதல் 404-ஆம் ஆண்டுவரை. இவன் பகைவர் படைகள்மீது சேனைகளைச் செலுத்துதலிலும், திறமையாய்ப் போர்புரிவதிலும், பகைவர் பகைமைக்கு அஞ்சா ஆண்மையிலும் வல்லானாயிருந்ததனாலும், இவனுக்கேற்ற படைத்தலைவர்களும், பெரும்படைகளும் மாற்றோர் முன்னணியில் ஊடுருவிச்சென்று போர்புரியும் அருந்[illegible]யாக விருந்ததனாலுமே இவனுக்குச் சென்றவிடமெல்லாம் வெற்றியும், புகழும் சித்திப்பதாயின. இவ்வகையில் மேம்பட்ட இவ்வீரவரசன், தனது பெரும்படைகளை முதன்முதல் மால்வா, குஜராத்தின் மீது செலுத்தி அவ்விரண்டு ராஜ்யங்களையும் ஜயித்தான். அதன்பின்னர் சகுலர், அதாவது 'மேற்கு க்ஷாத்தரர்கள் அரசுசெய்கின்ற சௌராஷ்டிரம், தென்குஜராத் தேசங்களில் அரசர்களையும் வென்று வெற்றிச்சங்கம் முழக்கினான். பின்னர், மாளவநாட்டையும் கைப்பற்றினான். இங்ஙனம்



னம் சௌராஷ்டிரம், மாளவராஜ்யங்களை வெற்றிபெற்றதனால், மகத நாட்டின் வியாபாரம், அரபியா, இஜிப்ட்டு, முதலிய நாடுகளில் பிரபலப்பட்டு உயர்வதற்கு உதவியாயிருந்தது. 'மேற்கு க்ஷாத்திரர்கள்' என்பவர்கள் இருவகையினர். முதலாமவர், நாசிக் (பஞ்சவடி) யைப் பிரதான பட்டணமாகக்கொண்டு, மகாராஷ்டிரத்தை அரசு செய்தார்கள். இவர்கள் கிறிஸ்துசகம் 126-ஆம் ஆண்டில் ஆந்திரசக்கரவர்த்தியான 'கௌதமீபுத்திர சாதகர்ணியினால் துரத்திடிக்கப்பட்டனர். இரண்டாமவர்- உஜ்ஜயினி க்ஷாத்திரர்கள்' இவர்கள் உஜ்ஜயினியைத் தலைநகராகக்கொண்டு மாளவநாட்டை ஆண்டுவந்தார்கள். 'முதலாம் சாப்தன்' எனப் பெயரிய அரசன், இவற்றிற்குத் தலைமையாயிருந்து ஆட்சிசெய்தான். இவனுக்குப் பின்னர் கிறிஸ்துசகம் 126-ஆம் ஆண்டுமுதல் 150-ஆம் ஆண்டுவரை 'ருத்ரதமன்' என்பவன் அரசனாக அரியாசனத்தமர்ந்தான். இவன் மிகப் பராக்கிரம வீரனாக விளங்கியதால், அப்பொழுது ஆந்திரலோகத்தை ஆட்சி புரிந்துகொண்டிருந்த கௌதமீபுத்திரனது குமாரன் 'இரண்டாம் புலுமான்' என்னும் அரசனை வென்று அவனது தந்தையால் கவர்ந்துகொண்ட 'க்ஷாத்ரப' ராஜ்யத்தை சுவாதீனஞ்செய்து தனது நாட்டுடன் இணைக்கலானான். பின்னர் மேற்கு ராஜ்யங்களையும் வென்று தன்னடிப்படுத்தி, பெருமைக்குரியவனாய் மேம்பட்டுப் புகழ் பெற விளங்கினான்.

சந்திரகுப்தன் தனது திக்விஜயத்தில் முக்கியமான பாகங்களை வென்று தனது வியாபாரத்தைப் பிறநாடுகளில் பெருக்கிக்கொண்டு தனது தலைநகர்க்குத் திரும்பினான். இங்ஙனம் திரும்பியபின் இவனது சாமந்த அரசர்களில் ருத்ரதமன் என்பான் சற்று வலிமை படைத்து, தனது வெற்றிப்பாட்டைக் குறித்தும், தன்னுடன் வந்து சமாதானஞ் செய்து கொள்வதற்குமாகச் சந்திரகுப்தன்பால் ஒரு ராயபாரியை (சமாதானஞ் செய்விக்கும் தூதன்) அனுப்பிவைத்தான். இஃதுணர்ந்த சுத்தவீரனாகிய சந்திரகுப்தன் கோபித்தெழுந்து அந்த ராயபாரியையும், அவனது அரசர்கள் டலரையும் சின்னபின்னப் படுத்தி இருந்தவிடம் அறியாதபடி செய்தான். அதன்பின் அந்த க்ஷாத்திரபராஜ்யத்திற்கு 'ருத்திரசிம்மன்' என்ற சாமந்தனா அரசனாக நியமித்து அவன் ராஜ்ய முழுமையும் தனது குப்தராஜ்யத்துடன் சேர்த்துக்கொண்டான். இவன் திண்ணிய தேகதிடமும் சலியா ஊக்கமும், போரில் விருப்பமும் மிக்குடையவனாயிருந்ததனால் தனது

ராஜ்யத்தை மேலும் விஸ்தரித்துத் தனது பிரஜைகளை, பேரன்புடன் அவர்கட்கு யாதோர் குறைவும் நேராமல் பாதுகாத்து வந்தான். இவ்வரசன் தனது நாணயங்களின்மீது தான் சிங்கத்துடன் நேராகப் போர்புரிவதுபோல் முத்திரையிட்டு வழங்கிவந்தான். இவன் அரசாட்சியில் எங்கும் சுபிட்சமாகவே யிருந்தது. குப்தசாம்ராஜ்யத்திற்குப் பாடலீபுத்திரமேயன்றி அயோத்தியாவும் தலைநகராயிருந்தது. இங்ஙனம் பாடலிபுத்திரமும், அயோத்தியும் மேலான நன்னிலைமையிலும், போதிய பாதுகாப்பிலும் வைக்கப்பட்டிருந்ததனாலேயே இவனுக்குப் பின்னர் அரசு கைக்கொண்ட அரசர்காலத்திலும் விசேட அதிகாரத்துடன் விளங்கியது.

கிறிஸ்து சகம் 6ல் சுவேதஹூணர் (வெள்ளையூணர்) படையெடுப்பிறகுப் பின்னர் பாடலிபுத்திரத்தின் பெருமை குலைந்தது.

(தொடரும்)

## “கல்வியின் அவசியம், அல்லது இலவசக்கல்வி”

(நல்லிருக்கை. திரு. எஸ். காளிலிங்கம்)

கற்றவனுக்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பு” என்பது பண்டைய வாக்கியம். இவ்வாக்கியத்தைப் பலரும் பகருகின்றனர். இச்சிறு வாக்கியத்தில் மக்கள் முன்னேற்றத்திற்குரிய கல்வியை அவசியம் கற்கவேண்டு மென்பதைக் காட்டுகிறதல்லவா? இத்தத்துவத்திற் குட்பட்டவர்கள் நமது மரபில் பெரும்பாலாரைக் காண்பதரிது. நமது சமூகமக்களில் கற்றவர்கள் எத்தனை பெயர்? எழுத்துவாசனை எவ்வளவுதூரம் நம் சமூகமக்களிடையே வியாபித்திருக்கிறது? பாடசாலைகளில் படித்துவருவோர் எத்தனை பெயர்? கல்வி முறைதான் எப்படி? என்ற பல அம்சங்களிலும் சமூகமக்கள், ஏனைய சமூகமக்கள் முன்னிலையே தலைகுனிந்து நிற்கவேண்டியதே. சில நூற்றாண்டுகளுக்கு முன்வரை கல்வி கேள்விகளில் மேன்பாட



-ந்து, இராஜரீகம் செய்து அரசியல் நடத்திவந்த நமது புராதன யாதவ சமூகமானது, தற்காலம் கல்வித்துறையில், மிகவும் மதலைப்பருவமடைந்திருப்பதை நினைக்க உங்கள் மனமுருகவில்லையா? சமூகப் பெரியார்கள் தமது மக்கட்குக் கல்வியே உயர்நிலை என்பதை மறந்துவிட்டார்கள்! கல்வியின் அருமையைத் தற்போதைய நவீன உலகில் உங்கள் கண் முன்பாகக் கண்டனுபவித்திருந்தும், நண்பர்களே! உங்கள் சகோதர சமூகமக்களுக்காக உதவிசெய்ய நீங்களின்னும் முன்வரவில்லை. ஏன் அவ்வுழைப்புக்குத் தங்களையே தயார்செய்து கொள்ளவில்லை?

“பிச்சை புக்காயினும் கற்றல் மிகவினிது” என்று “பூதஞ்சேந்தனார்” சொல்லியிருக்கிறார். ஆகையால் மாந்தர்க்குக் கல்வி இன்றியமையாதது. “கற்றோரே கண்ணுடையரென்று கூறப்படுவராதலானும்,” “கற்றோர்க்கு எவ்வூரும் தம்மூராமாதலானும்,” “தக்கவின்ன, தகாதனவின்ன, வென்றொக்கவுன்னியுணரும் உணர்வு கற்றோர்க்கே” வுதாரமாதலானும், “பிறப்போரன்ன உடன் வயிற்றுள்ளும், சிறப்பின் பாலால் தாயுமனந்திரியுமாதலானும்,” “ஒரு குடிப்பிறந்த பல்லோருள்ளும், மூத்தோன் வருகவென்னாதவருள் அறிவுடையோனாறு அரசுஞ் செல்லும்,” என்றபடியால் பிச்சையேற்றுவது கல்விகற்க வேண்டுமென்பது நமது பண்டையோர்களின் கருத்து. இக் கருத்துக்குகந்தவாறு ஒவ்வொருவரும் கல்விகற்க முயலவேண்டும். நம் சமூகமக்கள் வதியும் ஒவ்வொரு கிராமங்களிலும் கல்வி நிலையங்கள் இருந்தாலல்லவா சமூகச்சிறார்கள் கல்விகற்கவியலும்?

நமக்குள் பெரும்பகுதியினர் வியவசாயிகள். அவர்களிற் பலரும் எழுத்து வாசனையற்றவர்களாக விருப்பதினால், மூடநம்பிக்கைக்கும், கடன்சுமைக்கும், ஆளாகிவிடுவதோடு, வெகு இலகுவில் பிறரது மோசவலையிலும் சிக்கிக்கொண்டு தவித்தும், எதற்கும். மற்றொருவரது கையை எதிர்பார்க்கக்கூடிய நிலைமையிலிருக்கிறார்கள். இத்தகைய மூடநிலையை நிவர்த்திக்கச் சமூகாபிமானிகள் முன் வந்துதவவேண்டும். நகர்களிலுள்ளவர்கள் வியாபாரம் பெருகினால் போதுமென்றியம்புகிறார்கள். வாணிபம் எப்பொழுதுயரும்? வாணிபத்திற்கு மூலகாரணமாக விருப்பதெது? “விவசாயமே” விவசாயமபிவிருத்தியானால்தான் வியாபாரம் பெருகும். அத்தகைய

அபிவிருத்திக்கு மூலபுருஷர்களான "விவசாயிகளுக்கு" எழுத்து வாசனையும், ஞானமும், பெருகினல் அதற்கேற்றவாறு "விவசாயம்" வளர்ந்தோங்கும். அதனல் வியாபாரமோங்கும்.

சகோதர விவசாயிகளைக் கைதூக்கிவிட ஓர் உபாயந்தானுளது. யாதெனில்? கல்வியை மக்களிடையே பரப்புவதற்கேற்பட்ட முறையைக் கைப்பற்றிக் கட்டாயக்கல்வி கற்கச் செய்யவேண்டும். கட்டுப்பாடாகக் கல்வியைப் புகட்ட முயலும்போது விவசாயிகளின் மக்கள் கழனிகளில் வேலைசெய்ய விடலாமலும், கன்றுகாலிகளைப் பராமரிக்க விடலாமலும், நேர்ந்துவிடாதோ வென்றும், அதனல் அத்தகையோருக்குக் கஷ்டநஷ்ட மேற்படாதோ வென்றும் சிலர் சொல்லலாம். சிறிது கஷ்டத்திற்காகப் பெற்றோர்கள் தங்களின் செல்வப்புத்திரர்களை மூடசிகாமணிகளாக ஆக்குவது பெரும் வன்கொடுமையாகும். இதனல் அச்சிறுர்களின் பிற்கால உலக வாழ்வு, நடைப்பிணங்களுக்கு ஒப்பாகுமென்பதைப் பெற்றோர்கள் கவனிக்கவேண்டும்.

"கலைபயிற்று காதலர்க்கு மாநிதி
நிலையென வளித்திடல் நெறியில் பித்தர்க்குக்,
கொலைசெய்வாளெவதுங் குழவிதன்னை மா
மலையினோத்து வைப்பது மாறுமோ."

என்றபடி நீங்கள் உங்கள் காதல்மகவுகட்குப் படிப்பைக் கொடுக்காது பொருளைக்கொடுத்துப் பயனென்? அதனல் பேராபத்தே விளையும். ஆதலால், பெற்றோர்களே! நீங்கள் இப்போது உங்கள் தனயர்களுக்குக் கல்வியைப் போதிக்காவிட்டால், பிற்காலத்தில் அவர்கள் கஷ்டப்படும் பொழுது,

"கொள்ளிக்கும்பட்ட கடனுக்கும் என்னைக் குறித்தலல்லால்,
துள்ளித்திரிகின்ற காலத்திலே யென் துடுக்கடக்கிப்,
பள்ளிக்கு வைத்திலனே தந்தையாகிய பாதகனே." என்று

நீங்கள் நிந்திக்கப்படுவீர்கள். புத்திர நிந்தைக்கு நீங்கள் ஆளாகாமல் கட்டாயமாக உங்கள் சிறுவர்கட்குக்கல்வியை நன்றாய்ப் போதித்து வையுங்கள். அவர்கள் உங்களைச் சதாகாலம்மனதார நினைப்பார்கள். அவர்களுக்கு நன்றியறிவைக் கற்பித்தால், பயன் பெறுவார்கள். விவேகத்தைப் போதித்தால், நல்லஞானத்தையடைவார்கள். முன்னேற்ற ஊக்கத்தை மூட்டினல், செல்வத்தைத்தேட முயற்சிப்பார்கள். நன்மைசெய்யக் கற்பித்தால், அவர்கள் மனமுயரும். கலைஞானங்களைக் கற்றுக்கொடுத்தால், உலகத்துக்குப் பயன்படக்கூடியவர்களாகயிருப்பார்கள். நீதியைப்போதித்தால், உலகத்தாரால் நன்குமதிக்கப்படுவார்கள்.



"பிதாவென்னும் பெருமை வாய்ந்த புருஷனே? நீ பெற்ற பிள்ளைகளைக் கல்வி கற்கச் செய்யவேண்டுவது உன்முக்கியகடமையன்றோ? உன்பிள்ளைக்குச் சிட்சைசெய், அவன் உனக்கு ஆறுதலளிப்பான், உனக்குக்கௌரவத்தைக் கொடுப்பான்" என்று பெரியோர்கள் சொல்லிப் போயிருப்பதை உற்று நோக்கினல், பெற்றோர்கள் பிள்ளைகட்குக் கல்வியைப்போதிக்க எவ்வளவோ கடமைப்பட்டவர்களாகவிருக்கிறார்களென்பது நன்கு புலனாகும், ஒவ்வொரு பெற்றோர்களும் தங்கள் தங்கள் பிள்ளைகட்குக் கல்விப்பயிற்சியை உண்டாக்கி வைக்கமுற்படுவதோடும், சமூகாபிமானிகளும் முயற்சியுடன் சமூகமக்களிடையே பெரும்பொருள்வசூல் செய்தும், அரசாங்கத்தார் உதவிகொண்டும். அப்பண்டுமூலம் யாவரும் கஷ்டமில்லாமல் வந்துசேரக்கூடிய குறிப்பிட்ட இரண்டு மூன்று நகர்களில் பெருங் கல்வி நிலையங்களை ஏற்படுத்தி, தக்க ஆசிரியர்களைக் கொண்டு நமது சமூகச்சிறுர்களுக்கு "இலவசமாகக்கல்வி"ப் பயிற்சிகொடுத்து வந்தால், மிகவிரைவாக நமதுசமூகம் பண்டைய உன்னத நிலையையடையுமென்பதை வணக்கமாக எமது அன்பார்ந்த சகோதர சமூகத்தவர்கட்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். சுபம்! சுபம்!!

---

## மகளுடைத்தால் மண்கலம்
## மருமகளுடைத்தால் பொன்கலம்.

(288-ம் பக்கத் தொடர்ச்சி.)

திரு. சு. ஆண்டியப்பா.

---

அதெல்லாம் நிறுத்திவிட்டுத் தானே சிரமப் பட்டுக் கற்றுக் கொண்டு தினம் இரண்டு வேளையும் கோர்ட்டுக்குப் புருஷனைக் கொண்டு விட்டு அழைத்துக்கொண்டு வருகிறாள்.

பத்தாசி:—ஏன் பாட்டீ! அவளுக்கு மாமி நாத்தி ஒருவருமில்லையா? பொம்மனாட்டி மோட்டார் விட்டால் அவாள் வெறுமனே யிருப்பாளா? நான் உன் மருமாளைப் பார்த்து ரொம்ப நாளாகிறது. இவ்விடம் சமீபத்தில் வருவாளா?

பாட்டி:—மாமி இல்லாமலென்ன? கிழக் கோட்டான் ஒன்று இருக்கிறது. சார்க்கமில்லாமல் அது உளறினால் யார் அதன் வார்த்தையைக் கேட்பார்கள். அது கிடக்கு ஒரு மூலையில். வடிவீசுவாத்திலிருந்து (சமீபத்திலுள்ள ஊர்) தினம் சாயங் காலம் நடந்து வந்து என்னைப் பார்த்துப் போவாள். காலுக்கு ஏதோ சிளிப்பராம் (சிலிப்பர்) அதைப் போட்டுத் தான் வருகிறாள். நான் அசட்டுத் தனமாக அது என்னத்துக்கு என்று கேட்டேன். டாக்டரெல்லாம் காலில் ஒன்றும் போட்டுக் கொள்ளாமல் நடக்கக் கூடாதென்று சொல்லு ராளாம். கண்ட எச்சிலை மிதித்தால் வியாதிகள் வருமாம். விறக்கல் குத்தினால் கால் வீங்கிக்கொள்ளுமாம். முன்னாளில் நாமெல்லாம் ஒன்றும் தெரியாமல் முட்டாளாயிருந்தோம் இந்த காலில் அப்படியிருக்காளா? பச்சைக் குழந்தை முதல் எல்லாம் தெரிகிறது. தினம் என்னைப்பாத்தாட்டு இதற்குச் சமீபத்தில் பந்து விளையாடும் கிரவுண்டு (ground) ஒன்று இருக்கிறதாம். அதில் விளையாடிவிட்டு ஏழுமணிக்குத் திரும்பிவிடுவாள்.

பத்தாசி:—பாட்டீ! பெண்கள் பந்து விளையாடலாமோ? ஏழு மணிக்கு ஒத்தையாக வீட்டுக்குப் போகலாமோ?

பாட்டி:—உனக்கு ஒன்றும் தெரியவில்லை பட்டணவாசத்தில் பிறந்தும் புருஷாளை பட்டிக்காடானதையால் தெரியவில்லை. பந்தாடி னால் தேகத்திற்கு ரெம்ப வலுவுண்டாகுமாம்! சரீரம் சுவா தீனமாக வருமாம்! உடம்புக்கு ரெம்ப நல்லதாம்! என் மரு மாள் கெட்ட காரியமே செய்யமாட்டாள். திரும்பிப் போகும் பொழுது இருட்டிவிடுவதால் ஒரு சக்கரம் (அரையணா) கொடுத்து பயோனியர் பஸ்ஸில் ஏறிப்போகிறாள். அதில் ஆயிரம்பேர் போகிறார்கள். என்ன பயம்?

இவற்றையெல்லாம் வாயிற்படிக்குப் பின்பக்கமிருந்து கேட் டுக்கொண்டிருந்த மங்கை நல்லாள், 'ஆகா! என்ன உலகம்? மகளுக்



கொரு ஞாயம், மருமகளுக்கொரு ஞாயம், மகள் சிலிப்பர் போட்டு
—ப்பது, பந்தாடுவது, ஒண்டியாகப் பஸ்ஸில் போவது எல்லாம்
ஞாயம். மருமகள் வீட்டிலிருந்தபடி பத்திரிகைகளுக் கெழுதுவது
அநியாயம். ஆகா! என்ன வசவுதிட்டு சகிக்கமுடியவில்லையே' என்று
கண்ணீர் பெருக்கினாள். பிறகு சிறிது மனந்தெளிந்து இதற்கு இப்
பொழுதே ஒரு பரிகாரம் தேடிக்கொள்ள வேண்டுமென்று
நினைத்து, கொஞ்சம் தைரியத்துடன் வாயிலையடைந்து, யாவரையும்
பொதுவாக நோக்கி, 'அம்மாமார்களே! இன்றைய தினம் அத்தை
யவர்கள் சொல்லியவற்றையெல்லாம் கேட்டேன். இதுவரையில்
அத்தைக்கு என்ன அபசாரம் பட்டேன்? ஏன் என்மேல் கோபமா
யிருக்கிறார் என்பது தெரியாமல் என்ன பரிகாரம் செய்தும் கோபம்
தணியவில்லை. அன்றைய தினம் நான் பதிலுரைத்ததற்காகக் கோப
மாயிருப்பதாக இப்பொழுதே அறிந்தேன். இங்கு நீங்களிவ்வளவு
பெயர்களும் கூடியிருக்கிறீர்கள். நான் அன்று அத்தைக்கு
உரைத்த பதிலையும் உங்களுக்குத் தெரிவிக்கிறேன். தப்பிதமாக
இருந்தால் நீங்கள் யாவரும் யோசனை செய்து எனக்கு என்ன தண்
டனை விதித்தாலும் பெற்றுக்கொள்கிறேன்.

நான் குடும்பங்களிலுள்ள விஷயங்களை வெளியிட்டு அதனால்
பிறருக்கு நம் குடும்பத்தின் மேல் மதிப்பில்லாமல் செய்யக்கூடியவ
ளல்ல. ஒரு குடித்தனமென்றால் ஆயிரமிருக்கும் என்றிருக்கும்
தன்மை வாய்ந்தவள். அத்தையவர்கள் யாவற்றையும் வெளியிட்டு
விட்டதால் இனி நான் என் நியாயத்தைச் சொல்லிக்கொள்ளா
விடில் என்மேல் பெரியபழி சாருமென்று நினைத்துக் கூறுகிறேன்.
இதற்குள் பாட்டிக்குக் கோபம் பொங்கிவிட்டது. காலை நீட்டிச்
சைகையை ஆட்டி "ஏண்டி தடிச்சி" வாசலுக்கு லக்சர்செய்ய வந்துட்
டாயோ? மானங் கெட்டவளே! அன்னிக்கு உன் ஆம்படையா
னிருந்தான். நீ ஆடுவதைப் பார்ப்பதற்கு இன்னிக்கு ஒத்தருமில்லை
போ உள்ளே" என்று அதட்டினாள். அதற்குள் பத்தாசி என்பவள்
"ஏன் பாட்டீ! வீணாக மண்மதிமேல் சிறிது இரக்கம் கொண்டு பார்ப்பமே? அவ அவ
சத்தமே. இவதான் என்ன சொல்லிகிறாள் என்பதை நாங்களு
கேட்டு உனக்கு என்ன பதில் சொன்னாள் என்பதை நாங்களு
அறிந்து கொள்கிறோமே" என்று கிழவியைச் சமாதானம் செய்
தாள். பாட்டி ஒன்றும் சொல்லமுடியாமல் மருமகளைச் சுட்டுவி
[illegible] பார்வைபார்த்துவிட்டு வாயை மூடிக்கொண்டாள்
(தொடரும்)

# விபீஷணர் சரணாகதி.

திரு. A. S. பொன்னையா தாஸ்.

உலக மாதாவாகிய சீதாபிராட்டியை அரக்கர் தலைவனான இராவணன் அசோகவனத்தில் சிறைவைத்திருந்தது விபீஷணாழ்வார் மனதை வருத்தியது. அவ்வுத்தமரே உத்தமர், "அழுக்குட் செழும் பொன்னும், ஆலத்து அமுதும், இழுக்குறும் நீசனிடத்து ஏற்ற விழுக்கலையும், தள்ளும்இழி குலத்தில்தக்க எழிற்கன்னிகைபோலும், குப்பையில் கிடந்த குன்றி முத்துப்போலவும், கள்ளிவயிற்றில் அகில் பிறக்கும் அதுபோலும் அவ்வரக்கர் குலத்தில் விளங்கி நின்றார். பிரகஸ்பதிக்கு ஒப்பான புத்தியையுடைய விபீஷணர் பிரதாபலங்கேஸ்வரனைத்தொழுது,’’எந்தையும் தாயும், தமயனும், வழிபடுதெய்வமும் எனக்கு நீரே ஆவீர். நீவீர் அந்த ஜானகி என்ற பெரும்பாம்பை ஏன் மோகிக்கின்றீர். அவள் லோகமாதாவாகையினால் உம்முடைய சுற்றமும் நீரும் அவளது கற்பின் தழலினால் எரிக்கப் படப்போகிறீர்கள், அது மாதித்திரயா! மேலும்

"கோனகர் முழுவது நினது கொற்றமும்
ஜானகி யெனும் பெயர் உலகின் றம்மனை
ஆனவள் கற்பினாள் வெந்ததல்லதோர்
வானரஞ் சுட்டதென் றுணர்தல் மாட்சியோ" (கம்பர்)

அன்று இலங்கை எரிந்தது. சீதேவின் கற்பின் தழலே அன்றி அவ்வானரமல்ல, (சுந்தரகாண்டத்திலுள்ள கீழ்வரும் பாசுரம் காண்க)

"அல்லன் மாக்களிலங்கைய தாகுமோ
எல்லை நீத்த உலகங்கள் யாவுமென்
சொல்லினாற் சுடுவேனது தூயவன்
வில்லினாற்றற்கு பாசென்ற வீசினேன்" (கம்பர்)

மேலும் ஆதியில் உம்முடைய ஆற்றலும் தவமும் ஓர் மானிட படர்ந்தையால் அழிவது என்று ஓர் சாபமிருக்கிறது. அதையும் இப்பொழுது நான் நினைப்பூட்டுகிறேன், அரக்கர் வேந்தே. தேவதானவர் முதலானவர்களை ஜெயிக்கும்படி வரம்பெற்ற போது மானிட



ஜெயிப்பதற்கு வரம்பெறவில்லையே. கார்த்த வீரியார்ச்சுனனாகிய மனிதனுக்கு உம்முடைய வலி தோற்றுப் போனதுவே திருஷ்டாந்தம். நந்திகேஸ்வரர் "நீவானரத்தால் அழியப்படுவாய்" என்று சொன்னதும் ஞாபகமிருக்கட்டும். என்று இன்னும் அவனுக்குப் பல அறநெறிகளையும் எடுத்துரைத்தான்.

இவ்வார்த்தைகளை எல்லாம் கேட்ட இலங்கேஸ்வரன் "தாயா
திகளென்பார்கள் எப்பொழுதும் தங்களுடைய தாயாதிகளுக்குத்
துன்பம் நேரிடும்பொழுது சந்தோஷப்படுகிறார்கள். சமயம் நேரிடும்
பொழுது அவமானமும் செய்கிறார்கள். உன்மனதில் சூது இருக்
கின்றது. நீ பிறந்த இராக்ஷச நிலைமையை மாற்றி விட்டாய். நீ என்
கண்முன் நில்லாதே. சகோதர ஹத்தி என்கிறதை நினைத்து உன்
னைக் கொல்லாமல் விட்டுவிட்டேன். இனிஇங்குத் தாமதிப்பாயாயின்
உன்னைக்கொல்லுவது நிச்சயம்" என்று பகர்ந்தான். வீடணர்தான்
எடுத்துரைத்தமொழிகளெல்லாம் காட்டில்எறித்த நிலாப்போலவும்,
நிழலுக்கு இறைத்த நீரைப்போலவும், பயனற்றுப்போனதைப்பற்றி
மனவருத்தங் கொண்டு, அவனது ஜீவியகாலமும் கிட்டிற்று என்று
அறிந்துகொண்டு தன்னுடன் அனலன், அனிலன், அரன், சம்பாதி
என்னும் நாலு மந்திரிமார்களைக் கூட்டிக்கொண்டு ஆகாயமார்க்க
மாய்க் கிளம்பி வானரசேனையுடன் கூடியிருக்கும் இடத்தைக்கண்டார்
கள். அப்பொழுது அனந்த கல்யாணகுணகன நேமனான இராம
மூர்த்தியினுடைய செந்தாமரைக் கமலம் போன்ற இரண்டு திருவடி
களை அடைக்கலமாகச்சேரவேண்டுமென்றபேரன்பினால்"எந்தையே
இராகவாசரணம்! தேவரீருடைய திருவடித்தாமரைக்கு அபயம்!
அபயம்! என்று சப்தமிட்டுக் கொண்டு கீழிறங்கினான் வீடணர்.
இப்படிக் கூவியசப்தமானது சக்கரவர்த்தித் திருமகனுடைய திருச்
செவியில் நுழைந்த மாத்திரத்தில் தமது துணைவராகிய இலக்ஷ்ம
ணர், சுக்ரீவர், சாம்பவர் அனுமார் மற்றமுள்ளோர்களையும் கருணை
யுடன் நோக்கி, முகமலர்ந்து பார்த்து யாரோ "அபயம் அபயம்"
என்று சொல்லுகிறார்கள். அவரையார் என்று பார்த்து வாருங்கள்
என்று ஆக்ஞாபித்தார். அப்பொழுது வானரர்களில் ஒருவனாகிய
மயிந்தன் என்பவன் விபீஷணனிடம் அணுகி அவன் வந்த வரலாற்
றை வினவினான். அப்பொழுது அவர் "நான் மஹாபாதகனாகிய இரா
வணன் தம்பி. நானே பலதடவையும் பலமுகாந்தரங்களை எடுத்துப்
புகட்டி உலகமாதாவை விட்டுச் சரண் அடையும்படி அறிவுறுத்தி

னேன். ஆயுள் முடிந்தவன் மருந்துண்பதை விரும்பாதது போல் தனது பொல்லாத காலத்தால் ஏவப்பட்டு எனது தமையன் சம்மதித்தானில்லை. ஆகையால் நான் இவனோடிருந்தால் பாவம் சம்பவிக்குமென்று மந்திரத்தலைவருடன் சூரியவம்ச சிரேஷ்டரும், லோகநாயகருமான ஸ்ரீ இராகவபிரானுடைய திருவடிகளைச் சரணமடைந்து உஜ்ஜீவிக்க வந்தேனென்று சொன்னார்.

இவ்வார்த்தைகளைக் கேட்ட மயிந்தன் உள்ளதை உள்ளவாறு காயாம்பு நிறத்தோனாகிய கோதண்டபாணியினிடத்தில் புகன்றான். அப்பொழுது சகலமும் உணரவல்ல சாக்ஷாத் சாரங்கபாணி விபீஷணனைச் சேர்த்துக் கொள்ளலாமா என்பதைப்பற்றி, அங்கு கூடியிருக்கிறவர்களோடாலோசிக்க அவர்களில் சுக்ரீவன் எழுந்து பின்வருமாறு சொல்லுகின்றான்.

"ஷட்குணபூரணா! ஜனனமுதல் பரிபாலித்து வந்த பெற்றோர்களையும், தனக்குமுன் பிறந்த பிராதாவையும், தன் ஆசிரியர்களையும் அரசர்களையும் விரோதித்து அவர்களைப் பகைக்கிறதும் அவர்களை விட்டுப்பிரிகிறதும் நல்லவர்களுக்கு அழகாகுமா! இவனோ இராக்ஷதன், இவன், நம்மிடம் துப்பறியவும் வந்திருக்கலாம். முன்மாரீசன் மாயமானாக வரவில்லையா? இவன் உண்டவீட்டில் கெண்டி தூக்குவதுபோல, செஞ்சோற்றுக் கடனுக்காகத் தன் உயிரை விடாது, தன் உயிரைச் சர்க்கரை என்று மதித்து, சமயம் பார்த்திருந்து, தன் சகோதரனுக்கு எதிரிவந்தபொழுது தன்னயம் கருதி எதிரியிடம் வருபவன். இவனுக்கு அபயம் கொடுக்கலாமா? "அக்குளத்திற் கொட்டியும்ஆம்பலும் நெய்தலும்போலவே,யொட்டியுறுவாருறவு" என்பது போலிராமல் இவன் நம்மிடம் வந்திருப்பது நன்மையானதாகத் தெரியவில்லை. என்று கூறினான்.

மற்றவர்களும் சுக்ரீவன் கருத்திற்கிசையவே சொன்னார்கள். கடைசியாக இராமர் ஞானபண்டிதனான அநுமானிடத்தில் அவரது அபிப்பிராயம் என்ன என்று கேட்டபொழுது அவர் அதிவிநயபக்தியுடனே தன் அபிப்பிராயத்தைப் பின்வருமாறு சமர்ப்பிக்கின்றார். "தேவரீர்! இவ்விபீஷணரை நான் நன்குணர்வேன். அதமனான இராவணனோடு, உத்தமபுருஷரான தங்களை மனதில் நினைத்துப்பார்த்து அவ்வாறே உங்கள் இருவரிடத்திலுள்ள குணதோஷங்களை ஆராய்ந்துபார்த்து இராவணனுடைய தோஷங்களையும் தங்களிடத்திலிருக்



கும் பராக்ரமத்தையும் நன்றாக ஆலோசித்துத் தங்களை அடைவது தான் நல்லதென்று தமது புத்தியில் நிச்சயமாகத்தோன்றின உடன் அவர் வந்திருத்தல் தக்கதேயாம். அடியேன் இலங்கைக்குச் சென்றிருந்தபொழுது பார்த்ததில் இவரது திவ்விமாளிகையில் மதுமாமிசங்களிருக்க நான் கண்டதில்லை. அடியேனை இந்திரஜித்துப் பிடித்து இராவணன் சபையில் சேர்த்தபொழுது இராவணன் என்னைக் கொல்லுமாறு கட்டளையிட அப்பொழுது தூதர்களைக் கொல்லலாகாது என்று அறநெறி கூறினவர் இவரே. இவருடைய காதலியாகிய சரமையும், திருக்குமாரத்தியாகிய திருச்சடையுமே என் தாயாகிய சீதாபிராட்டிக்கு ஆதரவு என்பது சமர்ப்பிக்கின்றேன். ஆகையால் இவர் சத்தியமாக நம்மிடம் சரண் புகவந்தவராவர் என்பது திண்ணம். இது அடியேனுடையதாழ்ந்தவிண்ணப்பம்" என்று பகர்ந்தார்.

பின்னர் இராமர் விபீஷணரைப்பற்றித் தனது அபிப்பிராயத்தை வெளியிடலானார், இச்சபையிலிருக்கும் புத்திமான்களே! இவ்வாஞ்சனேயர் சொன்னதாவது மகாசிரேஷ்டமான புத்திமதியாகும். இதையே நான் தெளிவாகச்சொல்கின்றேன், "எவன் ஒருவன் அடைக்கலம்" என்று வந்தானோ அவனுக்கு அபயத்தம் கொடுப்பது எனது தீர்மானம். அதனால் வெற்றிவந்தாலும்சரி, தாழ்வுவந்தாலும்சரி, என் காதலியைச் சிறைவைத்திருக்கின்ற அவ் இராவணனே வந்து சரணடைவானாயின் அவனையும் காக்க ஆயத்தமாயிருக்கிறேன். என் பிதாக்களில் சிபிச் சக்கரவர்த்தியானவர் புறுவுக்காகத் தலையேறின தன்மையை நான் மறக்கப்போகிறதில்லை.

"பேடையைப் பிடித்துத் தன்னைப்பிடிக்க வந்தடைந்தபேதை
வேடனுக் குதவிசெய்து விறகிடை வெந்தீ மூட்டி
பாடுறு பசியைநோக்கி யாருயிர்கொடுத்தமைம்புள்
வீடுபெற்று யர்ந்தகாதை வேதத்தின் விழுமிதன்றோ"
"போதகமொன்று கன்றியிடக்கர்மாப் பொருத்தபோல
ஆதியம் பரமே யானுன் அபயமென்றழைத்தஅந்நாள்
வேதமுமுடிவுகாணு மெய்ப்பொருள் வெளிவந்தெய்தி
மாதுயர் துடைத்தவார்த்தை மறப்பரோ மறப்பிலாதோர்.
"ஆதலா னபயமென்றபொழுதத்தே யபயதானம்
ஈதலே கடப்பாடென்ப தியம் பினிரென்பால் வைத்த
காதலானினிவேறெண்ணக் கடவதென் கதிரோன்மைந்த
கோதிலாதவனை நீயே யென்வயிற்கொணர்தி என்றான்" (கம்பர்)

இராவணன் சீதையைத் தூக்கிச்செல்லும் பொழுது அவள் "ஐயோ என்னை யார் காப்பார்கள் என்று புலம்பும் பொழுது என் பிதாவாகிய ஜடாயு அவனோடு யுத்தம் செய்து முடிவில் இறக்கவில்லையா? நீங்கள் மேல்கண்டவாறு சொன்னதெல்லாம் என் மேலுண்டான அத்தியந்த பிரிதினாலே புகன்றீர்கள் என்று நான் அறிவேன். வீரத்தில் சிறந்த சுக்ரீவா "தாமதங்கூடாது சென்று அப்பரம பாகவதனை விபீஷணரை அழைத்துவா" என்று கட்டளையிட்டான்.

தொல்லருங் காலமெல்லாம் பழகினும் தூயரல்லார்
புல்லலருள்ளந் தூயார் பொருந்துவர் எதிர்ந்த ஞான்றே
ஒல்லைவந்துணர்வு மொன்று இருவருமொரு நாளுற்று
எல்லையும் பகலும் போலத் தழுவினரெழுவிற்றோனார்"

சுக்ரீவன் உடனே விபீஷணரை எதிர்கொள்ளும் படியாக எழுந்தருளினார். நல்லவர்கள் கண்ட அந்த க்ஷணமே சிநேகமாவார்கள் என்றபடி இருவர்களும் நட்புக்கொண்டு இரவும் பகலும் ஒரேகாலத்தில் கலந்தாற்போல் ஒருவரை ஒருவர் ஆலிங்கனம் செய்தார்கள்.

"புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
நட்பாம் கிழமைதரும்"

என்னும் குறளடி இவ்விருவர்களுக்கும் நன்கு உவமையாவது காண்க. பிறகு சுக்ரீவன் விபீஷணரை இராமரிடம் அழைத்துச் சென்றார், அவர் இராமர் சன்னதியை நோக்கி நின்று,

"பஞ்செனச் சிவக்குமென்கால் தேவியைப் பிரித்தபாவி
வஞ்சனுக்கிளைய என்னை வருகவென்றருள் செய்தானோ
தஞ்செனக்கருதினேனோ தாழ்சடைக்கடவுளுண்ட
நஞ்செனத்தகையேனன்றோ நாயகனருளிற்றேயேன்"

"தீர்வறு மின்னல்தன்னைச் செய்யினும் செய்யசிந்தை
யோருளாளர்தந்தம்செய்கையிற் பிழைப்பதுண்டோ
கார்வரை கிடத்ததன்னைக் கனலெழக் கடைந்தகாலம்
ஆர்கலியமரருய்ய அமிர்தம்பண்டளித்ததன்றோ"

"துறப்பின் உதவுறுணைப்பவன் துணைவனென்னை
உறவுவந்தருளினோ அடைக்கலமுதவினானே
மறவினை நீக்கலில்லா மாயமுமாய வாழ்க்கைப்
பிறவியும் பெயர்த்தேன் பின்னும் நரகினிற் பிழைப்பதானேன்

(தொடரும்) (இராமாவதாரம்)

# பெண்கள் கல்வி கற்றால் குற்றமா?

(ஸ்ரீமதி. ப. சு. லட்சுமி எழுதியது.)

ஒரு நாட்டின் முன்னேற்றம் அதன்கண் வாழும் மக்களின் கல்விக்குத் தக்கவாறே அமையும். ஆகவே ஆண் பெண் இருபாலருக்கும் கல்வி அவசியமாகும்.

நம் நாட்டில் கல்லாத மக்கள் நூற்றுக்குத் தொண்ணூறுகும். இக் குறை பெரும்பாலும் பெண்களுக்குக் கல்வியில்லாமையாலே வந்ததென்பதில் சந்தேகமில்லை. நம் நாட்டு மக்கள் பெண்களுக்குக் கல்வி அவசியம் என்பதை அறியாதவராய், "பெண்கள் கற்றால் கற்பு நிலை அழிந்துவிடும்" என்றும், "ஆணவம் முதிரப் பெற்று ஆண்களுக்கு அடங்கார்" என்றும், "அடுப்பூதும் மங்கையர்க்குப் படிப்பு எதற்கு" என்றும், கூசாது கூறுகின்றனர். இவர் தந்நலங் கருதியே இவ்வாறு கூறுகின்றனர்களே யன்றி வேறு பயனேதுமில்லை. இனி இவர் தம் கூற்றையும் நோக்குவோம்:—

பெண்களைக் கல்வியில் புறக்கணிப்பதால் அவர்கள் மக்கள் கூட்டத்தினின்றும் வேறாகி விலங்கினத்தில் தானே சேர்க்கப்படல் வேண்டும். பின்பு அவ்விலங்கினத்தோடு சேர்ந்து வாழ்க்கைப்படும் ஆண் மக்களும் அவ்விலங்கின் தன்மையைத்தானே பெற வேண்டும். அதுதான் போகட்டும், பெண்கள் கற்றால் ஆணவம முதிரப் பெறுவது எவ்வாறு? ஆணவம் முதிர்வது அஞ்ஞானத்தால் அல்லவா! அவ்வாறின்றி ஞானத்தையே நல்கும் கல்வியால் ஆணவம் முதிரப் பெறுமென்பது எப்படிப் பொருந்தும்? ஒரு சிறிதும் இக் கொள்கை பொருந்துமா என்பதைக் கவனியுங்கள்.

கற்ற பெண்களில் கெடுவாரும் உண்டு. அப்படிக் கெடல் அவர் கற்ற கல்வியாலன்று; கற்ற முறையால் கெடுகின்றனர். ஆனால் கல்லாத பெண்மணிகள் யாவரும் கற்பு நிலை தவறாது கணவர்க்கடங்கி நடக்கின்றார்களா? கற்பு என்பது பெண்களுக்கு மட்டுந்தானா? கல்வியால் பெண்கள், கற்பு நிலை தவறுவாரெனில் காமக் கிழத்தியர்பால் நட்புக்கொண்டு கெட்டாரில்லையா? கற்பு என்பது ஆண்கள் தவறார? கற்ற ஆண்மக்கள் கற்பு நிலைதவறிக் காமக் இருபாலர்க்கும் இன்றியமையாத தன்றோ? ஆண் கற்புடையனாயின் அவனது பெண்ணும் கற்புடையளாவாள்!

கல்வியினால் பெண் மக்கள் கெட்டுவிடுவார்கள் என்று கூறும் அறிவுள்ள ஆண்மக்கள் கண்ணிருந்தால் அயல் ஆண் பிள்ளையைப் பார்ப்பார்களென்று, குருடிகளை மணந்துகொள்ளச் சம்மதிப்பார்களா? நிற்க, "கண்ணுடைய ரென்பார் கற்றோர் முகத்திரண்டு புண்ணுடையர் கல்லாதவர்", என்பதற்கிணங்க கல்லாத பெண் மக்கள் யாவரும் கண்ணிருந்தும் குருடிகளாகத்தானே மதிக்கப்படுவார். ஆகவே கற்றுத் தேர்ந்த கண்ணுடைய ஆண்மக்கள் கல்வியற்ற குருட்டுப் பெண்களை மணந்து மாண்படைவாரா?

ஆகவே பெண்களும் ஆண்களுக்குச் சமமாகக் கல்வி கற்பது இன்றியமையாதது. ஏனெனில் கடவுளால் படைக்கப்பட்ட ஆண் பெண் இருபாலரும் சமமேயொழிய ஆடவர் நினைப்பது போல பெண்கள் எவ்வகையிலும் ஆடவர்களுக்குக் குறைந்தவர் அல்லர். பெண்களும் ஆடவர்களைப்போல் கல்வி கற்றுப் பொருள் தேடுவதில் குற்றம் என்ன இருக்கிறது! உதாரணமாக மேனாட்டு மக்கள் பொருள் சம்பாதிக்கும் முறையில் ஆடவர்களை எதிர்பார்க்கின்றனரா? இல்லை, அதனால் அவர்கள் அதிகமாக ஆடவர்கள் கொடுமைக்கு அடிமையாவதில்லை. இதனால் நம் நாட்டுப் பெண் மக்கள் கணவருக்குக் கீழ்ப்படியக் கூடாதென்பதாவது பொருள் சம்பாதிக்க வேண்டுமென்றாவது கூறவில்லை.

ஒரு கற்ற ஆடவன் படித்த பெண்மணியைத் துணைவியாகக் கொண்டால், அவன் மனைவியின் மூலமாக எத்தனையோ நன்மைகளையும், சுகத்தையும் அடைவான். எப்படியெனில் கல்வியறிவுடைய மனைவி குடும்பத்தை ஒழுங்காக நடத்துபவளாயும், தன் கணவனுக்கு ஆபத்து வந்த காலத்தில் நல்ல ஆலோசனை சொல்லுபவளாயும், இருப்பாள். மற்ற நெருக்கடியான காலத்துக் கணவனைப் போல் தொழில் இயற்றிப் பொருள் தேடிக் கணவனுக்கு உதவியாகக் குடும்பத்தைக் காப்பாற்றுவாள், குழந்தைகளை நல்ல வழியில் பழக்குவாள். கற்ற இருபாலரும் நடத்தும் குடும்பம் ஒழுங்கும், அன்பும், களிப்பும், செல்வமும் நிறையப் பெற்று விளங்கும்.

இதை உணராத நம் நாட்டு ஆடவர்கள் பெண் கல்வியைப் புறக்கணித்துவிடுவது எவ்வளவு பேதமை! மரியாதையுடையோன் மரியாதையுடையான் என்பதற்கிணங்க ஒரு கணவன் தன் மனைவிக்குச் சம உரிமை கொடுத்து அன்பாக நடந்தால் மனைவியும் கணவனிடத்தில் அன்பாகவும் பணிவாகவும் நடந்து கொள்வாள் என்பதில் எவ்விதத்தும் சந்தேகமில்லை. ஈபம்.

---

320 H

## யாதவ மித்திரன் சந்தா விபரம்.

| | | |
|---|---|---|
| இந்தியா, சிலோன், பர்மா முதலிய உள்நாட்டிற்கு வருடம் 1-க்கு | ரூ | 1—0—0 |
| பினங்கு சிங்கப்பூர், முதலிய வெளிநாட்டிற்கு வருடம் 1-க்கு | ரூ | 1—8—0 |

தனிப்பிரதி விலை அணா 2.

ஒரு வருடத்திற்குக் குறைந்த சந்தாக் கிடையாது.

மாதிரிப் பிரதி வேண்டுவோர்

இரண்டரையணா, தபால் தலை அனுப்பவேண்டும்.

1. சந்தாதாரராய்ச் சேர்கின்றவர்கள் பெயரையும் விலாசத்தையும் தெளிவாய் எழுதியனுப்பவேண்டும்.

2. எப்பொழுதும் சந்தாத் தொகையை முன் பணமாகச் செலுத்தவேண்டும். வி. பி. மூலமாகவும் பெற்றுக் கொள்ளலாம். சந்தாத்தொகையை முன்பணமாக மணியார்டர் செய்தால் 2-அணாத்தான் செலவாகும். வி. பி. மூலம் பத்திரிகையை வரவழைப்பதில் 3-அணா அதிகச் செலவாகும், ஆதலால் முன்னடி மணியார்டர் அனுப்பிப் பெற்றுக்கொள்வதே நலம்.

3. எந்த மாதத்தில் சேர்ந்தாலும் அவ்வருஷ ஆவணி மாதம்முதல் கணக்கு வைக்கப்பட்டு ஆவணி மாதப் பத்திரிகை முதல் சேர்த்தனுப்பப்படும்.

4. யாருக்கேனும் சஞ்சிகை வந்து சேராவிட்டால் அம்மாதமுடிவிற்குள் தங்கள் சந்தா நம்பருடன் தெரிவித்துப் பெற்றுக் கொள்ளலாம். அதற்குப் பின்னர் தெரிவித்தால் விலை செலுத்தியே பெற்றுக் கொள்ளவேண்டும்.

5. இடம் மாறும் சந்தா நேயர்கள் தங்கள் புது விலாசத்தைத் தெரிவித்து, அது விபரத்தைத் தபாலாபீஸாரிடமும் அறிவித்துவிட வேண்டும்.

6. சந்தா நம்பரைக் குறிப்பிடாத கடிதங்களைக் கவனிக்க முடியாது. பதில் விரும்புவோர் தபால் தலை அனுப்பவேண்டும்.

### விளம்பர விகிதம்.

| | | |
|---|---|---|
| 1-பக்கத்திற்கு | ரூ | 10—0—0 |
| ½-பக்கத்திற்கு | ரூ | 5—8—0 |

நீண்டகால விளம்பரங்களுக்கு யாதவ மித்திரன் ஆபீஸிற்கு எழுதித் தெரிந்து கொள்ளவும்.

---

ஐந்தாவது யாதவமகாநாடு போட்டோ படங்கள்.

வேண்டியவர்கள் யாதவமித்திரன் ஆபீஸுக்கு விபரமாகத் தெரியப்படுத்துவதுடன் முன் பணமாக ரூ. 1—5—0 மணியார்டர் மூலம் அனுப்பிவைக்கவும்.

320 B

யாதவ மகா ஜனங்களுக்கு ஒரு

# வேண்டுகோள்.

---

யாதவ சகோதரர்களே !

நமது யாதவ மித்திரன் கல்வி, பொருளாதாரம், ஆசார சீர்திருத்தம் முதலிய துறைகளில் சிறந்த அறிஞர்களால் எழுதப் பெற்ற அருமையான கட்டுரைகளைக்கொண்டு யாதவ மக்களின் முன்னேற்றத்தையே முக்கியமாகக் கருதி மாதம் ஒருமுறை வெளி வருகின்றது.

எல்லா யாதவ மக்களும் உடனே சந்தாதாரராய்ச் சேர வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறோம்.

எல்லா யாதவ மக்களிடமும் யாதவமித்திரனைப் பரவச் செய்தல் சமுதாயப் பற்றுடையவரின் முதற்கடமையாகும்.

யாதவமித்திரன் நம்மவர் வாழும் ஒவ்வொரு கிராமங்களிலும் உலாவவேண்டும். ஒவ்வொரு யாதவரிடத்திலும் யாதவமித்திரன் மாதாமாதம் சமுதாய விஷயங்களைத் தெரிவிக்கும்படி செய்ய வேண்டும். இதுவே சமுதாயச் சீர்திருத்தத்திற்கு அறிகுறி.

இப்பொழுது விலாசந் தெரிந்த சிலருக்கே பத்திரிகை அனுப்பப்பட்டிருக்கிறது. மற்றையோர் விலாசந் தெரிவித்துப் பத்திரிகையைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆகையால் யாவரும் பத்திரிகை படித்துப் பயன் பெறுமாறும், இப்பத்திரிகையை வாசிக்கும் அன்பர்கள் ஒவ்வொருவரும் தங்கள் தங்களுக்குத் தெரிந்த பத்திரிகை படிக்கும் ஆற்றலுள்ள நமது யாதவ சகோதரர்களின் விலாசங்களைத் தயைசெய்து எழுதியனுப்புமாறும் வேண்டுகிறோம்.

மானேஜர்,

**யாதவ மித்திரன் ஆபீஸ்,**

**ஸ்ரீ கோபால் மஹால்.**

**வடக்குச்சித்திரை வீதி, மதுரை.**

---

எச்வெல்வியர் பவர் பிரஸ், மதுரை:-1932.